தூலதேகபோக்கிய வசுத்தாத்துவப்பொருள்களையும், பின்னுங்குணதத்துவத்துள் மத்தியப்பிரளயத்திற் பிரகிருதியின தக்கிரத்துநிலயாகிய பிரமவிட்டிணுத்துவாரத்தினுலேயும் பிரமாண்டத்துண்ணிலயராகிய பிரமவிட்டிணுத் துவாரத்தினுலேயும் நில திவ்வியாதிவ்விய தூலதேகபோக்கிய வசுத்தாத்துவப்பொருள்களையும் பிரகிருதியிலே நின்றுஞ் சிருட்டித்துத் திதித்துச் சங்கரித்து; முதனடுவீறுமாகி என்றுகொள்ளுதலான், முதலென்றுசொல்லுஞ் சிருட்டிகர்த்தாவாயும், நடுவென்றுசொல்லுந் திதிகர்த்தாவாயும், ஈறென்றுசொல்லுஞ் சங்காரகர்த்தாவாயும், பொருந்திடும்- (அதுவன்றிச் சுவபாவத்தினுலேயு மனந்தேசுரத்துவாரத்தினுலேயுந் திரோபாவகர்த்தாவுமாம். சுபாவத்தினுலேயு மனந்த ஸ்ரீகண்டாதித் துவாரத்தினுலேயும் அனுக்கிரககர்த்தாவுமாம். சரீரிகளே இச்சியம்பண்ணுதலால் அசரீரியாயிருக்கின்றவுமதே கர்த்தாவுக்குக் கிருத்தியம் எப்படிக்கூடும்? சத்தியம். மூர்த்தியிரண்டுவிதம், சகலியென்றும, அசகலியென்றும். சகலியாயிருக்கின்றமூர்த்தி யவர்க்கில்லாதபடியினுலே) அனுக்கிரமுத்தசித்தருமன்னிநின்றே-அசகலியாகிய நித்திய முத்த சித்சத்திமூர்த்தி பொருந்தினின்றே (தான் முதலீறுமாகி மருவிடுமென்று பொருட்புணர்ச்சி போதிக்க.) எ-று. (க)

உலகொருகர்த்தாவையுடைத்து, காரிபமாதலால், உலகு காரியம்;
"ஒருவனேடொருத்தியொன்றென் றுரைத்திடுமாத
லாலும் வருமுறைவந்துநின்று போவதாதலாலும"
என்றுகாரியததைச் சாதித்து அதனுற் கர்த்தாவை
ச்சாதித்தார், அதுகூடாது. பிருதிவிமுதலுலகிற் றோற்
றசாசங்காணுமெலாறு லோகாயதன் ஆருகதனிவர்
கன்முதலோர் சொல்ல மறுத்துரைத்துகின்றார.

உதிப்பதுமீறுமுண்டென்றுரைப்பதிங்கென்னைமுன்னோர்
மதித்தலகனதியாகிமன்னியதென்பரென்னி
லிதற்கியானனுமானதியேடனிப்பூதாதியெல்லாம்
விதிப்படிதோற்றிமாயக்காணலான்மேதினிக்கே.

இ-ள். உதிப்பதுமீறுமுண்டென்றுரைப்பதிங்கென்னை-உலகுக்கு உற்பத்தியாதலு நாசமாதலு முள்ளனவென்று இசைப்பதேது- முன்னோர்-தர்க்கமுதற் சாத்திரமுணர்ந்தோர்-மதித்து-தர்க்கித்து நிச்சயம்பண்ணி-உலகு-பிரபஞ்சம்-அனுமியாகி-எப்போது மிப்படியிருப்பதாய்-மன்னிய தென்பர்-நிலைபெற்றதென்று நிகழ்த்துவர்-எனில்-என்று நீசொல்லில்-இதற்கு-நீசொல்லுமிந்த வார்த்தைக்கு-யான்-நான் (நீபிரத்தியக்ஷவாதியாகையினுலு மிதுபிரத்தியக்ஷநித்தமாகையாலும் பிரத்தியக்ஷப்பிரமாணமாத்திரமன்றி) - அனுமானுகியெடேன்-அனுமானுகமப் பிரமாணங்கணேத்தோடேன்-(பின்னே அறியுமாறெப்படியென்னில்) இப்பூதாதியெல்லாம்-பூதங்களே[யாதியாகக்] காரணமாகவுடைத்தாய்ப்பூதபரிணுமமாகிய

உடலுயிர்மரமல்லாமாமுதலிய விவ்வுலகிற்பொருந்திய பொருள்களெல்லாம்—விதிப்படிதோற்றி மாயக்காணலான் மேனிகழே-பூமியின்கண்ணே கன்மமுறைமையில் நாசுரசங்கற்பத்தினுல் உற்பத்திநாசமாகப் பிரத்திய க்ஷப்பிரமாணமாகிய சிற்சத்திபொருந்திய கேத்திரத்தினுற் பார்த்தலால். எ-று. (உ)

உலகுக் குற்பத்திநாசமுளது, அஃதொருகர்த்தாவவிரும்பாமல்,
இயல்பிலாமென்ன மறுத்துணர்த்துகின்றூர்.

இயல்புகாண்டோற்றிமாய்கையென்றிடினியல்பினுக்குச்
செயலதின்றியல்புசெய்திசெய்தியேலியல்பதின்று
மியல்பதாம்பூதந்தானேயியற்றிடுஞ்செய்தியென்னிற்
செயல்செய்வானொருவன்வேண்டுஞ்செயற்படுமசேதனத்தால்

இ-ள். இயல்புகாண்டோற்றிமாய்கையென்றிடில் - உபாதானகாரணத்திற்றேன்றி யொடுங்குவது, காரியப்பொருளினது, சுவபாவமென்று நீசொல்லில்—இயல்பினுக்குச் செயலதின்று - இயல்பாயிருக்கும்பொருளுக்கு ஒருபோதுண்டாய் ஒருபோதின்றுய்க் காரியப்படுந்தன்மையின்று—இயல்புசெய்தி-அப்படிக் காரியப்படுவது அப்பொருட்சுவபாவமென்று நீசொல்லில்—செய்தியேலியல்பதின்றும்-காரியப்படுமாகில் அப்பொருட் சுவபாவமில்லையாம். (அப்படிச்சொல்லவேண்டுவதில்லை)— (செய்தி) யியல்பதாம்-உற்பத்திநாச யோக்கியமாகிய வியல்பில்லாதபொருள் சர்வசாமர்த்தியமுடைய கர்த்தாவினுலுற்பத்தோற்றுவித்தொடுக்கப்படாது. ஆதலாற் காரியப்பொருளுற்பத்திநாசமாகு மோரியல்புடையது, காரியல்புடையதன்று. அப்படியாயி னுற்பத்திகாலத்து நாசம் நாசகாலத்துற்பத்தி, காணுதிருப்பதென்? உள்ளது தற்காலத்துற்பத்திரூபமாயும், நாசரூபமாயும், நாசோற்பத்திக ளோரியல்பாயிருக்கும்; பௌத்தனுக்குப்போலத் தற்காலத்திரியல்பாயிரா. அந்தவுற்பத்திநாசங்கள் காரியப்பொருள்களிற் காணப்படுதலாற் காரியமாய்ச் செயற்படும்பொருள் செய்பவனே விடாதாதலால் அந்தவுற்பத்திநாசங்கள் ஒருங்கே யொருகாலத்தோரியல்பாயிருந்தாலும் தனது தனது காரியவிளக்கங் காரியமறைதலாகுமூரூபந் தனது தனது கர்த்திருகாரக முதற்காரகங்களின்றி முதற்காரணத்தினின்றுந் தோன்றுது; ஆதலாற் கர்த்தாவைவிரும்புதல் காரியத்துக்குண்டு. சம்மதமே யிதெல்லாமுமக்குமாதலால்—செய்தி-காரியம்; சிருட்டி திதி சங்காரங்களே — பூதந்தானே- * (கர்த்தாவாய்) இயற்றிடுமென்னில் - பண்ணுமென்று லோகாயதபக்ஷனையிருக்கும் நீசொல்லில்—(பூதங்கள்) செயற்படுமசேதனத்தால்-காரியமாகுஞ் சடமாதலால்—செயல்செய்வானொருவன் வேண்டும்-பூதகாரியத்தினது தோற்றம் நிற்றல் போதற்றொழில்களோப் பண்ணுமொருகர்த்தாவை விரும்பும். எ-று. (ஊ)

பிரத்தியக்ஷப்பிரமாண கோசரமாகப் பூதங்கடாமே பொருள் களைத் தோற்றுவித்து நிற்பித்துப்போக்கும், சேதன ரூபிய ஒருகர்த்தாவேண்டுவதில்லையென்ன, மறுத் துணர்த்துகின்றார்.

நிலம்புனலனல்கால்காணாகிறுத்திமிழிக்குமாக்கும்
பலந்தருமொருவனிங்குப்பண்ணிடவேண்டாவென்னி
லிலங்கியதோற்றநிற்றலீறிலையிசைதலாலே
நலங்கொளர்தோற்றநாசந்தனக்கிலாநாதன்வேண்டும்.

இ-ள். நிலம்புனலனல்கால் - பிருதிவி அப்புத் தேயு வாயுக்கள்- காணா-பிரத்தியக்ஷமாக-(சரீராதிப்பொருள்களை) நிறுத்திமிழிக்குமாக்கும்பலந்தரும்-ஆக்கும்-சிருட்டிக்கும்-நிறுத்தும்-திதிக்கும்-பலந்தரும்-அகன்றபோகத்தைக்கொடுக்கும்-அழிக்கும்-சங்காரிக்கும்-ஒருவன்-(அப்பிரத்தியக்ஷனுஞ்சேதனனுஞ்) ஒருகர்த்தா-இங்கு-இந்தக்காரியத்தை-பண்ணிடவேண்டா-செய்யத்தக்கதில்லை-என்னில்-என்று நீசொல்லுகில் (“பூதாதி யீறுமுதலுங் துணையாகப் பேதாய் திகியாகும்” என்று சிவஞான போதத்திருத்தலால் நிற்றலாகிய திதி தோற்றமீறாகிய சிருட்டி சங்காரங்களே முன்பின்காண்பிபாதிராது. அப்படிப்பூதங்களிலிருக்குந்திதியுமப்படியென்று)- இலங்கியதோற்றநிற்றலீறிலையிசைதலாலே- மனதிலுதித்த சிருட்டிதிதி சங்கார சம்பந்தத்திற்கு பூதங்களுங்காரியமென்று கொண்டு அவற்றைத் தோற்றுவித்து நிற்பித்துப் போகும்பொருட்டு-தனக்குத் தோற்றநாசமில்லா-*கலங்கொளர்நாதன்-சாட்குணணிய பரிபூரணனுயிருக்கின்ற கர்த்தா-வேனும் - விரும்பப்படுவன். எ-று. (ச)

பௌத்தன் புத்தசேவதை குருவாயிருத்தன்மாத்திரமன்றி உலக கர்த்தாவல்லன், பஞ்சகந்தங்களினது கூட்டத்தினு லுலகுண்டாம், கர்த்தாவேண்டுவதில்லையென்னமறுத்துணர்த்துகின்றார்.

சார்பினிற்றோன்றுமெல்லாந்தருபவனில்லையென்னிற்
றோனினில்லதற்கோதோற்றமுள்ளதற்கோநீசெப்பா
யோரினில்லதுவுந்தோன்றுதுள்ளதுகலுதிக்கவேண்டா
சோர்விலாதிரண்டுமின்றிநிற்பதுதோன்றுபன்றே.

இ-ள். சார்பினிற்றோன்றுமெல்லாம்-பஞ்சகந்தங்களினது கூட்டவிசேடத்தாற் பூதமுதலாகிய பொருள்களெல்லாமுதிக்கும்-தருபவனில்லையென்னில்-சிருட்டிமுதற் றிருத்திய திருத்தாய்முன் நீர்சொன்னமுறைமையனுகிய கர்த்தாவில்லையென்றுநீசொல்லிற் (கர்த்தாவண்டில்லையென்பது பின்பேசுவோம். இப்போது நீதிருபாதானவாதியன்றே?)-தோனினில்லதற்கோ தோற்றமுள்ளதற்கோ நீ செப்பாய்-விசாரிக்கிற் றோற்ற முள்ளபொருட்கோ வில்லாதபொருட்கோ நீசொல்-ஓரில்-விசாரிக்கில்-இல்லு

துவுக்சொன்ரு துள்ளதேதுஇக்கவேண்டா-இல்லாத முயற்கொம்புமுத லியவு முண்டாகா, உதித்துனதாயிருக்கின்ற கடபடாதியுமுண்டாகமா ட்டாவாம்-சோர்விலாதிரண்டுமின்றிநிற்பது-அப்படி யுள்ளதுமில்லதுமி ன்றி யுள்ளதாயிருப்பது-தோன்றுமன்றே-உண்டாகுந்தானே. எ-று.

அந்தச் சற்காரியவார்த்தையைத்தானே சமுத்தரித்து நிறுத்து கின்ரூர்.

உள்ளதுமில்லதுமின்றிநினறதொன்றுளதேதுண்டா
மில்லதேலில்லையாகுந்தோற்றமுமிசையாதாகு
முள்ளகாரணத்திலுண்டாங்காரியமுதிக்குமணணி
னில்லதாம்படங்கடாகியெழிறருமியற்றுவாரிலை.

இ-ள். உள்ளதுமில்லதுமின்றி நின்றதொன்றுளதேதுண்டாம்-வியத்திருபமென்கிற காரியருபத்திலேலே உள்ளதுமின்றிச், சத்திருபமென் கிற காரணருபத்திலேலே இலதுமின்றி, இருப்பதொருபொருளுண்டா மாகில், அதற்பதிபாம-இல்லதேல் - இபபடிபொருபொருளினறேல்- இல்லையாகும்- * தோற்றமுமிசையாதாகும் - உறபதியும்பொருந்தாதா கும-(பின்னைச் சித்தாக்தமெப்படிபென்னிற் சொல்லாம) உள்ளகாரண தலில-காரியகாலத்திலே வியததிருபமாய்ச் சத்தாயிருக்கும முதற்காரணத் தில்-உளடாகுகாரியம் - காரணகாலதிற் சத்திருபமாய்ச் சத்தா யிருக் குங காரியம-உதிகரும்-உற்பத்தியாம்-(காரியங் காரணத் தில்லதுண்டா மென்னில்) மணணினில்லதாமபடம -சத்திபமாய் முன்னதில்லாமை யால், நூலெயெடாமல், மண்ணைக் குலாலன் எடிகரும்படி முன் சுக்குமித் திருந்து இதுகாரண மதுகாரணமல்லவென்று நியமிக்குங் காரியமாகும- கடாதி-* ஆயற்றுவானல்- குலாலனல்- எழிறரும்- பிரகாசிததுண்டாம். எ-று. (சு)

முதற்காரணத்தின்முன்னிருந்து, காரியக்தோன்றுமென்றீர், அது நிமித்தகாரணனின்றித் சானே பிரதிருதியிற் ரோன்றுமென்று சாங்கியன்சொல்ல மறுத்துணர்த்து கின்ரூர்.

ஒருபொருளொருவனின்றியுளதிலதாகுமென்னிற
றருபொருளுண்டேலின்ரூர்தன்மையினின்றிலுண்டாய்
வருதலின்றிலதுகாரியமுதலுளதாகுமென்னிற்
கருதுகாரியமுமுண்டாய்த்தோறறமுங்கர்த்தாவாலாம்.

இ-ள். ஒருபொருள்-காரியம்-ஒருவனின்றி - நிமித்தகாரணனை யன்றி-உளதிலதாகுமென்னில் - முதற்காரணத்திற்ரோற்றி யொடுங்குமெ ன்று சீசொல்லில்-தருபொருள்-அந்தமுதற்காரண மூற்பவிப்பித்த வஸ் துவுண்டேல்-உள்ளதேல்-இன்ரூர்தன்மையின்று-(காசசத்திற்குக்காரண

மில்லாமையால்) நிலைபெற்றிருக்குந்தானே—இன்றேல்-காசமானல்—உண்டாய்வருதலின்று- (நிமித்தமில்லாமையாற் காரணரூபமாய் இருப்பதன்றிக் காரியரூபமாய்த்) தோற்றுவதில்லே—முதலுளதாகும் - முதற்காரணமுள்ள பொருளாகும்—ஆகாது காரியம்-அதிற்றேன்றுங் காரியஞ் சிப்பியிற்றேன்றும் வெள்ளிபோல ஆபாசமாயசத்தியமாம்—என்னில்- என்று நீசொல்லில (அதசத்தியமன்று)—கருதுகாரியமு முண்டாய்த் தோற்றமுங் கர்த்தாவாலாம-குற்றமற்ற பிரத்தியகூப் பிரமாணமுதற் பிரமாணங்களினல் உள்ளபொருளென்று பரீக்ஷிக்கப்பட்டகாரிய முன் சூக்குமித்தி முதற்காரணத்துள்ளதா யதினுற்பதியுஞ் செய்டவனுலாகும. எ-று.

பட்டாசாரியன் மதமாசங்கித் திரண்டு திருவிருத்தங்களான் மறுத் துணர்த்துகின்றூர்.

காயத்தினழிவுமீதாற்றங்கண்டனமுலகிற்காணே
நீயித்தையுரைத்தவாறிங்கென்னெனினிகழ்த்துமுண்மை
மாயத்தவுலகம்பூரீர்தீவளிவானமாதி
யாயிற்றுனென்றினென்றுதோன்றிநின்றழிதலாலே.

இ-ள். காயத்தினழிவு தோற்றம் கண்டன முலகிற் காணேம்-(ஒருவனெடொருத்தி யொன்றென்றுரைத்திடிஞ்) சரீரமுதலிய பொருள்களினுற்பதிகாசங் கண்டோம், பூமிமுதலிய சசத்திற்காணேம்-நீயித்தையுரைத்தவாறிங்கென்னெனில்-உலகுகாரியமாதலால் அதற்கொரு கர்த்தாவுண்டென்று நீர் சொல்லுவதேதென்று நீ சொல்லுகில்—மாயத்தவுலகம்-மயக்கத்தைப்பண்ணும் பிரபஞ்சம்—பூரீர்தீவளிவானமாதியாயில் - பிருதிவி அப்புத் தேயு வாயு வாகாசமுதற் பொருளாகில் (தானென்பதசை)—(சைவத்துக்குத் தன்மாத்திரையிற்றேற்றமீறதுகிற்க, நமீக்குப்பொதுவும் உனக்குப்பொதுவன்றிச் சிறப்புமாகும் வைதிகமார்க்கத்தில்) ஒன்றினெனன்று தோன்றிநின்றழிதலாலே.- ஆத்துமாவில் ஆகாசம் ஆகாசத்தில் வாயு வாயுவில்அக்கினி அகனியில் அப்பு அப்புவிற் பிருதிவி இந்தமுறைமையிலுண்டாயிருந்த முறைமையினு லொடுங்குமென்று சொல்லுதலாலே— (அந்தவுலகம்) உண்மைகிகழ்த்தும்-தனக்குத் தோற்ற நிற்ற லீறுசத்தியமென்று சாற்றும். எ-று. (அ)

பஞ்சபூதங்களுக்கு காசஞ்சொல்லுஞ் சுருதிக்குத்தாற்பரியஞ்சொல்ல மறுத்துணர்த்துகின்றூர்.

ஓரிடமழியப்பின்னுமோரிடநிற்குமொக்கப்
பாரிடமழிவதின்றுமென்றிடற்பயில்வித்தெல்லாங்
காரிடமதனிற்காட்டுமெங்குமங்கழியுமாவேனிற்
சீருடைத்தலருகாலஞ்சேர்ந்திடப்பேர்ந்துசெல்லும்.

அதுபோலவென்று வருவிக்க. விருத்தப்பொருள் வெளிப்படை.

பூமியினெரு பிரதேசம் நாசமாகப் பின்னுமொரு பிரதேசம் நீங்கியாதுநிற்கும். அதுவன்றிப் பூமியிடமெங்கு மொருங்கே நாசமாதலில்லையென்று நீகூறின பூமியிற்பொருந்தியிருகும் வீசங்களெல்லாங் கார்காலத்துண்டாக்கிய முளைகள் வேனிற்காலத்தொருங்கழியும். அதுபோலக் காரணப்பொருளாகிய மாயை சிருட்டிகாலத்துண்டாக்கிய உலகஞ் சங்காரகாலப்வர்துழி வேறுபட்டொருங்கழிந்து போம்சிறப்புடைத்து என்பது இதன்கருத்து. (கூ)

காலேசுரவாதி காலமே கர்த்தாவென்றுசொல்ல மறுத்துணர்த்துகின்றார்.

காலமேகடவுளாகக்கண்டனந்தொழிலுக்கென்னிற்
காலமோவறிவின்றுகுமாயினுங்காரியங்கள்
காலமேதரவேகாண்டுங்காரணன்விதியினுக்குக்
காலமுங்கடவுளேவலாற்றுணைக்காரணங்காண்.

இ-ள். தொழிலுக்கு-சிருட்டி ஸ்திதி சங்காரங்களுக்கு-காலமே- * கடவுளாக - கர்த்தாவாக-கண்டனமென்னில் - * காலமோ - * அறிவின்றுகும் - (இதனகிது காரணங் காரியங் கரணம் பிரயோசன மென்றிதியும்) அறிவில்லாததாம்-ஆயினும்-* காரியங்கள் - தாத்துவிக போக்கியப்பொருள்களை-காலமேதரவேகாண்டும் - கால முற்பத்திபண்ணக்கண்டோம் ஆகையால்-காரணன்விதியினுக்கு-முதற்காரணமாகிய தத்துவங்களி லின்றுந் தாத்துவிகமாகிய போகியப்பொருளினது தோற்றநிலையீறாகச் சொல்லப்படும் நிமித்தகாரணனாகிய சிவனதுகிருதந்தியத்துக்கு-காலமும் - *கடவுளேவலால்-கர்த்தாவினது செலுத்துதலால் — துணைக்காரணங்காண்-சககாரிகாரணங்காண். (கூ)

ஆருகதரிலொருவன்மத மறுத்துணர்த்துகின்றார்.

அழிந்தபின்னணுக்கடாமேயகிலமாய்வந்துநின்று
கழிந்திடுங்கண்மத்தென்னிற்கண்மமுமணுவுங்கூட
மொழிந்திடுஞ்சடமேயாகிமுடிதலான்முடியாசெய்தி
யொழிந்திடுமணுரூபங்களுலகெலாமொடுங்குமன்றே.

இ-ள். (அருகேசுவரனுக் குபதேசகர்த்திருத்துவமாத்திரஞ் சகற்கர்திருத்துவமில்லை யாதலால்) அழிந்தபின்-பிரளயத் துலகெலாமொடுங்கினபின் (ஒடுங்காதுநின்ற)-அணுக்கடாமே- (நிமித்தகர்த்தாவாகிய பாபபுண்ணியங்களினுலே முதற்காரணமாகிய) பரமாணுக்கடாமே— கண்மத்து-* அகிலமாய் - எல்லாவுலகுமாய்— வந்துநின்று கழிந்திடுமென்னில்-தோற்றியிருந்தொடுங்குமென்று நீசொல்லுதில் — கண்மமுமணுவுங்கூட-நிமித்தகாரண முதற்காரண மிரண்டுமொத்து — மொழிந்திடுஞ் சடமேயாகிமுடிதலால் - சொல்லப்படு மசேதனமாகியகித்தியமாதலால் —

மூடியாசெய்தி-கிருத்திய நிறைவேறுது-உலகெலா மொடுங்குமன்றே-உலகமெல்லாஞ் சங்காரமாம்பொதே-அணுருபங்கள் - பரமாணுக்கள் (சைவத்துக்குப் பூதகாரியமாதலால்)-ஒழிந்திடும்-ஒடுங்கிடும் (பூதமூதலியவுலகத்துக் கெப்படிக் காரணமாம்? காரணமன்றுதானே.) எ-று. ()

உலோகாயதனுலகுக்குக் காரணமென்னும் பூதமும் நையாயிகன்
மூதலோருலகுக்குக்காரணமென்னும்பரமாணுவும்
பிரளயத்தொடுங்குமென்றீர், பின் காரணமேதென்றுவினவச் செப்புகின்றார்.

காரணவணுக்கள்கெட்டாற்காரியவுலகின்றென்னிற்
காரணமாயையாகக்காரியங்காணலாருங்
காரணமாயையென்னிற்காண்பதிங்சுணுவேயென்னிற்
காரணமாயையேகாண்காரியமணுவிற்கண்டால்.

இ-ள். காரணவணுக்கள் கெட்டால்-நாங் காரணமாகக்கற்பித்த வணுக்கள் சங்காரிக்கப்பட்டால்—காரியவுலகின்றென்னில்• காரியமாய்த தோற்றும்பிரவஞ்சமில்லையாய்விடும் (அதுண்டாகும்பொருட்டுக்காரணம் வேண்டுமென்னில்— காரணமாயையாக-* (அதினின்றுமுற்பவிக்கும்) காரியங் காணலாகும்-* காரணமாயையென்னை-மாயை காரணமென்பதேது?—இங்கு-காரியத்துக்குக்காரணமாக— அணுவேகாண்பதென்னில்-* அணுவில்-* காரியங்கண்டால்-காரியத்தன்மை யறியப்பட்டால்—காரணமாயையேகாண்-* எ-று. (கஉ)

திரும்ப விகற்பித்து நிராகரிக்கின்றார்.

காரியமென்பதென்னைகாரணவணுவையென்னிற்
காரியமவயவத்தாற்கண்டனங்கடாதிபோலக்
காரியவுருவமெல்லாமழிதருங்காரணத்தாற்
காரியவுறுப்பின்மாயைதருமெனக்கருதிடாயே.

இ-ள். காரணவணுவை-நாங்க ளுலகுக்குப் பரமகாரணமாகக் கற்பித்த பரமாணுவை—காரியமென்ப தென்னையென்னில்-* அவயவத்தால்-சாமிசத்தால் — கடாதிபோல - * காரிய (மாக)- * கண்டனம்-அறிந்தோம் — (நிரவயவமாகிய பரமாணுவைச் சாவயமாக எந்தவேதுவினலேகண்டீர்? இக்கொடு சங்யோகியாயும், மூர்த்தமாயுங், கேட்கப்படுதலாற் சாவயவமென்றும் அதனுற் காரியமென்றும், அதனு லதற்கு வேறொரு காரணமுண்டென்றும் அறிந்தோமாகையால் பரமாணுமூதலாம்) காரியவுருவமெல்லாம் அழிதருங்காரணத்தால்- * (அந்தப் பரமாணுமூதலிய காரியங்களே) காரியவுறுப்பின்-அசேதனமாய் அனேகமாயிருத்தல் அமூர்த்தமாயிருத்தல், சாவயவமாயிருத்தல் முதலான காரியவி

லக்ஷணமில்லாததாய் இதற்குச் சேதனமாத்திரமின்றி, விபரீதலக்ஷண முள்ளதாகிய –மாயை-* தருமென-உண்டாக்குமென–கருதிடாயே- * எ-று. (கஉ)

இவ்வுலக மாயையின்காரியமென் றுணர்த்துகின்றார்.

தோற்றமுநிலையுமீறுமாயையின்ரெழிலதென்றே
சாற்றிடுமுலகம்வித்துச்சாகாதியணுக்களாக
வேற்றமீதலீண்டிநிற்குமில்லதேலில்லையாகு
மாற்றநீமறந்தாயித்தான்மாயையைமதித்திடாயே.

இ-ள். (உலகினது) தோற்றமு நிலையுமீறும் - சிருட்டியும் திதியும் சங்காரமும்–மாயையின்ரெழிலதென்றே-(அன்னத்தினதுபாகஞ் சாத்தனதுபாகமென்றாற்போல) மாயையினது கிருத்தியம், சுவரானது கிருத்தியமென்றுதானே – சாற்றிடுமுலகம்-உயர்ந்தோர் சொல்லுவார்கள்–வித்து-ஆலம்விதை முதலானது – சாகாதி- பிணைகொம்புமுதலானவை யை–அணுக்களாக - சூக்குமசத்திரூபங்களாக – ஏற்றதேல்- தன்னிடத்துத் தரித்திருந்ததானால்– ஈண்டிநிற்கும்-(தம்மிடத்து நின்றும் நூலவியத்திரூபமாகத்) தோற்றி நிற்கும்–இல்லதேலில்லையாகும் - *மாற்றநீ மறந்தாய் - (முதற்காரணத்திற் காரியமுன் சூக்குமித்துச் சத்திரூபமாயிராதிருந்தால், உண்டாகாதென்று முன்சொன்ன) வசனத்தைநினையாதிருந்தாய்–இத்தால் - வித்துச்சாகாதியென்னுந் திருட்டாந்தமுறைமையால்–மாயையைமதித்திடாயே - (மாயைதனது காரியத்தைமுன் சத்திரூபமாக ஏற்றதேலந்தக்காரியத்துக்குக் காரணமாம், இல்லையேற் காரணமாகாதென்று) மாயையைச் (சற்காரியவாதியாகித் தானே)விசாரித்துப் பார். எ-று. (கச)

அப்படித்தானே மதித்தலே வெளிபண்ணிக்காட்டுகின்றார்.

மாயையினுள்ளவஞ்சம்வருவதுபோவதாகும்
நீயதிங்கில்லையென்னினிகழ்ந்திடுமுயலிற்கோடு
போயுகுமிலகளெல்லாமரங்களிற்புக்குப்போதி
னுயிடுமதுவுமென்னிற்காரணங்கிடக்கவாமே.

இ-ள். (மாயையின்) உள்ளவஞ்சம்-சத்திரூபமாய் முன் சூக்குமித்திருந்த பிரபஞ்சம் வியத்திரூபமாய்த் திரும்பச் சத்திரூபமாய் – மாயையின்–மாயையினிடத்திருந்து–வருவது போவதாகும் - தோற்றியொடுங்குவதாகும்–நீயதிங்கில்லையென்னில்-மாயையிற்காரியமுன் சத்திரூபமாயிருந்து, வருவது போவதில்லை யென்று நீசொல்லில்–முயலிற்கோடு–முயலின்கண்ணே கொம்பு–நிகழ்ந்திடும்- உண்டாம் – (மரங்களின்) உகுமிலைகளெல்லாம்-உதிரும்பத்திரங்களெல்லாம்–மரங்களிலே – போய்ப் புக்குப் போதின் - சென்றொடுங்கி வருமாதில்–அதுவும் ஆயிடுமென்னில்-மாயை

மிற் பிரபஞ்சம் வருவது போலவதாகுமென்று நீசொல்லில் (மரங்களிலு திர்ந்த விலைகள் தங்களுக்குக் காரணமாகும் மரங்களுக்குக்காரணமாகிய பிருதிவியிலொடுங்கும் அப்போது மரங்களினிலைகளினதுதோற்றம் எப் படி யென்னில், உதிர்ந்தவிலைகள் வந்தொடுங்காதிருந்தாலும்) — காரணங்கடக்கவாமே-அவைகளன்றிப் பின்னு மனந்த பத்திரசத்திரூபமாகிய மாகிற்க வேறுவேறு இலைகளுண்டாகா நிற்குந்தானே. எ-று. (கடு)

பிரபஞ்சம் பிரவாகரூபியென்பதிசைக்கின்றார்.

கருதுகாரணமுண்டாகக்காரியமுள்ளதாகி
வருதலாலருதிவையமற்றொருகடவுளித்தைத்
தருதலாலதியாகச்சாற்றலுமாகுமாயைக்
கொருவனென்னிங்கென்னிலுள்ளவாறுரைப்பக்கேணீ.

இ-ள்- கருதுகாரணமுண்டாக-(இந்தக்காரியத்துக்கு, இதுவேகா ரணமென்று) பரீக்ஷிக்கப்பட்ட மாயை எக்காலத்து முள்ளதாயிருக்க— காரியமுள்ளதாகி-காரியஞ் (சத்திரூபத்தினுலேயும் வியத்திரூபத்தினுலே யும் எப்போது) முள்ளபொருளாகி—வருதலால்-சத்திரூபத்திலிந்து வியத் திரூபமாதலால்—வையம்-பிரபஞ்சகாரியம்—அருதி-நித்தியம் (வியத்திரூ பத்தினுலே யொன்றுபோக வொன்று பிரவாகமாய் வருதலாற் பிரவாக நித்தியமென்று சொல்லப்படும்)—மற்றொருகடவுள்- நிமித்தகாரணனுகிய கர்த்தா—இத்தை-இந்தவையத்தை—தருதலால்-சத்திரூபத்தைவியத்திரூப மாகத்திரித்து நீக்கி வியத்திரூபமாக்கலால்—ஆதியாகச் சாற்றலுமாகும்- அநித்தியமாகவுஞ் சொல்லப்படும் — மாயைக்கொருவனுரென்னிங்கென் னில்-மாயை யொவ்வொரொவ்வொரு பிரதேசங்களிலே சத்திரூபத்திரி ந்து வியத்திரூபமாதலுக்கு நிமித்தகாரணன் எவனென்று நீர்சொல்லுமெ ன்று நீசொல்லில்—உள்ளவாறுரைப்பக்கேணீ- சத்தியமாகச் சொல்வாம் நீகேள். எ-று. (கசு)

உள்ளமுறைமையை யுணர்த்துகின்றார்.

புத்திமற்காரியத்தாற்பூதாதிபுருடன்றனு
மத்தனுகரணம்பெற்றுலறிதலாலவற்றைமாயை
யுய்த்திடுமதனன்மாயைக்குணர்வொன்றுமில்லையென்றே
வைத்தனரதனுலெல்லாம்வருவிப்பானொருவன்வேண்டும்.

இ-ள். பூதாதி-சங்காரக்கிரமத்திற் [பூதத்துக்குப்பூருவமாகும்] பிரு திவிதத்துவாதி சிவதத்துவாந்தமாகிய உலகு—புத்திமற் புத்திமத் - இது தகாராந்தவடமொழிப்பதம். இலக்கணையினற் புத்தியென்றது ஞானம ன்றிக்கிரியையையுங்காட்டுதலால், சருவசிருட்டி ஸ்திதிசங்காரத் தொழி லதிவுடைய ஒருகர்த்தாவையுடைத்து; இது பிரதிஞ்ஞை— காரியத்தால்-

பண்ணப்படுந்தன்மையால், இதுவேது. (காரியாணுமானத்தால் முன்கர்த்தாவைவிஸ்தரித்துச் சாதித்திருக்கக் கூறியதுகூறலென்னுங்குற்றம்வரத் திரும்பக் கூறுவதேன் ? உள்ளது. இப்போது காரியாணுமானங்கோத்த பரிசேஷியாணுமானத்தாற் சாதித்துச் சிறப்பிக்கின்றார். ஞானவான் கர்த்தாவாகவேணடுமென்றல் அறிவுள்ளவனுய்ப் பிரசித்தனுனவான் மாத்தானே கர்த்தா, பிரசித்தனன்றி யிருக்கும் வேறுசீசுரன்வேண்டியதில்லையென்று மீமாஞ்சகன்சொல்ல மறுத்துணர்த்துகின்றார்.)-(விஞ்ஞானகலர் பிரளயாகலர்களறிவின்றியப்பிரசித்தராதலால்) புருடன்றனும்-சகலன்றனும்-அதனுகரணம் பெற்றல்-அந்தவேறுருகர்த்தாச சிருட்டித்துக்கொடுத்த தூலதேக சூக்குமதேக பரதேகங்களைப்பொருந்தினல்-அறிதலால்-அவனறிவுக்கு நிமித்தமாக முன்பொரு சுவதந்திரவறிவுனுகிய கர்த்தாச் சித்தித்தலானும், அவன் கர்த்தாவல்லன். (முதற்காரணந்தானே கர்த்தாவென்று சாங்கியன் முதலோர் சொல்ல மறுத்துணர்த்துகின்றார்)-அவற்றை-அந்தத் தனுகரணஞ்சகலை-மாயை- *(முதற்காரணமாயிருந்து நிமித்தகாரணனுலேவப்பட்டு) உய்த்திடும்- உண்டாக்கும் - அதனல்-முதற்காரணமாகையால் (யாதொன்றியாதொன்று முதற்காரணம் அதறிவில்லது மண்போலவென்று) - மாயைக்குணர்வொன்றுமில்லையென்றே- * வைத்தனர்-பெரியோர் நிச்சயித்தார்கள்-அதனல்- * எல்லாம்வருவிப்பானொருவன் வேண்டும்-சகலத்தையுமறிந் துண்டாக்குமொருகர்த்தா விரும்பப்படுவன். எ-று. (கஎ)

காரியோற்பத்தியிற் காரணம் மூன்றுமுறைமையா யிருக்குமென்றுரைக்கின்றார.

காரியகாரணங்கண்முதலுணைநிமித்தங்கண்டாம்
பாரின்மண்டிரிகைபண்ணுமவன்முதலுணைநிமித்தந்
தேரின்மண்மாயையாகத்திரிகைதன்சத்தியாக
வாரியன்குலாலனுய்நின்றுக்குவனகிலமெல்லாம்.

இ-ன். காரியகாரணங்கள்-கடமுதற்காரியங்களினது காரணங்கள்-முதலுணைநிமித்தங்கண்டாம் - முதற்காரணமென்றும் துணைகாரணமென்றும் நிமித்தகாரணமென்றும் மூன்றுபருப்பாகப் பரீக்ஷித்துப் பாராத்தோம்- (அதெப்படி?) தேரின்-பரீக்ஷிக்கின்-மண்மாயையாக-மண்போல முதற்காரணஞ் சுத்தமாயை யசுத்தமாயையாக-திரிகை தன் சத்தியாக-திரிகைபோலத் துணைக்காரணந் தனது சத்தியு மதனுலேவப்பட்ட வன்தேசுர சத்தியுமாக-ஆரியன்-நிமித்தகாரணனுகிய சிவன்-குலாலனுய்-மண்மகன்போல-நின்று-* அகிலமெல்லாம்-சகலலோகமெல்லாம்-ஆக்குவன்-உண்டாக்குவன். எ-று

முதற்காரணம் உபாதானமென்றும், 'சமவாயியென்றும், துணைக்காரணஞ் சகாரியென்றும் பெயர்பெறும். (கஅ)

DR. U.V. SWAMINATHA IYER Library 9461.
TIRUVANMIYUR :: MADRAS-41

சிலசைவாசாரியர்கள், சுத்தமாயையொன்றுமே, முதற்காரணத் துள் நித்தியமாகும்; பரமகாரணம், அசுத்தமாயை பிரகிருதி இரண்டுஞ் சுத்தமாயையினின்று முறை மையிற்றோற்றி அநித்தியமாகு மவாந்தரகாரணமென் று சொல்லுவார்கள், மற்றுள்ள சைவாசாரியர்கள் சுத்தமாயைபோல வசுத்தமாயையு நித்தியமாகும் பர மகாரணம்பிரகிருதிமாத்திரம் அநித்தியம் அவாந்தர காரணமென்று சொல்லுவார்களென்று இத்தலைத் திரயத்திற் சொல்லியிருத்தலால், அசுத்தமாயையும் நித்தியமென்பார்கருத்து இரண்டாஞ் சூத்திரத்தில் "நித்தமா யருவாய்" என்னுந்திருவிருத்தமுதல விரு த்தங்களினல் விஸ்தரிக்கின்றார். அநித்தியமென்பார் கருத்து இப்போதறிவிக்கின்றார்.

விந்துவின்மாயையாகிமாயையினவ்வியத்தம்
வந்திடும்விந்துத்தன்பால்வைகரியாதிமாயை
முந்திடுமாகமாதிமுக்குணமாதிமூலந்
தந்திடுஞ்சிவனவன்றன்சந்நிதிதன்னினின்றே.

இ-ள். விந்துவின் மாயையாகி - சுத்தமாயையினின்றும், அசுத்தமா யைதோற்றி — மாயையினவ்வியத்தம்வந்திடும்-அந்தவசுத்தமாயையினி ன்றும் பிரகிருதிதோன்றும்—விந்துத்தன்பால்-திரும்பச் சுத்தமாயையினி ன்றும் — (வைகரியாதிவந்திடுமென்றுகூட்டுக. சங்காரக்கிரமகணனைக்கு வைகரிமுதல், சிருட்டிக்கிரம கணனைக்கு அதிருக்குமை முதலாதலால், மகாமாயையினின்றும் மகாசிருட்டியினுண்டாய் மகாப்பிரளயபரியந்தம் அவரவர்க்கு வேறுவேறாய் ஆன்மாக்களைப்பற்றிப் பிரணவகலாசத்தி சது ட்டயரூப விருதயபங்கசத்திருக்கும் பிரணவபஞ்சம நாதகலாசத்திகர்ப் பப் பிரதானநாதத்துக்குள் ஆமையுறப்புப்போலப்படிச் சத்திரூபமாய டங்கிச் சிவதத்துவமைந்தினதிடமாயிருக்கின்ற நாதவித்துமகார உகார அகாரப்பெயர்ப்பிரணவகலைகளைந்தையும் பற்றிக்கொண்டு அதிருக்குமை, ருக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியென்கின்ற வாக்குக்களோற்றும்; வாக்குநான்கென்னுமிடத்து, உகார அகாரங்களிரண்டினையும்பற்றி வை கரிவரும். அதிருக்குமைருக்குமையினடங்கும்.) மாயைமுந்திடுமாகமா தி-(சங்காரக்கிரமகணனைக்கு ராகமுதல், சிருட்டிக்கிரம கணனைக்குக்கால முதலாதலால்) மாயையினின்றுங் காலநியதி கலைவித்தை ராகங்கள் புரு டதத்துவத்தோடு மேற்சொல்லுமுறைமையில் — முந்திடும் - உண்டாம்— முக்குணமாதிமூலந்தந்திடும்-பிரகிருதி முக்குணதத்துவமுதற் பிருதிவிதத் துவமீருருந் தத்துவங்களை மேற்சொல்லு முறைமையிற்றோற்றுவிக்கும். (நிமித்தமின்றியாமோவாகாது) — சிவனவன்றன்சந்நிதிதன்னினின்றே.

சிவஞான அவன் சங்கற்பத்தினுஞ் சிவனதியற்றுதற் கருத்தாவாகிய அவனென்னுமனந்தேசுரசங்கற்பத்தினு முன்னின்றே. எ-று.

சிவனதவனென்னு மாறும் வேற்றுமைத்தொகை விரிவுவிட்டுச் சிவஞான அவனென்று பண்புத்தொகைமாத்திர விரிவுபண்ணினுல் மாறுபடும், அசுத்தாத்துவா அனந்தேசுர கர்த்திருத்துவமாதலால். (சுசு)

சங்காரக்கிரமத்தின் வைகரிவாக்கினிலக்ஷணை மூணர்த்துகின்றூர்

வைகரிசெவியிற்கேட்பதாயர்த்தவசனமாகி
மெய்தருமுதானவாயுமேவிடவினைந்தவன்னம்
பொய்யறவடைவுடைத்தாய்ப்புந்திகாரணமதாகி
யையமில்பிராணவாயுவடைந்தெழுந்தடைவுடைத்தாம்.

இ-ள். வைகரி செவியிற் கேட்பதாய்-வைகரிவாக்குக் கேட்பவன் செவியிற் கேட்பதாய்-அர்த்தவசனமாகி-கேட்பவனது நாதத்திலறைந்து முறைமையினதை மத்திமையாக்கி அவனுக்குப் பின்பொருளைப் போதிப்பதாய், முன்சொல்பவனது கிரியாசத்தியொருந்திய வகங்காரப் பிரயத்தினப் பிரேரிதமாய் – மெய்தரும் - உண்மைகொடுக்கும் – உதானவாயு-* மேவிட-*பொருந்த (இச்சாசத்தி பொருந்திய மனச்சங்கற்பத்தால்)–வினைந்தவன்னம் - பைசந்தியிற் பரிணமித்தவக்ஷரங்கள் –புந்திகாரணமதாகி - ஞானசத்தியொருந்திய புத்திபோத காரணமாக – பொய்யறவடைவுடைத்தாய் - விபரீதமற்றொழுங்குபெற்று மத்திமையாய்–ஐயமில் பிராணவாயு வடைந்தெழுந் தடைவுடைத்தாம்-பிராணசம்சய காரகரோசக மற்ற பிராணவாயுவைப்பொருந்திப் புறம்பே புறப்பட்டு வைகரியாயுற்பவித்த முறைமையிற் கேட்பவனுக்குக் கேட்கப்படும். எ-று. (உ0)

மத்திமைவாக்கின திலக்ஷணங் கூறுகின்றூர்.

உள்ளுணர்வோசையாகிச்செவியினிலுறுதல்செய்யா
தெள்ளியபிராணவாயுவிருத்தியையுடையதன்றித்
தெள்ளியவக்கரங்கள்சிந்திடுஞ்செயலதின்றி
மெள்ளவேயெழுவதாகுமத்திமைவேறதாமே.

இ-ள். உள்ளுணர் வோசையாகி-சொல்பவன திருதயாகாசத்தத்துக்குள் அவனதறிவுக் கறியப்பட்டு அவனுற்சொல்லப்படும் பொருளில் அவனறிவை விளக்குந்தொனியாகி – செவியினிலுறுதல் செய்யாது - கேட்ப்வன் செவிக்கேறுதலாய், வைகரியாய்த்திரிந்து மேலவனுக்குக் கேட்கப்படுவதாய்–ஒள்ளிய பிராணவாயு விருத்தியையுடையதன்றி-உதானவாயு வியாபாரமாத்திரமுடையதாய், பெலமுடையபிராணவாயுவியாபாரத்தினது விடுதலுடையதாய்–தெள்ளியவக்கரங்கள் சிந்திடுஞ்செயலதின்றி-தெளிவாகிய வன்னங்கள் சிதறுதலின்றி யொழுங்குபெ

ற்று–மத்திமை-* (வைகரிக்கும் பைசந்திக்கும்) வேறதாயே மெள்ளவே யெழுவதாகும் - *. எ-று. (உ௯)

பைசந்திவாக்கின திலக்ஷண முணர்த்துகின்றார்.

வேற்றுமைப்பட்டவன்னம்வெவ்வேறுவிபாகமாகித்
தோற்றுதலடைவொடுக்கிச்சுயம்பிரகாசமாகிச்
சாற்றிய மயிலினண்டந்தரித்திடுஞ்சலமேபோன்றங்
காற்றவேயுடையதாகிப்பைசந்தியமர்ந்துநிற்கும்.

இ-ள். பைசந்தி-*வேற்றுமைப்பட்ட வன்னம்-வேவ்வேறு குறிய வாயிருக்கு மக்கரங்கள்–சாற்றிய மயிலினண்டந் தரித்திடுஞ் சலமேபோன்று வெவ்வேறு விபாகமாகித் தோற்றுதலடைவொடுக்கியாற்றவேயுடையதாகி-சொல்லிய மயிலினது முட்டைதாங்கிய நீரிற் றெருமுதலிய வுறுப்புக்கள்போல வேறுவேறு பிரிந் தொழுங்குபெற்று மத்திமையாய்த் திரிந்தினிமேல் வருதலே யிப்போதடக்கி அந்தவன்னங்களே நிலைபெறவு டைத்தாகி–சுயம்பிரகாசமாகி- (சொல்வோர்க்குங் கேட்போர்க்கு முறை மையில் மத்திமையும் வைகரியுமாய்ப் புத்தி அகங்காரங்களோடுகூடிச் சவிகற்ப ஞானகாரணமாம் பைசந்தி வித்தையோடுகூடி நிருவிகற்ப ஞா னகாரணமாய்ப் பின் மனத்தோடுகூடிச் சவிகற்ப ஞானத்துத்தியோகிக் கும் சூக்குமை வித்தையோடுகூடிநிருவிகற்ப ஞானகாரணமாயிருக்கும். ஆதலாற் புருடப்பிரயத்தினம் பொருந்தாமற் சற்றேபொருந்தித்) தானே விளங்கி–அமர்ந்துநிற்கும்- (நிருவிகற்ப ஞானவிளக்காய்ச் சவிகற்ப ஞான த்துத்தியோகித்து) நிலைபெற்றுநிற்கும். எ–று. (உ௨)

சூக்குமைவாக்கின திலக்ஷணமுணர்த்துகின்றார்.

சூக்குமைவாக்கதுள்ளோர்சோதியாயழிவதின்றி
யாக்கிடுமஹங்காரத்துக்கழிவினீதன்னைக்கண்டா
னீக்கமிலறிவானந்தமுதன்மைநித்தியமுடைத்தாய்ப்
போக்கொடுவரவினீப்புவிகாரமும்புருடனின்றும்.

இ-ள். சூக்குமை வாக்கது-* உள்ளோர் சோதியாய்-(தூலசரீரத் தின் இருதயாதாரத்திருக்கும் பார்த்திவபங்கசப்பொருட்டினது குழியிற்ப ற்றி, அதனதழிவில் வேரூன்றுபற்றிப் பிரளயபரியந்த மிருக்குமூன்சொ ன்னபரசரீரவிந்து சத்திசதட்டய பங்கசத்திலிருக்கும், பிரதானகாதகர்ப் பத்திருக்கும் பிரணவகலாதசத்தியைப்பற்றி யிருத்தலால்) ஒப்பற்றவந் தரங்கப்பிரகாசமாய்–அழிவதின்றி-பிரளயபரியந்த மீறின்றி(இருக்கும்)–. அது தன்னைக்கண்டால் - (மூறைமையிற் பிரகிருதிபுருடவிவேகஞானத் தாற் சாங்கியன் பாதஞ்சலன் வேதாந்தியிவர்முதலோர்க்குப், புருடதத்

துவப் பிராத்தி, மலபரிபக்குவமின்றிக்கேவலங்கலாநத்து வார்த்தகிஷாசுத்தி மாயாபுருட விவேகஞானத்தாற், சைவேகதேசிகட்கு விஞ்ஞானகலப்பிராத்தி, மலாத்தகிஷாசுத்தி மலபுருஷவிவேகஞானத்தால் மந்தராதி தீவிராந்த மலபரிபாகமுடைய மகாவிரதர்முதலோர் சாமானியசைவர் சைவசித்தாந்திகளிற் சிலர்க்குஞ் சுத்தாத்துவப்பிராத்தி, மகாமாயாந்தகிஷாசுத்தி மகாமாயா புருட விவேகஞானத்தாற் தீவிரதரமலபரிபாகமுடைய சைவசித்தாந்திகட்குப் பரமோக்ஷப்பிராத்தி, நாதபுருட விவேகஞானமே மகாமாயாபுருட விவேகஞானமாதலால் அந்த நாதத்தோடுபற்றியிருக்குஞ் சூக்குமைவாக்கை (நான்வேறிதுவேறென்றுவிவேகித்தித்) தரிசித்தால்—அதிகாரத்துக் கழிவினையாக்கும் - மோக்ஷாதிகாரங்கொடுத்துப் போகாதிகாரத்துக்கு நாசத்தைப்பண்ணும். (தானீங்குவதேகொடுப்பதுங் கெடுப்பதும். அப்போது புருஷன் சர்வபாசமுத்தனுய்ச் சின்மாத்திரனுய்) — நீக்கமிலறிவானந்த முதன்மைநித்தியமுடைத்தாய்- (சும் சாரத்திற் பசுத்துவச் சுவரூபசித்தி விளக்கமே போகானந்தம்; முத்தியிற் சிவனுக்குப்போலச் சிவத்துவச் சுவரூபசித்திவிளக்கமே மோக்ஷானந்தமாதலால், நீக்கமிலென்றது மலமறைப்பிலுஞ் சுவரிட்டமாய்ப் புருடனேடு சமவாயசம்பந்தமாய் இருத்தலென்றதலால்) நீக்கமிலறிவானந்தம் - சருவஞ்ஞத்துவசிவத்துவரூப சருவஞ்ஞதாதிருத்தியமுதிபோத முக்குணவடிவாகிய ஞானசத்தியபியியத்தி—நீக்கமின்முதன்மை-சருவகர்த்திருத்துவ சிவத்துவரூபச் சுவதந்திரதை யனுத்தசத்தியனந்தசத்திமுக்குணவடிவமாகியகிரியாசத்தி யபியியதி; இப்படியறுவிதமாய் இருவிதமாயொருவிதமாயிருக்கின்ற சிவத்துவரூப சிற்சத்தி யபியியத்தியென்கின்ற சிவத்துவவிளக்கமாகிய சிவானந்தத்தொத்ததனது சிவானந்தத்தை— நித்தியமுடைத்தாய் - (சிவசத்திவிளக்கினுற் பிரும்பத்திரும்பச் சிவசத்திவிளகை விருப்பின்றிக், சருவப்பிரகாரமாயமலமறைப் புகீங்கிவிளங்குதலாற், கெடா திடைவிடாது அனுபவிப்பானுகி— போக்கொடுவரவிலீப்புவிகாரமுமின்றும் - இறப்புப்பிறப்பில்வருந் தொய்விற்ருன்றும் வேற்றுமையுமில்லாதவனும். எ-று.

போக்கொடுவரவிலீப்பு விகாரமானதும் புருடனுக்கின்ருமென்றும் எழுவாய் பயனிலையிசைத்துப் பொருளுரைக்கலுமாம்.

சிவத்துவமென்கின்ற சிவகுணவிளக்கமே சிவானந்தமென்று சித்தாந்தஞ் சித்தித்திருக்கவும், சிவகுணமே சிவானந்தமென்று சிலர் சொல்வார்கள். அதுமாறுபடுமென்பது பிரமாணதிபிகை சித்தாந்தசிகாமணி சிவஞானபோதவியாக்கியானம் இவைகளிலே காண்பித்துக் கண்டித்தனம். ஏதிதுசொல்லியது சிவத்துவசின்னகுணவிளக்கமுங் குணமாகாதோ குணமாமே? உள்ளது குணமானுலுங் குணியிலிருப்பதன்று. கெந்தாதிகளிடத்துத் தீவிராதிதன்மம்போலச் சிவதத்துவலக்ஷண குணத்திலிருக்குமதனுன் மாறுபாடில்லை. (உங)

பஞ்சகலைகளில் வாக்கிருக்குமுறைமை வகுத்துரைக்கின்றார்.

நிகழ்ந்திடும்வாக்குதான்குநிவிர்த்யாதிகலையைப்பற்றித்
திகழ்ந்திடுமஞ்சதாகச்செயல்பரிணமமன்று
புகழ்ந்திடும்விருத்தியாகும்படங்குடிலாஞற்போல
மகிழ்ந்திடும்பிரமமன்றுமாமாயையென்பர்கல்லோர்.

இ-ள். நிகழ்ந்திடும் வாக்குதான்குநிவிர்த்யாதிகலையைப்பற்றித்திகழ்ந்திடுமஞ்சதாக-நிவிர்த்திகலாகெர்ப்பபுவனவாசிகளுக்குத் தூலதரமாயும், பிரதிட்டாகலாகெர்ப்ப புவனவாசிகளுக்குத் தூலமாயும், வித்தியாகலாகெர்ப்பபுவனவாசிகளுக்குச் சூக்குமமாயும், சாந்திகலாகெர்ப்பபுவனவாசிகளுக்குச் சூக்குமதரமாயும், சாந்தியதீதகலா கெர்ப்பபுவனவாசிகளுக்குச் சூகுமதமமாயுமிருக்குமென்றிதன்பொருள்— செயல்-காரியப்படுதல்— பரிணமமன்று -மண்ணினின்றுங் கடகலசமுதலானவைபோல மகாமாயையிலே நின்றும் வாக்குற்பத்தி தூலபரிணதிரூபமன்று—படங்குடிலாஞற்போலப் புகழ்ந்திடும் விருத்தியாகும்-புடைவையே கூடாரமாஞற்போலப் புகழப்படுகின்ற விருத்திரூபமாம். (விருத்திக்கும் பரிணமத்துக்கு மத்தியந்தம் பேதமில்லாமையால் முற்றுவமையன்று; சூக்கும பரிணமமாகுமென்றிதன்பொருள். அந்தவாகுவிருத்திசூக்காரணம்) — பிரமமன்று -சத்தப்பிரமவாதிசொல்லு மான்மாவன்று—கல்லோர் மாமாயையென்பர்- *. எ-று. (உசு)

இப்படி மாமாயையினின்றுஞ் சாதாரண சத்தசிருட்டி சொல்லிச் சாதாரண சத்தார்த்தசிருட்டியைச் சாற்றுகின்றார்.

வித்தைகள்வித்தையீசர்சதாசிவரென்றிவர்க்கு
வைத்திடும்பதங்கள்வன்னம்புவனங்கண்மந்திரங்க
டத்துவஞ்சரீரம்போகங்கரணங்கடாமெலாமு
முய்த்திடும்வயிந்தவந்தானுபாதானமாகிநின்றே.

இ-ள். வித்தைகள் வித்தையீசர் சதாசிவரென்றிவாக்கு-வித்தைகள்-சத்தகோடிமாமந்திரங்கள்—வித்தையீசர்-அனந்தாதிமந்திர மகேசுவரர்கள்—சதாசிவர்- அணுசதாசிவர்கள்— என்றிவர்க்குவைத்திடும்- * பதங்கள்- (சாதாரணங்களாயிருக்கும்) பதங்கள் (எண்பத்தொன்று) —வன்னம்-* (ஐம்பத்தொன்று) — புவனங்கள் - * (இருநூற்றிருபத்துகாஅ)— மந்திரங்கள்-* (பன்னிரண்டு) —தத்துவம்-* (அசாதாரணமாயிருக்குஞ் சுத்தகலாதி சுத்தபிருதிவியந்தம் முப்பத்தொன்று)—சரீரம-(சாதாரணசாதாரணமாயிருக்கும்) தூலதேகம்—போகம்-போக்கியப்பொருள்- கரணம்-(முன்சொன்ன தத்துவங்களில் விசேடமாகும்) இந்திரியங்கள் — தாமெலாமும்-இவைகளெல்லாவற்றையும்—வயிந்தவந்தான்-சுத்தமாயையிலுண்

டாகிய சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவமென்னுஞ்சிவதத் துவமைந்தானே (தங்களங்களிடத்திருப்பவர்களுக்குமுறைமையில்)– உபாதானமாகிநின்றே யுய்த்திடும்-சமவாயிகாரணமாய் நின்றுண்டாக்கும். எ-று.

மாயையிற் பிரபஞ்சம், மாயையிற்கோத்துண்டாவதுபோல, மாமா யையிற் கோத்துண்டாகவேண்டுவதில்லை.

விஞ்ஞானகலருட் பரிபக்குவமலர்களில் அனுக்கிரகப்பட்டு மலபாச மின்றிப் பதிபதார்த்தத்துக்குட் பிரவேசித்துப் பதியாயிருக்கின்ற மந்திர ர்கள், மந்திரமகேசுவரர்கள், அணுசதாசிவர்கள் இவர்களே விஞ்ஞானகல ர்களென்று சிலர் வியாக்கியானம் பண்ணினர்கள். அது முன்பின் மலை யும்.

ஒருமலத்தா விஞ்ஞானகலரென்றுசொல்லியிருக்க, மலநீங்கியதிகா ரமலமாத்திராகளாய், அபரபதிகளாய்க் கடந்துபோனவர், 'எப்படி விஞ் ஞானகலராவர்களாகார்களே. அப்படியாகிற் சிலவிடத்து அப்படிச்சொ ல்லியிருப்பதேது' உள்ளது. பூருவத்திலிருப்பைநோகஇப் புறப்படடவ சனம்; இப்போதிலிருப்பைநோகஇ யெழுந்தசொல்லன்று.

விஞ்ஞானகலர் மாயைக்குமேற் சுத்தவித்தைக்குக்கீழ் நடத்தானத் திலே பெண்ணிறந்திருப்பார்களென்றறிக. (உ)

முன்சொல்லிய மந்திரர்முதன் மூவகையான்மாக்களுக்குச் சரு வஞ்ஞத்துவம், முன்சொல்லிய வாக்கு விருத்தி முதல் வித்துகாரியமின்றி யுண்டாகாதென்று ணர்த்துகின்றார்.

மூவகையணுகருக்குமுறைமையால்வித்துஞான
மேவியதில்லையாகில்விளங்கியஞானமின்று
மோவிடவித்துஞானமுதிப்பதோர்ஞானமுண்டேற்
சேவுயர்கொடியினன்றன்சேவடிசேரலாமே.

இ-ள். (சர்வான்மாக்களுக்குஞ் சூக்குமைவாக்குமுதலிய வித்து ஞானமிருந்தாலுங் கன்மத்தினுன் மாயையினுண்டாகிய தூலசரீர சூக்கு மசரீரசம்பந்தத்தினுலே சர்வஜ்ஞத்துவம் பிரகாசிக்கவில்லை யாகையால்) மூவகை யணுக்களுக்கும-மந்திரர் மந்திரமகேசுவரர் அணுசதாசிவர்களுக் கும்–முறைமையால் வித்துஞானமெலியதில்லையாகில்-சூக்குமைமுதல்வா க்குவிருத்தி சம்பந்தக்கிரமத்தில், ஞானத்தை விளக்குதலான் ஞானமெ ன்றுபெயருடைய முன்னுதித்த விருத்தத்திற்சொல்லிய வயிந்தவருக்கும தேக தூலதேக புவனுதிகாரியசம்பந்த மில்லாதிருந்தால்–விளங்கிய ஞா னமின்றும்-சர்வஜ்ஞத்துவசத்தியிற் சமூற்பன்ன சவிகற்ப சர்வவிஷய

ஞானம் அவர்களிடத்திற் காணப்பட்டதில்லையாய்விடும்— விந்துஞானம்- இப்போது சொல்லிய வயிந்தவ தத்துவ தாத்துவிக வாக்குரூப வியஞ் சகஞானமும், வாக்குபாதிபொருந்திச் சர்வஞ்ஞத்துவசத்தியிற் சமூற்பன்ன சர்வவிஷயவியங்கியசயிகற்பஞானமும்—ஓவிட—நீங்கிட—உதிப்பதோர் ஞானமுண்டேல்-பரமுத்திக்கருகராமிவர்க்குச் சிவநிரீக்ஷணபாத்திரநிருவிகற்பசமாதி சமூற்பன்ன நிருவிகற்பசிவன்முத்தி சாக்ஷாற்கார ஞானமேதான், சகலர்க்குமுன்சொல்லியமகாமாயாந்தசுத்தி, மகாமாயா புருஷவிவேகஞான சிவத்தியான சிவசமாதியினுற்பவிக்கும், ஒப்பற்ற சிவவிஷய சீவன்முத்தி சாக்ஷாற்கார ஞானந்தான், சமாதிஞானமாத்திரந்தான், தியானஞானமாத்திரந்தான், விவேகஞானமாத்திரந்தான், உள்ளதேல்— (அடுத்துமுறைமையினும்) சேவுயர்கொடியினுன்றன் சேவடி. சேரலாமே - காரியலக்ஷணையினுல் முன்சொல்லிய அறிவானந்தமுதன்மையென்கின்ற சிற்சத்திலக்ஷண சிவத்துவாபியத்தி பெறலாகுந்தானே. எ-று.

சத்தியோ நிர்வாணதீக்ஷாசுத்தியாகில் அசத்தியோநிர்வாணதீக்ஷாமாத்திரத்துக்கங்கமாகிய விவேக ஞானத்தியானசமாதி சீவன்முத்திசாக்ஷாற்காரங்களின்றிப் பெறலாம். மூவகையணுக்கள், விஞ்ஞானகலப் பிரளயாகல சகலர்களல்லர் விதேகிகளாகும் முதலிருவர்க்கும் விந்துஞானமில்லாமையால். விந்துஞானமென்றது வாக்குமாத்திரமென்றுபண்ணி, அஃதெல்லார்க்குமுண்டென்று சகலர்க்குள்ளுத்தம மத்திம வதமர்கள் மூவகையணுக்களென்று பொருளுரைத்தாலு மாறுபாடில்லையே? உள்ளது. ஒருபிரகாரத்தாலப்படியும் பொருளுரைக்கலாம். (உசு)

இவ்விடத்து மகாமாயாகாரியத்தைச் சிறப்பித்தினிமேற்செப்பும் படிக்குப் பொதுவாயுரைத்து, மாயாகாரியத்தையு மப்படிச் செப்பும்படிக்கப்படி யுரைக்கின்றார்.

அருவினி லுருவந்தோன்றியங்காங்கிபாவமாகி
யுருவினி லுருவமாயேயுதித்திடுமுலகமெல்லாம்
பெருகிடுஞ்சுருங்கும்பேதாபேதமோடபேதமாகு
மொருவனினையெல்லாமாகியல்லனுயுடனுமாவன்.

இ-ள். அங்காங்கிபாவமாகி-(காரியசத்திசூக்ஷமமாயையாதலால்) மாயையங்கி காரியங்களங்கங்களென்னுந் தன்மையாகி—அருவினி லுருவந்தோன்றி- அருவினில் - காரியசத்திரூபமாகியமாயையில் — உருவம் - அத்தக்காரியசத்தி வியத்திரூபமாகியகலாதிகாரியம்—தோன்றி - உற்பத்தியாய்—உருவினி லுருவமாயே - அத்தக்கலாதிகாரியத்தினின்றும் பிரகிருதிமுதலிய காரியமாகித்தானே — உலகமெல்லாம் - சகலாதிபிருதிவியந்தமாகிய தத்துவதாத்துவிகப்பொருள்களெல்லாம் — உதித்திடும் - உற்பத்தியாம் —

பெருகிடுஞ்சுருங்கும் - சிருட்டிகாலத்தில் வியத்திரூபமாயும், சங்காரகாலத திற் சத்திரூபமாயுமிருக்கும் – பேதாபேதமோடபேதமாகும் - வியத்திரூ பமாய்க்காரணம்பெருகிக் காரியமானகாலத்திற் கடமு நிருத்தும்போலக் காரியகாரணங்கள், விசேஷாவிசேஷமாய்த் தோற்றும். சத்திரூபமாய்க் காரியஞ்சுருங்கிக் காரணமானகாலத்திற் காரியகாரணங்கள், அவிசேஷ ங்களாய்த்தோற்றும் – (நிமித்தகார்ணனன்றியாமோ வாகாதென்றுணர் த்துகின்றார்) ஒருவனேயெல்லாமாகியல்லனுடனுமாவன் - சிவன்ஒனே அனந்தத்துவாரத்தினூலே மாயாகாரியமெல்லாவற்றையும் பண்ணுகிறவ னுய்க், குலாலன்தண்டமுதலியவற்றைக் கைக்கொண்டுபிடித்துப் பண்ணு வதுபோலப் பண்ணுதவனுமாய்த், தனதுசத்திரூபகரணசங்கற்பமாகிய சலனமற்றதொழிலினும் பண்ணுநிற்பவனுமாவன். எ-று. (உஎ)

தந்தமுதலியவருவத்தினின்றும் படமுதலியவருவந்தோன்றுதல் கண்டிருந்தும் அருவினினுருவந்தோன்று மென்பத டாதென்றுசங்கிக்கமறுத்தணர்த்துகின்றார்.

அருவுருவீதைதாகும்விகாரமுமவிகாரத்தில்
வருவதுமில்லையென்னில்வான்வளியாதிபூதந்
தருவதுதன்னீன்மேகசலனசத்தங்களோடு
முருவின்மின்னுருமேறெல்லாமுதித்திடுமுணர்ந்துகொள்ளே.

இ-ள். அரு- மாயை—உருவீதைதாகும் கலாதிகளோயுண்டாக்கமாட்டா து—விகாரமும் - பரிணமமும் – அவிகாரத்தில் - பரிணமமல்லாதபொரு னில்—வருவதுமில்லையெனனில்-வாராதென்று நீசொல்லில்— (வைதிகம தத்தினன் மறுக்கின்றார்) வான் - அருவாகிய, வாகாசமானது— வளியா திபூதந்தருவது- வாயுவாதி பூதங்களோயுண்டாக்குவது – தன்னில் - அதனி டத்தில், (அந்தப்பூதவிகாரங்களாகிய தூமதூளிபடல முதலியவற்றின்)— மேகசலனசத்தங்களோடு முருவின்மின்னுருமேறெல்லா முதித்திடுமுணர் ந்துகொள்ளே - மேகம் அந்தமேகத்தசைவு தொனிகளோடுகூடி (உரு வென்பதுவருவித்து உருவின்மின் உருவில் உருமேறென்று பொருள்கள் கொண்டிவையெல்லா முதித்திடுமென்று கூட்டுக) எ-று. (உஅ)

திருட்டாந்தமுன்னுகச் சிவன்சிருத்தியம் பண்ணுமுறைமை, யறி விக்கின்றார்.

மண்ணினிற்கடாதியெல்லாம்வருவதுகுலாலனூலே
யெண்ணியவருவமெல்லாமியற்றுவனீசன்றனும்
கண்ணுகாரியங்களெல்லாங்காரணமதனிற்காண்பன்
பண்ணுவதெங்கேநின்றிங்கென்றிடிற்பகரக்கேணீ.

இ-ள். மண்ணினின் - மிருத்பிண்டத்தினின் றும்— கடாதியெல்லாம் - கும்பகலசமுதலிய காரியங்களெல்லாம்--குலாலனுலேவருவது - மண்மக னுலுண்டாவது— (அப்படி) ராசன்றனும் - * எண்ணியவுருவமெல்லாமியற் றுவன் - நினைத்தகாரியங்களெல்லா நிருமிப்பன் (முதற்காரணமின்றி முடி. ப்பதுவென்னில், சர்வசாமர்த்திய மிருந்தாலு மதுகூடாது. பின்னைப் படியெனில்) — கண்ணுதாரிபக்களெல்லாம் காரணமதனிற்காண்டல் - நினைத்தகாரியங்களெல்லா முதற்காரணமாகிய மாயையினின்று முண்டா க்குவன் — (குலாலன் பூமியாதாரமாகின்று கடாதிகாரியம்பண்ணக் கண் டோமே) ராசனிங்கெங்கே நின்றுபண்ணுவதென்றிடில் * — பகரக்கேளீ- சொல்லுவாம் நீகேள். எ-று. (உக)

கர்த்தா நிற்குநிலைமையை நிருசணிக்கின்றார்.

சிலமோவுலகம்போலத்தெரிப்பரிதனனிற்குங்
கோலமுமறிவாரில்லையாயினுங்கூறக்கேணீ
ஞாலமேழினையுந்தந்நிறுத்திப்பின்னுசம்பண்ணுங்
காலமேபோலக்கொண்ணீநிலைசெயல்கடவுட்கண்ணே.

இ-ள். சிலமோவுலகம்போலத் தெரிப்பரிது-(பரமேசுவரனுடைய) சரித்திரம் உலகத்திலுண்டாகிய பிரமாதிதேவர்களுக்குப்போலச் சொல் லுவது துல்லபம் (அமூர்த்தமாகையால்)— அதனுனிற்குங் கோலமுமறி வாரில்லை- ஆகையா லிந்தப்பரமேசுவரனுடைய சகளலிங்கிரக தடத்த லக்ஷணத்தையுங் காண்பாரில்லை (சொரூபலக்ஷணந் தூரமென்பது சொல் லவேண்டுமோ)— ஆயினுங்கூறக்கேணீ - அப்படியிருந்தாலுஞ் சொல்லுகி றேம்நீகேள்—ஞாலமேழினையுந்தந்நிறுத்திப்பின்னுசம்பண்ணுங்காலமே போல - தாத்துவிகசகலப் பிரபஞ்சத்தையுந் தோற்றுவித்து நிற்பித்துப் போக்கும் (அமூர்த்தமாய் அப்பிரத்திபக்ஷமாய் நிராதாரமாயிருக்கும்) கா லமேபோல்—கடவுட்கண்ணே- (காரியம்பண்ணுஞ்) சிவனிடத்திலே—நிலை செயல்கொண்ணீ - நிராதாரமாய் நிற்றன்மூறைமையுஞ் சங்கற்பமாத்திர சந்நிதானத்தாற் நிருத்தியநிஷ்கள மூறைமையுங் காண்பாயாக. எ-று.

அப்போது காலத்துக்குப்போற் புத்திமற்கர்த்திருத்துவம் பொருந்து வதின்றெனின், அப்படிச்சொல்லவேண்டா. காலமென்பதமூர்த்தமாய்ச் சுவதேசகத்தசைவுபண்ணு மாத்மாவைப்போலவென்று போதிப்பது. (கூ)

சிவசங்கற்பத்தான் மாயையில்விகாரமாய்ச் சிவனுக்குவிகாரமின்றிப் பிரபஞ்சந் தோற்றுமுறைமையை விரிக்கின்றார்.

கற்றதூற்பொருளுஞ்சொல்லுங்கருத்தினிலடங்கித்தோன்றும்
பெற்றியுஞ்சாக்கிரார்த்தியுயிரினிற்பிறந்தொடுக்க
முற்றதும்போலவெல்லாவுலகமுமுதித்தொடுங்கப்
பற்றெடும்பற்றதின்றிநின்றனன்பரனுமன்றே.

இ-ள். கற்றநூற்பொருளுஞ்சொல்லும் கருத்தினிலடங்கித்தோன்றும் பெற்றியும் - முன்படித்துப்பழகிய சாத்திரச்சொல்லனுபூதி பொருளனுபூதிகள் புத்தியிற்சூட்டிய வாசனையொடுங்கிக் கண்ணெழுத்தியைபு முதலிய காரணத்தினுற் றிரும்ப அந்தவாசனைகளம்பி மதியினினைவுவருவிக்க நினைத்தவருவுயிர்த்துணைவி மனத்திலிச்சிக்கச் சூக்குமைவாக்கிற் சொல் முன்றோற்ற மதிமணிவிளக்கின் மலர்ந்த சிற்சத்தியிற் சொல்லனுபூதி பொருளனுபூதிகள் பின்றோற்று முறைமையும் (போல)—சாக்கிராதி-சாக்கிரமுதலிய அவத்தைகளோடும் — உயிரினிற்பிறக்தொடக்கமுற்றதும் போல - அருவாகி நிமித்தனுகிய வாத்மாவிற் பொருந்திய கருவிகளிற் றமோகுணங் களம்பிக்களம்பி மெள்ளமெள்ள மேலிடமேலிடச் சத்துவகுணஞ் சற்றே சிற்சத்திமனச் சங்கற்பத்தோடு குன்றிக்குன்றிவர முறைமையிற் றோற்றித் திரும்பத் தமோகுண சத்துவகுணங்களினதேறுதல் குறைதன் மாறிவர மறைந்ததும்போல— பரனும் - சிவனுமா— எல்லாவுல கமுமுதித்தொடுங்க - சகலகாரியப்பிரபஞ்சமுற்றும் மாயையிற்றோற்றியழிய (அந்தப்பிரபஞ்சத்தோடு)— அன்றே - அஞ்ஞையே — பற்றுமும்பற்றினிற்றினன் - தனதுசத்தியாகிய சொருபகரணத்தினது சத்திசங்கற்பத்தொழிலாகிய சந்நிதிச்சொரூபசம்பந்தியாய் நின்று கடத்தொடுதொட்டுக்கைகொடுபிடித்த தண்டசக்கிராதி கடத்தினதசைதற்றோழிற் சம்பந்திபோற்சம்பந்தியன்றி — நின்றனன்- வியாபித்திருப்பன். எ-று. (நக)

> சித்துக்கும் அசித்துக்கும் தோற்றமொடுக்கஞ் சாத்திரஞ் சொல்லு மாதலான், மாயையிற்றோற்றமொடுக்கம் உயிர்க்குமதிகப்படாது, சித்துகருச் சடத்தன்மைவரு மாதலாலே, பாரிசேடத்தாற் சிவனிடத்திற்செப்ப வேண்டும், சிவனிடத்தொடுங்குஞல் முத்தியடைந்து போகாமற்றிரும்பச் சித்தாதிப்பதேனென் றுசங்கித்துப் பரிகரிக்கின்றூர்.

உயிரவையொடுங்கிப்பின்னு முதிப்பதெனரன்பாலென்னிற்
செயிருறுமலத்தினுகுஞ்சிதைந்ததீதெனின்றித்தத்
தயர்வொழிகாரியங்களழியுங்காரணங்கிடக்கும்
பயிறருகாரியம்பின்பண்டுபோற்பண்ணுமீசன்.

இ-ள். உயிரவையொடுங்கிப்பின்னு முதிப்பதெனரன்பாலென்னில்- சிவனிடத்திற் சித்துக்குத் தோற்றமொடுக்கம் பிரமத்தில் நாராயணப்பிரகிருதியிற் பரிணதவேதாந்தி பாஞ்சராத்திரிபோலிச்சித்தாந்திகள்செப்பார்கள். பின்னெப்படி?—செயிருறுமலத்தினுகும்- ஆத்மாக்களுக்குத் தோற்றமொடுக்கம் மாயையிற் கலாதித்தவங்கடோற்றியொடுங்கிக் கட்டவிட, மோகமுற்றமல மொருபிரதேசத்தினீங்கமறைக்க வதனுல் ஞானக்கிரியைகள் விளங்கமறைய வுபசரிக்கப்படும். விகாரமின்றி ஞானக்கிரி

யைகட்குக் கேவலினுல்விளங்குதல் மலத்தினுண்மறைதல் சித்துக்குச் சனனமரணம் இவணிமித்தமாதலால் அரன்பாலென்றுபசரிக்கப்பட்டது. சடத்துக்குச் சிவசங்கற்பத்தால் விகாரமாய்த் தனதகாரணரூபத்திற் காரியரூபமறைதல் காரணரூபமறையக் காரியரூபம்விளங்குதல் காசமுற்பத்தி—திதைந்தநேதென்னில் - (ஆணவமுதலிய மலங்களிருக்கிற்) சங்கரிக்கப்பட்டதேதென்னில் — சித்தத்தயர்வொழி - மனசில் மயக்கத்தைவிடு— காரியங்களழியும்- காரியப்பொருள்களொடுங்கும்— காரணங்கிடக்கும்- முதறுணைநிமித்தமென்கின்றகாரணத்திரயமிருக்கும் (அதனல்)— பயிறருகாரியம் பின்பண்டுபோற் பண்ணுமீசன்—சிவனிமித்தகாரணனுய்கின்று போசகபோக்கியங்களாக முன்பழகிய காரியப்பொருள்களே மூன்றியிருட்டியிற்போல முதற்காரணத்தினின்று துணைக்காரணத்தினுற் றோற்றுவிப்பன் எ-று. (கூ)

சிவன் இருத்திய இருத்தானுலும் விகாரியல்லனென்று விளம்புகின்றூர்.

தோற்றுவித்தளித்துப்பின்னுந் துடைத்தருடொழில்கண்மூன்றும்
போற்றவேயுடையனீசன்புகுந்ததுவிகாரமென்னிற்
சாற்றியசுதிரோனிற்கத்தாமரையலருங்காந்தங்
காற்றிடுங்கனலேரேருங்கரந்திடுங்காசினிக்கே.

இ-ள். தோற்றுவித்தளித்துப்பின்னுந் துடைத்தருடொழில்கண்மூன்றும்-சிருட்டி ஸ்திதி சங்காரமென்கின்ற மூன்றுகிருத்தியங்களேயும், (சொல்லாமற் சித்திக்குந் திரோபாவம் அனுக்கிரகமென்கின்ற இரண்டு கிருத்தியங்களேயும்) —ஈசன்-சிவன்—போற்றவேயுடையன்-பண்ணுதற்குரியன்—புகுந்தது விகாரமென்னில்- (குலாலாதிகளுக்குப்போல மூன்றிருந்தமுறைமைவிட்டு வேறொருமுறைமை யாகுதலாகிய) விகிர்திவந்ததென்னில் (அதில்லே) —சாற்றியசுதிரோனிற்கத் தாமரையலருங்காந்தங் காற்றிடுங்கனலேரேருங் கரந்திடுங்காசினிக்கே- காசினிக்கே - உலகத்தின் கண்ணே, (கண்காணத்தானே காரணமாகக்) கற்பிக்கப்பட்ட சூரியன் மூன்றின்றமுறைமையினிற்கக் கமலமலரும்—காந்தம்- சூரியகாந்தக்கல்லுத் (தானு மசைவற்றிருந்து) — காற்றுங்கனலே - அக்கினியைக்கக்கும்— (காசினிக்கேயென வின்னுமெடுத்துக்கொள்க) பூமிக்குள்ளே நீரும்— கரந்திடும்-சுவறும். எ-று.

நீர் சொன்னதமக்குத் திருட்டாந்தமன்று. சூரியனுக்குக் கமலமலரக்கடவது, காந்தங் கனலைக் கக்கக்கடவது, நீர் நிலத்திலே சுவறக்கடவதெனுஞ் சங்கற்பமில்லே, காரியநிகழக்கண்டோம். இதுகொண்டு பூதங்கர்த்தா, பிரகிருதி கர்த்தா, கன்மக் கர்த்தாகாலங்கர்த்தா, என்கிறவாதங்கள் வந்துலாவப், புத்திமான், கர்த்தாவென்பது பொய்யாய்த் தூரம் போயிற்று.சத்தியம் நீசொல்லியது. சூரியனுக்குக் கமனசங்கற்பத் தினுல

சிவதத்துவமஞ்சையும் இருக்கப்பண்ணிக்காத்து மகாப்பிரளயத்தின்மூ
ற்றும் அவாந்தரத்துஞ் சிலதேகாதிகளையுஞ் சங்கரிப்பர்.

பின்னந்தமகாசிருட்டிகாலத்தில்அனந்தேசுவரர் அசுத்தமாயையி
னின்றும் புவனக்கோத்தாயுஞ் சூக்குமதேகக்கோத்தாயு மிருவகையாயி
ருக்கின்ற கலாதிபிருதிவியந்த தத்துவங்களையும்தூலசரீரங்களையும்போக்கி
யப்பொருள்களையும் பொதுச்சிறப்பாகப்பண்ணிப் பொருத்திக்காத்து மகா
ப்பிரளயத்துமுற்றும் அவாந்தரத்துச் சிலதேகங்களையும் ஸ்ரீகண்டாதித்து
வாரத்தாலுந் தாமாயுஞ் சங்கரிப்பர்.

மத்திமசிருட்டிகாலத்திற் ஸ்ரீமத் ஸ்ரீகண்டருத்திரர் பிரகிருதியினின்
றும் புவனதாரக்கோத்துமாத்திரமா யிருக்கின்ற குணதிபிருதிவியந்த தத்
துவங்களைப் பொதுவாகப்பண்ணிப் போக்கியப்பொருள் தூலதேகங்க
ளைப் பொதுச்சிறப்பாகப்பண்ணிப் பொருத்திக்காத்து, மத்திமப்பிரளயத்
தில் முற்றுஞ்சங்கரிப்பர்.

அவரேவலாற் குணநிலையர்களாயிருக்கும் பிரமவிஷ்ணுக்களும் பிர
மாண்டத்துண்ணிலையர்களாயிருக்கும் பிரமவிஷ்ணுக்களும் குணதிபிருதி
வியந்த புவனங்களிற் தூலதேகங்களையும் போக்கியப்பொருள்களையும்
பொதுச்சிறப்பாகப்பண்ணிப் பொருத்திக் காப்பார்கள்.

பிரதமப்பிரளயத்திற் ஸ்ரீகண்டரேவலாற் றமதிருப்புத்தொடங்கிச்
சுவர்க்கபரியந்தஞ் சங்கரிக்கும் காலாக்கினிருத்திரரே அவாந்தரத்தும்
பிரமாண்டத்துட்டூலசரீரங்களோடு போகியப்பொருள்களைச் சங்கரிப்
பர். ஆதலால்) – புண்ணியன் - (பரசிவானுக்கிரகம்பெற்றுப் பரிசுத்தரா
யச் சிவனுயிருக்கும், முன்சொல்லிய) ஸ்ரீகண்டபரமேசுரன்– புரைத்த
திகாரசத்திநண்ணலாலே - பரசிவனிடத்தினின்றும் பரசிவனுக்கொத்திரு
க்கும் பிரகிருதிகாரியசிருட்டியாதி திருத்தியஞ்செய்யும் சாமர்த்தியம் பெ
றலாலே (அவரேவுதற்கர்த்தா) – விரைக்கமலத்தோன் மாலுமேவலா
ன் மேவினோர்கள்- (காலாக்கினிருத்திரரோடு) பிரமவிஷ்ணுக்கள் இயற்
றுதற்கர்த்தாக்கள்(ஆதலால், அவரொருவருக்கேயாகவைத்தது. அதிலன்
றி)–புண்ணியன்- (ஸ்ரீமத் அனந்தேசுரரானுக்கிரகம்பெற்றுப் பரிசுத்தரா
யச் சிவனுயிருக்கும் பிரமாண்டத்துட் சிவலோக கைலாய மேருச்சி
கர நிலையராகிய) ஸ்ரீகண்டபரமேசுரன் – புரைத்தநிகாரசத்தி நண்
ணலாலே-ஸ்ரீமதனந்தேசுவரரிடத்தினின்றும் அனந்தேசுவரருக்கொத்தி
ருக்கும் பிரமாண்டத்துட் பிரமவிஷ்ணு முதலோர்க்கு நிக்கிரகானுக்கிரக
ம்பண்ணுஞ் சாமர்த்தியம் பெறலாலே(அவரேவுதற்கர்த்தா) – விரைக்கம
லத்தோன்மாலும் ஏவலான்மேவினோர்கள்-(பிரமாண்டத்துண்ணிலையரா
கிக் காலாக்கினிருத்திரரோடு கூடியிருக்கும்). பிரமவிஷ்ணுக்கள்இயற்றுத
ற்கர்த்தாக்கள்.

அதிவன்றி,—புண்ணியன்- (பரசிவானுக்கிரகம்பெற்றுப் பரிசுத்தராய்ச் சிவனுயிருக்கும் ஈசுவரதத்துவநிலையராகிய) ஸ்ரீகண்டபரமேசுவரன்—புரைத்தகிகாரசத்தி நண்ணலாலே- பரசிவனிடத்தினின்றும் பரசிவனுக்கொத்திருக்கும் அனந்தேசுவரரோடுகூடி மாயாகாரியசிருட்டியாதி திருத்தியஞ்செய்யுஞ் சாமர்த்தியம்பெறலாலே அவர், சுவயமாயுங் குணநிலையபிரமாண்டநிலையவிருஸ்ரீகண்டத்துவாரத்தினுலேயும் ஏவுதற்கர்த்தா—விரைக்கமலத்தோன் மாலுமேவலான் மேவினுர்கள்- (குணத்துட் பிரமாண்டத்துள் இருவகைப்) பிரமவிஷ்ணுக்களும் இயற்றுதற்கர்த்தாக்கள். எ-று.

இப்படி ஸ்ரீகண்டத்திரயம் பிரேரகம், காலருத்திரரோடு பிரமவிஷ்ணுசதுட்டயம் பிரேரியமெனவறிக. பரசிவனேவுதற்கர்த்தா அனந்தேசராதிகளோடுகூடச் சிறீகண்டத்திரயம் பிரமவிஷ்ணு சதுட்டயமெல்லாம் இயற்றுதற் கர்த்தாவாயிருக்கும். (கூசு)

ஆகையால், மகாப்பிரளயத்திற் பரசிவமொன்றுமே பதிகளுக்குட்பரிசேடிக்குமென்று படிக்கின்றூர்.

இறுதியாங்காலந்தன்னிலொருவனேயிருவருந்தம்
மூறுதியினின்றுரென்னிலிறுதாணுண்டாகாதா
மறுதியிலனேயெல்லாபழித்தலாலவனுலின்னும்
பெறுதுநாமக்கமோக்கம்பேரதிகரணத்தாலே.

இ-ள். இறுதியாங்காலந்தன்னில்- மகாப்பிரளயத்தில்—ஒருவனே- பரசிவனெருவரே (பதிகளிற் பரிசேடித்துகிற்பர்)—இருவருந் தம்மூறுதியினின்றுரென்னில்- (பிரமவிஷ்ணுக்களிருவருந் தாமென்பது பௌராணிகமதப் பழக்கத்திற் படிந்தது. சிவசாத்திரீயத்துக்கு) அனந்தாதி யதிகாரகர்த்தாக்களனைவரும் தமது திருத்தியங்களோடு இருந்தார்களாகில்—இறுதிதாணுண்டாகாதாம்-மகாப்பிரளயம் வராதாகும். (ஆதலால்)—அறுதியில்- அத்திதிகாலமுடிவில்—அரனே- பரசிவனே— எல்லாமழித்தலால்- சிவதத்துவமுதற் பிருதிவிதத்துவபரியந்தம் பிரபஞ்சமுற்றும் சங்காரப்பித்துச் சங்காரித்தலால்—அவனுல்-அந்தப்பரசிவனுல்—பேரதிகரணத்தாலே- "அதபத்யுரதிஷ்டானம்" என்று ஸ்ரீமத் மதங்காகமவசனத்தால் தாதாத்மியத்தினுல் அந்தப்பரசிவனுக்குப் பெரிசாமிருப்பாகுஞ்சத்திகாரணத்தினுலேதானே— (திரும்பவெடுத்துக்கூட்டுக) பேரதிகரணதத்தாலே (பேரதிகாரணத்தினின்றுமெனவேற்றுமைமாறுக) "நித்தியாதிட்டேயரூபிணி" யென்று பவுட்கரவசனத்தினுற் பரிக்கிரகத்தினுல் அந்தப்பரசிவனுக்குப் பெரிதாமிருப்பதாகுஞ் சுத்தமாயையினின்று சிவதத்துவமைக்குங்கும் — இன்னும் - இனிமேலும் — ஆக்கநோக்கமபெறுதும் - சிருட்டிஸ்திதிசங்காரங்காண்போம்— (திரும்பவெடுத்துக் கூட்டுக) பேரதிகரணத்தாலே- பரிக்கிரகசத்தியினுலந்தப்பரசிவனுக்குப் பெரிதாமிருப்பதாகு மியத்து

தற்கர்த்தாவாகு மனந்தேசுரனுலேதானே— (திரும்பவெடுத்துக்கூட்டுக) பேரதிகரணத்தாலே- தாதாத்மியத்தினு லந்தவனந்தேசுரருக்குப் பெரிதாமிருப்பாகும் அந்தவனந்தேசுரசத் திகரணத்தினுலேதானே — (திருமபவெடுத்துக்கூட்டுக) பேரதிகரணத்தாலே -(பேரதிகரணத்தினின்றுமென வேற்றுமையாறுக) பரிகிரகத்தினு லந்தவனந்தேசுரருக்குப் பெரிதாமிருப்பதாகு மசுத்தமாயையினின்றுந்தானே காலதத்துவமாதியாய்ப்பிருதிவிதத்துவமந்தமாகுந்தத்துவங்களுக்கு—இன்னுமாக்கநோக்கம்பெறுதும்- திரும்பச் சிருட்டித்திதிகளைக்காண்போம். எ-று. (கூ)

இதனு லுமதுகர்த்தாச் சரீரியல்லவென்பது சொல்லப்பட்டது. சிலவாதிகள் சரீரியல்லாத கர்த்தாவுக்குக் காரியகர்த்திருத்துவங் கூடாதென்று சொல்லுவார்கள், அதெப் படியென்றுவினுவ உத்தரமுரைகின்றூர்.

அருவமோருபாருபமானதோவன்றிநின்ற
வுருவமோவுரைக்குங்கர்த்தாவடிவெனக்குணர்த்திங்கென்னி
லருவமுமுருபாருபமானதுமன்றிநின்ற
வுருவமுமூன்றுஞ்சொன்னவொருவனுக்குள்ளதாமே.

இ-ள். வெளிப்பொருள்.

வினுவின சேஷதாகருத்திது.

கர்த்தாச்சரீரியோ?அன்றியசரீரியோ? அன்றிச்சரீரியசரீரியல்லாதவனே? இந்த நாலுபக்ஷத்துட் சரீரியசரீரியல்லாதவனுஞ்சூனியப்பொருளாய்ப்போவன். சரீரியசரீரியாகில் விருத்ததன்மமிரண்டுஞ்சேதமும் உட்டணமும்போல ஒருபொருளிலிராது. அப்படியிருக்குமாகிலும் சரீரிக்கு மசரீரிக்குஞ் சொல்லப்போகின்றகுற்றம் சொல்லாமல்வரும். (கூ)

சரீரியுமாம், அசரீரியுமாம், சரீரியசரீரியுமாம், என்று நாஞ்சொன்னேம; சரீரியசரீரியாதில், சரீரிக்கு மசரீரிக்குஞ் சொல்லுங்குற்றம் வருமென்றதேதென்று குருவினுவச்சிஷன்கூறுகின்றதற்குக் கூறுகின்றூர்.

நண்ணிடுமுருவமென்னினமக்குளவுருவம்போலப்
பண்ணிடவொருவன்வேண்டுமிச்சையேற்பலருமிச்சை
கண்ணியவுருவங்கொள்ளேமியாம்பெருங்கடவுடானு
மெண்ணியயோகர்சித்தர்போலுருவிசைப்பன்காணே.

இ-ள். நண்ணிடுமுருவமென்னில்-கர்த்தாவைச் சரீரம்வந்து பொருந்துமென்னில்—நமக்குளவுருவம்போல-நம்போல்வரர்க்குள்ள சரீரத்துப்போல—பண்ணிடவொருவன்வேண்டும் - சிருட்டிக்க வேறொருகர்த்

1246/

தாவிரும்பப்படுவன் (அப்படியாகில் அவனுக்கும வேறொருகர்த்தாவேண்டுமென்றனவத்தைவரும்)—இச்சையேல்-தமது சங்கற்பத்தாற் றமக்குச் சரீரத்தைப் பண்ணிக்கொள்வாரென்று நீர படித்துப்பேசில், (தாம் சரீரியாயிருந்து தமக்குச் சரீரத்தைப்பண்ணிகொண்டாரோ? அன்றி, யசரீரியாயிருந்து பண்ணிக்கொண்டாரோ? சரீரியாயிருந்து, தமதிந்தச்சரீரத்தைச் சிருட்டித்தாரானால், அந்தச்சரீரத்தையும், சரீரியாயிருந்து சிருட்டிக்கவருமென்றனவத்தைவரும்

அசரீரியாயிருந்து சங்கற்பத்தாற் றமது சரீரத்தைப் பண்ணிக்கொண்டாரென்னில், அப்படிச் சங்கற்பத்தாற் சாவப்பிரபஞ்சத்தையும், பண்ணுவரென்று சரீரகற்பனைசிட்பலமாம. அப்படியாகிலும்)—பலருமிச்சைநாமெல்லாரும நமதுசங்கற்பத்தானமக்குவேண்டிய சரீரங்களைப்பண்ணிக்கொள்வோம. அப்படிச்சொல்லவேண்டியதல்ல— யாங் கண்ணியவுருவங்கொள்ளேம-நாமெல்லாரும, 'கருதியதிவ்வியசரீரங்களை—(மலாதிதகைந்தசமர்த்தஇயர்களாதலாற்) பணணிப் பொருததிக்கொள்ளமாட்டோம்—பெருகடவுளானும்-பரமகர்த்தாத்தானும்—எண்ணியயோகர்சித்தர்போலுருவிசைப்பல்காலை-எண்ணிகையாயிருகின்றயோகர்கள்சித்தர்கள் போலவேண்டிய சரீரங்களை யெடுப்பன். எ-று. (நக)

நீர்சொல்லிய திருட்டாந்தஞ் செப்பமல்லவென்று செப்புகின்றான்.

வித்தகயோகர்சித்தர்வேண்டுருக்கொள்ளுமாபோ
லுத்தமன்கொள்வனெண்ணிலவர்களிலொருவனுவ
னத்தகையவர்களெல்லாமாக்குவதருளாலாங்கே
வைத்தமாயையென்னில்வடிவெலாமாயையாமே.

இ-ள். வித்தக யோகர் சித்தர் வேண்டுருக் கொள்ளுமாபோ உத்தமன்கொள்வனென்னில் - * அவர்களிலொருவனுவன் - அந்த வித்தக யோகர் சித்தர்களுக்குள்ளே யொருவனுவன் (ஆனாலேது? அவர்கள் பிராகாமியசித்தியினாலே தங்களுக்குச்செயற்கையாகிய வேண்டியசரீரங்களை யெடுத்துவிடுவார்கள், தங்கள் இச்சையினால் இயற்கையாகிய சரீரங்களை விட்டியற்கையாகிய திவ்விய சரீரங்களை யெடுக்கமாட்டார்கள்) —அத்தகையவர்களெல்லாமாக்குவதருளாலாங்கேவைத்தது மாயையென்னில் - அதுவன்றியு மவர்கள்—ஆங்கே-அவ்விடத்து—அத்தகையெல்லாம் - பிராகாமியசித்தியினாலெடுக்குஞ் சரீரங்களனைத்தும்(உபாதானகாரணமன்றியுண்டாகாதென்ன) —அருளால்- சிவாக்கினையினால் (காரியத்துவாரத்தினாலே)—மாயைவைத்ததென்னில்—மாயையுண்டாக்கிக்கொடுத்ததென்றுத்தரஞ்சொல்லில் (அத்திருட்டாந்தம்போலச் சிவனுக்கும) —வடிவெலாமாயையாமே-சரீரமுற்றும் மாயாமயமாமே. எ-று. (ஈ0)

ஏகதேசவுவமையில் முற்றுவமைக்குள்ளவுரை யுரைக்கப்பட்டதென்றுரைக்கின்றார்.

மாயைதான்மலத்தைப்பற்றிவருவதோர்வடிவமாகு
மாயவாணவமகன்றவறிவொடுதொழிலியார்க்கு
நாயகனெல்லாஞானத்தொழின்மூதனண்ணலாலே
காயமோமாயையன்றுகாண்பதுசத்திதன்னல்.

இ-ள். மாயைதான், மலத்தைப்பற்றி வருவதோர் வடிவமாகும்- ஆணவமலநிமித்தமாக வாராநின்றிருக்குந் தூல சூக்குமசரீரமாகும் (எதுக்காக?)—ஆயவாணவம்- அந்தவாணவமலம் (பசுவான்மாக்களுக்கு)—அகன்றவறிவொடு தொழிலியார்க்கும்- (சிவனுக்குப்போல) விரிந்த சர்வஞ்ஞத்துவம்சர்வகர்த்திருத்துவம் என்கின்ற சிவத்துவமாகிய பேரறிவைக்கட்டுப், அதனாலந்தப் பசுவான்மாக்களுக்கு மலபரிபாகமு வரும்பொருட்டுப் போகம் புசிக்கச் சிற்றறிவுண்டாகச் சிவனருளால் மாயை தூலசூக்கும சரீரமாம்.—நாயகன்-சிவன்—எல்லாஞானத்தொழின் மூதனண்ணலாலே-சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவரூப சிவதத்துவத்தினின்று நிமித்தமன்றி விளங்குஞ் சகல ஞானக்கிரியாஞகிதகங்களோப் பொருந்தலாலே —காயமோமாயையன்று-அவருக்குச் சரீரம மாயோற்பனமன்று, அதற்கு நிமித்தமாகு மலமில்லாமையால். (மலமில்லாம லிருக்கவும, ஸ்ரீமத். ஸ்ரீகண்டபரமேசுரன் மூதலோருக்கு மாயாசரீரம்வருவானேன்? மலவாசனையாலதிகாரகாரணமாய்ச், சிறீமதனந்தாதிகளுக்குமாமாயாசரீரம்போல மர்யாசரீரம் அதிசுத்தமாய்வரும். சிவனுக்கு மலவாசனேற்பன்னவதிகாரமல மில்லாதபடியால்)— காயமோமாயையன்று-* அப்போதசரீரவருக்குச்சொன்னவடிவேது? சொல்வாம்— காண்பதுசத்திதன்னல்-சிவனுடைய சமவேத சத்தியினலே அவருக்கு வடிவுண்டாக்கப்படும். எ-று. (சக)

அப்போது பரிணமதோஷம் வருமென்று சொல்லப் பரிகரிக்கின்றார்.

சத்தியேவடிவென்றுலந்தான்பரிணமமாகு
நித்தமோவழியுமத்தானின்மலனருவேயென்னி
லத்துவாபார்க்கத்துள்ளானன்றிவனருமைதன்னைப்
புத்திதானுடையபோலவிருந்தனேபுகலக்கேணீ.

இ-ள். சத்தியேவடிவென்றுலந்தான்-சிவனுக்குச் சிவசத்தியே சரீரமென்று சொன்னலும் (அகண்டிதமூர்த்தியாய்ச் சொல்லலாம். கண்டிதமூர்த்தியாய்ச் சொல்லில்) —பரிணமமாகும்-திரிவதாம் (அதனல்)—நித்தமோவழியும் - நித்தியமென்கின்றதுபோ [யநித்தியமாம், (மசையகலாதிகாரியமாவதுபோலேகதேசத்திற் கண்டிதமூர்த்தியாமென்னில், மாயைபோற் சடமாம்) — அத்தால்- அந்தக்குற்றம் வருதலால்— நின்மல

ன்- * அருவேயென்னில்- (கீர்சொன்ன உருவ மன்று. கீர்சொன்ன அருவேயென்னில்-அத்துவாமார்க்கத்துள்ளாகன்று-சிவன் சடத்துவர மார்க்கத்தருவுருவாயிருக்கும பொருள்போலல்லன. (ஆவனென்னில்)- இவனருமைதன்னைப் புத்திதானுடையையபோல விருந்தவுபகலக்கேணி- மாறுபடுமென்பது சொல்ல நீகேள். எ-று. (சஉ)

மாறுபடுதலை வலரைத்துரைக்கின்றார்.

உலகினிற்பதார்த்தமெல்லாமுருவமோடருவமாகி
நிலவிடுமொன்றொன்றுகாணினறவங்நிலையேபோல
வுலகிலாவறிவன்றனுமருவமேமெனனிலாய்ந்து
குலவியபதார்த்ததொன்றுய்க்கூடுவன்குறித்திடாயே.

இ-ள். உலகினிற் பதார்த்தமெல்லாம்- * உருவமோடருவமாகி நிலவிடும்-மாயைமுதலிய வருபமும் பூதமுதலியவருவமுமாகிநிற்கும்-ஒன்றொன்றுகாணின்ற வங்நிலையேபோல-அருவுருவாகாதுருவருகாது நிற்குமந்தமுறைமையேபோல-அலகிலாவறிவன்றனு மருவமேமெனனில்-ஒப்பற்ற ஞானமுடைய சிவனு முருவில்லாப்பொருளென்று சொல்லில்-ஆய்ந்துகுலவிய பதார்த்ததொன்றுய்க்கூடுவன்-விசாரித்துக்கொண்டாடப்பட்ட மாமாயா மாயாகாரியப்பொருள்களி ஞென்றுய்ப் பொருள்களோடு கலப்பில்லான் கலப்பன் - குறிதிதானேயே - விசாரித்துப்பா- [சித்தருச் சடவருப்போலன்றென்று தாற்பரியம்.] எ-று. (சக)

சாங்கரிய முண்டென்றுரைக்க வில்லையென்றும், பிரகாராந்தரத் தினுலுண்டென்று முரைக்கின்றார்.

பந்தமும்வீடுமாயபதபதார்த்தங்களல்லா
னந்தமுமாதியில்லானளப்பிலனுதலாலே
யெந்தைதானின்னனென்றுமின்னதாமின்னதாகி
வந்திடானென்றுஞ்சொல்லவுழக்கொடுமாற்றமின்றே.

இ-ள். பந்தமும் வீடுமாயபத பதார்த்தங்களல்லான் - மோகமும் போதமுமாயிருக்கும் மாயா மகாமாயா காரியமாகிய சொற்பொருளாகும் பொருள்களல்லான்-அந்தமுமாதியில்லான்-நித்தியன்-அளப்பிலன்-வியாபகன்-ஆதலாலே எந்தைதான்- எமது சுவாமிதான்-இன்னனென்றும்-இக்குறியுடையனென்றும்-இன்னதாம்- இப்படியாவதென்று சுட்டியறியப்படும் பொருளாமென்றும்-இன்னதாகிவந்திடான்- (எல்லாவியாபகத்தா லதுதானுயிருத்தலால்) இப்பொருளாய் வாராதனென்றும்-சொல்லல-வழக்கொடு மாற்றமின்றே- சங்கை யுத்தாங்களில்லை, அணுமானுகமங்க ளில்லையென்றுமாம். எ-று. (சச)

MAHAMAHOPADHYAYA
DR. U V SWAMINATHA

அதற்கேதுகூறுகின்றார்.

குறித்ததொன்றாகமாட்டாக்குறைவிலனாதலானும்
நெறிப்படநிறைந்தஞானத்தொழிலுடைநிலையையானும்
வெறுப்பொடுவிருப்புத்தன்பான்மேவுதலிலாமையானு
நிறுத்திடுநினைந்தபேனிநின்மலனருளினாலே.

இ-ள். நின்மலன்-சிவன்-குறித்ததொன்றாகமாட்டாக்குறைவிலனாதலானும்- (ஏவுதற்கர்த்தாவா யிருக்கின்ற சிவன் இயற்றுதற் கர்த்தாக்களாயிருத்தல், உபதேசகர்த்தாக்களும் திருட்டிமுதலிய திருத்தியகர்த்தாக்களுமா யிருக்கின்ற, அணுசதாசிவர் அனந்தேசுரர் சிறீகண்டத்திரயம் பிரமவிட்டினு புத்தர் அருகர் கபிலர் கணாதர் முதலியகர்த்தாக்கள் சரீரகனோச் சாட்சாத்தும் பாரம்பரியமாயு மதிட்டிதலுத், தனதுசரீரமாகப் பண்ணிக்கொண்டு, அவர்கள்பண்ணுந்திருத்தியந்தனதுதிருத்தியமாய் முடிதலால், அந்த சுமதுசரீரமென்று) குறித்தச-சங்கற்பித்த, சரீரங்களுக்குள் ளொருசரீரமும் சுமதல்லவென்னுங் குணவின் றி நிறைவாகநிற்பவனதலானும்-நெறிப்பட நிறைந்த ஞானத தொழி லுடைநிலையையானும்-எல்லாமார்க்கத்துஞ்செல்லப்பூரணமாகிய, நிற்கிரியாச்செய்திசெய் சத்தியுடைய தன்மையனதலானும்-வெறுப்பொடு விருப்புத் தன்பான்மேவுதலிலாமையானும்-இராகத் துவேஷமிசைவு தன்னிடத்தில்லாமையானும-அருளினால் - தனதுசத்தி சங்கற்பத்தால்-நினைத்தமேனி - சங்கற்பித்த காரியத்துக்கேற்ற வணுசதாசிவர்முதலோர் திருமேனியை- நிறுத்திடும்- (தனதுதிருமேனிபோலத்) தரிக்கும். எ-று. (சடு)

இப்படிக் குருதேகங்களையதிட்டித்துத் தீட்சோபதேசஞ் செய்யாதிருந்தால், முத்தராவதுமின்று, குருசந்தானமு நடவாதென்று கூறுகின்றார்.

ஆரணமாகமங்களருளினலுருவுகொண்டு
காரணனருளாலுகிறகதிப்பவரில்லையாகு
நாரணன்முதலாயுள்ளசுரர்நரர்நாகர்க்கெல்லாஞ்
சீரணிகுருசந்தானச்செய்தியுஞ்சென்றிடாவே.

இ-ள். காரணன்-சிவன்-அருளினல்-தனது சத்திசங்கற்பமாத்திரத்தினல்- உருவுகொண்டு-இது சுமதென்ற குருதேகங்களைக் குறித்துச் செலுத்தி-ஆகமமாரணங்களருளாலுதில் - வேதாகமங்களையுபதேசியாவுதில்-கதிப்பவரில்லை-முத்தராவாரில்லை, மற்றது வெளிப்பொருள். எ-று.

இப்படிச் சிவனுக்கு வாஸ்தவதேகமில்லாமையாற் றியானபூசாதி நிமித்தம் காற்பனிகதேகம அணுசதாசிவாதிதேகங்களை யொட்டிக் கற்பிக்கவேணடும். அதெதினாற் கற்பிக்கவேணுமென்றுவினவ, அவருடைய சத்தியினலேதானே கற்பிக்கப்படுமென்று சாற்றுகின்றார்.

உருவருள்ளுணங்குளோடுமுணர்வருளுருவிற்றோன்றுமே
கருமமுமருளரன்றன்கரசரணுதிசாங்கந்
தருமருளுபாங்கமெலலாந்தானருடனக்கொன்றின்றி
யருளுருவுயிருக்கென்றேயாக்குவனசிந்தனன்மே.

இ-ன். (சிரவதிகைகளாய் ஸ்ரோபிகளாய் நிரங்சநிற்பேதவதிகைகளாய்நிட்காடின்னியைகளாய்நிட்கம்பைகளாய்நிச்சலைகளாய், சுசானியாதி மூர்த்தியந்த பஞ்சசத்திசமூற்பன்ன சதினியாதி யிட்டத்திதிம்சக்தலைகளாயிருக்கும், முன்பின் மூலாக்கிரங்களில் முறைமையிற்கோத்த ஞானசத்தி இசசாசத்திமத்தாதிய கிரியாசத்திகலைகள் விண்டவகண்டபிண்டாசல சிவசரீரம், சாவதிகைகளாய்ச் சருபைகளாய்ச் சாங்சபேதவதிகைகளாய்ச் சகாடின்னியைகளாய்ச் சகம்பைகளாய்ச் சசலைகளாயிருகரு மாயாகலைகள் விண்டகண்ட பிண்டசல பசுசரீரம்போல் அயக்காந்தம்போல் அசைவற்றிருந்துங் கிருதிய, கிருத்தாதலாற் கழினகண்டித சலித சரீரமாக உபசரிக்கப்பட்டது. ஆதலால் ஐந்து பதினைந்து பத்து இரணடாகிய முகரேத்திர கரசரணுதிகளிற் காடின்னிய கண்டிப்புச் சலனம், வெண்மைகிறமுதலகிறமாதிகளதனல்வருஞ் சகளாதி பேதஞ் சகலமுஞ் சற்பிதங்களசத்தியங்களாம. ஆகையாற் கிரியாசத்திலக்கண சிவசரீரத்துக சிசசாசத்தி சங்கற்பரூபப் பிரவிருத்திலக்கண சகளாதிகார சதாசிவனும வீசுவரூபமுங், கிரியாசத்தி சமுத்தியோகரூபப் பிரவிருதநிவிர்த்திலக்கண சகளநிட்கள போகானுகத சிவனுமசதாசிவரூபமும், ஞானசத்திக்குறிக் சுமமாவிருப்புரூப நிவிர்த்திலக்கண நிட்கள விலயசிவகாம சாந்தரூபமும, விருத்தி பரிணதி விவர்த்தாரம்பமல்லவாதலால் அநித்தியங் கற்பித மசதத்தியமுமன்று. ஆகையால் அந்தவிலய போகவதிகார முசசொரூபமும் நித்திய சத்திய சொரூபலக்கணந்தானே. ஆதலால் அர்தச்சகளமுஞ் சத்திகலாசாயித்தியத்தினுற் சகளம், மாயாகலாராயித்தியத்தினுனிட்களம, ஆதலாற் சகளநிட்களமாம். ஆகையாற் சிவனது) உருவும்-அங்கமும்-அருள்-சத்திரூபம்-சாங்கந்தருங் குணங்களோடு முருவித்றோன்று முணர்வுங் கருமமும்-சருவத்தையு மறிதலும் பணணுதலும-அருள் - சத்தியாபாரரூபம- அரன்றன்கரசரணுதி - சிவனது பிரத்தியங்கமும்-அருள்- சத்திரூபம-உபாங்கமுமருள்-எல்லாந்தானருள்-இதுவன்றிச் சிவனுக்குச்சொல்லப்படுவன, யாவுண் டவையெல்லாஞ் சத்திரூபம்-(இப்படி) அசிந்தன் - சிவன்-அருளுரு - சத்தி சரீரத்தை-தனக்கொன்றின்றி-தன்பிரயோசனங்குறியாமல்- (பிரயோசனம்) உயிருக்கென்றேயாகுவன்-*. எ-று.

அது வாதுளத்தில் வித்தரிக்கப்பட்டது. அத்தக்கிரந்தமிது.

அங்கப்ரத்யங்கசாங்கஞ்ச உபாங்கஞ்சதுரோபவேத்।
சிரோவக்த்ரஞ்சஇருதயம் அங்கஞ்சேதிப்ரகீர்த்திதம்॥

வக்ஷுக்கண்டஸ்தகௌவாக்ஷ நரபிகுய்யோதரந்தரா।
நேத்ரம்நாஸாஸ்யகர்ணௌச பாணிபாதௌததாங்குலி:॥
ஊருசானூச்சங்கேச ப்ரத்தியங்கஞ்சேதிகத்தியதே।
மூர்த்திகாங்குணரூபந்து சாங்கஞ்சேதிப்பிரகீர்த்திதம்॥
குணஞ்சின்னமிதிக்ஞேயந் தத்குணந்தசதாபவேத்।
குணஞ்சத்தியம்ப்ரதாபஞ்ச தூர்ப்பேத்யாதுக்ரகந்ததா॥
இருத்திமாயாவிவர்ணஞ்ச நாதம்சங்கிருநிரேவச।
ஏதேதசகுணப்ரோக்தா தேஷாம்லக்ஷணமுச்சியதே॥
திரிகுணஞ்சூலமித்யுக்தஞ் சத்யம்பரசுரிஷ்யதே।
கட்கமீசப்ரதாபோயந் தூர்ப்பேத்யம்வச்ராமிஷ்யதே॥
நசஸ்யாநுக்கிரகஞ்சைவ அபயஞ்சப்பிரசஸ்யதே।
இருத்திஸ்யாநாகரூபந்து பாசம்மாயாஸ்வரூபகம்॥
விவர்ணமங்குசஞ்சைவ கண்டாநாதாத்மகமிதி:।
சங்காரமக்நிரூபம்ஸ்யாத் பாசாநாம்பஸ்மசாற்கிருதி:॥
ஏதேவைகுணரூபம்ஸ்யாத் சாங்கஞ்சேதிப்பிரகீர்த்திதம்।
வஸ்த்ரோபவீதமாலாட்டிய கந்தமாபரணந்ததா॥
ஆசனவரணஞ்சைவ ப்யுபாங்கஞ்சேதிகீர்த்திதம்। இதி. (சஎ)

சிவன் நிறீகண்டப்பிரோகராகு மனந்தேசுராராகிய மூர்த்தியாற் மாவி லந்தராத்மாவாய்த் திரும்பவந்தவனந்தேசுரரா கிய மூர்த்தி யாற்மாவைப் பிரமாண்டாந்தராதிபதி யாகுஞ் நிறீகண்டராகிய மூர்த்தியாற்மாவி லந்தராற் மாவாக்கி யந்தச் நிறீகண்ட சரீரசரீரியாய்ச் சத்திய காடின்னிய கண்டிப்புடைய காயகரணகலைகளாற் சகளராயிருந்து, பிரம விஷ்ணு முதலோர்க்குஞ் சுவேததோபமன்னியுப்பிறபிரதிகட்குங் கிருஷ்ண வருச்சுனதியர்க்கு மறுபத்துமூவர்முதலோர்க்கு நிக் கிரகானுக்கிரகங்களைப் பண்ணிவினோயாட்டுவினைத்துப் பின், அகம்பிறர்தமக்கு மற்ப சொற்ப வத்தியற்புதப் பிரசாதப் பிரதராயிருந்து சரிக்குஞ் சரித்திரங்களிற் நிறிது பவராணிகமதம் பரஷிப்பதற் குபக்கிரமிக்கி ன்றார்.

உலகினையிறந்துநின்றதரனுருவென்பதோரா
ருலகவனுருவிற்றோன்றியொடுங்கிடுமென்றுமோரா
ருலகினுக்குயிருமாகியுலகுமாய்நின்றதோரா
ருலகினிலொருவனென்பருருவினையுணராரெல்லாம்.

இ-ள். அரனுரு-நிறீகண்டசரீரமாகிக் கண்டிப்புப்பொருந்திய சிவ சரீரம். உலகினையிறந்துநின்றது - சிவாற்மவிருத்திய விலக்கணவிருத்தியங் களையுடையதென்பது. ஓரார் - விசாரியார். உலகு - பிரபஞ்சம். அவனு

ருவிற்றோன்றி, யொடுங்கிடுமென்றுமோரார்-அந்தச்சிவனது கண்டிப்பில்லாச் சமவேதசிற்சத்தி சரீராதிட்டித வகண்டித பரிக்கிரக மாமாயா மாயாசத்திசரீரத்தினின்றும் பிறந்திறந்திருக்குமென்பதும் விசாரியார்-உலகினுக்குயிருமாகி யுலகுமாய்நின்றதோரார்-சிதசிற்பிரேரகராய் வியாபியாயிருப்பதுமுணரார்-(இப்படியிருக்கும்)உருவிலே, உணராரெல்லாம்-விவேகித்தறியாரனைவரும் -(சிறீகண்ட ரூபியாயிருக்கின்றசிவன் திருட்டாகாரராதலால்) உலகினிலொருவனென்பர் - நம்மைப்போலேயொருவனென்று சொல்லுவார்கள். எ-று. (சஅ)

இதுவுமது.

தேவரிலொருவனென்பர்திருவுருச்சிவனேத்தேயர்
மூவராய்நின்றதோரார்முதலுருப்பாதிமாத
ராவதுமுணராராதியரியயற்கறியவொண்ணை
மேவருநிலையுமோரார்தனுருவிலோவுமோரார்.

இ-ள். திருவுருச்சிவனை-சிறீகண்டசரீர சரீரியாயிருக்குஞ் சிவனை. தேவர்மூவர்களைச் செலுத்தி யவரவராய்த் தியானம பண்ணப்படுவரென்பதறியார். முதலுருப்பாதி-சத்திசிவாற்மகம். மேவுநிலை-இலிங்கத்தம் பாகருதி. அதனுருவினை-சதாசிவரூபம். மற்றது வெளிப்பொருள். (சக)

இதுவுமது.

போகியாயிருந்தியிர்க்குப்போகத்தைப்புரிதலோரார்
யோகியாயோகமுத்தியுகவுதலதுவுமோரார்
வேகியானைப்போறசெய்தவினையினீட்டலோரா
ரூகியாமூடரெல்லாமும்பரிலொருவனென்பர்.

இ-ள். போகியாய்-தேவிதேவனுயிருந்து. யோகியாய்-தெட்சணமூர்த்தியாயிருந்து. வேகியானைப்போல் - கோபியானைப்போல. ஊகியார்-விசாரியார். மற்றதுவெளிப்பொருள். (கo)

இதுவுமது

ஒன்றொடொன்றொவ்வாவேடமொருவனேதரித்துக்கொண்டு
நின்றலாலுலகுநீங்கிநின்றனனென்றுமோரா
ரன்றியவ்வேடமெல்லாமருள்புரிதொழிலென்றோரார்
கொன்றதுவினையைக்கொன்றுநின்றவக்குணமென்றோரார்.

இ-ள். ஒன்றொடொன்றொவ்வாவேடம்- கிராதாதி விகிரகபேதாயுதபேதங்கள். கொன்றது-தக்கன்மதனுதி சங்காரம். வினையைக்கொன்றது - இருவினையுட்பாவத்தைப் புசிப்பித்து நாசமாக்குவது. மற்றது வெளிப்பொருள். (கக)

இதுவுமது.

நாயகன்கண்ணையப்பாலையிபுதைப்பவெங்கும்
பாயிருளாகிமூடப்பரிந்துலகினுக்குநெற்றித்
தூயநேத்திரத்தினுலேசுடரொளிகொடுத்தபண்பிற
றேயபாரொளிகளெல்லாஞ்சிவனுருத்தேசதென்னர்.

இ-ள். வெளிப்பொருள். (இஉ)

இதுவுமது.

கண்ணுதல்யோகிருப்பக்காமனின்றிடவேட்கைக்கு
விண்ணுறுதேவராதிமெலிந்தமையோரார்மாழ்
னெண்ணிவேணமகனீயெவவெரிவிழித்திமவான்பெற்ற
பெண்ணினைப்புணர்ந்துயிர்க்குப்பேரின்பமளித்ததோரார்.

இ-ள். வெளிப்பொருள். (இக)

சுத்தாத்துவ சிருட்டி ஸ்திதி சங்காரங்கள்போற் பிரகிருதிக்குள்ளு ள்ள வவாந்தரசிருத்தியம், பிரமாண்டத்துள்ளுள்ள வவாந்தரசிருத்தியஞ், சாட்சாற்சிவ சிருத்தியமாகட் டும், சிறீகண்டதேகமறைவிஞ்ச சிவனுக்குக சிருத்தியமென்பது வேண்டாம். அது நல்லதன்று. சகதி சவர்த்தியாயிருக்கின்ற விராசாவுக் கந்தரங்கசிருத்தி யம் வெளிரங்கசிருத்தியம்போலச், சிவனுக்குமப்படி யந்தரங்க சிருத்தியம வெளிரங்கசிருத்திய மிரண்டு முறைமையிற் சாட்சாத் தன்னுடம, பிறரைச்செலு த்தி யவர்தானுஞ் மறைவாகு நடக்குமென்று கூறு கின்றார்.

படைப்பாதித்தொழிலும்பத்தர்க்கருளும்பாவவீனயுதாலு
மிடப்பாகமாதராலோடியைந்துயிர்க்கின்பமென்று
மடைப்பாலுமதுவுமுத்தியவித்திமியோகும்பாசந்
துடைப்பானுந்தொழிலுமேனிதுடக்காவேறெசொல்லொருதே

இ-ள். (முறைமையிற் பிரதமமகாசிருட்டியில், சிவன் சிவதத்துவ பஞ்சகசிருட்டிபண்ணிப் பின்னனந்தேசுரசரீரசரீரியா யகுத்தமாயையி னின்றுங் காலதத்துவமுதற் பிருதிவிதத்துவமந்தமான தத்துவ தாத்து விகங்களேயுண்டாக்கி, உருத்திரரை இருதயத்தினின்றும், விஷ்ணுவையும் பிரமாவையும் பாரிசுவங்களினின்றுஞ்,சூரியசோமாக்கினிகளை வலதிடது கெற்றிநேத்திரங்களினின்றும், விக்கினேசுவரரையுஞ் சுப்பிரமணியரை யுங்கண்டத்தினின்றும் இருதயத்தினின்றும். இப்படி வாதுளத்திற்சொ ன்னபடி மற்றமற்ற வங்கங்களினின்றுந் தேவர்களுஇருடிகள் வேதசா

த்திரங்கள், மற்றமுள்ளன வுண்டாக்குவர். கடவேகடவேவரு மவர்த்த ரூபிருட்டியில்) மேனிநீடக்காவேல்-பிரபிருதிலிய சிறீகண்டசரீர சரீரி யாயும், பிரமாண்டரூபிலிய சிறீகண்ட சரீரசரீரியாயு மிராதிருந்தால்-படை ப்பாதித்தொழிலும்-மத்திமப்பிரளயமுடிவினிற் குணதத்துவமுதற் பிருதி வீதத்துவமீருகுந் தத்துவதாத்துவிக ரூபிருட்டித் திதி சங்காரங்களும்-பத்தர்க் கருளும்பாவனையுநீலும் - நீட்சாவாஸ்களாயிருக்குஞ் சிட்ட ருக்கு-அருளும்பாவனையும்-உபதேசித்துக்காண்பிக்கும் நிராலம்ப சிவத் தியானமும்-நூலும்-சிவாகமோபதேசமும்-இடப்பாகமாதாளோடியை ந்துயிர்களின்பமென்றும்-*. அடைப்பானுமதுவும் உண்டாக்குவதும்-முத் தியளித்திடும் யோகும்-உபதேசித்துக் காண்பிக்குஞ் சாலம்ப சிவத்தியா னமும்-பாசந்துடைப்பானுந்தொழிலும் - நீட்சையைப் பண்ணுவதும்-சொல்லொணாதே-ஆமென்றறையப்படாதே. எ-று.

சூரியரூபக் காசிபர்புத்திரனென்பதுஞ், சந்திரரூப அத்திரிபுத்திரனென் பதும், இருடிகளைப் பிரமாமுதலோர் புத்திரர்களென்பதும், வேதசா த்திரங்களைப் பிரமாமுதலோர் சொன்னதென்பதுஞ் சுப்பிரமணியர் விக்கினேசுர ரிவர்களோச் சிறீகண்டபுத்திரரென்பதும், இவைமுதலான பலவும, அவர்ந்தரூபிருட்டியில்,முன்சொல்லியபடி மகாரூபிருட்டியில் மகே சுரபுத்திரர்களே. மந்திரசாத்திரஞ் சதாசிவமாதலால் லௌகீகாதியதி மார்க்காந்தசாத்திரங்கள், சாட்சாத்தும் பிரகாராந்தரத்தினுலும் வந்தாலு மகேசுரசாத்திரங்களே. (நிசு)

இப்படி மூன்றுதிருமேனியு மூகிக்கப்பட்டதென் றுணர்த்தின் முர்.

உருமேனிதரித்துக்கொண்டதென்றலுமுருவிறந்த
வருமேனியதுவுங்கண்டோமருவுருவானபோது
திருமெனியுபயம்பெற்றேரும்செய்பியமூன்றுநந்தங்
கருமேனிகழிக்கவந்தகருணையின்வடிவுகாணே.

இ-ள். உருமேனிதரித்துக்கொண்ட தென்றலும்-சிறீகண்ட சகள சரீரத்தைத் தனசரீரமாய்ப் பரித்திருக்குமென்று படித்தமாத்திரத்தில் (தரிக்கப்படுவதுருத், தரிப்பது அருவென்றிரண்டுஞ்சித்தித்தலால்)-உரு விறந்தவருமேனியதுவுங்கண்டோம் - உருவாதிதமா யருவாயிருக்கு நிட் களசரீர மனுமித்தறிந்தோம்-(அருவ முருவமாயிருக்கு மீசுரசரீரமென் றும்) திருமேனியுபயம்பெற்றேரும் - சகளநிட்கள சரீரமுந் தியானிப் போம்-செப்பியமூன்று நந்தங்கருமேனிகழிக்கவந்த கருணையின்வடிவு காணே-(அசலஞ் சலாசலஞ் சலமென்றும்,பரஞ்சூக்குமந்தூலமென்றுஞ்) சாற்றிய மூன்றுசரீரமும் (பரசரீரசூக்குமசரீரத்தோடுகூடப் பிதிருமா திருகுக்கிலசுரோணிதங்களினுண்டாகிய தூலசரீரசங்காரத்தைநீக்கவந்த— கருணையின்வடிவுகாணே - சிவசத்திவடிவாயுஞ் சிவசத்தியபியத்தித் தானவடிவாய மிருக்கின்றதுதானே." எ-று. (நிஎ)

செப்பியது நன்றுதான். அவ்வளவில்வளவில் ஈசானி பூரணி யார்த்தி வாமை மூர்த்தி என்னும் பஞ்சசத்திப்புறவு ருவுடைத்தாய், ஆரணி சேனனி ரோதயித்திரி எனுங் கிரிசத்தியுள்ளுருவுடைத்தாயிருக்குங் கிரியாசத்தி சரீ ரப்புறவுருவிலுதித்த சகலியாதி யட்டத்திறிம்சற் கலைகளினது பிரவிருத்தி நிவிர்த்திப்பிரவிருத்தி நிவிர் த்திவடிவாயிருக்குஞ் சகளவுருச்சரீரஞ் சகளநிட்கள வுருவுருச்சரீரம், நிட்களவுருச்சரீரஞ் சொரூபமென் று மூன்சொன்னீர்; திரும்ப அதுவன்றி மூன்றுட் சகள சரீரமாதத்திரஞ் சத்திகலாசாகியத்திஞ்லே சக ளமாதலால், மாயாகலாராகியத்திஞலே நிட்களமா தலாற் சகள நிட்களமென்று முன்சொன்னீர்; திரும் ப அதுவன்றி யிப்போது சிறீகண்டதேக தேகியாயி ருக்கின்ற சிவனுக்குச் சொரூபதடதங்களிலே நிட் களஞ் சகளநிட்களஞ் சகளமாயுஞ் சரீரஞ்சொன்னீர்; திரும்ப அதுவன்றி, அத்துவாமூர்த்தியாக வாகமங் கள்சொல்லுவதெதென்றுசங்கிக்கவுத்தரஞ்சொல்லு கின்றார்.

அத்துவாமூர்த்தியாகவறைகுவதென்னெயென்னி
னித்தனுய்நிறைந்தவற்றினீங்கிடாநிலைமையாலுஞ்
சித்துடனசித்துக்கெல்லாஞ்சேட்டிதனுதலாலும்
வைத்ததாமத்துவாவும்வடிவெனமறைகளெல்லாம்.

இ-ள். அத்துவாமூர்த்தியாக வறைகுவது - * என்னெயென்னில்- ஏதென்று நீவினவினுல்-நித்தனுய் நிறைந்தவற்றி னீங்கிடா நிலைமையா னும்-நித்தியனு யிடைவிடாது வியாபித்துப் பிரியாதிருத்தலானும்-சித் துடனசித்துக்கெல்லாஞ் சேட்டிதனுதலானும் - சேதன சடபதார்த்தங்கள னைத்தினுக்கும் பிரேரகனுதலானும்-அத்துவாவும்- ஆறுமார்க்கமும்-சிவ னுக்கு, வடிவென - சரீரமாக-மறைகள் - சிவாகமங்கள்- வைத்ததாம்- சொன்னதாம். எ-று.

அப்படியன்றே வாத்மாக்களுக்குச் சலியென்றும் அசலியென்றும் மூர்த்தியிரண்டு. அவற்றுள், அசலியாவது முன் பிரபஞ்சித்திருக்கின்ற ஞானக்கிரியாரூப சிற்சத்திமூர்த்தி; அது தனது சங்கற்பத்தாற்றனசை வின்றி யசைவினுற் சடகாரிய நிகழப்பண்ணும்; அதனுல் மூர்த்தியென் றுபசரிக்கப்பட்டது.

சலியாவது முன்பிரபஞ்சித்திருக்கின்ற பிரணவகலாபஞ்சகரூபமாய் காரத்தனுந்தாயிருக்குஞ் சிவதத்துவதாத்துவிகபரதேக மூர்த்தியா யும் ஏழிருபத்துதாலாயிருக்கும் வித்தியாதத்துவ வாத்மதத்துவதாத்து விக ருக்குமதேகமூர்த்தியாயும் பௌவனதுலதேகமூர்த்தியாயு மிருக்

கும். அது அசலியென்றுமுன்சொன்ன ஞானக்கிரியாரூப சிற்சத்திமூர்த்தி சங்கற்பத்தா லசைத்துசஞ்சரித்துக் காரியபடுமதனு லிதொனு மே, நிருபசரிதவாஸ்தவமூர்த்தி, கரசரணுதியாயுங் கரசரணுதிசம்பந்த மாயுங் காணப்படுதலால். அப்படிச் சிவனதிரண்டு மூர்த்திகளில், அசலியாவது ஞானக்கிரியாரூபசிற்சத்திமூர்த்தி; அது தனதுசங்கற்பத் தாற் றூனசைவின்றி யசைவினுற்சடகாரிய நிகழப்பண்ணும்; அதனல் மூர்த்தியென்றுபசரிக்கப்பட்டது. சலியாவது சுத்தாத்துவ பரதேக மூர்த்தியாயுஞ், சுத்தாசுத்தரத்துவருக்குமதேக மூர்த்தியாயும், அசுத்தா த்துவ தூலதேகமூர்த்தியாயுமிருக்கும். அதசலியென்று முன்சொன்ன ஞானக்கிரியாரூபசிற்சத்திமூர்த்தி சங்கற்பத்தால், அசைந்து சஞ்சரித்து க்காரியப்படும். இதனலும் இலிங்கத்திற் கலாதிசடத்துவநியாசம்பண் ணுதலாலும் வாஸ்தவபெந்த மூர்த்தியல்லாதிருந்தாலும் மூர்த்தியென றுபசரிக்கப்பட்டது. (நிசு)

வாச்சியமந்திர மூந்தச்சத்திசரீரமென்றுசாதித்ததனுற் சங்கிக்கப் படுமதன்றென்று வாசகமந்திரத்தை மனசில்வைத் துச்சங்கித்துத்தரமுரைக்கின்றூர்.

மந்திரமத்துவாவின்மிகுத்தொருவடிவமாகத்
தந்தசென்னரனுக்கென்னிற்சகத்தினுக்குபாதானங்கள்
விந்துமோகினிமான்மூன்றுமிவற்றின்மேலாகிவிந்துச்
சந்தையாரதிதமானசிவசத்திசேர்ந்துநிற்கும்.

இ-ள். அத்துவாவின் - ஆறத்துவாவுக்குள்— மந்திரமரனுக்கு-*மிகு த்தொருவடிவமாக-மிகுதியுமொப்பற்றமூர்த்தியாக—தந்தசென்னென்னி ல்- சொன்னதேதென்றுசொல்லில்— சகத்தினுக்குபாதானங்கள்- உலகத் துக்குமுதற்காரணங்கள் — விந்துமோகினிமான்மூன்றும் - மகாமாயை மாயை பிரகிருதியென்று மூன்றுவகையாம் — இவற்றின்- இம்முதற்கார ணமூன்றுள்— விந்து- மகாமாயையானது—சிந்தையாரதிதமான சிவசத்தி சேர்ந்துநிற்கும் - சித்தத்தைவியாபித்துக்கடந்திருக்குஞ் சிவசத்திசாட்சா ற்சந்நிதிப்பட்டிருக்கும். எ-று. (நிஎ)

அதனலேதென்னச்சம்பந்தஞ்சாற்றுகின்றூர்,

சுத்தமாம்விந்துத்தன்னிற்ரோன்றியவாதலானுஞ்
சுத்திதான்பிரேரித்துப்பின்ரூனதிட்டித்துக்கொண்டே
யத்தினுற்புத்திமுத்தியளித்தலாலரனுக்கென்றே
வைத்ததாமந்திரங்கள்வடிவெனமறைகளெல்லாம்.

இ-ள். சுத்தமாம்விந்துத் தன்னிற் ரோன்றியவாதலானும்-சுத்தமா யையினின்றுஞ் (சிவசத்திசங்கற்பத்தாற்) ரோற்றியகாரணத்தினுலும்—சு த்திதான்பிரேரித்துப்பின்ரூனதிட்டித்துக்கொண்டே -அந்தச்சிவசத்திதா

ன்தனதுசங்கற்பத்திலுண்டாகிச்சுத்தமாயையிலிருக்குமந்தவாதிதை
விகதிவ்வியாக்கினிசம பந்திரங்களைப் பிரேரித்து மாந்திரிகனுச்சரிக்குங்க
ரிச்கொத்த வாத்தியாற் சிவ மந்திரங்களிலே செபஞ்செய்யப் பறறுவித் தவை
களிற் சானித்தியமாய்ச் சானே—அ கிஞல்- (மந்திரிகனுல செபிகப்
பூசிகசப்பட்ட) அந்தமந்திரங்களிலுல — புத்தியுபதேசத்தலால்- சித்தி
மோட்சகளைக்கொடுத்தலால் — வைத்தாமந்திரங்கள்வடிவெனமறைக
ளெல்லாம்-சிவனுக்கு மந்திரங்கள் சரீரமென்று சிவாகமங்களினைத்து
ஞ் செப்பியதாம். எ-று. (கூஎ)

மேற்சிறப்புரைத்துகின்ருர்.

மந்திரமதனிற்பஞ்சமந்திரம்வடிவமாகத்
தந்திரஞ்சொன்னவாறிங்கென்னெனிற்சாற்றக்கேளீ
முந்தியதோற்றத்தாலுமந்திரமூலத்தாலு
மந்தமில்சத்தியாதிக்கிசைத்தலுமாகுமன்றே.

இ-ள். மந்திரமதனிற்பஞ்சமந்திரம்வடிவமாக- மந்திரங்களுக்குள்ளே
லிசேடித்த தீசானமுதலேர்துமந்திரஞ் சரீரமாக—தந்திரஞ்சொன்னவாறிங்
கென்னெனில்-சிவாகமஞ்செப்பியதெதென்னில்—சாற்றக்கேளீ-சொல்ல
கேள்—முந்தியதோற்றத்தாலும் - பிரதமசிருட்டியாதலாலும்— மந்திரமூ
லத்தாலும- மந்திரங்களிற் பிரதானங்களாகையாலும் (விசேடித்துவடி
வென்றுசெப்பியது. மனனத்திராணதன்மத்துவஞ் சிவசத்திசகுரு சிவ
னுக்குமே; நாதாகிருதியாசகங்கள் மந்திரங்களென்றெப்படிச் சொல்லப்
படும். சத்தியந்தானே.)—அந்தமில்சத்தியாதிக் கிசைத்தலுமாகுமன்றே-
சித்தியவட்டத்திற்சற்காலாபேத வீசானியாதிமூர்த்தியந்த சத்திபேதசிவ
சத்திக்கும், ஆதியெனுமீசானுதிசத்தியோசாதாந்த சிவபேதசிவனுக்கும்
மந்திரமென்பது முக்கியமாய்ச்செல்லலாகும். எ-று.

மனனத்திராணதன்மித்துவஞ்சாட்சாதிருக்கையாற் சிவஞ்சத்தியா
கிய வாச்சிய மந்திரங்களுக்கு நாமமாதலால் வாசகமந்திரங்களுக்கு மந்தி
மென்பதுபசாரம். (கூக)

பிரமாதிசாஞ்சனநிரஞ்சனவனுமந்திரங்களே நிரஞ்சனசாம்பவமந்
திரரூபங்களாகச் செப்புவதேதென்னுசங்கிகக வுத்
தரமுரைக்கின்ருர்.

அயன்றனியாதியாகவரனுருவென்பதென்னே
பயந்திடுஞ்சத்தியாதிபதிதலாற்படைப்புமூல
முயன்றனரிவரேயாயின்முன்னவனென்னேமுற்று
சயந்திடுமவனிவர்க்குரண்ணுவதொரோவொன்ருமே.

இ-ள். அயன்றனியாதியாக வரனுருவென்பதென்னே-விதிமுதற்ப
ஞ்சகாரணமூர்த்திவடிவன் சிவனென்று சிவாகமஞ் செப்புவதேதென்

லில் – பயந்திடுஞ்சத்தியாதிபதிதலால் - சனனி ஆரணி ரோதயித்திரி யென்கின்றசுவசத்திகளதிட்டித்தவர்களுக்கொண்டு பஞ்சகிருத்தியம்பண்ணுவித்தலாலே– படைப்புமூலமுயன்றனரிவரேயாயின் முன்னவனென்ன (யென்னில்)- சிருட்டிமுதலியபஞ்சகிருத்தியம் பண்ணுவதிவராகிற் சிவனேதுக்குக் கற்பனகவுரவதோஷம் வருமாதலால் வேண்டியதன்றென்று நீசொல்லில் (அப்படிச்சொல்லவேண்டாம்)– மூற்றுநயந்திடுமவன்- சாம்பசதாசிவன் சுத்தமாயாகிருத்தியமைந்துஞ் சாட்சாத்தானுயு மசுத்தமாயை பிரகிருதி கிருத்தியமைந்தும் அனந்தகிரீகண்டாதித்துவாரத்திரு லேயும் பண்ணுவன்– இவர்க்குகண்ணுவது - இவ்வுணுசதாசிவன் ஈசுரன் உருத்திரன் விஷ்ணு பிரமா இவர்களுக்குப் பொருந்துவதாகிய கிருத்தியம்– ஓரோவொன்றுமே- ஒவ்வொன்றுதானே. எ-று.

அவர்க்குள் அணுசதாசிவனுக்கு அனுக்கிரக கிருத்தியமொன்றுமே, ஈசுரனென்னு மனந்தேசுரருக்குச் சுத்தமாயையிற் றிரோதானகிருத்திய நடவாதிருந்தாலும் அசுத்தமாயாகிருத்தியமைந்து நடந்தாலுந் திரோதானகிருத்திபம் பிரதானம், உருத்திரனெனுஞ்சிரீகண்டருக்குப் பிரகிருதிக்குமேற்சங்காரகிருத்தியநடவாதிருந்தாலும் பிரகிருதிகிருத்தியமைந்துநடந்தாலும் சங்காரகிருத்தியம் பிரதானம், குணகிலையவிஷ்ணுவுக்குப் பிரமா டங்கிலையவிஷ்ணுவுகும் பிரகிருதிக்குமேற் றிதிகிருத்தியநடவாதிருந்தாலும் பிரகிருதிக்குட் லேசரீர போக்கியப்பொருட்டிதிகிருத்திபம் பிரதானம், குணகிலையபிரமாவுக்கும்பிரமாண்டகிலையபிரமாவுக்கும் பிரகிருதிக்குமேற் சிருட்டிகிருத்திய நடவாதிருந்தாலும் பிரகிருதிக்குட் லேசரீரபோக்கியப் பொருட் சிருட்டிகிருத்தியம் பிரதானம், ஆதலாலொரோவொன்றென்ற தெனவறிக.

சத்திமூன்றுகிற்பஞ்சகிருத்தியமெப்படிப்பண்ணும், எப்படிப்பண்ணுவிக்கும்? சத்தியந்தானே. சனனிக்குச்சிருட்டிகிருத்திய மொன்றுமே, ஆரணிக்குச்சங்காரகிருத்தியமு மனுக்கிரககிருத்தியமும், ரோதயித்திரிக்குத் திதிகிருத்தியமுந் திரோபாவகிருத்தியமு மென்பதனுல் விரோதமன்று. ஆரணிரோதயித்திரிசெனனிமூன்றுஞ் சத்திசரீரகற்பனையிலே சிவனுக்குச் சூக்குமதேகம், ஈசானிபூரணி ஆர்த்திவாமை மூர்த்தியெனும்பஞ்சசத்தியு மனுக்கிரகமுதலிஞ்று கிருத்தியத்தையு மடைவிற்பண்ணுகின்ற சத்திசரீரகற்பனையிலே சிவனுக்குத்தூலசரீரமென்பதறிக. இருதயாதியாறுமந்திரமுஞ் சரீரகற்பனைக்குள்ளதன்று, சரீரமுஞ்சரீரியுஞ்சம்பந்தமரனவிடத்திற் பிரபாவசொரூபமாயிருக்கும். (சூ0)

இப்படிச்சத்தியனேகமாகிற் சத்திமானுமனேகமாமென்னுஞ்சங்கைக் குத்தரமுரைக்கின்றார்.

சத்திதான்பலவோவென்னிற்றானென்றேயனேகமாக
வைத்திடுங்காரியத்தான்மந்திரியாதிக்கெல்லா
மூய்த்திடுமொருவன்சததிபோலரனுடையதாகிப்
புத்திமுத்திகளீயெல்லாம்புரிந்தவனிணந்தவாறும்.

இ-ள். (ஞானக்கிரியேச்சாசத்திமூன்றினுட்கிரியாசத்தி ஞானேய ரிச்சையந்து-ஆனியாதிமூன்றுசத்தியா யெட்டாயிருக்குமென்றதனால்) சத்தி தான்பலவோவெனில்-*தானொன்றே- ஒருசத்திதானே- காரியத்தால்-வியாபாரபேதத்தினால்-அனேகமாகவைத்திடும்- அனந்தமாகச்சொல்லப்படும்-மந்திரியாதிக்கெல்லாம்- மந்திரிசேனாபதி ஊர்காவலன்முதலோரிடத்தில்-உய்த்திடுமொருவன்சத்திபோல்-ஒன்றாயிருந்துசெலுத்து மிராசாவினதாஞ்ஞாசத்தியொப்ப - அரணுடையதாகி - சிவசம்பந்தியாகி- அவனினன்றவாறு- அந்தச்சிவன்செலுத்தினபடி - புந்திமுதற்கிரியையெல்லாம்புரிந்ததாம்- பேர்கமோட்சங்களாக்கொடுத்திருப்பதாம். எ-று. (சுக)

> ஞானக்கிரியேச்சாரூபிசத்தியென்றீர், அதுவிருத்தம், நடத்தம் மூச்சுவரூபமாயிராது; இருக்குமென்னிற் சத்தியொன்றென்பதெடுபட்டுப்போமென்று மனசிலெண்ணிச் சங்கைபண்ண வுதாரமுமைகின்றீர்.

சத்திதன்வடி வேதென்னிற்றடையிலாஞானமாகு
மூய்த்திடுமிச்சைசெய்தியிவைஞானத்தாலோவென்னி
லெத்திறஞானமுள்ளதத்திறமிச்சைசெய்தி
வைத்தலான்மறைப்பின்ஞானுன்மருவிடுங்கிரியையெல்லாம்.

இ-ள். சத்திதன்வடிவேதென்னில்- சத்தியினதுசொரூபமேதென்று கேட்கிறீராஞல்- தடையிலாஞானமாகும் - மறைப்பில்லாவறிதற்றொழிலேப்பண்ணுமறிவாகும்- உய்த்திடுமிச்சைசெய்தி யிவைஞானத்தாலோவென்னில் - பண்ணுதற்றொழிலாகுஞ் சங்கற்பமுத்தியோகமிவைகள் வேற்றுத்தொழிலாதலான் ஞானசத்தியினுண்டோவென்று கேட்கில்-- எத்திறஞானமுள்ளது - இதுகரணமித்துகாரிய மித்துபிரயோசமென்றறிதற்றொழிலா யாதொருபிரகார ஞானசத்தித்தொழிலாகிய ஞானமிருந்தது - அத்திறம் - அத்தப்பிரகாரம் - இச்சை (இதின்னதாகக்கடவதெனு மிச்சாசத்தித்தொழிலாகி யுத்தியோகத்திற்பின்ஞானிவருஞ் சங்கற்பஞான விசேடமாகவும்) - செய்தி - கிரியை (இதைப்பண்ணுகிற் போமெனுங் கிரியாசத்தித்தொழிலாகிச் சங்கற்பத்தின் முனனுகவரு முத்தியோகஞான விசேடமாகவும்)- வைத்தலால் - சிவாகமஞ்சொல்லி நிச்சயித்ததனுல் - மறைப்பின்ஞானுல் - தடையற்றஞானவிசேடசத்தி சங்கற்பத்தால் - எல்லாம் - காரியசடபதார்த்தமுற்றும் - கிரியைமருவிடும்- உற்பத்தித்திதிசாசலனத்தொழிலேரபொருத்தும். எ-று.

சலனத்தொழிலுக்கேதுவாயிருக்கு ஞானவிசேடநிச்சலநித்தியசத்தியசங்கற்பங் கிரியையென்று செல்லப்படும். (சுஉ)

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR MADRAS-41

சத்தியொன்றுதானே யறிதல்பண்ணுதலிச்சித்தலெனும் வியாபாரபேதத்தால் மூன்றென்றும், அவாந்தரவியாபாரபேதத்தால் அனந்தமென்றுஞ் சொன்னீர்; தன்மபேதத்தாற் றன்மிபேதிக்கும், காரியபேதத்தாற்காரணம்பேதிக்குமென்னுநியமத்தாற் சத்திபேதிக்கும்; அனந்தமாயிருக்கின்ற ஞானக்கிரியைகள் சத்திக்குச்சகசதன்மமாய்ச் சகசகாரியமாய்த் தீபசத்திக்குத்தாகப் பிரகாசமபோலிருத்தலால் ஞானனந்தியங்-கிரியானநியமமில்லை, ஞானமென்றுங்கிரியையென்று மிரண்டுதொழிலுமில்லை. ஆதலாற்சத்தியொன்றென்னில், ஞானக்கிரிபானந்தியசாங்கரியம் பிரமாதிகளாலுந் தடுக்கப்படாததாய் வந்துசாருமென்றுசொல்லச் சாற்றுகின்றீர்

ஒன்றதாயிச்சாஞானக்கிரியையென்றொருமூன்றுகி
ன்றிடுஞ்சத்தியிச்சையுயிர்க்கருணேசமாகு
ஞன்றெலாஞ்ஞானசத்தியானயநந்நிவஞ்ஞ
னன்றருட்கிரியைதன்னலாக்குவனகிலமெல்லாமே.

இ-ள். ஒன்றதாயிச்சாஞானக் கிரியையென்றொருமூன்றுகி ன்றிடு ஞானசத்தி-(ஞானகிரியையிச்சையெனுஞ் சத்திதொழில்கள் பிரிப்பாய்ப் பேதமாயிருக்குமென்னுமாபேசமில்லை, அவைகள் மதியத்திருக்குமனந்த நாமமனக்குதியே யை யனந்தவிச்சையெனுமானந்தியமும், பிரிந்து பிரிவுமாயிருக்குமென்னுமாபேசமில்லை; தாகப்பிரகாசங்கள்போலப் பிரிபபிலிருப்பிப் பேதமாயிருக்கும், பிரிப்பைக்குறித்தபேதமாயிருக்கும். ஆகையாலந்தத்தொழில்களுக்குக் காரணமாகுஞ்) சத்தி யேகமாயிச்சாசதியெனுமானாசதியென்றுங் கிரியாசதியென்று மனந்தசத்தியெ ன்னும் பிரிபபிலிருமூன்றாகபேதமாயிராநிற்கும். (சத்திமானுகியசிவனு டைகளு யிச்சதாவென்று ஞாதாவென்று மனந்தனென் னும் பிரி பிரிவுமுறனதபேதமாகத்தாபனை. அந்தசசத்திசத்திமா ர்க்காபனைஞ்சொற்பிரஞ்சகமு, – இச்சை-கியாமிகையென்னுமிச்சாசதியனுஞ்சுதந்திரமில்– உயிர்களருள்ளசமாகும் – நிதிபபடியா மிதிப்படியாகாதெனபதுமுதல் சிபமித்தசுதந்திரமிறகிருபையாம் – காதனுர்-சிவன்– நன்றெலாம்- திருத்தியத்துகளுகும் பொருளெலா மிதுகாரணமிதுகாரணமிதுகாரிய மிதுபிரயோசனமென்று–ஞானசத்தியால்-ஞானத்தொழிலேப்பனனுஞ ஞானசதியால்– நயந்தறிவன்- விருபபிப்பாரப்பன்; கிரியாசதிதிதொழிற்கிரிபையாதலாலிதைதான் பண்ணுகிற்கின் றே னென்றுத்திபோகிப்பன்– அருட்கிரியைதன்னல்- கிரிபாசதியினதித்தரகோடியாயிருக்குஞ் சங்கற்பயிதகிரியெனனு மிச்சாசத்தி யிதிபபடியாகக்கடவதென்னுஞசுகற்பததால் -- அகிலமெல்லாம - சகத்தினைத்தும் – ஆக்குவன்- சிருட்டிப்பன். எ-று. (சுரு)

முடிந்தபட்சம் ஞானக்கிரியேச்சாவான் சகற்கர்த்தாவென்றுசொன்னீர். புருடன்ஞானக்கிரியேச்சாவானும் அவனே கர்த்தாவாகட்டும், அப்பிரத்தியக்ஷமாயிருக்கு மீசரன்வேண்டுவதில்லையென்று மீமாங்சகன் சொல்லமறுத்துணாத்துகின்றார்.

சிவணுமிச்சாஞானக்கிரியையாற்சிவனேயொப்ப
னவனென்றிடினுமலமிவற்றினீமறைக்குங்
காவலனிவன்செய்கன்மத்தளவினிற்கொடுப்பக்காண்பன்
பாவியாம்புத்திமுத்திப்பயன்கொளப்பண்பிற்றாகும்.

இ-ன். சிவணுமிச்சாஞானக் கிரியையாற்சிவனேயொப்பன் — அவனென்றிடில்- விசுவகர்த்தாவாவனென்னில்- (விஞ்ஞானகலப் பிரளயாகலாவத்தைகளிலே) அணுமலம், இவற்றினை- இச்சாஞானக கிரியைகளை—மறைக்கும் - தன்வசமாகப்பண்ணும் (ஆகையாலவரிருவருங்கர்த்தாக்களன்று)— (சகலன்கர்த்தாவெனின், அவன்) காவலன்- சிவன்— அவன்செய்கன்மத்தளவினில் - அந்தச்சகலாற்மாப் பண்ணினகன்மத்துக்கீடாய்ப் (பரிமிதமாயிச்சாஞானக்கிரியைகளை)- கொடுப்பக்காண்பன்- ஏகதேசத்திற்சிலகொண்டுவிளக்க வந்தப்பராக்காயிருக்குஞ் சித்சத்தியிர்த்திரூப விச்சாஞானக் கிரியைகளைக்கொண்டு பதார்த்தகளையுட பிரத்தியக்காய்த் தாஞ்யிருக்குஞ் சித்சதசிவிருத்திரூப இச்சாஞானகிரியைகளைக்கொண்டு ந்தவிச்சாஞானக்கிரியைகளையும்பார்ப்பன் — பாவியாம் புத்திமுத்திப்பயன் கொளும்பண்பிற்றாகும்-வருமதாம் போகமோட்சபலமடையு முறைமையனுவன். எ—று.

சத்தியமீதிருக்க முத்தாற்மாசருவஞ்ஞத்துவசருவகர்த்திருத்துவசிவத்துவாபிவியத்திபினுலேசிவனேடேமுற்றுபமனுதலால் அவன்போல்வி சுவகர்த்தாவாகட்டுமென்று சிவசமவாதியனேகேசுவாதிமுதலோர்செப்புவார்கள்;அஃதறிவின்மை. சிவனதுகிருபாசங்சித்தபஞ்சகிருத்தியதோடு அபின்னவற்சனீயசங்சித்தபஞ்சகிருத்தியாதிகாரணமுத்தனென்றுமேலுத்தரிக்கையால் விசுவகர்த்தாவன்று; சிவனேவிசுவகர்த்தா. (சுசு)

சிவசத்திக்கிலயதத்துவம் போகதத்துவம் அதிகாரதத்துவமுதலியபெயர் வருமாறுரைக்கின்றார்,

ஞானமேயானபோதுசிவன்றெழின்ஞானமொக்கி
லீனமில்சதாசிவன்பேரீசனுக்தொழிலதேறி
லூனமேற்கிரியைவித்தையுருத்திரனிலயபோக
மானபோதிகாரத்தீதாடதிகரணத்தனுமே.

இ-ன். ஞானமேயானபோது- (சிவனதுகிரியாசத்திமகாமாயையிலமகாப்பிரளயத்தின்மகாமாயாகாரியமெல்லாமொடுக்கியொழிந்ததாய்

குருவின்து பெருமை கூறுகின்றார்.

பரம்பிரமமிவனென்றும்பரசிவன்ருனென்றும்
பரஞானமிவனென்றும்பராபரன்ருனென்று
மரன்றருஞ்சீர்நிலையெல்லாமிவனேயென்று
மருட்குருவைவழிபடவேயவனிவன்ருனே
யிரங்கியவாரணமாமைமீனண்டஞ்சினையை
யியல்பிணெடும்பரிசித்துகினைந்தும்பார்த்தும்
பரிந்திவைதாமாக்குமாபோற்சிவமேயாக்கும்
பரிசித்துஞ்சிந்தித்தும்பார்த்துக்தானே.

இ-ள். பரம் - சுத்தசிவன்ருனென்றும்—பிரமம் - சுத்தசிவமத்திய கிரத்தசிவம்—இவன்ருனென்றும்— பரசிவன்ருனென்றும் - இருபரசிவ னெனு மிலய சிவன்ருனென்றும்—பராபரன்ருனென்றும்-அநுகத சிவ னென்னும் போகசிவன்ருனென்றும்—பரஞானமிவனென்றும் - ஞான க்கிரியாப் பிரவிருத்திமாநுகிய சதாசிவனெனு மதிகாரசிவனிவன்ரு னென்றும்—அரன்றருஞ்சீர்நிலையெல்லாம் - மகேசுரன், உருத்திரன், மால், பிரமன் முதற் சிவபேதமனைத்தும்—இவன்ருனென்றும் (ஆரோபித சிவாத்துவிதத்தினுலே)—அருட்குருவைவழிபடவே - சிருபாசமுத்திரமா கிய தேசிகரைப் பாவனைபண்ண—அவனிவன்ருனே - அந்தச்சிவ னிந் தக்குருதேகத்தி லாவேசித் திந்தக்குருவாயே. "இரங்கியவாரணம்" முத ற்பதப்பொருள் வெளிப்பொருள். இம்முத்திருட்டாந்த தாட்டாந்திகப் பொருளுணர்ந் தனைக்குமிடத் துயிர்க்கியற்கையாய மலத்தின்மறைந்த சிவத்துவஞ் சிவஞல் விளங்குமெனும் பொருள் விளங்கிற்று. (ஏ)

பன்னிரண்டாஞ் சூத்திரம்

முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கூகூ0

சிவஞானசித்தியார் சுவபக்ஷமூலமும்

யாழ்ப்பாணம்

சாலிவாடபுரம் ஞானப்பிரகாச தம்பிரான்

செய்தவுரையும்

முற்றிற்று.

வெண்பா.

ஒப்பிலரு ணந்தி யோங்குதமி ழாகமமாய்ச்
செப்புஞ் சிவஞான சித்தியார்க்—கொப்புரைதான்
பேதமகன் ஞானப் பிரகாச தேசிகனு
மாதரவாயத் தான்வகுத்தா னுய்ந்து.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

முதலாஞ் சூத்திரம்.

ஞானத்தொழின்மாத்திரத்தைப்பண்ணி) ஞானசத்திரூபியாயிருந்துள்ளவில்—சிவன்-சிவதத்துவமென்றும், இலயதத்துவமென்றுஞ்சுத்ததத்துவமென்றும் நிட்களதத்துவமென்றும் பேர்பெற்றுநிற்கும்— தொழின்ஞானமொகில்- இரும்பமகாமாயாகாரியப் பிரசுவாபிமுகயோகியருத்தியத்திலேயுத்தியுத்தையா யிதிப்படியா மிதிப்படியாகாது விதுகாரண மிது காரண மிதுகாரிய மிதுபிரயோசனமென்னு மிச்சாஞானத்தைப்பண்ணு மிச்சாசத்திதசிகற்பருனசத்தியிற் பின்னிலைதா னாப்பண்ணுநிற்பேனென்னு ஞானக்கிரியாத தொழிலொத்த கிரியாததொழிலேப்பண்ணிக் கிரியாசத்திரூபியாயிருந்துள்ளவில் — சுணமில்சதாசிவன்பேர் - ஒத்தசதாசிவதத்துவமென்றும், போகதத்துவமென்று முத்தியுத்தசத்துவ மென்றுஞ் சகளநிட்களதத்துவ மென்றும் பேர்பெற்றுநிற்கும் — தொழிலதேறில் - இரும்பமகாமாயாகாரியோற்பத்தியிலே பிரவிருத்தையா யிதிப்படியாகக்கடவ தென்று நிரியாதொழிலேறி ஞானத்தொழில் குறைந்தசங்கற்பவிகற்பத்தொழிலேப்பண்ணி மிச்சாசத்திரூபியாயிருந்துள்ளவில்—ராசனுமசாகரத்துவமென்றும், அதிகாரதத்துவமென்றும் பிரவிருத்ததத்துவமென்றுஞ் சகளதத்துவமென்றும் பேர்பெற்றுநிற்கும் — ஊனமேறிரிகய - அந்தவிச்சாசத்திருபியாயிருந்துள்ளவில் — வித்தை - வித்தியாதத்துவமென்றும், தூலவிகரணதத்துவந் தூலாதிகாரதத்துவந் தூலப்பிரவிருத்திதத்துவந் தூலசகளதத்துவமென்றும் பேர்பெற்றுநிற்கும்—உருத்திரன்-சிவன் — (பிரிப்படிச்சமவேதசத்தி சிற் பிரிப்பின்றிப் பேதமாய்த்தோற்றும்) இலயபோகமான பேரதிகாரத்தோடுகூடி— அதிகரணத்தனுமே- சமவேதசத்தியெனு மிருப்புடையனுய்க்கொண்ட டத்சசத்தியிருப்புத்துவாரத்திருலே மகாமாயாபரிக்கிரக சத்தியென்னும் மிருப்புடையனுமே. எ-று

ஆதலாற்சிவனுஞ்சிவனென்று மிலயனென்றுஞ் சுத்தனென்று நிட்களனென்றுஞ் சதாசிவனென்றும் போகனென்று முத்தியுத்தனென்றுஞ் சகளநிட்களனென்று மீசுரனென்று மதிகாரனென்றும் பிரவிருத்தனென்றுஞ் சகளனென்றும் பன்னிரண்டுபேரு முறைமையிற்பெற்றுநிற்பன். சத்திநிதானமானமகாமாயையுஞ் சிவதத்துவமென்பதுமுதற் சகளதத்துவமென்பதீறுகச் சத்திப்பாலப் பன்னிரண்டுபெயருமுறைமையிற்பெற்றுநிற்குமென்பதறிக. (சூரு)

இப்படிச்சுத்தித்துவத்தைச் சிவதத்துவத்துளடக்கியிருத்தலாற்

காரணசிவதத்துவ மூவைவந்துங்காண்பித்துக் காரிய சிவதத்துவ மூவைவந்துங் காண்பிக்கின்றூர். காணபிக்குமிடத்துக் காரியசிவதத்துவமூவைவந்துஞ் சிருட்டி மென்றும், சிருச்சியமென்றுமிருவிதமாம். சிருட்டி மாவது சிருச்சியசிவதத்துவமைந்தையும்பற்றிப் பரிணதிசெயப்படப் பண்ணிவந்தாலும், தனதிடத்தில் விருத்தி பரிணதியிவர்த்தமின்றியதனற்பிரிப்பில்லா

ளைக்கு பேதமானதனதுவியாபாரங்களிலுலே யப்படிடபிரிப்பில்லாவைக்கு பேதபின்னமாகிய சிவசத்தி பேதமும் சிவபேதமுமாகும். சிருட்சியசிவதத்துவமாவது "விந்தைகளை லத்தையீசாக்தாசிவர்" என்றபிருத்தத்தாற்கூறிய காமாயாபரிணதிபேதப்பிரிப்புளளைக்குபேதபின்ன சிவதத்துவபேதமாகும். அந்தசிருட்டஞ் சிருசுசிய நாலுளுள், சிருட்சியம் "வித்தைகளை" என்றபிருத்தத்தாளை முன்சொல்லப்பட்டபடியாற் சிருட்ட சிவதத்துவமாத்திரஞ் செப்பிக்காணபிகினறார்

வித்தைசியாடசர்சாதாக்கியஞ்சத்திசிவங்களோடுஞ்
சுத்ததத்துவஞ்சிவன்றன்சுதந்திரவடிவமாகும்
நித்தமென்றுரைப்பர்காலநீங்கியநிலையதாலே
வைத்தலர்முற்பிறப்பாதிவருவித்தாச்சருபத்தாலே

இ-ள். வித்தைசியாடசர்சாதாக்கியஞ் சத்திசிவங்களோடுஞ் சுத்ததத்துவஞ் சிவன்றன் சுதந்திரவடிவமாகும்- இந்தசிருட்ட சுத்ததத்துவமைத்துஞ் சமபேதசாதிருபமாதலால் சிவனுகுஞ் சிறந்தசரீரமாகவுபசரிக்கப்பட்டது. முன்சொன்ன சிருசிய சிவதத்துவம பரிகரிதசுத்திசொரூபமாதலாற் பொதுசரீரமாகவுபசரிக்கப்பட்டது. இந்தசிருட்ட சிவதத்துவமைத்தும்,—காலநீங்கியநிலையதாலே -(பிருதிவி பரிணதிவிவர்த்தரூபமில்லாமைபாற்) காலவளவரைவைக் கடந்திருத்தலால் (டெளியோர்) — நித்தமென்றுரைப்பர் - நித்தியமென்று சொல்லுவாராகள் (அசனல்) — முற்பிற்பாதிவைதலிலர் - முன்பிற்பொருளின்றது சொல்லார் (ஆகிற்சொல்லுவரேனன்?)—கருமத்தாலே-சிருட்சிய சிவதத்துவத்தைப்பற்றிய சிவசத்தி வியாபாரக்கிரமத்தால், சொணணார்கள். எ-று.

இதனைற் சிருட்சிசிவதத்துவம மகாமாயாபரிணதிரூபமாய்ச் சுத்தகாலவளரைபறைக்குள்ளாகலால், அநித்தியமென்றும் முற்பிற்பின்னென்றுஞ் சொல்லப்பட்டது. சிருட்டஞ் சிருட்சிபரிணதிக்குரபொதுவாகுஞ் சிவதத்துவமுஞ் சுத்திதத்துவமுஞ் சிவதத்துவமென்று பிலயதத்துவமென்றுஞ் சுத்ததத்துவமென்று மிட்களதத்துவமென்றுங் காரண சிவதத்துவ சுத்திதத்துவப் பெயர்பெற்றுக் காரணவிலயபோகாதிகாரங்களின் மூன்றினுள், இலயத்துக்குக்கற்பிக்கப்பட்டிலயதத்துவங்கும்

சதாசிவதத்துவம் சதாசிவதத்துவமென்றும போகதத்துவமென்றும் உத்தியுத்சிதத்துவமென்றுஞ் சகளிட்களதத்துவமென்றுங் காரண சதாசிவதத்துவத்துகருசரதத பெயர்பெற்றுப போகத்துக்குக் கற்பிக்கப்பட்டுப் போகத்தடங்கும்.

ஈசுரதத்துவஞ் சுத்தவித்தியாதத்துவத்தோடுகூட வீசுரதத்துவமென்று மதிகாரதத்துவமென்றும் பிசவிருத்திதத்துவமென்றுஞ் சகளதத்து

வமென்றதங் காரணமீசுரச் சுவத்துக்குரித்த பேரின்றதிகாரத்துக் குக் கற்பிக்கப்பட்ட திகாரத்தை யுடைத்து.

சிரீகண்டாதிகளிற் சத்திநித்தவும் பேதசத்தியும் சதாசிவதத்துவத் தினுமதிகாரத்தினு மடங்குமென்றதொல்லியது மறிக.

காரியவியமித்தொடுபொருந்திச் சிவனென்பதாதியாய்ச் சகள னென்பதற்றமாயக காரணவியனுக்குரைத்த பேரின்றுக் கிரமத்திற் காரணவிலய போகாதிகாரங்களுக்குக் கற்பிக்கப்பட்டுக் காரணவிலய போகாதிகாரங்கட்குரியதாகுமென். இம்மூன்றென்ற பொன்பதாயிருத்தி என்ற காரியவிலயபோகாதிகாரங்கள் காரணாதிகாரத்துட் கற்பிக்கப்பட்ட தறிக. (சுசு)

இப்படிச் சடபதார்த்தங்களோடல்லாத் தனக்குச் சத்தித்துவாரத் திருலே சரீரமோலப் பண்ணிக்கொண்டு செலுத்தி யசைத்து யேற்றுவைப்படுத்திக காரியப்படுத்தினு மிவருக்குருத் திவசத்திக்கு மசைவுவேற்றுமை யில்லையென்றறைகின்றார்.

குருவினியிராவணதிபாவகமுற்றும்போலத
தருவளிவ்வாறவமெல்லாந்தன்மையுந்தியாறுகும்
வருந்வடிவெல்லாஞ்சத்திசத்திதான்மபழுங்காழ்ப்பு
பிருமையும்போலமன்னிசிவதத்தினுடையதாகும்.

இ-ள். காழ்ப்பு-வயிரம். (மரமுங்காழ்ப்புமென்றதிற்) காழ்ப்பு-பிரத்தியக்குணபம்; மரம்-பராகுணபம். அப்படிச் சிவமுஞ் சத்தியுமென் றிதன்பொருள். மற்றதுவெளிப்பொருள். (சுஎ)

மேலிதுவமதை.

பொன்மைலோதிவன்னம்பொருந்திடப்பளிங்கிவற்றின் றன்மையாய்நிற்குமாபோற் சத்திதன்பேதமெல்லா
நின்மலன்றனுய்த்தான்றிநிலைமையொன்றாயிநிற்பன்
முன்னருட்சத்திதன்பான்முகிழ்க்குந்தான்முளையானன்றே.

இ-ள். பொன்மைலோதிவன்னம்பொருந்திடப்பளிங்கிவற்றின் றன் மையாய்நிற்குமாபோற் சத்திதன்பேதமெல்லாம்-* (இது ஏகதேசவிருட் டாந்தம். சிருட்டியிவதத்துவமைந்துமுதலான ஞேயகாரியங்கள் சிவ சிற்சத்தியிலே பிரதிவிம்பித்தாற் சிவசத்தியுஞ் சடமாய்ப்போமாதலால் லிம்பப்பிரதிவிம்பத்துவம் பரிணதசடங்களுக்கல்லாமற் சித்துக்களுக்கில் லையென்று, பவுட்கரத்திற் சொல்லப்பட்டது. அதனால், ஞானசத்திசொ ரூபமாயிருக்கின்ற சிவசத்திக்குஞ், சிருட்டிய சிவதத்துவமுதலானஞேய தார்த்தங்களுக்கு ஞாப்பியஞாபகபாவசம்பந்தமாத்திரம்; கிரியாசத்திசொ ரூபமாயிருக்கின்ற சிவசத்திக்கு மந்தச்சிருட்டிய சிவதத்துவமுதலான கா

நிபதார்த்தங்களுக்குஞ் சங்கற்ப சமுத்திரேக விஷயவிஷயீபாவசம்பந்தமாத்திரம்; பிரதிவிம்ப சங்யோக சமவாயாதிகள் சித்துக்குச் சடத்தன்மைவருமாதலாற் சொல்லப்படாது. நாஞ்சொல்லியலிரண்டுசம்பந்தமாத்திரத்திலுலே சிவசத்திக்குப் பிரிப்பில்லா வுச்சாரங்கவானந்தியமியற்கையாய் நிருபசரிதமாயும் பிரிபபுள்ள வெகிரங்கவானந்தியஞ் செயற்கையாயுபசரிதமாயு மிருக்குமென்றப்படியே சிவசத்திக்காணந்தியமென்றுசொல்லப் பட்ட வனந்தபேதமறிக) – நின்மலன் முனைய்த்தோன்றி, நிலைமையொன்றுயேநிற்பன் - (அனந்தசத்திபேத பேதனையிருந்து அந்தரங்கபேதஞ்சொரூபமாயும் வெகிரங்கபேதந் தடத்தமாயு மிருத்தலால்) ஏக சொரூபவானுகத்தானே யிருப்பன்–முன்னருட்சத்திதன்பான்முகிழ்க்குந்தாண்முனையானன்றே - (மகாப்பிரளயமாய்ப் பின்சுவபாவகாலததிலே தூலபஞ்சகிருத்தியபதிலே யுதாசீனையாய், நிருவிகற்ப ஞானரூபியாய் நிலையசிவனிடத்திலேயிருந்து கிரியாசத்திநிருமபிச் சூக்கும பராசத்திரூபியாயிருந்து மகாமாயா மாயா சத்தியவித்தியாகியதை முதலாகிய சூக்குமபஞ்சகிருத்தியபத்தைப் பலனுணர்ன்று மகாசிருட்டிவருமிடத்துத் தூலபஞ்சகிருத்தியமபண்ணுமிடதி) தன்பால்-சிவன்பால – முன்னருட்சத்தி-முந்தவந்தத் தூலபராசதிரூபியாய்–முகிழ்க்குமு- (சிவன்செலுதத விச்சாசத்தி சமிகற்ப ஞானசத்தி கிரியாசத்தியாகிய போகரூபியாய்க் கொண்டு) உதியுத்தையாம–தாண்முனையானன்றே-சிவன் (சதசியாலேவப்பட்டு) உதியுத்தலுகான் (சதசியையெயலி யந்தச் சதசிதத்துவாரத்தினுலே யுதியுததலுகிருபபன்)– (பின்னுமிதன்பொருள்) தனபால்-தற்பொருளறிவாகிய சுத்தசிவனிடதில்–முனைய்ருட்சத்தி- (முலயபோகாகிாரங்களோக்கடந்த பிறபொருளறிவாகிய) முந்திய சுத்தசிவசத்தியானது–முகிழ்க்குமு–(திருசிபமின்றித திருகதருபமாய்பபுரிந்துத் தோறறியறியப்படிம பிறபொருளறிவாகிய வந்தசிவசத்திபிலே) தான்-சிவனை–முனையானன்றே - புரிந்துநினேதோற்றுன். தானபபடிப்புரிந்துதோற்றியறியப்படுவானுகிற் பிறபொருளாய்ப்போவனென்றுமாம. எ-று. (சுஅ)

உலகினிற்பதார்த்தங்கள் சில வவயவங்களொத்தருஞ்சிலவவயவங்களொவ்வாமலு மிருகின்ற வாணபெண் ணீட்சியுருட்சிமுதலிய குணிகுண பிலிங்கபேடமெகின்றசடபதார்த்தங்களிலேயுந், தறபொருளறிவு பிறபொருளறிவென்கின்ற சிற்குணிகுணங்களிலேயுஞ், சிவனுகுஞ் சத்திக்குமுறைமையிலதிட்டானங் கறபிதிருகையா லெலலாஞ் சிவ சிவசத்திமயமென்று செபபுகின்றுர்.

சத்தியுஞ்சிவமுமாயதன்மையிவ்வுலகமெல்லா
மொத்தொவ்வாவாணும்பெண்ணுமுயர்குணகுணியுமாக
வைத்தனவளரால்வந்தவாக்கமிவ்வாழ்க்கையெல்லா
மித்தையுமறியார்பீடலிங்கதநினியல்புமோரார்.

இ-ள். வெளிப்பொருள். (சுசு)

சிவனெருவனொருளோடுமொப்பக்கப்படானென்று செப்புகின்றார்.

சிவனுருவருவமல்லன் சித்தினோடசித்துமல்லன்
பவமுதற்பிறப்பிலகளொன்றுமற்பண்ணிடுவானுமல்லன்
றவமுதல்யோகபோகந்தரிப்பவனல்லனன்றே
யிவனையெறிவினையாதுமொன்றுமிலையந்திடாவியல்பினனே.

இ-ள். சிவனுருவருவமல்லன்- (சிவன்சத்தியுருவனென்று முதற்சூத்திரத்தலால்) மாயாசரீரவுருவனன்று, (சத்தியுருவனென்றுமுதற் சூத்திரத்தலால்) மாயாவருவனன்று – சித்தினோடசித்துமல்லன்- (சிவன்சத்தியருவுருவனென்றுமுதற்சூத்திரத்தலால்) ஆன்மவருச்சடவுருவனன்று– பவமுதற்பிறப்பிலகளொன்றும் பண்ணிடுவானுமல்லன்- (சங்கற்பலக்கணசன்னிதிமாத்திரத்தால விகர்திவிரவாமற் சிருட்டியாதியைஞ்சகிருத்தியகர்த்தாவென்று சாதித்தலால்) குலாலாதிபோற் சரீரகரசலனத்தினாலே, சிருட்டிமுதற்சிருத்தியங்களைப்பண்ணுகிறவனன்று– தவமுதல்யோகபோகந்தரிப்பவனல்லன்- (சிறீகண்டதேகதேயியாய்ச்சனகாதிகளுக்குத் தவாபியம் யோகாபியம் கவுரிகலியாண மிவைகளைப்பண்ணுமவனென்றுசாதித்தலால்) தவம்யோகம்போகங்கள் தானுய்ப்பண்ணுகிறவனன்று – தானேயிவைபெறவினையாதுமொன்று மிலையாந்திடாவியல்பினனே-தானே-சிவன்ரூனே – முன்சொன்னமுறைமையினாலே சிருட்டிமுதற்றவமுதற் சிருத்தியங்களைப்பண்ணப்பொருந்தியம்பொருந்திடாவியற்கையன்ரூனே. எ-று. (எ)

முதலாஞ்சூத்திரம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கூ.

இரண்டாஞ் சூத்திரம்.

முதற்சூத்திரதிற் சிருட்டித்திதிசங்காரசிருத்தியகர்த்தா சிவனென்றறிவித்ததனால், மேலனுக்கிரககர்த்தாவென்றறிவிக்கப்போகிறபடியால், இப்போதுதிரோபாவசிருத்தியகர்த்தாவென்ப தரைக்கின்றார்.

உலகெலாமாகிவேறுயுடனுமாயொளியாயோங்கி
யலகிலாவுயிர்கள்கன்மத்தாணையினமர்ந்துசெல்லத்
தலைவனுயிவற்றின்றன்மைதனக்கெய்தவின்றித்தானே
நிலவுசிறீமலைஞனினனனீங்காதெங்கும்.

இ-ள். (சிவன்) உலகெலாமாகி - சித்திற்பிரபஞ்சமெல்லாந் தானுமே (பிரமந்தானே யஞ்ஞானகலுஷித அவிவேகத்தினுற் சத்தியப்பிரபஞ்சமாய்த்தோற்றி விவேகத்தினுற் சத்தியப்பிரமமொன்றுமாயே சேடிக்குமென்னும் விவர்த்தவேதாந்தியோரீர், அதுவன்றிப் பிரமந்தானே சத்தியப் பிரபஞ்சமாய்ப் பரிணமித்துந தானுயிருக்குமென்னும் பரிணதவேதாந்தியோ. நீரென்ன, நாமிருவகைவேதாந்தியுமன்று சைவசித்தாந்தியென்று சாற்றுகின்றீர்)—வேறுமாய் (சித்திற் பிரபஞ்சதத்துக்கெல்லாம் பொருளினலே) வேற்றுமையாய் (ஆனல், கையாயிகாதிகள்போலப் பேதவாதியோ நீரென்னப் பேசுகின்றீர்)- உடனுமாய்- அசித்பிரபஞ்சத்துக்கெல்லாஞ் சித்திற்பொருட்சொரூபத்தினுலே வேற்றுமையாய் வியாத்தியினுலே யுள்ளடக்கி வேற்றுமையற்றும பொருண்மாத்திரச் சொரூபத்தினுலேயும் வேற்றுமையற்றுத்தோற்றிச் சிற்பிரபஞ்சத்துக்கெல்லாம் வேற்றசித்தானுமும் சித்துரூபப்பொருட்சொரூபத்தினுலேயுமொத்தவியாத்தியினுலேயும் வேற்றுமையற்று முற்றுமொத்து — ஒளியாயோங்கி- (வியோமவியாபித்தோததிரத் துரைத்தபடி மலமூதற்பாச பாசவாசனைவிஷயதாகக் கிரியாசாதகக் கிரியாசத்திபக்கினி யதற்கண்ணியவத்துப்பிரகாசஞானசாதக ஞானசத்தியகனிப்) பிரகாசப்பொருட்குடையனுய்— அலகிலாவுயிர்கள் - அளவிறந்தவாத்மாக்கள் — சன்மத்தானேயினமர்ந்துசெல்ல- அவரவர்ப்பண்ணின நல்வினைதீவினைக்கேற்ப விதிவிஷேதப் பிரபோதிகையாயிருக்கின்ற தனதாஞ்ஞாசதத்தியினுலே நல்லபொல்லாத போக்கியப் பொருள்களி லாழ்ந்தி யதனுலுண்டான சுகதுக்கமோகங்களே யனுபவித்துச் சஞ்சாரம்பண்ணப்பண்ணி — தலைவனுய்- சிவன்சுய மபிண்ணகிமித்தோபாதானங் கேவலமூபாதானமென்று மாயாதடத்திற் பரியவசிதபரிணதிபடிக்குங் குறிருட்டிவாதங்கட் கிடங்கொடாத நிமித்தகாரணமாத்திரக்குறிக் கர்த்தாவாகி— அவற்றின்றன்மை- அந்தவாத்மாக்களது சுகதுக்கமோகங்கள்— தனக்கெய்தலின்றி- (பிறபிரிப்பின்றி யுட்பிரிந் திடனுய் நின்றுமும்) தனக்கனுபவிக்கப்படுமலைகளன்றி—தானே—நிலவுதிரமலறுகி- சுவயம்பிரகாச சத்திசசுவபால நின்மலனுய் — நின்றனனீர்காதெங்கும்- எங்கும்வியாபித் தொருகாலத்து நிடைவிடாதிருந்தான். எ—று.

ஆகையால், நிருபாதிகாதம சிவோபயச சொரூபமொத்த சித்துரூபமே சின்மூலமன்று, பின்னேதோவொன்றென்றுஞ் செப்புவதன்று; கையாயிகன்முதலோருக்குப்போற் சடரூபமாய்ப்போம். சின்மூலமென்பது மேதோவொன்றென்பதுஞ் சித்துக்காணுமென்னிலனவத்தைவரும்; அதனுற் சித்துரூபதானே சித்துரூபனுமும் வேதாந்திகட்குப் பேரலச் சின்மாத்திரமன்று, பின்னேதோவொன்றென்னு மநிர்வசனீயமுமன்று. அநிர்வசனீயமு மன்றுமாகிற் "தற்பதங்கிமபித்திதம்" என்று சிவாகமஞ் செப்பியதேது? சத்தியம். நிருபெமுமன்று அநிருபெயமுமன்றென்று சொல்லி மெள்ளத நிருக்குரூபத்தைக காண்பித்தது. பராகவைய மிருகேந்திரகளிலே,

"நித்தரூபமான மனோரூபம் நிறுக்கிரியாகுணலட்சிதம்।
ஞானரூபஸ்யதஸ்யாபி சுவரூபந்நிறுக்கிரியாற்மகம்॥
சைதன்னியம்நிறுக்கிரியாரூபம தத்தியாற்மனிசறுவதா।
சறுவதச்சியதோமூத்தெள சுறூயதேசறுவதோமுகம்॥
அதாஞதிமலாபேத சறுவநிறுற்சறுவலிற்சிவ:।"

என்று வசனமிருக்கையால், ஞேயகாரிய நிருசியநிருக்குரூப நிரு கந்தரநிருகரூப சுவநிருக்குரூப சுவரூப சச்சிதானந்த சருவஞ்ஞத்துவ சருவகர்த்தநிருத்துவசெயத்துவைகரூப நிருபாதிகாத்ம சிவோபயபதரூபஞ் சருவாபேட்சமானுமை அக்கினிக்குச் தாகட்பிரகாசரூபம்போ லிருவரு க்கு மொன்றுக்கொன்று பரிசியாமலொப்ப விருவருக்குஞ் சொரூபலக்க ணந்தானே தடத்தலக்கணமன்று, அஞ்ஞத்துவாகர்த்திருத்துவலக்கண பாசசடதடத்தினு மப்பாசெளபாதிகஞ்ஞஞ்ஞத்துவ ஞ்ஞாதிகர்த்தி ருத்துவ போத்திருத்துவ லக்கணபசுவசடதடத்தினும் அவ்விருபதி சொரூபமில்லாமையால். ஆதலால் "ஞ்ஞஞ்ஞத்துவந்துகாரணத்" எனும் வசனத்தினுற் கிஞ்ஞஞ்ஞத்துவ ஞ்ஞாதிகர்த்திருத்துவ போ த்திருத்துவ மஞ்ஞத்துவ மகர்த்திருத்துவங்களே ஔபாதிகங்களெ ன்பதறியாது ஞ்ஞஞ்ஞத்துவங் ஞ்ஞாதிகர்த்திருத்துவம் போத்திரு த்துவ மஞ்ஞத்துவ மகர்த்திருத்துவ மிவைபோலச் சருவஞ்ஞத்துவஞ் சருவகர்தநிருத்துவ மிரண்டும் ஔபாதிகங்களே, தடத்தலக்கணஞ் சுவரூபலக்கணமன்று; ஒன்மாத்திரமே சுவரூபலக்கண மென்று வேதா ந்தலியவகார சோரர்களாய்ப் பிரட்டசித்தாந்த வியவகாரர்களாய்ச் சை வசித்தாந்தியாபாசர்களாயிருகஞ் சிலர் சொல்லியது தூரம்போய்த் துச்சமாய்ப்போயிற்று.

திரும்பவிவர்கள ஞெனுக்கும் ஆத்மாவுக்கும் எள்ளுக்கும் எண்ணெ ய்க்கும் பழதுதுக்கும் நிரசத்துக்குமபோ லௌபச்சிலேஷிக வியாத்தியி னுலே வியாப்பிய வியாபக பாவமதுவும் அனுசிசங்யோகமதுவே முத்தி யென்று சொல்லியதும் அப்படியேபோயிற்று.

ஆகாசாதி அமூர்த்த பதார்த்தங்களும் அதினும் அத்தியந்தமமூர்த்த பதார்த்தங்களுஞ் சமகாலமாய்த்திற் சந்திரனிடத்திலொத்து விழுந்த கண் ணெளிகள் ஒன்றேடொன்று தட்டாதொத்திருந்ததுபோலத் தட்டாதிரு க்குமாதலால், நிருபாதிகாத்மசிவன்கள் சமசமயத்திற் சர்வபதார்த்தங்க ளிலொத்து விழாது விழுந்தொன்றேடொன்று தட்டாமல் ஒன்றொன் றிருக்குமிடத் தொன்றொன்றிருப்புவிடா துட்புறம் பெனனுதொத்திருத் தலால், அந்த வாத்மசிவனகளுக்குச் சங்யோக சமவாய வியாப்பிய வியாபகபாவ சம்பந்த மூதற்சம்பந்தங்கள் கிட்டாது; சாதிருசிய சாதிச ம்பந்தமொன்றுமே சாதாத்திகமாய்க் கொண்டு சம்பூச்சியம். இரௌரவ விருத்திக்காரரு மப்படியேசொன்னர். சிவனுமாத்மாவுக்குச் சமானசா தியசென்று.

பிரமமொன்றுமே நானுசைதன்னிய மில்லையென்னுஞ் சருதிக்குச் தாற்பரியமுரைக்கின்றார்.

ஒன்றெனாமறைகளெல்லாமுரைத்திடவுயிர்களொன்றி
நின்றனனென்றுபன்மைநிகழ்த்துவதென்னையெனனி
னன்றவைபதிதானெனென்றறையுமக்சரங்கடோறுஞ்
சென்றிடுமகரம்போலநின்றவன்சிவனுஞ்சேர்ந்தே.

இ-ள். ஒன்றெனமறைகளெல்லாமுரைத்திட- வேதங்களெல்லாம் பிரமசைதன்னியமொன்றுமே (நானுசைதன்னியமில்லையென்று) சொல்ல—உயிர்களொன்றிநின்றனனென்றுபன்மைநிகழுதலுதென்னையென்னில்-(சிவன்)உயிர்களொன்றி- ஆத்மாக்களுக்குண்முத்தரிடத்திலேயெங்குமொக்கச் சிவசத்திக் கொத்துச்சிற்சதசிவிளங்குதலாற்சாரூபியசம்பந்தசம்பந்தியாயும், பெத்தரிடத்திலே யேகதேசத்திலே சிவசத்திக்கொவ்வாமற் சிற்சத்திவிளங்குதலால் அணுக்கிராகியாணுக்கிராகக சம்பந்தமென்றுஞ் சாற்றப்படும்; வியங்கிய வியஞ்சக பாவசம்பந்தத்தோடு வியாப்பியவியாபக பாவசம்பந்தசம்பந்தியாய் இருப்பனென்று, அனேகாற்மவாதியாய் நீர்சொன்னதேதென்னில் — அன்றவைபதிதானெனென்றறையும்-அவை-அந்தவேதங்கள்—அன்று— அனுதி சித்தபதியெனுங் கர்த்தாவொருவனென்றும (அநிதித்தபதிகளுமபசுகளும் அனந்தமென்றும்) உரைக்கும்—(அனுதிமுத்தபதி அநிமுத்தபதிபசுக்களுக்குப் பின்னப்பிரதேசத்திலே யிருப்பதெனவென்ன உத்தரம) அக்கரங்கடோறுஞ்சென்றிடுமகரம்போல நின்றனன் சிவனுஞ்சேர்ந்தே. எ-று.

அக்கரங்களுக்கும் அகாரத்துக்குஞ் சமவாயசம்பந்தத்தினுலே தாதாற்மியம். அனுதிமுத்த பதிக்கும் அநிமுத்தபதிபசுக்களுக்குமுன்சொன்னபடி சாரூபியசம்பந்தத்தினுலேயும் வியாப்பிய வியாபக பாவசம்பந்தத்தினுலேயும், தாதாற்மிய மில்லாமையா லேகதேசவுவமை. முற்றுவமையன்றென்பதறிக.) (உ)

சிவனுக்குமாத்மாவுகு மிப்போது சொல்லிய சம்பந்தத்தினுலே
யொருபிரகாரம் அத்துவைத மறிவிக்கப்பட்டதானு
லும் வத்துவினுலே பேதம புடமென்ப தரைக்கின்
றார்.

உருவொடுகருவியெல்லாமுயிர்கொடுநின்றுவேறாய்
வருவதுபோலவீசனுயிர்களின்மருவிவாழ்வன்
றருமுயிரவனியாகாவுயிரவைதானுமாகான்
வருமவனிவைதானுயும்வேறுமாய்மன்னிநின்றே.

இ-ள். உயிர்-ஆத்மா—உருவொடுகருவியெல்லாங்கொடுநின்று-தூலதேகஞ் சூக்குமதேகம் பாதேகமிவைகளைக் கொண்டு நின்று (தனதுசங்

கற்பருப சன்னிதி மாத்திரத்தால் செயத்தித் தொழில்களோப் பண்ணுவித்து நின்று)—வேறுப்வருவது போல உயிர்க்கு உடம்பு சரீரமென்று நிற்றற்போல—உயிர்களினது முயல்வாழ்வன—தூய்மைகளிடத்துச் சமயந்தித்துத் தனது சுபாவம் நுபசன்னிதி மாத்திரத்திலேலே செலுத்திநிற்பன்—(அமூர்த்தமாய் வியாபகமாயிருக்கின்ற வாதாரசக்தியைச் செலுத்தும் வகையெப்படியென்னில், சரீரத்தில் லயமாகவே யிருக்குப் பிரேரித்து, அதமாகளிட தனி லறிவுதொழில்களோயுச்சசரீரத்தில் லயவயங்களோக்கொண்டு விளக்கிய காரிய நிகழப்பண்ணுவதே செலுத்துதென்றபடியாதலால்) தருமமிரவியோகாவுயிரனை தானுமாகவுஞ்செலுத்தப்படும பொருளாகிய வாத்மாகளுந், செலுத்தும பொருளாகிய சிவனு மொரு பொருளாகா—வருமவனிலையைதானுயும பிறமுமாப்மனினின்றே—அவனை—அந்தசிவன்—முனிவர்சாலலிய வியாடபிய வியாசபாய சமயர்தத்திலே) இவைதானுயர—இந்த வாதமாகளாயர்—வததுவிருலேவேறுப்த்தனித்தொருபொருளாயும—வரும—இருபபன். எ—று.

மூத்தாதாகள் நிரஞ்சனாகளாதலால் சிவம்பேறற் சிவப்பிரேரியர்களன்று, "வச்சிபோனிறுதலீரிய சியசோதயேவாபிமோட்சஞ்சி" என்று, மோட்சபரியர்தன் சிவனுகு வச்சியன் என்று மிருகேந்திரவசனதினால். (க)

மேல்லினையான்மாறிப்பிறந்து வருமா றுணர்த்துகின் றார்.

இருவினையின்பத்துன்ப சதிவழியாபிறந்திறகது
வருவது நீபோ தாகுமன்னியவினைபயன்க
டருமமன்றரணியோடுதராபதிபோலத்தாமே
மருவிடாவழி வங்கணமபலைகளுமாறுமைக்கண்ணோ.

இ—ள. தரணியோடுதராபதிபோல—பூமியோடு கூடிய விராசாதிராஜாதி பலன்களோ யவரவர்செய்தியறிந்து கொடுபபது) போல—அரன்—(மாயையோடு கூடிய)சிவன—மன்னியவினைபயன் டருமம்—அவனவனுக்குப்பொருந்திய சுகதுக்கமோகங்களைக்கொடுப்பன். (தரணியாகிய மூதற் காரணமின்றி தராபதிபலன் கொடுக்கமாட்டான். தராபதியன்றித் தரணிபறிவின்மையால், பலன்கொடுக்கமாட்டாது. இருவித்தொழிலுமப்படியே. அப்படிச்சிவன் மாயை கன்ம மூன்றும பிரித்து பலன் கொடுக்கமாட்டாது. இருவினையின்பத்தென்றவிடத்து இருவினைகளாலென விரிக்க.) இன்பதுன்பத்—சுகதுக்கங்காரணயோனிகளில். வருவதுபோவது சுவர்க்கநரகங்களில். மற்றதுவெளிப்பொருள். எ—று. (ச)

உலோகாயதன்மத மாசுகித்துத் தூஷிக்கின்றார்.

இருவினையென்னையின்பதுன்பங்களியல்பதென்னி
னெருதன்மையியல்புக்குள்ளதொருவனுக்கிரண்டுசெய்தி
வருவதென்மலருந்தியுமருவலின்வாசம்வெம்மை
கருவதெனிரென்செய்துகானியல்பாகுமன்றே.

இருவினையென்னை - பாவபுண்ணியமென்பதேது (பிரத்திய க்ஷப் பிரமாணமொன்றுக்குமே விஷயமாகக் காண்பித்தீராகலும், நிட் பிரயோசனம்.) –இன்பதுன்பங்களியல்பதென்னில்- (சரீரத்தைத்தவிர வாத்மாவில்லைச் சதீரோத்மாவுக்குச்) சுகதுக்கங்கள் சுவபாவமென்றுநீ சொல்லில்–ஒருதன்மையல்புக்குள்ளது – (சீதகுணசலத்துக்குச் சீத மாயிருப்பதியற்கை) ஒருவனுக்கிரண்டுசெய்திருவுவதென் - ஒருபுருட ஞுக்குச் சுகதுக்காணுபவமிரண்டு வருவதேது?–மலருந்தியமருவலின்வாச ம்வெம்மைதருவதெனிசென்செய்துதான்- நீர்- சலம்–என்செய்துதான்- என்னைகண்மத்தப் பண்ணித்தான்–மலருந்தியமருவலின் - புட்பாச்சினி கள் பொருந்தியவிடத்து–வாசம்வெம்மைதருவதென் - மணஞ்சூடுகொடு ப்பதேது? (காரணமில்லை)–இயல்பாகுமன்றே - பொருளினியற்கைதா னே. எ-று. (நி)

நீசொன்னஇருட்டார்த்தத்திலாத்மாவுக்குச் சுகதுக்கங்களியற்கை
யன்று செயற்கைபென்றுதானே சித்தித்தப்போயி
ற்றென்று செப்புகின்றார்.

தன்னியல்பொழியப்பூவுந்தழலும்வந்தீனையநீரின்
மன்னியதிரண்டுசெய்திவருமிருவினையினலு
முன்னியவின்பதுன்பமுயிருணர்விலாத
துன்னியவசித்தையின்பதுன்பங்களுழ்ந்திடாவே.

இ-ள். தன்னியல்பொழிய-தனதியற்கைச் சீதகுணமறைய–பூவுந் தழலும்வந்து–அனைய-பொருந்த–நீரின்–மன்னியதிரண்டுசெய்தி-மணஞ் சூடெனுஞ் செயற்கைக்குண மிரண்டும் வந்துசேர்ந்தது–(அப்படி) வரு மிருவினையினலுமை - புத்தியில்வந்துபொருந்திய புண்ணியபாவங்களினு லும்–உன்னியவின்பதுன்பம்-உண்டாகிய செயற்கைச் சுகதுக்கங்களை– உயிருறும்-ஆத்மாவனுபவிப்பன்–துன்னியவசித்தையின்பதுன்பங்களுழ் ந்திடாவே-ஆத்மாவைப்பொருந்திய சரிசேர்ந்திராதிகள் அறிவின்மையா தலால் அந்தச்சுகதுக்கங்களை யனுபவியா. எ-று.

அசித்தைப் பொருந்தியிராவென்றுரைப்பண்ணலாகாது சுகதுக்கங் கள் புத்திதத்துவத்திலுண்டாய்ப் பொருந்தியிருத்தலால். (சு)

காரணமாகக் காணப்பட்டபொருளைக் காரணமாக இசைத்தமையு
மென்று கற்பிப்பதே முக்கியம் காரணகாரண. கற்
பனைநிட்பிரயோசனமென்றுசங்கிக்கின்றான்.

இம்மையின்முயற்சியாலேயிருநிதியிட்டியின்ப
மிம்மையேதுகர்வர்செய்தியிலாதவர்பொருளுமின்றி
யிம்மையேயிடருழப்பர்வேறிருவினையதுண்டே
லிம்மையின்முயற்சியின்றியெய்திடவேண்டுமிங்கே.

இ-ள். வெளிப்பொருள். (எ)

இப்படி முன்னுரையாற செய்யுளுக்கும் மோரிடத்திற் பலத்தைத
ப்பொருத்தி யோரிடத்தினீங்கி வியாசரியாதலால்.
வியபிசரிதவிடத்துக காரணத்தை யுரைக்கற்பக்கவே
ணுமென்று காண்பிக்கின்றார்.

இருவினைச்செயல்காணிம்பையிரும்பொருளின்பம்வேணடி
வருவினைசெய்யுங்காலைமடிவருமடியமின்றித்
தருவினையதனிலத்தந்தானறுத்துயரந்தங்கு
மொருவினைசெய்யாதிருமுலடையரிவ்வுலகத்துள்ளே.

இ-ள். வெளிப்பொருள். (அ)

பிராரத்தம் புஞ்சிக்குமிடத தாகாமியமேலுமுறையையும், அதுசஞ
சிதத்தோடுகலந்து காலாந்தரத்திற் பலன்கொடுக்கு
மென்பதும், பலமாதலென்பதும், படித்தறிவிக
கின்றார்

பேதிழவின்பமிம்பிணிமூப்புசாக்காடென்னு
மாறுமுன்கருவுட்பட்டதல்விதியனுபவத்தா
லேறிடுமுன்புசெய்தகனபமியகிதனுக்கேது
தீதறுநீயினிச்செய்கன்மமிலுடற்சேருமன்றே.

இ-ள். பேது-தனக்குச்சாக்கிய போகங்கிப்பொருளைப் பொருந்
தல்-இழவு-நியமித்த காலாந்தரத்தில் அதைப்பிரிதல்-இன்பமோடுபிணி
சுகதுக்கம்-மூப்பு-கரைதிரை-சாக்காடு-மரணம (என்கின்ற)-ஆறும்-
கருவுட்பட்டது-சரீரத்தடைத்தது - அவ்விதியனுபவத்தால் - நியமித்த
வாறின தனுபூதியால்-ஏறிடும - (ஆகாமியகன்மம்) வந்துபொருந்தும்-
முன்புசெய்தகன்ம மிங்கிதனுக்கேது-முற்சன்மங்களிற் பண்ணிச்சஞ்சித
மாய்க் கட்டுப்பட்ட கன்மத்துட் பக்குவமாகிய பிராரத்தகன்ம மிவ்வாறு
க்குங் காரணம் (கண்டகாரியமானுமானத்தாற் காணுதகாரணமனுமிதிக்க
ப்பட்டது)-தேறுநீ- இப்படி யனுமிதித்தறி-நினிச்செய்கன்மமிலுடற்
சேருமன்றே-இப்போதேறு மாகாமியகன்ம (மேற்சஞ்சிதத்தோடுகல
ந்து சிறிதுபக்குவமாய்ப் பிராரத்தகன்மத்தோடுகூடி.) மேல்வருஞ் சன்ம
ங்களிலெடுக்குஞ் சரீரங்களிற் (பேதிழவின்பமுதல் ஆறுபலத்தோடும்)
பொருந்தும். கண்டகாரணனுமானத்தாற் காணுதகாரிய மனுமிதிக்கப்
பட்டது. எ-று. (கூ)

சரீரகன்மப்பிரபந்தம் பிரவாகரூபமென்று பேசுகின்றார்.

உடற்செயல்கன்மமிந்தவுடல்வந்தவாறேதென்னில்
விடப்படுமுன்னுடபின்வினையிந்தவுடல்விளைக்குந்
தொடர்ச்சியாலொன்றுக்கொன்றுதொன்றுதொட்டாரதிவித்தி
னிட தினின்மரமாதலில்வித்தும்வந்திசையுமாபோல்.

இ-ள். [சரீரார்த்தமாயிருக்கும் கன்மார்த்தமும் சரீரார்த்தரத்துக்குக் காரணமாதலால், இதுசரீரதாரிய தோஷமில்லையென்றிருதயாகி வெளிப்படுவர். (கூ)

ஆகாமியமலம் தேறுமாறு கூறுகின்றார்.

முற்செயல்விதிலயயிர்த்துமுயறகியோடனுபவித்தா
லிருசெயல்பலிக்குமாறெனிதமகிந்கண்முன்ன
முச்செயலாலுயிரு தவைசெயின்மேலிக்காகும
பிற்செயாதனுபவிப்பதின்றுபின்னிறைடருஞ்செய்தி.

இ-ள். முற்செயல்வினையாமுற்சனனத்திற் பண்ணினகன்மபலசுகதுக்கங்களை-நித்தமுயற்சியோடு-(அந்தச் சுகதுக்கங்களுக்கு முதற்காரணமாகிய போக்கியகன்மஞ் சுகதுக்கமாய்ப் பரிணமித்தற்கு நிமித்தமாய்ச் செலகந்தாரகமாய் வந்த முற்செயலுட்டானே யிருக்கும் போசககன்மம்) இப்பிரயத்தனத்தை யுண்டாக்கி அதனோடு கூடியுண்டாக்கவந்தசுகதுக்கங்களை-அனுபவித்தால் - புசித்தால்-இச்செயல் பலிக்குமாறென்-இவ்வாகாமியம் வருதற்குக் காரணமெது? - (முற்செயலெப்படி வந்தது? இதமகிதங்களாலெனினில்) இதமகிதங்கள் - முன்னர்-முன்னுக-அச்செயலாலுல்-அந்தமுற்சன்மகன்மமுண்டாமாலால்-அவைசெயின்மேலிக்காகும்-அந்த இதமகிதங்களையிப்போது பண்ணினால்-மேலிக்காகும்-மேல்-மறுசன்மத்திற் சுகதுக்க காரணமாகு மாகாமியமெனும் (இதமகிதமு மேவுதற்கர்த்தாபண்ணுவிக்கு முற்கன்மபலமன்றே? பின்னு காமிய மியற்றுதற்கர்த்தாவாயிருக்கு மிவனுக்குண்டாதற்குக் காரணமேது? சத்தியம், விவேகமின்றி நானேபண்ணுகிற்கின்றேனெனுங் கர்வராகபயாவேசத்தாற் சுதந்தரகன்மகர்த்தாவாய்ப் பலன்கொள்பவனுயுங் தனக்குத்தானே தோற்றியிருத்தலா லாகாமிய மிற்தமூன்றுகாரணத்தாவேனும்)-பிற்செயாதனுபவிப்பதின்று-முன்பண்ணுது பின்னனுபவிப்பதின்று-(செய்திபின்றொடருமென்றுமாறு) செய்தி- (மனோவாக்குக் காயங்களிற் சமவாயசம்பந்திபாய்வரு மிதமகிதமென்கின்ற வியாபாரதூலகன்மம் கிருஷிகன்மம்போற் றொழிலாதலால் இங்கேகெட்ட தெங்கேபோய்ப் பின்வந்துதான் பலந்தரும். கிருஷிகன்மத்தொழில் கெட்டாலும் அதனைற் பூமியிலுண்டாஞ் சம்ஸ்காரம்போல மனோவாக்குக்காயத்தொழில் உடனே கெட்டாலுங் கெடுமுற்கணத்திற்றொழிலினுற் புத்திதத்துவத்திற் சமவாயசம்பந்திபாய் வைக்கப்பட்டுப் பலபரியந்தமிருக்குஞ் சம்ஸ்காரமாகி) அதிருட்டமெனும்பெயர்க்குக்கும கன்மம் - பின்றொடரும்-(சொற்காரசூமிகளிற் சுக்குமதேகத்தேறினிருந்து) போம் வரும். எ-று.

ஆகாமியமே சஞ்சிதம் பிராரத்தமாய் வருமென்பதற்குத் திரு
ஷ்டார்த்தம்.

மேலைகருவித்துமாகியினைந்தலையுணவுமாகி
ஞாலத்துவருமாபோலநாஞ்செயும்வினைகளெல்லா
மேலத்தான்பலமாய்ச்செய்யுமிதமகிதங்கட்கெல்லா
மூலத்தகாகியென்றும்வந்திடுமுறைமையோடே.

இ-ள். வினைந்தலை மேலைக்கு வித்துமாகி யுணவுமாகி வருமாபோ லென்று பொருட் புணர்ச்சி. மற்றது வெளிப்பொருள். (கஉ)

இதமகிதங்களினலையென்பதும் அலைகளை யறிந்து சிவனே பலன் கொடுப்பனென்பது முணர்த்துகின்றார்.

இதமகிதங்களென்பதிகண்மன்வாக்குக்காயத்
திதமுபிரகிருதிசெயதலகிதமறதுசெய்யாமை
யிதமகிதங்களெல்லாமிறைவனேயேறுகொண்டுங்
கிதமகிதத்தாலினபதுபெறகாரணன்றே.

இ-ள் இதமகிதங்களென்ப தேதென்னில்—இகல - ஒன்றுக்கொன்று மாறுபாடு—(அவற்றுள்) இதம—மனவாக்குகாயத்து - மனவாக்குக் காயங்களிலே—உயிர்கட்குறுதிசெய்தல் - ஆதமாக்களுக்கு நன்மை பண்ணல்—அகிதமறறது செயாமை - அகிதமாவதுநன்மை செய்யாமலும் தீமைசெயவது (மனதினுள் மனததினுறை செயதல், பிரியம் கோபமுதலியன், வாகினுறை செயதல், துஷ்டிரிகதை முதலியன. காயதினுறை செய்கல, அணைதல் நடித்தன் முதலியன)—இதமகிதங்களெல்லாம் - இதமகிதங்களால வரும்பாவபுண்ணியங்களனைதையும்—இறைவனேயேற்றுகொண்டு—சிவனே கணடுகொணடு—இதமகிதத்தால் (வருகு செனகம் தாரகம போகமெனு முதலிய வினைகளினுலே)—இனப துன்பங்களிவனன்றே - சுகதுக்கங்களைப போகிய கனமதிலே தினறு முண்டாக்கிப் புகைகப் பணணுவனனறே எ-று. (கங)

மீமாஞ்சை ஞாஞ்சிக்க வுத்தர முரைக்கின்றார்.

இறைவனிங்கேற்பதென்னேயிதமகிதங்களென்னி
னிறைபரஞ்சுயிர்கருவைதநேயத்தினிலேமையாகு
மறமலியிதமேசெய்வோருக்கணுகிரகத்தைசசெயவன்
மறமலியகிரகஞ்செய்யினிக்கிரகத்தைவைப்பன்.

கஉ

இ-ள். இறைவனிங் கேற்பதென்னை-சிவனபிமானிப்பதேது? அநு சக்கிரகம்-இன்பம். நிக்கிரகம்-துன்பம்.வைப்பன்-பண்ணுவன். மற்றதுவெ னிப்பொருள். (கஉ)

இதுவுமது.

நிக்கிரகங்கடானுநேசத்தாலீசன்செய்வ
தக்கிரமத்தாற்குற்றமடித்துத்தீர்த்தச்சம்பண்ணி
யிக்கிரமத்தினுலேயீண்டறமியற்றினென்ப
னெக்கிரமத்தினுலுமிறைசெயலருளேயென்றும்.

இ-ள். வெளிப்பொருள். (கடு)

இதுவுமது.

தந்தைதாய்பெற்றதத்தம்புதல்வர்கடஞ்சொலாற்றின்
வபங்கம்வரும். "முத்தாணூன்பாதி" என்னும் வசனவிரோதமும்வரும். அஃதில்லை;ஏலியோக்கியனே ஏவாதிருந்தாற் சருவகர்த்திருத்துவபங்கம்; மலமில்லாமையால் ஏவயோக்கியனல்லாமையாலதுவில்லை; ஏவயோக்கியமல்லானே யேவினற்சிருட்டிமுதற்கிருத்திய மலனைக்கு நித்துவருமென்றதனாற் சிவனுக்குச்சருவஞ்ஞத்துவ பங்கம்வரும்; அதனாற் சருவகர்த்திருத்துவ பங்கமுந் தானேவரும். "முத்தாணூன்பாதி" என்பதற்கும்பொருள், அபரமுத்தர்களை யிரட்சிப்பனென்றுதலால் வசனவிரோதமுமில்லை. ஆகையால் முத்தசிவாத்மாவுக்குஞ் சருவகர்த்திருத்துவ சத்தியுண்டு. சிவனுக்குப்போலவுண்டாகிலும் வியத்தமாகாதென்னில் முத்தனுக்கும் பெத்தனுக்கும் விசேடமில்லாதேபோம்; சத்திநிரங்கிசமாதலால் ஞானபாகத்தி லபிலியத்தி கிரியாபாகத்தி லனபிலியத்தியென்று சொல்லவும்படாது. ஆகிலு முன்சொன்ன விருவருக்கும் விசேஷமில்லையாம். ஆதலா லபிலியத்தி சருவகர்த்திருசத்தி சிவனிடத்துப்போல முத்தசிவாத்மாவிடத்தண்டு; சருவகர்த்திருசத்திக் கபிலியத்தியுஞ் சருவகிருத்தியதத்திற் பண்ணுதலாகிய விழுதல் ஆதலால், வியத்தமாகுலும் வியத்தமல்லாததுபோலப் பண்ணுமற்சும்மாயிருக்குமென்பதுடாது. பண்ணுமென்றும் பின்னசங்கற்பமில்லாமையா லனேகசுரவாதம் வருவதுமின்று. பின்னேப்பண்ணட்டுமேனென்றால் சிவத்துவாபிலியத்திலக்கண சொப்பிரயோசனஞ் சித்தித்துப்போதலாற் றனக்குப் பிரயோசனத்தின்பொருட்டுப் பிரவிருத்திமாகுகான். எக்காலத்து மினேப்பற்றிநிக்குஞ் சிவ னெக்கும்வியாபித்தெக்காலமு மிடைவிடாமற் பிறர்பிரயோசனம் பண்ணிவருதலாற் பிறர்பிரயோசனத்தின்பொருட்டும் பிரவிருத்திமாகுகான்; சருவகர்த்திருசத்திக் கபிலியத்தியுஞ் சருவகிருத்தியத்திலுஞ் சங்கற்பமென்கின்ற விழுதலென்று முன்சாற்றினேம்; கிரும்பலது சிவசங்கற்பத்தினின்றுங் குறைத்துச் சருக்கப்படாதாகையாற் சிவனுக்குக் கிருபாசங்கித்த பஞ்சகிருத்தியம்; முத்தசிவாத்மாவுக்குப பிரிநதபின்னகிருத்தியபலமின்றி யபின்னபலஞ்வர்ச்சனீய சங்கித்தபஞ்சகிருத்தியப்; ஆகையால் விரோத வேற்றுமைகளின்று. இதற்குச் சித்தியவிசுவசாதாக்கியமுதலாகமங்களில் வசனங்கேட்டறிக. (எஅ)

சிவபேதமுறுபேதமெனப் பிரமாதி சுவபேதமாம், அவற்றி லுறுபேதஞ் சத்தியலோகமுதற்புவனமுற்பதியாய் வாஞ்தவபேத தேகியாபிருக்கும் சிவபேத மநுபேதத்தை யநுட்டித்துக் காற்பருசிகபேத தேகியா யிருக்கும்; அவற்றிற் சிவபேதத்தைத் தரிசிப்பிக்கின்றார்.

சிவஞ்சத்திநாதமயிர்த்துசதாசிவள்முசிரூபீச
னுவந்தருளுஞ்சூத்திரன்றும்மாலயனெனுமிவரென்றோய்ப்

பவந்தருமருவாசிங்குருவாகாலுபயமொன்றுய்
நவந்தருபேதமேகாதனேடிப்மனென்பர்

(இ-ள்) சிவஞ்சத்தி - சிவம் - அதிக்கிராந்தவித்துகபரசிவம்—சத்தி-அதிக்கிராந்த வித்துகபராசத்தி—நாதம்வித்து - நாதம்-பராநாதம்—விநது-பரவிந்து (பராநாதமென்பதன்மனுகலாதி சாந்தியதீதகலாந்த காரியசிவ கலாசத்தி சமஞதியபரவிந்து நிவிர்த்தியந்தகாரியசத்திகலாசத்தி சமாகாராத்ம காரண சாந்தியதீதகலாரூப மகாமாயை.பரவிந்துவென்ப தன்மனு கலாதிகாரியப் பிரபஞ்சமொருபிரதேசத்துண்டாய் ஒடுங்கின மகாமாயையின தோரிடம். ஆகையால் மகாமாயையினது பராநாதப்பிரதேசத்தையதிட்டிக்கு மனதிக்கிராந்த வித்துக பரசிவம் நவபேதவிருத்தத்தில் நாதமென்றுசொல்லப்பட்டது. பரவிந்துவையதிட்டிக்கு மனதிக்கிராந்தவித்துகபரசத்தி வித்துவென்று சொல்லப்பட்டது. மகாமாயாகாரிய பராநாதபரவித்துக்கள் மகாமாயாகாரிய வபராநாதவபரவிந்துக்கள் காண்பிக்கப்படாதிறகின்றன.உன்மனே பராற்பராநாதம்;சமனேபாரபரவிந்து;வியாபினிவியோமரூபை, அனந்தை, அனுதை, அனுசிருதை என்கின்ற பஞ்சகலாகர்ப்ப சத்தரூபவர்த்தரூப சிவகலைகளும்,அர்த்தரூபமாத்திர பஞ்சசிவகலாபுவனங்களும் பரசிவதத்துவமென்கின்ற பராநாதம். சூக்குமை, அதிசூக்குமை, அமிர்தை, அமிர்தாமிர்தை, வியாபினி, என்கின்ற பஞ்சகலாகர்ப்ப சத்தரூபவர்த்தரூப பராசத்திகலைகளு மர்த்தரூபமாத்திர சத்திகலாபுவனங்களும் பராசத்திதத்துவமென்கின்ற பரவிந்து. இவைகள் யோகியினுடையவும் மகாவிராட் புருடனுடையவும் பிரமரந்திரத்துக்குமேல், முறைமையிற சத்தரூபமாத்திரங்களாகவுஞ் சத்தரூபவர்த்தரூபங்களாகவு மறியப்படும். பிரமரந்திரத்துக்குள் இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை யென்கின்ற பஞ்சகலாகர்ப்ப சத்தரூப வர்த்தரூப சிவகலைகளு மர்த்தரூபமாத்திர சிவகலாபுவனங்களும் அபரசிவதத்துவமென்கின்ற நாதநாதாந்த வபராநாதமாக வறியப்படும். நிவிர்தத்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை, யென்கின்றபஞ்சகலாகர்ப்ப சத்தரூபவர்த்தரூப சததிகலைகளும்,அர்த்தரூபமாத்திர சத்திகலாபுவனஙகளும் அபரசத்திதத்துவமென்கினற வபரவிந்துவாக வறியப்படும். உன்மனுதி யபரவிந்துவந்தம் கிரமத்திற் பரசிவபராசத்தித்தானமாகவுதித்தறிக.சத்தரூப வர்த்தரூபபஞ்சபஞ்சகலைகள் அர்த்தரூபமாத்திர பஞ்சபஞ்சகலாபுவனங்கள் பருப்பாயிருக்கும். அர்த்தசந்திரன் நிரோதியிரண்டும் அபரவிந்துவிலடங்கும். மகாரவுகார ஔகாரங்கள் கிரமத்திற் சாதாக்கியதத்துவ மீசுரதத்துவஞ் சத்தவித்தியாதத்துவ

மென்கின்ற வபரவிந்துகோடிக்குள்ளாகும், அபராதவபாவிந்துக்கள் சதாசிவவீசுர வித்தியாதிபதியுருத்திர வதிட்டானங்களாகவு மறியப்படும். கீழேகீழே நிவிர்த்தியாதி கலாரூபமாக வியாபித்த ஒளகாராதி நாதாந்தம் பிரமாதி பஞ்சதேவதாத்தானமுமாம்)—சதாசிவன்றிகழுமீசனு வந்தருஞ் சூத்திரன்முன் மாலயனென்றிவ்வென்முய்—பவந்தரும் - சன்மிக்கும் (அணுபேதத்திற்சன்ம முபசாரமாயாரோபித்துச் சம்புபட்சத்துக்குக் கற்பிக்கப்படும்)—இங்கு - சிவாதிபிரமாந்தத்துள்—அருவகாலும் - (காரண மகாமாயாவத்தாசாகூடியதிட்டானமாதலால்) சிவாதிநான்கும் நிஷ்களம்—உருவகாலும் - (காரியாதிட்டானமாதலால்)சதன்முதலிய நான்குஞ் சகளம்—உபயமொன்றும் - (சதாசிவங் காரணத்தைத்தொட் டின்மனுதிசாதாக்கியாதி காரியாதிட்டானமாகையால்)சகள நிஷ்களம்—நவந்தருபேதமேக நாதனே நடிப்பனென்பர் - சிவபேதமென்கின்ற நவபேதத்தை யொரு பொருளாகிய சிவன்முனே யதிட்டேய பேதத்தையொட்டி யபிநயித்துத் தடத்தகற்பணியினுற் காண்பிப்பன். எ-று. அணுபேதமென்கின்ற நவபேதத்தை யணுப்பிரமாதி யணுபரசிவாந்த வனேகேசுரர்கள் சொரூபத்தினுற் காண்பிப்பர். சிவஞ்சத்திநாதம்விந்து வென்பதஞ்சாந்திமுதல் நாற்கலையென்பது மொருபொருளாைத் திருப்பதுணர்க. (எச)

சிவபேதமுணர்த்தி யணுசத்தி பேதமானது கொடிக்குஞ் சிவசத்தி பேத முணர்த்துகின்றார்.

சத்தியாய்விந்துச்சத்தியாய்மனேன்மணிதானுஞி
யொத்தறுமகேசையாகியுமைதிருவாணியாகி
வைத்தறுஞ்சிவாதிகணங்ணன்வருஞ்சதாசியொருத்தியாகு
மெத்திறன்முனீசனத்திறமவளுநிற்பள்.

(இ-ள்) சத்தியாய் - (அதிக்கிராந்தவிந்துகபரசிவத்துக்கு) அதிக்கிராந்தவிந்துக பராசத்தியாய்—விந்துச்சத்தியாய் - (நாதரூபியா யிருக்கின்ற வனாதிக்கிராந்த விந்துக பரசிவத்துக்கு) அனாதிக்கிராந்த விந்துக பராசத்தியாய்—மனேன்மணிதானுஞி - (சதாசிவத்துக்கு) மனேன்மணி தேவியாய்—ஒத்தறுமகேசையாகி-(மகேசுரனுக்கு) இணங்கிய மகேசுவரி தேவியாகி—உமைதிருவாணியாகி - (உருத்திரனுக்கு)உமாதேவியாகி-(மாலுக்கு) மகாலட்சுமிதேவியாகி (பிரமாவுக்குச்) சரசுவதிதேவியாகி—வைத்தறுஞ் சிவாதிக்கிங்ணன் வருஞ்சத்தி யொருத்தியாகும் - சிவமுதல் நவபேதத்துக்கு மிவ்விடத்துப் பேதமாய்த் தோற்றுஞ்சத்தி யொன்றுகும்—எத்திறன்முனீசனத்திறமவளு நிற்பள் - சிவன்கற்பித நவபேதமா யாதொரு

பிரகாரமிருந்தான் சத்தியுங் கற்பித நவபேதமா யந்தப்பிரகார மிருக்கு; எ-று. சத்திபேத மேழென்று சொல்லியிருக்கச் சிவபேத நவபேதமென்ற து விரோதம். சிவபேத நவபேதமென்று சொல்லி யிருக்கச சத்திபேத மெழுபேதமென்றதும் விரோதம். இப்படியாகில் விரோதபரி காரமெப்படி? ஒருபிரகாரஞ் சொல்லுவோங்கள்: அஞ்சிருதை முதல் சிவகலாசாதீய வியாபினியீருகும் பஞ்சகிலகலாபுஞ்சவடிவுறவுச் சிவகலாசாதீய வுன்மனோக்கந்தாக்கும் பரசாதமென்றும், சததிகலாசாதீய வியாபினிமுதற் சூக்குமையீருகுப் பஞ்சகலாடஞ்சவடிவுற்றுச் சத்திகலாசாதீய சமனோக்கந்தாக்கும் பரவிந்து வென்றும், ஊர்த்துவகைமுத லிந்திரிய யீருகும் பஞ்சகலாபுஞ்சவடிவுற்றுச் சிவகலாசாதீய வியாபினியோக்கந்தாக்கு மபரசாத மென்றும், சாந்தியதீதை முதல் நிவிர்த்தியீருகும் பஞ்சகலாபுஞ்சவடிவற்றுச் சத்திகலாசாதீய சூக்குமை நோக்கந்தாக்கு மபரவிந்து வேன்றும், இருக்கும் பராபரசிவதத்துவ பராபரசத்திதத்துவ வர்க்கமான்கிற் பேர்மாறியு மாறுமுந் தனித்தனி யிருக்குஞ் சாந்தியதீதகலை. அக்கலைமணப்புற் றத்தன்மைபெற் றப்பெயர்பெறு மன்மனுகலையாகும் பரசிவ மூர்த்தியாஞ் சிவகலையும் ஆதிலடங்கும். அப்படமானான்கினுமீருக்கும் வித்தை பிரதிட்டை நிவிர்த்தியுள்ளடங்குஞ் சாந்திகலை. அக்கலைமணப்புற் றத்தன்மை பெற் றப்பெயர்பெறுஞ் சமனுகலையாகு மனுகதசிவமூர்த்தியாஞ் சத்திகலையும மதிலடங்கும். ஆதாலிலங்கெட்டுச் சடசிவகலை சடசத்திகலை சற்காரிய கர்ப்ப மகாமாயையினது தாத்துவிக பிரளயத் தெண்கலைபிரியாப்பிரிவுறுதிப் பொறித்தபசரிக்கும் பிரியாப்பிரிவுச் சிற்சிவகலை சிற்சத்திகலை சற்காரியகர்ப்பவதத்துக்களாம்; பரசிவம் பராசத்தியனதிக்கிராந்தவித்துகப ரசிவ மெனும் பராதாத மனதிக்கிராந்த வித்துக பராசத்தியெனும் பரவிந்து லிவகள்தான்குந் தனித்தனி சிவபேதஞ் சத்திபேத மிருபேதமுற் றிருதானகுபேதமாயிருத்தலாற் சிவபேததான்தொடு சதாசிவமுதற் பிரமாவீருகுஞ் சிவபேதமைந்துங் கூட்டிச் சிவபேத நவபேதம்; அச்சத்திபேததான்கொடு மணுண்மணிமுதற் சராசுவதியீருகுஞ்சத்திபேதமைந்துங்கூட்டிச் சத்திபேத நவபேதமென்றும் கருத்திற்கருதி, "நவந்தருபேதமேகநாதனே நடிப்பன்" என்றும் "எத்திறத்தினுனிசனத்திறமவனுநிற்பன" எனறும் ஆசாரியர் சொல்லியதேதென் றொருசொறதோஷமுமில்லை. (எரு)

சத்தியாதி யெண்பேதங்களுக்குப் பரசிவம்மூலம் நாதாதியெழுபேதங்களுக்குப் பராசத்தி மூலமென்பது பகருன்றார்.

சத்திதானைசமாதிதானைசுத்சிவமுமந்தச்
சத்திதானைதியாகுந்தரும்வடிவானவெல்லாஞ்

சத்தியுஞ்சிவமுமாகுஞ்சத்திதான்சத்தனுக்குச்
சத்தியாஞ்சத்தன்வேண்டிற்றெலலாமாஞ்சத்திதானே.

(இ-ள்) சத்தன் - பரசிவன். சத்தி - பராசத்தி. வேண்டிற்றெல்லாம் - தானதுபேதமனேந்தம் மற்றது வெளிபபொருள். எ று. (எசு)

மூன்சொண்ண முறைமையிற் பேதப்பிரசவம் பேசுகின்றார்.

சிவஞ்சத்திதன்னையின்றுஞ்சத்திதான்சிவத்தையின்று
மூவந்திருவுமுப்புணர்ந்திங்குலகுயிரெலலாமீன்றுமு
பவனபிரமசாரியாகும்பான்மொழிகன்னியாகுந்
தவந்தருஞானத்தோர்க்கித்தன்மைதான்றெரியுமன்றே.

(இ-ள்) சிவஞ்சத்திதனனையின்றுஞ் சத்திதான்சிவத்தை யின்றும் - சுத்தசிவசோதி மத்தியசோதி நிட்களநிருத்த சிவரதினின்றுந் தோற்றிய வதிக்கிராந்தவிந்துசபாசிவ மதிக்கிராந்த விந்துகபாசத்தியைத்தோற்றுவித்தும், அத்தப்பராசத்தி யனதிக்கிராந்த விந்துகபாசிவனெனும் பரநாதத்தைத் தோற்றுவித்தும், (அந்தப்பரநாதமனதிக்கிராந்த விந்துக பராசத்தியெனும் பரவிந்துவைத் தோற்றுவித்தும், அத்தப்பரவிந்துவாகிய பராசத்தி வாதிசத்திமுதல் நாலுசத்திகளைத் தோற்றுவித்துத் தன்னெடு பஞ்சசத்திகளிற் பஞ்சசாதாக்கியங்களையும் பஞ்சமூர்த்திகளையுந் தோற்றுவித்தும், பஞ்சசாதாக்கிய பஞ்சமூர்த்திகளப்பிற் பஞ்சப்பிரமங்களையும் வியட்டிசமட்டிச் சதாசிவமாகத் தோறறுவித்தும், சதாசிவன் மனெண்மனியைத் தோற்றுவித்தும், மனெண்மணி மகேசுரனைத் தோற்றுவித்தும், மகேசுரன் மகேசுவரியைத் தோற்றுவித்தும், மகேசுவரி யுருத்திரனைத் தோற்றுவித்தும், உருத்திர னுமையைத் தோற்றுவித்தும், உமை மாலைத் தோற்றுவித்தும், மால மகாலட்சுமியைத் தோற்றுவித்தும், மகாலட்சுமி பிரமனைத் தோற்றுவித்தும், பிரமன்சரசுவதியைத் தோற்றுவித்தும்)—இப்படி சிவசவபேத சத்திசவபேத மாகுஞ் சிவன்சத்தியிருவரும் மகாமாயோபாதி புவனேபாதிமணந்து பரவாகிசுவரி, பரவாகிசுவரர்களாயும், அனந்தேசுரத் துவாரத்தினுலேமாயோபாதி புவனேபாதி மணந்து அபரவாகிசுவரி யபரவாகிசுவரர்களாயும், கேவலமாயா தேகோபாதி மணந்து மாதா பிதாக்களாயும்—உவந்து புணர்ந்து-மருவிமணந்து(அஞ்சு - சுத்தமார்க்கத்தில்)—இங்கும் - அசுத்த மார்க்கத்தில்—உலகுயிரெல்லா மீன்றும்-தனு கரண புவன போகங்கள் உணடாவசிவபேத வணடாவசத்திபேதமாமுத்தாத்மசிவ முத்தாத்மசத்தி சிவமூர்த்தி சத்திமூர்த்தி யீசான விசா

னிமுதற் கிரம சதாசிவ மனேன்மணிமுதல் நிரஞ்சனப் பிரமா சரசுவதி யீறுகவுஞ் சாஞ்சனப் பிரமாதி தம்பரியந்தமாகவு மெண்ணிறந்த வாத்மவர்க்க மனேத்துந் தோற்றுவித்தும்—பவன் பிரமசாரியாகும்பான்மொழி கன்னியாகும் - (சம்புபக்ஷ நவசிவபேத சத்திபக்ஷ நவசத்திபேதத் தோறற மொடுக்கங் கிரியாசத்திப் பிரவிருத்தி நிவிர்த்தி வைசித்திரிய மாத்திர மாதலானும், உவந்து புணர்ந்தென்பதத்தியோகித்துச்சங்கற்பித்தென்றபொருள் போதித்தலானும்) சிவன் நித்தியப் பிரமசாரி சத்தி நித்திய கன்னிகையாம்—இத்தன்மை - இந்த விரகையுந்தான்—தவந்தரு ஞானத் தோர்க்கு-சமாதிகொடுக்குரு சாக்ஷாற்காரவான்களுக்கு—தெரியுமனறே - காணப்படுந்தானே எ-று. (எஎ)

"தவந்தரு ஞானத்தோர்க் கித்தன்மைதான் றெரியும்" என்றதனால் ஞானவானிலக்கணங் கூறுகின்றார்.

தனுகரணபுவனபோகந்தற்பரம்பந்தம்வீடென்
றனுவிலேடெல்லாமரகியடைந்திடுந்தத்துவங்க
ளினிதறிந்திவைநிவிர்த்திமுதற்கலையிடத்தேநீக்கி
நனிபரமுணர்ந்தோனந்தத்தத்துவஞானியாவன்.

(இ-ள்) தனு - தூலதேகம்—கரணம் - சூக்குமதேகம்—புவனம் - லோகம்—போகம் - சந்தன மாலை மகளிர் முதலிய போக்கியப் பொருள (இவைக ளசுத்தமாயாகாரியம்)—தற்பரம் - அதற்குமெற்றனு கரண புவன போகமா யிருக்கின்ற சுத்தமாயாகாரியம்—(நிரனிறையே) பந்தம்வீடு-பந்தம் - அசுத்த மாயகாரியம்—வீடு-(அபரமுத்தித்தானமாதலால்) சுத்த மாயாகாரியம்—என்றிவைகள் எல்லாம்—அணுவிலே டைந்திடுந்தத்துவங்கள்-ஆத்மாவிலேடுபொருந்தும் தத்துவதாத்துவிகங்கள்—இவைகளை—இனிதறிந்து - உத்தேச லட்சண பரீக்ஷைகளிலுலே னன்குணர்ந்து (இது பரோக்ஷ ஞானமாதலால் அபரோக்ஷ ஞானம் வரும்பொருட்டுஆறத்துவா வாய்ப் பகுத்தமுறைமையில்)—நிவிர்த்திமுதற்கலையிடத்தே - நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியதீதை யென்கின்ற கலைகளிடத்து—நீக்கி - தள்ளி—நனிபரமுணர்ந்தோன் - (தான் சின்மாத்திரமாய்ச் சேஷித்து நின்று சிவனையுஞ் சின்மாத்திரமாகச் சிந்தித்து) தற்பர சிவயோகலையயிக்கம் பண்ணித் தியானம்பண்ணினவன்—தத்துவஞானியாவன் - (முறைமையில) சமாதிஞானவானுப்பின்னபரோக்ஷ சாக்ஷாற்கார சிவசிவ தற்சிவ ஞானவானுவன் எ-று. (எஅ)

தனுகரணாதிகள் உயிரோடுசார்க் காரணமேதென்னக்காரணங்கா
ண்பிகின்றார்.

எல்லாமாய்த்தத்துவங்களிசைந்தசெனனுவுக்கென்னிற்
றொல்லாயகன்மமெல்லாந்துய்ப்பித்துத் துடைத்தற்கும்பின்
னில்லாமைமுற்றுவித்துநீக்கவுங்கூடினின்ற
பொல்லாதவாணவத்தைப்போக்கவும்புகுந்ததன்றே.

இ-ள்) எல்லாமாய்த்தத்துவங்க ளிசைந்த தெனனுவுக்கென்னில் - தத்துவங்க ளெலலா மாயையினுண்டாய் உயிரை வந்துபொருந்தியதேதுக் கென்னில்—தொல்லாய கன்மமெல்லாந்துய்ப்பித்துத்துடைத்தற்கும்-(மல பரிபக்குவத்தைப் பண்ணிச் சத்திபதிவித்துத் தீக்ஷைசெய்வித்து) சஞ் சிதகன்மமெல்லாம் புசிப்பித்துத் தள்ளுதற்கும்—பின்னில்லாமை முற்று வித்து நீக்கவும் - பிராரத்தம் புசிக்குமிடத்துத் தியானபூசைமுதலனுட்டா னங்களால் ஆகாமியஞ்சேடித்து நில்லாமற் கெடுத்துப் போக்கவும்—கூடி நின்றபொல்லாதவாணவத்தைப்போக்கவும்புகுந்த தன்றே - சிவத்துவ வி ரோதியாகிய மூலமலத்தை முடிக்கவு மடித்ததன்றே. எ-று. தனுகரணாதி கள் மலபரிபாகத்துக்குக் காரணமாகில் விஞ்ஞானகலர்க்குந் தனுகரணாதி யில்லாமையால் மலபரிபாகம் வரக்காரணமிலலே. சதுரியம் நீசாற்றியது; சகலராய் முன்னிருந்தபோது தனுகரணாதிகளால்மலத்தில்வைத்த வாசனை யால் மலபரிபாகம் வரும். (எக)

மலத்தின திலக்கணம் வாசிக்கின்றார்.

ஒன்றதாயனேகசத்தியுடையதாயுடனுயாதி
யன்றதாயான்மாவின்றனறிவொடுதொழிலேயார்த்து [ய்ந்
நின்றபோத்திருத்துவத்தைநிகழ்த்திச்செம்பினிற் களிம்பே
தென்றுமஞ்ஞானங்காட்டுமாணவமிசைந்துநின்றே.

(இ-ள்) ஒன்றதாய் - ஏகமாய் (அனேகமாய் அசேதனமுமாதி லநி த்தியமாய் மகாப்பிரளயத்தில் சகலான்மாக்களு முத்தராகவேண்டும்)— அனேகசத்தியுடையதாய - (மலமேகமாதலால் மலந்தானே மறைத்து நீங் குமென்னில், ஒருவன் முத்தனுங்காலத் தெல்லாரு முத்தராகவேண்டும் ஆ தலால் அவரவராமறைத்து முறைமையிற் பரிபக்குவம்வர நீங்கும்)அனந த சூமாத்தியமுள்ளதாய்—உடனுயாதியன்றதாய் - சகச நிதநியாய்— ஆன்மாவின்றனறிவொடு தொழிலேயார்த்துநின்று - (ஆவாரசத்தியினால்)

ஆத்மாவினது சருவஞ்ஞத்துவ சருவகர்த்திருத்துவரூப சிவத்துவத்தை மறைத்திருந்து—போந்திருத்துவத்தைநிகழ்த்தி - (அதோநியாமிகசத்தி யிஞலே) போக்கியாசத்தியைப்பண்ணி—செம்பினிற்களிம்பேய்ந்தென்று மஞ்ஞானங்காட்டி மாணவமிசைந்து நின்றே - செம்பினிற்களிம்பேய்ந்து-தாமிரத்திற் காளிகைபோல—ஆணவமிசைந்துநின்றே - மூலமலம் பொருந்திநின்றே—என்றும் - எக்காலமும்—அஞ்ஞானங்காட்டும் - அறியாமையைப் பண்ணும். எ-று. (அ0)

மாயாகாரிய விசேஷமே மலம் வேறில்லையென்னும் பாசுபதிமு தலோரையும் பிரகிருதிகாரிய விசேஷமேமலம் வேறில்லை யென்னுஞ் சாங்கியன் முதலோரையு மறுத்தணர்த்துகின ரூர்.

மலமெனவேறொன்றில்லைமாயாகாரியமதென்னின்
விலகுபிரிந்திச்சாஞானக்கிரியைகளெழுப்புமாயை
சிலயிடமலமிவற்றைவேறுமன்றதுவேறறி
யுலகுடலகரணமாகியுதித்திடுமுணர்ந்துகொள்ளே.

(இ-ள்) மலமெனவேறொன்றில்லை மாயாகாரியமதென்னில்—இலகு யிச்சிச்சாஞானக் கிரியைகளெழுப்புமாயை - சித்தரூபப் பிரகாசஞ்சிய வாதமாவின திச்சாஞானக்கிரியைகளே மாயை (காரியத்துவாரத்திஞலே) விளக்கும்—விலகிடமலமிவற்றை - (மாயாகாரிய கலாதி யில்லாதபோது பிரளயாகலாவத்தையில்) இச்சாஞானக்கிரியைகளே (சிற்றறிவுமில்லாதப டி) மறைக்கும்—வேறுமன்று - அந்தமல மறிவோடு வேற்றுமையின்றி முத்திபெரியந்தம் பிரிவின்றிநிற்கும்—அதுவேறறி - அந்த மாயாகாரியம் பிரிந தகூடும் பந்தமாகி—உலகுடல்கரணமாகியுதித்திடும் - புவனதூலதேக சூக்குமதேகமுதலிய பொருளா யுற்பவிக்கும்—உணர்ந்துகொளளே. எ-று.()

பின் திருட்டாந்த பூருவமாகச் சொல்லித் திரஸ்காரிக்கின்ருர்.

மாயையேயான்மஞானக்கிரியையைமறைத்துநிற்கு
நாயவபபரிதிகளேசுடர்மூடிமனமறைத்தாறபோலப்
போய்முகிலகலச்சோதிபுரிந்திடுமதுவேபோலக
காயமுமலஞானத்தொழிலிரகசமாமே.

(இ-ள்) தோற்றில் கிரியை மறைதலெனிப்பொருள். இது அருவ

சித்தாந்தம் வருமாறு.

பரிதியைமுகின்மறைப்பப்பாயொளிபதுங்கினுற்போ
லுருவுயிர்மறைக்கின்ஞானக்கிரியைகளொளிக்குமாகுய்
கருதிடுமிச்சாஞானக்காரியங்காயம்பெற்றூன்
மருவிடுமுயிர்க்குக்காயம்வர்திடாவிடின்மறைப்பே.

இ-ள். வெளிப்பொருள். (அசு)

மலம் அணுமானத்தா லறியப்படுமென்ப தறைகின்றூர்.

போதகாரியமறைத்துகின்றதுபுகன்மலங்கா
ணுதலாங்குணமுமாகவுயிரினுள்விரவலாலே
காதலாலவித்தைசிந்தத்தருங்கலையாதிமாயை
யாதலாலிரண்டுஞ்சோதியிருளெனவேறுமன்றே.

இ-ள். போதகாரியம் - அறிதற்றொழில். இச்சை கிரியையி லடங்கு மாபோலக் கிரியை ஞானத்திலடங்கும். மலந் திரவியமாலுலும் பிரிப்பி ன்றி நிற்றலால் குணமுமாக வுபசரிக்கப்படுமாதலா லஞ்ஞானந்தானே மலமென்னும் வேதாந்தியுஞ் சைவரிலொருவனுந் தள்ளபபட்டார்கள் மலந் திரவியம், இதுபிரதிஞ்ஞை; அனேக சத்திமத்தாதலால் இதுவேது. மலமுண்டென்பதற்குப் பிரமாணமுண்டோ? பிரத்தியகூ மல்லவாதலா லுண்டில்லையென்னுஞ் சங்கேக மிருந்தலா லாகமசித்தமாலுலு மனுமா னமே பிரமாணம். ஆத்மா மலவசிகிருத சத்திமான், இது பிரதிஞ்ஞை, சிவன்போற் சருவஞ்ஞ யிருந்தாலுங் கிஞ்சிஞ்ஞயக் காணபபடுதலா ல், இதுவேது. யாதொருவன் மலவசிகிருத சத்திமானல்ல அவன்கிஞ்சிஞ் ஞனன்று,சிவன்போல இதுதிருட்டாந்தம், இதுகேவலவெதிரேகி யனுமா னம். காதலாலவித்தைசிந்தத்தருங்கலையாதிமாயை-மாயையானது மல மொருபிரதேசத்திற் சிதறக் கலைமுதலிய தத்துவங்களைத் தோற்றுவிக் கும். மற்றது வெளிபபொருள். (அச)

சடமாகியமலஞ் சித்தாகியபுருடனுக்குக் குணமென்று சொல்லிற் புருடன் சடமாவனென்று செப்புகின் றூர்.

புருடன்றன்குணமவித்தையெனிற்சடமபுருடனுகுய்
குருடன்றன்கண்ணிற்சூற்றங்கண்ணின்றன்குணமோகூறுய்
மருடன்றன்குணமதாகிமலமசித்தாகிநிற்குந்
தெருடன்றன்குணமதாகிச்சித்தெனிற்குஞ்சீவன்.

இ-ள். அவித்தையென்பதஞ்ஞானம். கண்ணின்குற்றங் காணுமை (படலகுணம்) மருள் - அஞ்ஞானம். தெருள் - ஞானம். மற்றதுவெளிப் பொருள். (அரு)

கன்மமாயைமலங்கள் நிரனிறையினிற்கு முறைமையை
யுமப்படியே செய்யும் பிரதான கிருத்தியங்களையு
ஞ்சேஷபாசங்களையுஞ் செப்பிச் செப்புகின்றே
மென்று செப்புகின்றார்.

மும்மலநெல்லினுக்குமூலையொடுதவிடுமிப்போன்
மம்மர்செய்தனுவினுண்மைவடிவினைமறைத்துநின்று
பொய்மைசெய்போகம்பந்தம்போத்திருத்துவங்கள்பண்ணு
மிம்மலமூன்றினுமேமிருமலமிசைப்பனின்னும்

இ-ள். மம்மர் - மயக்கம். உண்மைவடிவு - சருவஞ்ஞத்துவ சருவகர் த்திருத்துவரூப சிவத்துவம். மாயையுங் கன்மமுங் கிஞ்சித்ஞத்துவ கிஞ் சிற்கர்த்திருத்துவ பிரதமாஞலு நிரதிசய சருவஞ்ஞத்துவ சருவகர்த்திரு த்துவ விரோதியென்பது சாற்றப்பட்டது. (கன்மகாரியம்) போகம்-போ கவேதனவிடய சுகதுக்கமோகம். (மாயாகாரியம்) பந்தம் - கலாதி. (மல காரியம்) போத்திருத்துவம் - போகக்கிரியா கர்த்திருத்துவம். போகா சத்தி கர்த்திருத்துவமுமாம். மற்றதுவெளிப்பொருள். (அசு)

இருமல முண்டென்ப திசைக்கின்றார்.

மாயையின்காரியத்தைமாயேயமலமதென்று
மேயுமும்மலங்கடத்தற்தொழிலினையியற்றவேவுந்
தூயவன்றனதோர்சத்திதிரோதானகரியதென்று
மாய்வரிம்மலங்களோந்துமணுக்களையணைந்துநிற்கும்.[1]

இ-ள். மாயையின்காரியத்தை—மாயாகாரியக்கூட்டத்தை - மாயே யமலமதென்றும் - மாயேயமென்று பேர்பெற்ற மலமொன்றென்றும்— ஏயுமும்மலங்கடத்தற்தொழிலினையியற்றவேவுந்தூயவன்றனதோர் சத்திதி ரோதான கரியதென்றும்-பாசங்களைத் தத்தங் கிருத்தியங்களிற் செலுத் துந் திரோதானசத்தியென்று பேர்பெற்ற சிவனதுசத்தியாகிய மலமொ ன்றென்றும்—ஆய்வர்-விசாரிப்பார்கள்(மாயாகாரியக்கூட்டத்தை மாயை யினடக்கி மகாமாயையைக்கூட்டிப் பஞ்சமலமென்னும் வெகுவசனமு ண்டதறிக)—இம்மலங்களோந்தும்—அணுக்களை-ஆத்மாக்களை — அணைந்து நிற்கும்-பொருந்தியிருக்கும். எ-று. (அஎ)

இப்படியாற்மாப் பஞ்சமலத்தோடும் பொருந்திக் சங்சார சக்கிரத்திற் பிரமிப்பனென்று பேசுகின்றார்.

மலமாயைகன்மமாயேயந்திரோதாயிமன்னிச்
சலமாரும்பிறப்பிறப்பிற்றங்கியித்தனைகீழ்மேலு
நிலமாருங்கொள்ளிவட்டங்கறங்கெனநிமிடத்தின்க
ணலமாருமிறைவனுணையாலுயிர்கடக்குமன்றே.

இ-ள். வெளிப்பொருள். (அ௮)

சூக்குமதேகத்திற் தூலதேக முண்டாமென்று சொல்லுஞ் சைவ பவுராணிக மதானுசாரியாசாரியர்மதம் பூருவபக்ஷமாக 'மறுத்துச் சாதாரண புவனவிகாரத்திற் சூக்குமதேக நிமித்தமாக வுண்டாந் தூலதேக மெனுஞ் சுத்தசைவ சித்தாந்தியாசாரியர்மத முததரபக்ஷமாக வுதாகரிக்கின்றார்.

அண்டசஞ்சுவேதசங்களுற்பிச்சஞ்சராயுசத்தோ
டெண்டருநாலெண்பத்துநான்கூறாயிரத்தா
லுண்டுபல்யோனியெலலாமொழித்துமானிடத்துதித்தல்
கண்டிடிற்கடலேக்கையானீந்தினன்காரியங்காண

இ-ள். அண்டசம் - முட்டையிலுண்டாகும் பக்ஷிமுதலியன. சுவேதசம்—வேர்வையிலுண்டாகு மின்மினிமுதலியன. உற்பிச்சம் - விரைகளே மேற்பிளத்துண்டாகும் மரமுதலியன. சராயுசம் - கருப்பையிலுண்டாகும் மனுடர்முதலியன. நீந்தினன்காரியங்காண்-கடந்தவன் செய்தி போல. மற்றதுவெளிப்பொருள். (அ௯)

மனுடர் சன்மிக்கும் பூமியில் வந்துபிறந்தாலும் வேதாகம மார்க்கமில்லாத தேசத்துப் பிறவா துள்ளதேசத்துற்பவிப்பது மிருந்தவறம் அதிலுந் தாழ்ந்தசாதியைவிட்டு வேதாதி மார்க்கிகளாய்ப் பிறந்து பாஷண்ட மதங்களிற் பரிசயம்பண்ணுத புண்ணியம் பண்ணுதலரிதென்று பாஷிக்கின்றார்.

நரர்பயிறேசந்தன்னினுன்மறைபயிலாநாட்டில்
விரவுதலொழிந்துதோன்றன்மிக்கபுண்ணியந்தானுருந்
தையினிற்கீழைவிட்டுத்தவஞ்செய்சாதியினில்வந்து
பரசமயங்கட்செல்லாப்பாக்கியம்பண்ணுணுதே.

இ-ள். வெளிப்பொருள். (கூ0)

வேதவிரோத மதங்கள் தப்பி வேதாகிக் கருகமாய் வந்து
பிறந்தாலும் வேதசார சைவசமயஞ் சாருதலாற்
றென்று சாற்றிச் சார்ந்தவர்கட்குட் சிவசமாதி ஞா
னபூசையினாலே சிவனேப்பூசிப்போர் சதுர்த்த சிவ
தீக்ஷாவான்களென்று சாற்றுகின்றார்.

வாழ்வெனுமையல்விட்டுவறுமையாஞ்சிறுமைதப்பித்
தாழ்வெனுந்தன்மையோடுஞ்சைவமாஞ்சமயஞ்சாரு
மூழ்பெறலரிதுசாலவுயர்சிவஞானத்தாலே
போழிளமதியினானேப்போற்றுவாரருள்பெற்றாரே.

இ-ள். வெளிப்பொருள். (கூக)

மனுடசன்மமெடுத்துஞ் சிவபூசை பண்ணுதிருந்தால்நிகர்
பலமென்பது நிகழ்த்துகின்றார்

மானிடப்பிறவிதானும்வருத்ததுமனவாக்காயத்
தானிடத்தைதருமாடுமரண்பணிக்காகவன்றே
வானிடத்தவருமண்மேல்வந்தான்றனையர்ச்சிப்ப
ரானெடுத்துழலுமுமொன்றையுமுணராரந்தோ.

இ-ள். வெளிப்பொருள். (கூஉ)

சரீர நிலையல்லவென்பது சாற்றுகின்றார்.

கருவினிலழிவதாயுங்கழிந்திடாதழிவதாயும
பரிணமித்தழிவதாயும்பாலனுயழிவதாயுந
தருணனுயழிவதாயுந்தானதைத்தழிவதாயு
முருவவேயழிவேயானலுள்ளபோதேபாருய்ய.

இ-ள். கழிந்திடாதழிவதாயும்-சன்மிக்கு மவதரத்திற் செத்துப் பிற க்கின்றதாயும். உருவவேயழிவேயானல்-சரீரமப்படிச் சாவதானல்—உள் ளபோதேபாருய்ய-உள்ளபோதே - சரீரமிருக்கும் காலத்திலேதானே— உய்யப்பார்-பிழைக்கும் வகைதேடு. மற்றது வெளிப்பொருள். (கஙு)

மேலிதுவுமது.

ஒருபுலனுகரும்போதங்கொன்றிலேயொன்றின்பாலும்
வருபயன்மாறிமாறிவந்திடுமெல்லாமாயு
மொருபொழுதுணரிலுண்டாயில்லதிவ்வல்லல்வாழ்க்கை
மருள்கனவதுவும்போலமாயும்பின்மாயமன்றே.

இ-ள். ஒருபுலனுகரும்போதங்கோன்றிலே - (சத்தப் பரிச ரூப ரச கந்தங்களுக்குள்) ஓரிந்திரியத்தினு லொரு விஷயத்தைப் புசிக்குங் கால லத்து வேறொருவிஷயம் வேறொரு விந்திரியத்தினுற் புசிக்கப்படாது— ஒன்றின்பாலும்வருபயன்-ஓரிந்திரியத்தி னிடமாகச் சத்தாதி விஷயங்களி லொன்றைப் பொருந்து மிடத்து வீருப்பு வெறுப்புக்களினுல் வருஞ் சுக துக்க மோகங்கள்—மாறிமாறிவந்திடும்—(கேவலத்தில்) எல்லாமாயும்— இவ்வல்லல்வாழ்க்கை - இந்தச்சங்சாரம்—உணரில் - விசாரிக்கில்— ஒரு பொழுதுண்டாம் ஒருபொழுதில்லது — மருள்கனவதுவும்போல - உரு வெளி சொப்பனங்கள் போல - மாயும்—கெடும்—மாயமன்றே - அசத்தி யம்போலத் தோற்றி யநித்தியமாம். எ-று. (கூச)

இராசபோக மஞ்ஞான காரணமென் றறைகின்றூர்.

அரிசனம்பூசிமாலையணிந்துபொன்னுடைசாத்திப்
பரிசனம்பின்புசெல்லப்பாரகர்பரிக்கக்கொட்ட
வருசின்னமூதத்தொங்கல்வந்திடவுணர்வுமாண்டு
பெரியவர்பேச்சுமின்றிக்கிடத்தலாற்பிணத்தையோப்பர்.

இ-ள். வெளிப பொருள். (கூடு)

இராசசேவகர்போகமு மிம்மரியாதியென் றிசைக்கின் றூர்.

பிணத்தினேயொத்துவாழ்வோர்பின்னடைப்பிணங்கள்போல
வுணக்கியேயுழல்வீருங்களுடலுயிருணர்வுமெல்லாங்
கணத்திடைத்தோற்றிமாயுங்காயமென்றறிந்தொருக்கால்
வணக்குறீரரனேயென்றும்வானவர்வணங்கவைப்பன்.

இ-ள். பிணத்தினேயொத்துவாழ்வோர்பின் - முன்சொன்ன பிணத் துக்கொத்த பிரபுக்கள்பிறகே—கடைப்பிணங்கள்போல - செல்லும் பிரே தங்களொப்ப—உடல்-தூலசரீரம்— உயிருணர்வு-உயிர்க்கருவிக் கிருப்பா கிய கண்செவி நாக்கு மூக்கு முதலிய தானம்—எல்லாம்-இவைகளெல் லாம்—உணக்கியேயுழல்வீர்-வாட்டியேதிரிவீர் (இதுகொண் டொருபய னு மில்லை)—கணத்திடைத்தோற்றிமாயுங் காயமென்றறிந்தொருக்கால்- நிமிடத்தி லுண்டாய் மடியுஞ் சரீரமென்று சிந்தித் தொருபோதாகிலும்— வணக்குறீரரனே - சிவனே வந்திக்கக் கடவீர்—(சிவலோகங் கொடுத்து) என்றும் வானவர்வணங்கவைப்பன் - எக்காலத்துந் தேவர்கள் வந்திக்கத் தாபிப்பன். எ-று. (கூசு)

இரண்டாஞ்சூத்திரம்
முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஉஅ.

மூன்றாஞ் சூத்திரம்.

பதிபதார்த்தத்தை யிரண்டு சூத்திரத்தாற் பரீக்ஷித்துப் பசுபதார்த்தத்தைப் பரீக்ஷிக்கின்றார்.

உயிரொனப்படுவதிந்தவுடலின்வேறுளதாயுற்றுச்
செயிருறுமிச்சாஞானச்செய்திகளுடையதாகிப்
பயில்வுறுமின்பதுன்பப்பலன்களநுகரும்பார்க்கிற்
றுயிலொடுமைந்தவத்தைப்படுமுண்மைதுரியாதீதம்.

இ-ள். (உண்டெனும்பொருளே யில்லதென்பது மா மாதலா லுட லின்வேறுயிர் நீ யில்லையென்று சொல்லுதலால்) உயிரொனப்படுவதிந்தவ டலின்வேறுளதாய் - ஆன்மாவென்னும் பொருள் இந்தச்சரீரத்துக் கன் னியமா யுண்டாய்—(அதெப்படி சொன்னீர் ? முக்காலத்து மில்லாத முயற்கொம் பில்லையென்று தள்ளப்பட்ட தில்லையோ? சத்திய நீசாற்றி யது. முயலினது கொம்பு முயற் கொம்பென்று ஆரும் வேற்றுமைத் தொ கைபண்ணி யில்லையென்று தள்ளியதல்ல. முயலிற் கோமுதலானவற் றிற் காணப்பட்ட கொம்பில்லை யென்று தள்ளியது. ஆதலா வில்லையெ ன்று சொல்லுதலால் அப்படி யாத்மா வுண்டாய்) உற்று - (உடலோடு சையோக சமவாய சம்பந்தங்கள் சாற்றப்படா தாகையால் போக்கிய போத்திருத்துவ சம்பந்தியாய்) பொருந்தி — செயிருறுமிச்சாஞானச்செ ய்திகளுடையதாகி - மலத்தினன் மலினமாகப் பண்ணப்பட்ட விச்சா ஞானக் கிரியை யென்கின்ற முத்தொழிலுடையதாகி—பயில்வுறுமின்ப துன்பப்பலன்களநுகரும்-பழகிய சுகதுக்கங்களையு மனுபவிக்கும்—பார்க் கில் - விசாரிக்கில்—துயிலொடுமைந்தவத்தைப்படும் - நித்திரை பண்ணு மிடத்து (இனிமேல் வித்தரித்துச் சொல்லப்படும்) ஐந்தவத்தைகளைப் பொருந்தும்—உண்மைதுரியாதீதம். எ-று. உயிரினதிலக்கணம் பசுத்து வமுற்றறியாமை, சிவத்துவமுற்றறிகை. (க)

பரமதசங்கையு முத்தரமுமாகப் படிக்கின்றார்.

உடலின்வேறுயிரோனிந்தவுடலன்றேவுணர்வதென்னி
னுடல்சவமானபோதுவுடலினுக்குணர்வுண்டாகு
முடலினுள்வாயுப்போலுணர்ச்சியின்றுடலுக்கென்னி*
லுடலினுள்வாயுப்போகாதுறக்கத்துமுணர்வதின்றே.

இ-ள். வெளிப்பொருள். (உ)

திருசியமா யிருக்கின்ற சரீர மாம்மாவென்பதடாது திருக்குரூபமா யிருக்கின்ற விந்திரியங்களே யான் மாவென்று லோகாயத விசேடனுயிருக்கின்றவொ ருவன் சொல்ல மறுத்துணர்த்துகின்றார்.

அறிவதைம்பொறியேயென்னிலுறக்கத்தினறியாவாகு மறிவதுமொன்றொன்றுகவொன்றொன்றுவறியுமென்னி லறிவுகளொன்றையொன்றங்கறிந்திடாவைந்தையுங்கொண் டறிவதொன்றுண்டதான்மாவைம்பொறியறிந்திடாவே.

இ-ள். அறிவதைம்பொறியேயென்னில் - ஆன்மாவென்றுநீர்சொல் லிய பொருளினறிதற்றொழிலே யிந்திரியங்கள்தானே பண்ணுவதுபோ லெங்களுக்குத் தோற்றுதலா லிந்திரியங்கள்தானே யான்மாவென்று நீ சொல்லில்—உறக்கத்தினறியாவாகும் - நித்திரையி லிந்திரியங்க ளறியா திருக்கும் (அதனு லிந்திரியங்க ளான்மாவன்று. இந்திரியத்துக்குவேறுய் நீர்சொல்லு மாணமா நித்திரையி லறியாதிருப்பானேன்? மலதோஷத்தா லென்பீராகில், எங்கள் இந்திரியவான்மாவுந் தாமதருண தோஷத்தாலெ ன்று சமானமென்று நீசொல்லில்)—அறிவதுமொன்றொன்றுக - (பஞ் சேந்திரியங்களான்மாவென்றாலும்)அவைக ளறிவதோரிந்திரியஞ் சத்தாதி விஷயத்தி லொருவிஷயமாக (அத்தச்சமயத்தி லந்தவிஷயத்தினுலு மான்மாவல்லாதேபோம்) — ஒன்றொன்று வறியுமென்னில் - (வரகோட்டி நியாயத்தால்) ஓரிந்திரிய மொருவிஷயமாக வறியுமதனு லேந்துங்கூடியா ன்மாவென்னில், (ஒரூரி லேந்தூரவர்கள்போல வொருகாலத்து மாறுபடுமதனுலும்)—ஒன்றையொன்றங்கறிந்திடாவாதலாலும்—ஐந்தையுங் கருவி யாகக்கொண் டறிவதோ ரறிவுண்டு, அந்தவறிவான்மா—ஐம்பொறியறிந் திடாவே - பஞ்சேந்திரியங்கள் கருவியாதலாற் கர்த்தாவாகத்தானே யறி யா. எ—று. (கூ)

கடசடகநியாயத்தாற் சரீரத்துக்குட் பிராணவாயுவே யான்மாவென்னுங் கவுளகன்மயோகியை மறுத்து ணர்த்துகின்றார்.

அறிந்திடும்பிராணவாயுவடங்குதல்விடுதல்செய்தா லறிந்திடாதுடலுறக்கத்தறிவினமைகாணமின்மை யறிந்திடுமுதலியாகிலதுநிற்கக்காரணமேபோகா வறிந்திடும்பிராணன்றன்னையடக்கியும்விட்டுமான்மா.

இ-ள். பிராணவாயு—அடங்குதல் விடுதல்செய்தால்—(ஆல் அசை) உச்சுவாச நிச்சுவாசங்களைப்பண்ணி—யறிந்திடும் (அதனாலதுவேயான்மா) அறிந்திடாதிடவுறக்கத்து - சரீரத்துபாதியுற்ற நித்திரையில் (சுருங்கிவிரிந்து தோற்றும் பிராணவாயு) உணராது—அறிவின்மைகரணமின்மை - இந்திரியவொழிவினு லறியாதென்று நீசொல்லில்—அறிந்திடுமுதலியாகி லதுநிற்கக்கரணம்போகா - பிராணவாயு வறிதற்கர்த்தாவாகி லதுவியத்தமாய்நிற்கக் கருவிபோகாது—அதற்கன்னியமாகுமான்மா—பிராணன்றன்னை - பிராணவாயுவை—அடக்கியும்விட்டும்-சுருக்கியும் விரித்தும்(தோற்றுவித்து)—அறிந்திடும் - புலப்படுத்தும் (அதனாற் புலமாயறியப்படும் பொருளறியும்பொருளாகாது.) எ-று. (ச)

மூன்றாஞ் சூத்திரம்.

முற்றும்.

ஆ. திருவிருத்தம் - கஉஉ.

நான்காஞ் சூத்திரம்.

சித்தாங்க மனசுதானே யான்மாவென்னு முலோகாயதர்க்குள்ளொருவனையும், அகங்காராத்மவாதியாகும் வைசேடிகனையும், புத்தியாத்மவாதியாகுகையாயிகனையும், புத்திவிருத்தியாத்மவாதியாகுமபவுத்தனையு மறுத்துணர்த்துகின்றார்.

உணர்வனகரணமென்னிலொன்றையொன்றுணராவெவ்வேற்றினைதருஞ்செயல்களுன்குமறிந்தவையடக்கியாக்கிப்
புணருமுட்காணமாக்கிப்புறக்கருவியினும்போக்கி
யிணைதருமிவற்றின்வேறுயானெனதென்பதான்மா.

(இ-ள்) உணர்வனகரணமென்னில்-அறிதற்றொழிலைப் பண்ணுவது அந்தக்கரண மென்கின்றுயானுல்—ஒன்றையொன்றுணரா - ஒர்ந்தக்கரணத்தை யோர்ந்தக்கரண மறிந்தொன்றோடொன்று கூடியோர்ந்தக்கரணத்தின்றொழிலை யோர்ந்தக்கரணம் பண்ணுது—வெவ்வேறினைதருஞ் செயல்களுன்கும் - சிந்தித்துவிகற்பித்தல் சங்கற்பித்தல் அபிமானித்தல் நிச்சயித்தலென்கின்ற நான்குவியாபாரங்களையும் (கர்த்தாவாகிய வான்மாவேவச்சிற்சத்தியாகிய கரணத்தோடும் பொருந்தித் தனித்தனி கரணமாய்ச் சம்பந்திக்குங் கரணங் கர்த்தாவாகாது)—அறிந்தவையடக்கியாக்கிப்

புணருமுட்கரணமருக்கிப்புறக்கருவியினும்போக்கியினுதருமிவற்றின் வே
ழுயானெனதென்பதான்மா-யாதொன்று அந்தவந்தக்கரணங்களே யறிந்து
சுருக்கி விரித்துப் பொருந்து முட்கருவியாகப் பண்ணிச் சுகதுக்கங்களே
யுள்ளனுபவித்துச் சுகதுக்கங்கள் மேன்மேல்வரும்படி வெகிரிந்திரியங்க
ளிஷ்விட்டு மாலே சந்தனம் வனிதைகளோடு பொருந்தப்பண்ணு மிந்த
வந்தக்கரணங்களுக் கன்னியமாய்த் தம்பொருளறிவினுல் நானென்றும்,
பிறபொருளறிவினுல் எனதுசித்த மெனதுபனம் எனது அகங்கார மென
தபுத்தியென்பது; அதுவேயுயிர். எ-று. (க)

பாசஞானத்தை நீங்கினின்றவிடம் பசுஞானமென்றும்
பசுஞானத்தை நீங்கினின்றவிடம் பதிஞானமென்
றும் பகர்கின்ருர்.

கருவியாமனமும்புத்தியாங்காரஞ்சித்தநான்கு
மருவியான்மாவேயென்னவருந்தீபமெனத்தெரிந்தங்
கொருவியான்மாவினுண்மையுணர்ந்தவர்தமையுணர்ந்தோர்
தருமிதுபசுஞானம்பின்சிவஞானந்தனக்குமேலாம.

இ-ள். கருவியாமனமும்புத்தியாங்காரஞ்சித்தநான்கும்—(அவற்றிற்
குமந்தக்கரணங்களாய் நிற்குங்கலாதிகளும்) மருவி - (ஆன்மாவினேடு)
பொருந்தி—(பிரிக்கப்படாது) ஆன்மாவேயென்னவரும் - ஆத்மாப்போ
லத் தோற்றும் (அவைகளே)—தீபமெனத்தெரிந்து - சுத்தவித்தையினுல்
விவேகித்து வியஞ்சகமாகக்கண்டு—ஒருவி-நீங்கினதுபோலப்பாவித்து—
ஆன்மாவினுண்மையுணர்ந்தவர் தமையுணர்ந்தோர் - உயிரினது சின்மாத்
திர லக்கணத்தை யறிந்தவர்கள் சொச்சொரூபத்தை யறிந்தவர்கள்—
தருமிது பசுஞானம்பின்சிவஞானந்தனக்குமேலாம்-ஆத்மரூபத்தையறியு
மிஞ்ஞானம் பசுஞானம். (அஃதெப்படிசொன்னீர்? இருதயத்திருக்குகாத
த்திற் பிரகாசித்த சுத்தவித்தையோடு தொட்டுநின்று, மணியானது பிர
பையினுற்போல, வியாபாரத் துவாரத்தால், மேலெழுந்து சுத்தவியாய
மாய்ப்போய்ப் பதிஞானங்கொடுத்து நீங்குதலாற் பாசஞானமென்கின்ற
மனசுமுதலிய பாசஞானமும் அதனுல் விளங்கப்பட்ட பசுஞானமு மொ
ருபிரகாரத்தாற் பதிஞானமென்று சொல்லப்படுமாதலானு மனசுகூடிய
சமனேநீங்கிய விடத்துயிர் ஆத்மாவென்று சொல்லப்படுஞ் சுத்தவித்தைக்
குக் கீழ் மலநீங்கலாற் பசுவென்று சொல்லப்படாதாகையாற் பாசஞா
னம் விளக்குதலாற், பசுவை விஷயீகரித்தலாற், பசுஞானமென் றிருவி
தத்தினுலுஞ் சமனுதீதாத்மஞானம் பசுஞானமென்று சொல்லப்படாது.
சத்தியீசாற்றியது மாயைக்குமேற் சுத்தவித்தைக்குக்கீழ் மலமத்ரூலு
மலவாசனை தாக்கிநிற்குஞ் சிற்சத்தியினுல் அவ்வாசனைதாக்கிய வான்மா

வை யறியுமறிவு கேவலமாத்மஞானமாலுலு மொருபிரகாரம் பசுஞான மென்றுஞ் சொல்லப்படும்.)—சிவஞானந்தனக்குமேலாம் . சிவசத்தியால் வினக்கப்பட்டுச் சிவசத்திரூபமா யிருக்கின்ற வாத்மசிற்சத்தியி லாவிர்ப்ப வித்தலாலுஞ் சிவத்துவத்தோடு கூடிச் சின்மாத்திராத்மாவைச் சிவஞகப் பண்ணி யவனைச் சிவனேகூடச் சிவஞகவறியு மறிவாதலாலும் பதிஞா னமென்னும், சிவஞான முன்சொல்லிய வாத்மஞானமூலத்து முணர்த் தபரிவிரியும். எ-று. (உ)

சுத்ததத்துவங்க ளந்தக்கரணங்களையும் புருடனையும்
பிரேரிக்குமுறைமை யறைகின்றார்.

அவ்வுடனுவ்வுமவ்வுமனம்புத்தியாங்காரங்கள்
செவ்வியவிந்துநாதஞ்சித்தமோடுள்ளமாகு
மொவ்வனுமெழுத்தாமைந்துமுணர்வுதித்தொடுங்குமாறு
பவ்வமுந்திரையும்போலும்பார்க்கிலிம்பண்புந்தோன்றும.

இ-ள். அவ்வுடனுவ்வுமவ்வு மனம்புத்தியாங்காரங்கள்-பஞ்சப்பிரண வகலேக்குள் வைகரிவாக்குக்கு மூலமாகும் அகாரமாகிய சுத்தவித்தை மன சைச்செலுத்தும்;மத்திமைவாக்குக்குமூலமாகு முகாரமாகியவிசுரம் புத்தி யைச் செலுத்தும்; பைசந்திவாக்குக்கு மூலமாகு மகாரமாகிய சாதாக்கிய மகங்காரத்தைச் செலுத்தும்—செவ்வியவிந்துநாதஞ் சித்தமோடுள்ளமாகு ம் - சூக்குமைவாக்குக்கு மூலமாகும் விந்துவாகிய சத்தி சித்தத்தைச் செ லுத்தும்;அதிசூக்குமைவாக்குக்கு மூலமாகு நாதமாகியசிவம். புருடனைச் செலுத்தும்—ஒவ்வெனுமெழுத்தானமைந்தும்-(பிரித்துப்பார்க்குமிடத்து)ஐ ந்தாகும் பிரணவகலேகள் கூட்டியுச்சரித்தால் ஓங்காரமாம்—உணர்வுதித் தொடுங்குமாறுபவ்வமுந்திரையும்போலும்-பிரணவத்தி லகாரமுள்வைத் திசேசகமா யிடையிலெழுந்த வுச்சுவாசரூப மகாசகல மத்தியத்த நித்த சகலமுண்டாய்ப் பிரணவத்தி லுகாரமுன்வைத்துப் பூரகமாய்ப் பிங்கலே யிற் புகுந்துநிச்சுவாசரூப மகாசகலமத்தியத்த நித்தியகேவலமாமுறைமை சமுத்திரமுந் தரங்கமு மொப்பாகும்—பார்க்கில் - (யோகமார்க்கத்திலு லந்தச்சகல கேவல மிரண்டையுந் தடுத்துச் சுழுமுனைதிறந்து கும்பித்து) நோக்கில் — இம்பண்புந்தோன்றும் - மகாரவொற்றுமயமாஞ் சுத்தமுண் டாம்.எ-று.

சுத்ததத்துவங்கள் மனமுதலியவற்றைக் கலாதிதத்துவாரத்தினூலே செலுத்துமென்பது காண்பிப்பாம்:—இச்சாசத்திகாரியும் ஈசுரதத்துவம், ஞானசத்திகாரியஞ் சுத்தவித்தியாதத்துவம், கிரியாசத்திகாரியஞ் சத்தித த்துவம். ஈசுரதத்துவ மிராகதத்துவத்தைச் செலுத்தும்; சுத்தவித்தியா தத்துவம் வித்தியாதத்துவத்தைச் செலுத்தும்; சத்திதத்துவம் கலாதத்து

வத்தைச் செலுத்தும, இராகதத்துவம் மனத்தத்துவத்தைச் செலுத்தும்; வித்தியாதத்துவம் புத்திதத்துவததைச் செலுத்தும்; கலாதத்துவம் மகங்காரதத்துவத்தைச் செலுத்தும்; மனம் புத்தி யகங்காரங்களாற் புருஷதத்துவ வியாபார முண்டாம்.

காலதததையு நியதியையுஞ் சத்திதத்துவஞ் செலுததும். வித்தையைச் சுத்தவித்தை செலுத்தும்; ராகத்தை ஈசுரதத்துவஞ் செலுத்தும்; குணதத்துவத்தைச் சிவதத்துவஞ் செலுத்தும்; புருஷதத்துவத்தைச் சாதாக்கியதத்துவஞ் செலுத்துமென்றுஞ் சிலவிடத்தில் வசனம். (ஙு)

சுத்ததத்துவமைந்துஞ் சடமாதலாற் சுவதந்திரமாய்ச்
சேட்டியாதாகையாற் றேவதாதிட்டானத்தினுலே
சேட்டிக்குமென்பது தரிசிப்பிக்கின்றூர.

அயனரியரனுமீசர்சதாசிவமதிதெய்வங்க
ளுயவருமவ்வோடுவ்வுமவ்விந்து நாதங்கட்குப்
பயனுறுமஞ்சிலான்மாப்பரவிடிலசித்தாமபார்க்கிற
சயமுறுவளியிரண்டுந்தவிர்த்துறிற்றூனுந்தோன்றும்.

இ-ள். உயவருமவ்வோடுவ்வு மவ்விந்துநாதங்கட்கு—அதிதெய்வங்களயனரியரனுமீசர்சதாசிவம்— பயனுறுமஞ்சிலான்மாப் பரவிடிலசித்தாம் பார்த்தில் - இச்சா ஞானக் கிரியாபலங்களே மனுதித்துவாரத்தினுலே விளக்கும் அகாரமுதலிய வைந்தி லாத்மாப்பொருந்திக் காணுமிடத்துச் சடமாம்—சயமுறுவளியிரண்டுந் தவித்துறிற்றூனுந் தோன்றும் - இடைபிங்கலையி லெழுந்தொடுங்கு மகாரசரீர ரேசக மூகாரசரீர பூரக மிவையிரண்டினையு நிறுத்தில், வாயுவைவெல்லுங் கும்பகசரீர வசபாமந்திர மதத்தியபீசவிந்து விழுங்கிய மகாரந்தோற்றும்; அப்போது சருவபாசமுங் கழன்று சிவத்தோடுசேர்ந்து சிவத்துவத்துக் கருகமாகிய சின்மாத்திராத்மாவாய்ச் சேடித்து, ஆத்மாச் சுவசங்வேதனப் பிரத்தியகூத்திற் பிரதிபாசிப்பன். எ-று. (ஙா)

மேற் பருசகந்தக் கொத்துக்கூட்டமே யாத்மா வென்னும் புவுததன்மதம பராகரிக்கின்றூர.

ஆற்மாவின்வடிவுதானுமனேகார்த்தகூட்டமென்னிற்
பார்ப்பார்கட்காண்மாவின்றூய்ப்பலபொருளுண்மையாருஞ
சோப்பாயபலவேயுண்மையென்றிடிற்சென்றிவற்றை [தாமே
போர்ப்பான்வேறுணர்வோர்க்கெலலா முணாபொருள்வேற

இ-ள். ஆம்மாவின்வடிவுதானுமனேகார்த்தகூட்டமென்னில் - ஞானசந்ததியாகிய விஞ்ஞானகந்தம், வாசனைசமூகமாகிய சம்ஸ்காரகந்தம், சுகபுத்தி துக்கபுத்தி யுபேக்ஷாபுத்திகளாகிய வேதனைகந்தம், சத்தசமூகமாகிய சங்ஞாகந்தம், மூர்த்தபூதசமூகமாகிய ரூபகந்தம், இவ்வைந்து கொத்திலு மக்கொத்துக் கபின்னமாய்வரும் ஞானசமுதாய புத்தியே யாத்மாவென்னில்—பார்ப்பார்கட்காண்மாவின்முய்ப் பலபொருளுண்மையாகும்-பஞ்சகந்த விவேகம்பண்ணி யாத்மதரிசனம் பண்ணும்பேர்க்கு உயிரொன்ப தொன்றின்றிப் பஞ்சகந்த பதார்த்தமாத்திரமே யுள்ளபொருளாகும்(சமுதாயமென்பதொருவத்துச் சமுதாயியைவிட் டொன்றில்லாத படியிலே)—சேர்ப்பாயபலவேயுண்மையென்றிடில் - (கூட்டமென் றொன்றில்லாத படியிலே) கூடிய பலபொருளே யாத்மாவென்னில்—சென்றிவற்றையோர்ப்பான்வேறுணர்வோர்க் கெல்லாமுணர்பொருள்வேறதாமே-அஞ்சும வாத்ம விவேகதரிசனம்பண்ணும் பேராகிய சகலர்க்கும் பஞ்சகந்தத்தைப் பொருந்திப் பார்ப்பவனுன்மா பின்னப்பொருள், பார்க்கப்படும் பஞ்சகந்தமும் பின்னப்பொருளேயாம். எ—று. (ந)

சிவாத்துவை திமதந் தரிசிப்பித்துத் திரஸ்கரிக்கின்றார்.

அறிவிச்சைசெயல்களெல்லாமடைந்தனல்வெம்மையும்போற்
குறியுற்றங்கனேகானேககுணகுணிபாவமாகி
நெறியுற்றுநிற்குமென்னினிகழ்புலன்கரணமெல்லாஞ்
செறிவுற்றங்கறிவுகொள்ளவேண்டுமோசீவனுர்க்கே.

இ-ள். அறிவிச்சைசெயல்களெல்லாமடைந்தனல்வெம்மையும்போல் - அக்கினி யேகமாயிருந் தனேகமா யங்கங் குட்டணகுணத்தைப் பொருந்தி நின்றாற்போலச் சிவமொன்றே யனேகமாய் ஞானேச்சாக்கிரியைகளே அங்கங்குப்பொருந்தி—குறியுற்று-அடையாளமுடைத்தாய்—அனேகானேககுணகுணிபாவமாகி-அனந்தகுணத்தன்மையனந்த குணித்தன்மையாகி—நெறியுற்றுநிற்குமென்னில்-விடயமார்க்கத்தைப் பொருந்தியிருக்குமென்னில்—சீவனுர்க்கே - பேரறிவாகுஞ் சிவமாகு முயிர்க்குத்தானே—நிகழ்புலன்கரணமெல்லாஞ் செறிவுற்றங்கறிவுகொள்ளவேண்டுமோ-விளங்காநிற்கும் விடயேந்திரியங்கள் முதலியவற்றைப் பொருந்திச் சிற்றறிவைச் செறியவேண்டுமோ. எ—று. (சு)

சாங்கியன்மதந் தழுவித் தள்ளுகின்றார்.

குணங்களேயின்றியொன்றுங்குறியுடைத்தான்மாவென்னி
லிணங்கிடாவிச்சாஞானக்கிரியைகளிவையுடற்கட்

பிணங்கிடுஞ்சன்னிதிக்கணெனிற்பிணத்துறக்கத்தின்ரு
முணங்கிடுங்கரணமென்னிற்சன்னிதியொழிந்ததன்றே.

இ-ள். குணங்களையின்றியொன்ரும்குறியுடைத்தான்மாவென்னில்—ஞானசத்தி யிச்சாசத்தி கிரியாசத்திகளாகிய குணங்களைத் தவிர ஏகதின் மாத்திர மூயிரொன்று நீசொல்லில் — இணங்கிடாவிச்சாஞானக்கிரியைகள்-சுவசங்வேதனப் பிரத்தியக்ஷஞித்தமாகிய விச்சாஞானக்கிரியாகாரியங்கள் சத்திகாரணமன்றிப் பொருந்தா—இவையுடற்கட்பிணங்கிடுஞ்சன்னிதிக்கணெனில் - இந்த ஞானேச்சாப் பிரயத்தினங்கள் ஆத்மாவினது சன்னிதானமாத்திரத்திலே— உடற்கண் - சூக்குமதேகமாயிருக்கும் புத்தி மனோகங்காரங்கள் பொருந்திய தூலதேகத்தி லுண்டாமெனில்—பிணத்துறக்கத்தின்ரும் - சவமானகாலத்தும், நித்திராபண்ணுங் காலத்துஞ் சரீரமிருந்தபடியிருக்கவும் ஞானமுதலியகாரியங் காணுது—உணங்கிடுங்கரணமென்னில்-மனோபுத்தியகங்காரங்கள் வாமதனற்காணுதென்னில்—சன்னிதியொழிந்ததன்றே-ஆத்மாவின்து சன்னிதானம் (விபுவாகையால்) அற்றதில்லையே (அதனும் பிரதிஞ்ஞாபங்களுமின்னு நிக்கிரகத்தானம்) எ—று. (எ)

மேலிதுவுமது.

சன்னிதிகுணமதாகுந்தானென்போலென்னிற்காந்த
முன்னிரும்பென்ரூயீர்க்குமுறைமையுண்டகற்றலின்ரு
முன்னுதலொடுங்கலோடலிருத்தலேகிடத்தனிற்ற
லென்னுமித்தொழில்கண்மற்றுமியற்றுவதான்மாவென்னே.

இ-ள். சன்னிதிகுணமதாகும்—(சன்னிதான மூண்டாயிருக்கவுங் காரியங்காணுமென்று நீர்சொல்லிய துண்மைதானே, ஒருவத்துவுக்கு ஒருவத்து விருக்குமிடத் துள்ளமைமாத்திர மிவ்விடத்துச் சன்னிதியன்று, சற்பாவத்தோடு காரியசாமர்த்திய சத்திசம்பந்தியாயிருத்தல்) அதுதானென்போலென்னில்—காந்தமுன்னிரும்பென்ரூய் - காந்தசத்தி யிரும்புச்சம்பந்தம்போலென்று சொன்னாய்—ஈர்க்குமுறைமையுண்டு அதற்கு-அந்தக்காந்தத்துக் கிரும்பையிழுக்குஞ் சத்தியுண்டு—அகற்றலின்ரும் - விடுஞ்சத்தி யில்லை. (ஆகிலு மதனும் கர்த்திருத்துவங் காந்தத்திக் காணப்பட்டது; காந்தத்துக்கு நீர்சொல்லிய கர்த்திருத்துவமில்லை; இருவர்க்குஞ் சம்மதமான சத்திமாத்திரமே; இரும்புக்கே யசைதற்கிரியாவேசமாகிய கர்த்திருத்துவம், அப்படி யாத்மாவுக்குச் சத்திமாத்திரமே; அப்படி சரீரத்துக்கே கர்த்திருத்துவம்; சரீரமே ஞானேச்சாகாரியங்களைத் தனதுதொழில்களாகத்தானே பண்ணும். அது நன்றன்று, சிற்பதார்த்தங்களுக் க

சிற்பதார்த்தங்களினதுஅசைதற்கிரியாகன்மகாரியத்தைப்பண்ணு மிச்சா ஞானக்கிரியாத்தொழில்களைத் தனதாகச் சுவசங்வேதனமாகப் பண்ணுஞ் சிற்சத்தியே கர்த்திருத்துவ மாகையாற், சித்துக்கே கர்த்திருத்துவம்; சட த்துக்குக் கன்மத்துவமன்றிக் கர்த்திருத்துவ மில்லை. ஆகிற், காந்தத்துக்கு க் கர்த்திருத்துவ மெப்படிசொன்னீர்? உள்ளது, சித்தாகிய கர்த்தாவினு டையவுஞ், சிற்சத்தியாகிய கரணத்தினுடையவும், சம்பந்தத்தினுலே ச டத்துக்குக் கர்த்திருத்துவமும் கரணத்துவமுஞ் செயற்கையா யுபசரிக்க ப்படும்; கன்மத்துவமாத்திரமியற்கையாய் வாஸ்தவமாயிருக்கும்; ஆதலா ல்)—உன்னுதலொடுங்கலோடலிருத்தலெனிடத்தனிற்றல் என்னும்—இத் தொழில்கண்மற்றும்-இவைமுதலாஞ்சரீரத்தினசைதற்கிரியைகளை—இ யற்றுவதான்மாவென்னே- (தனது சிற்சத்தியினது ஞானேத்தியோகக் கி ரியாசங்கற்பேச்சைகளினுலே) பண்ணுவதுயிரே. எ—று. (அ)

உயி ருருவாயிருக்குமென்னும் பவுராணிகமதம்படித்துப் ப ராகரிக்கின்றூர்.

உருவுயிரொன்னினிற்தவுடலினிற்காணவேண்டும்
வருவதுபரிணமத்தாயனித்தமாமபூதமாகுங்
கருவினினுழைபுமரறுங்காட்டிடவேணடுங்கண்ணின்
மருவிடாதென்னினுன்றன்வாயினுலுருவன்றென்னே.

இ-ள். வெளிப்பொருள். (ஈ)

பிரமாணமுதற் பதார்த்தம் போலச் சூக்குமவுருவாய் நேத்தி ரத்திற் ரோற்ருதிருக்குமென்ன மறுத்துணர்த்துகின் ரூர்.

சூக்குமவுருவதென்னிற்மூலகாரணமதாகு
மாக்கியமனுதிதன்மாத்திரைவடிவசேதனம்பின்
னீக்கமில்சூக்குமத்தேநிற்பதோருருவுண்டென்னி
லாக்கிடுமுருவமெல்லாமசித்துமாயனித்தமாமே.

இ-ள். சூக்குமவுருவதென்னில்- சூக்குமசரீரந்தானே யாத்மாவென் னில் (முன்சொல்லிய சிலவாசாரியர்கள் மதத்தினுல்)—தூலகாரணம தாகும் - தூலசரீரத்துக்கு முதற்காரணமாகும்—ஆக்கியமனுதிதன்மாத் திரைவடிவசேதனம்-சூக்குமதேகமாய்ப் பண்ணப்பட்ட கலைமுதற் பிருதி விமுடிவாகிய தத்துவங்களைத் தங்களுள் வைத்த வந்தக்கரணங்கள் தன் மாத்திரைகள் சடம் (ஆத்மாவாகாது)—பின்னீக்கமில்சூக்குமத்தேநிற்ப தோருருவண்டென்னில்-அடித்தாற்போ லாத்மாவல்ல வென்று தள்ளிய

சூக்கும சரீரத்துக்குள்ளிருக்குமொருவடிவுண் டஃதாத்மாவென்று நீசொல்லில் (அது விசாரிக்குமிடத்தில்)—ஆக்கினேமுருவம்- சிவதத்துவ பஞ்சக ரூப பரதேகமாம்—(அது) எல்லாமசித்துமாயநித்தமாமே- சிவதத்துவமுற்றுஞ்சடமாய் காசமாமே. எ-று. ஆத்மசத்தத்துக்கு விபுநித்தியசித்தென்றுபொருளாதலால், பரதேக மெப்படி யாத்மாவாம் ஆகாததானே. (கo)

உயி ரருவுருவமென்று கவுளகண் சொல்ல மறுத்துணர்த்துகின்றார்.

அருவுருவென்னிலான்மாவருவுருவாவதின்று
முருவருவாகாதாகுமொருபொருட்கிரண்டுதன்மை
வருவதுமில்லைக்காட்டவன்னிபோன்மருவுமென்னி
லுருவமுங்காணவேண்டுமுண்மையுமழிந்துபோமே.

இ-ள். அருவுருவென்னிலான்மா - உயி ரருவமாயு முருவமாயு மிருக்குமென்றுநீசொல்லில்—அருவுருவாவதின்றும்-நிஷ்களமாயிருக்கிறபொருள்தானே தற்காலத்துச் சொரூபத்தினுலே சகளமாகாது (அப்படி)—உருவருவாகாதாகும் - சகளம் நிஷ்களமாகாது (விருத்ததன்மமாகையால்)—ஒருபொருட்கிரண்டுதன்மைவருவதுமில்லை - எக்காலத்து மொருபொருட்கு விருத்ததன்மங்களிரண்டுண்டாகா(அப்படியாகிற்சிவனுக்குச் சகளநிஷ்களத்துவமெப்படிசொல்லப்படும். உள்ளது; நிஷ்களத்தைக்குறித்துச் சகளமென்றுஞ் சகளத்தைக் குறித்து நிஷ்களமென்றும் உத்தியுத்த சிவத்தி லுரைக்கப்பட்டது; உதாசீன சுத்தசிவத்திலிருக்கு நிஷ்களத்துவமும் பிரவிருத்த சிவத்திலிருக்குஞ் சகளத்துவமுந் தற்காலத்திலிருக்குமென்று பொருளன்று; பிரவிருத்தசிவத்திலு மட்டத்திறிஞ்சற்சத்திகலாசாகித்திய மாத்திரத்தைக் குறித்துச் சகளத்துவம்; மாயாகலா ராகித்திய மாத்திரத்தைக்குறித்துப் பரமார்த்தமாயிருக்கு நிஷ்களத்துவம்)—காட்டவன்னிபோன் மருவுமென்னில் - காட்டமும் வன்னியு மேகபதார்த்தமன்று; அப்படி யங்கீகரித்தாலும்—உருவமுங்காணவேண்டு முண்மையுமழிந்துபோமே - (காட்டப்பகுப்புக் கண்ணினுற் காணப்படும், அதுபோல) உயிரின தருவப்பகுப்புத் திருட்டிக்குத் தரிசனப்பட வேண்டும்; அநித்தியமாயுந்தானே யாய்விடும். எ-று. (கக)

வேறுதாகரண மெடுத்துரைக்க மறுத் துணர்த்துகின்றார்.

சந்திரன்வடிவுபோலத்தானருவுருவமென்னில்
வந்துநங்கண்ணிற்றோன்றும்வடிவுளதாமுயிர்க்கு

மிந்தவுனுருவந்தானுயெழுவதுமுயிரேயென்னிற்
பந்தமாயசித்தாயான்மாப்பவுதிகமாகுமன்றே.

இ-ள். சந்திரன்வடிவுபோலத் தானருவுருவமென்னில் - (அமாவாசை பூரணைகளிலே) சந்திரன்வடிவுபோ லுயிரருவுருவமென்று நீசொல்லில் (பூரணையிலே சந்திரனுக்குப்போல) — வந்துநங்கண்ணிற்றோன்றும் வடிவுளதாமுயிர்க்கும்—இந்த வுனுருவந்தானுயெழுவதுமுயிரேயென்னில் - இப்போது காணப்படுஞ் சடசரீரமாய்ப் பரிணமிப்பது மருவாகிய வாத்மாவாதலால், உயிரருவுருவென்று நீசொல்லில் — பந்தமாயசித்தாயான்மாப் பவுதிகமாகுமன்றே - கட்டப்படுமுயிர் கட்டாய்ச சடமாய்ப் பூதோற்பத்திமத்தாமே. எ-று. (கஉ)

சேசுரசாங்கியமதம் பாஷித்துப் பராகரிக்கின்றார்.

அருவவிகாரியான்மாவாகாயம்போலவென்னி
லுருவினைக்கட்டியாட்டியோட்டிமீட்டுலாவப்பண்ணி
மருவிநிற்பித்திருத்திக்கிடத்திமண்புரட்டிமற்றும்
பெருவிகாரங்களெல்லாந்தருவதென்பேதிடாயே.

இ-ள். அருவவிகாரி யான்மா வாகாயம்போலவென்னில் - ஆகாயம் போ லுயி ருருவிலி திரிவிலி யென்று நீசொல்லில். சரீரத்தின்கண் பெருவிகாரமென்று கூட்டுக. மற்றது வெளிப்பொருள். [இதனது தாற்பரியஞ் சிற்சத்தியினது சங்கற்பரூபமாய்த் திரிவற்ற வசைவற்ற விகாரத்தினுலே திரிவுற்ற வசைவுற்ற கட்டுதை லாடுத லோடுதல் முதலிய விகாரங்களைச் சரீரத்திற் பண்ணுமென்பதை.] (கரு)

ஆத்மா வசித்தாய்ச் சித்தாசிரயமாயிருப்பனென்னும் நையாயிக மீமாங்சமத நிதரிசித்து நிராகரிக்கின்றார்.

அசித்தெனிலுணராதான்மாவசித்துச்சித்தாகுமென்னி
லசித்துச்சித்தாகாதாகுஞ்சித்தசித்தாவதில்லை
யசித்தொருபுறமாயொன்றிச்சித்தொருபுறமாய்நில்லா
தசித்துறுசித்தேயென்னிலசித்தடைந்தறிவதின்றும்.

இ-ள். சித்தெனில் - (சிவனைப்போல நிருமல) சித்தெனில். அசித்தடைந்தறிவதின்றும்-புறக்கரண மூட்கரணங்களைப் பொருந்தினின் றுணர்வதின்றும். மற்றது வெளிப்பொருள். (கச)

உயிரணுரூபமென்னும் பாஞ்சராத்திரிமதம் பாஷித
தத் தூஷிக்கின்றார்.

உயிரினேயணுவதென்னிலுடல்பலதுவாரமோடும்
பயில்வுறக்கட்டுண்ணதுபாரமுந்தரித்துச்செல்லா
தயர்வுமசித்தாய்ப்பூதவணுக்களிலென்றதாகு
மியல்புறுமவயவத்தாலணுவுருவிறக்குமன்றே.

இ-ள். உயிரினேயணுவதென்னிலுடல்பலதுவாரமோடும்-ஆத்மா வணுரூபியென்று நீசொல்லில், சரீரத்தில் நவத்துவாரங்கட்குள் ளொன்றினின்றும் புறம்பே புறப்பட்டுப்போம் — பயில்வுறக்கட்டுண்ணது - கிலேச சஞ்சாரம்பண்ணத் தங்கிநில்லாது—பாரமுந்தரித்துச்செல்லாது - (சரீரத்திற் சருவாங்கமுங் கலந்துநிற்றல் கூடாதாகையால்) சுமையதரித்துச்சரியாது—அயர்வுமசித்தாய் - அஞ்ஞானம் பொருந்திய சடமாய் — பூதவணுக்களிலென்றதாகும்—பிருதிவிப்பரமாணு அப்புப்பரமாணு அக்கினிப்பரமாணு வாயுப்பரமாணுக்களி லியாதாமொன்றும்—அணுவுருவு - அந்த அணுரூபிவஸ்து—இயல்புறு மவயவத்தால்- மூர்த்தத்தன்மையாலெனு மேதுவாற் சித்தித் தியற்கையைப் பொருந்திய சாங்கிசத் தன்மையாற் காணபிக்கப்பட்ட காரியதத்தன்மையால்—இறக்குமன்றே- கெட்டுப்போங் தானே. எ-று. (கடு)

பின்னு மவன்கருத் தூஷித்து நிராகரிக்கின்றார்.

உடலினிலேகதேசியுயிரொளிருருவாயமாயும்
படர்வுறுமறிவின்றெங்குஞ்சுடரொளிப்பணபதென்னிற
சுடர்தொடிற்சுடுவதெங்குதொட்டிடமறிவுண்டாகு
மடர்புலனிடதுதுமொக்கவறிவெழவேண்டுமென்றே.

இ-ள். வெளிப்பொருள். (கசு)

சங்கோச விகாச தன்மி யாதமாவென்னு மருகன்மத
மிசைத் தசைக்கின்றார்.

உருவினினிறைந்துநின்றங்குணர்ந்திடுமுயிரதென்னின
மருவிடாதுறக்கம்வாயிலறிவொக்கவழங்கவேண்டும்
பெருகிடுஞ்சுருங்கும்போதம்பேருடற்சிற்றுடற்கண்
வருமுடற்குறைக்கவொக்கக்குறைந்துபின்மாயுமன்றே.

இ-ள். உருவினினிறைந்துநின்றங்குணர்ந்திடுமுயிரதென்னில் - சரீரத்துள் ளுயிரிருந்து சரீரமெங்கும் பூரித்தறியுமென்று நீசொல்லில்—மருவிடாதுறக்கம்-(அறிவற் றதிதமாயிருக்கும்) நித்திரையைப் பொருந்தாது

(அதுவனறியும்)—வாயிலறிவொக்க வழங்கவேண்டும் - பஞ்சேந்திரியங்களும் கிரமத்திலுண்டாஞ் சத்தஞானம், பரிசஞானம், ரூபஞானம், இரசஞானம், கந்தஞானமைந்தையு மொருமிக்க வுண்டாக்கவேண்டும். (மூறுக்குப்பணிகாரம் புஷிக்குமிடத்து வேறிடத்துப் பிய்ந்து பிய்ந்து வரு மைந்தறிவுகளும் புஞ்சமாய் வருவது கண்டோமென்னில், அங்கு முறைமையிலறிதல் தானே, நூறுதாமரையிதழ மூஷியாற் குத்தினேனென்பதுபோற் பகுத்தறிதலரிதாதலா லொருமிக்கப்போலத் தோற்றியது. அதுவன்றியும்)—பேருடற்சிற்றுடற்கண்பெருகிடுஞ்சுருங்கும்போதம்-பேருடற்கண்-பெருங்காயத்திலே—போதம் - அறிவு—பெருகிடும் - மலரும் — சிற்றுடற்கண் - சிறுகாயத்திலே—போதம் - அறிவு—சுருங்கும் - குவியும்(அப்படியாகட்டுமென்னிற் சிலவிடத்துப் பேருடலுடையானுக்குச் சிற்றறிவுஞ் சிற்றுடலுடையானுக்குப் பேரறிவுங் காணப்படுதலாற் சங்கோசவிகாசஞ் சொல்லுஞ் சமணமதஞ் சாரமற்றதாதலால் அப்படி சாற்றப்படாது. அதுவன்றியும்) — வருமுடற்குறைக்கவொக்கக் குறைந்துபின்மாயுமன்றே-தான் வந்துபொருந்துஞ் சரீரத்தைச் சிறிதுசேதிக்க அந்தச்சரீரத்தோடு தானுஞ் சிறிதுகுறைந்து முற்றுஞ்சேதிக்கத் தானு முற்றுங் குறைந்து நாசமாமே. எ-று. (கஎ)

பாட்டபாஸ்கரன் மதம் பராகரிக்கின்றார்.

எங்குந்தான்வியாபியாய்நின்றுணருமிவ்வான்மாவென்னிற்
றங்கிடுமவத்தைபோக்குவரவுகள்சாற்றவேண்டும்
பங்கமார்புலனென்றொன்றுய்ப்பார்த்திடல்பகரவேண்டு
மிங்கெலாமொழிந்தானிற்பதெங்ஙனமியம்பவேண்டும்.

இ-ள். இவ்வான்மா - இந்தவுயிர்— எங்குந்தான் வியாபியாய் நின்றுணருமென்னில் - எவ்விடத்தும் விபுவாய் மறைப்பற்று விரிந்து விளங்கிய வறிவுடையவனுகி யறிவனென்னில்—தங்கிடுமவத்தைபோக்கு வரவுகள்சாற்றவேண்டும்-அறிவு குன்றிக் குன்றிப்போயுறையுஞ் சாக்கிரமுதலிய பஞ்சாவத்தைப்படுவானேன் சொல்லவேண்டும். ஒரிடத்தே யிருந்தறியுந்தனமை ப்ண்ணுந்தன்மை யிருக்கப் போதல்வருதல்கள் புரிவானேன் சொல்லவேண்டும்—பங்கமார்புலனென்றொன்றுய்ப் பார்த்திடல்பகரவேண்டும்-கேடுநிறைந்த சததப்பரிசரூபரசகந்தங்களே யொருமிக்க வறியாமலொவ்வொன்றுய்க் காண்பது கழறவேண்டும்—இங்கெலாமொழிந்தானிற்பதெங்ஙனமியம்பவேண்டும் - இவ்வுலகத்துச் சரீரமுதலிய சம்சாரமும் றுங்ஙினல் நிற்குமிடம் நிகழ்த்தவேண்டும் [சருவசங்காரகாலத்துப் பிரளயகேவலியா யிருபபதின்றித் தீக்ஷாதிசாதனங்களைச் சாராது முத்தருயவிடிவனெனறு தாற்பரியம] எ-று. (கஅ)

நீர்சொல்லு மலமறைப்பில்லா திருந்தாலு மறைபபுண்
டி அதனுலவத்தை முதலியன வருமென்றுகைக்க
மறுத்துரைக்கின்றூர்.

சுத்தமாமான்மசித்தைத்துகளுடன்மறைத்ததென்னில
வைத்துரைதுடந்கண்வாயில்கரணங்கள்வழியான்ஞான
மொத்துமலமற்றலுமுறுமலம்வீடுமின்றும
பெத்தமுமடையான்முத்தனுய்ப்பிரகாசனுமே.

இ-ள். சுத்தமாமான்மசித்தைத துகளுடன்மறைத்த தென்னில் - நி
ன்மலமாகிய வுயிரினதுசிற்சத்தியை யழுக்குறுமாக்கை மூடிற்றென்று நீ
சொல்லில்—வைத்துரைதுடந்கண்வாயில்கரனங்கள் வழியான்ஞானம்-பு
றக்கரண வுட்கரணமார்க்கத்தினுற் சரீரத்திற் பிரகாசிக்கக் கண்டிருக்கி
ன்றஞானம பிரகாசியாதேபோம்—ஒத்துரைமலமற்றலுமுறுமலம்வீடுமின்
றும்-ஆத்மாவுட னனுதியித்தமல்லாத வுடன்மல முத்தியின்பொருடப்
போனலுக் திரும்பவந்து பொருந்தும். (முன் நின்மலனிடத்து நிருகேதுக
மாய் வந்தபடியினுலே யாணைகுளித்தல்போலத் திரும்பத்திரும்ப வழுக்கு
வரு மாதலால்) முத்தியில்லையாம். (உடன்மலந் திரும்பவுறுதென்று சொ
ல்லில்)—பெத்தமுமடையான்முத்தனுய்ப்பிரகாசனுமே - அப்போதனுதி
நின்மலனுகிய வாத்மா வொருக்காலும் பந்தமுடையனல்லனும். முத்திவி
யத்தியானுவன்றனே. எ-று. (கர)

ஆனலுபமுடைய வுயிரிலக்கணக்கொள்கை யெப்படி
யென்னக் கூறுகினறூர்.

அசித்தருவியாபகம்போலவியாபகமருவமன்றுய்
வசித்திடவரும்வியாபியெனும்வழக்குடையனுகி
நசித்திடாஞானச்செய்தியனுதியேமறைத்துநிற்கும
பசுத்துவமுடையனுகிப்பசுவெனகிற்குமான்மா.

இ-ள். அசித்தருவியாபகம்போல்வியாபகமருவமன்றுய்- சடமாமுரு
வில் விபுப்பொருளொப்ப விபுவுருவிலியன்றி — வசித்திடவரும்வியாபி
யெனும்வழக்குடையனுகி - முத்தியிலசித்ததரு வியாபகவதுதவை யுள்ள
டக்கி யதற்குள்ளுமாய் வசிகரணம்பண்ணிப்பிரேரிக்கவிரியும் விபுவென்னு
நீதிமானுய், பெத்தத்தில் மலமூடாமற் றன்வசமாகமாத்திரம் பண்ணப்ப
ட்டு முத்தியில்விரியும் விபுவென்னும் நீதிமானுய்—நசித்திடாஞானச்செய்
தியனுதியேமறைத்துநிற்கும்பசுத்துவமுடையனுகிப் பசுவெனகிற்குமான்
மா-கெடாதனுதியித்தமா யிருக்கின்ற சருவஞ்ஞதவ சருவகர்த்திருத்துவ

ரூப சிவத்துவத்தை யறியாமை பண்ணுமை யென்னும் பசுத்துவமாக்கும் பசுத்துவமென்னு காமத்தையுடைய மலசம்பந்தியாகிச் சிவஞயிருப்பவனுனும் பசுவென்னும் பேர்பெற்று நிற்பன். எ-று. (உ)

விஞ்ஞானப்பிரளய கேவலங்களில் அசருவஞ்ஞத்துவம் அசருவகர்த்திருத்துவ மிரண்டிற்குமுபாதியுமாதலுச் சகலத்திற் சிஞ்சிஞ்ஞத்துவங் சிஞ்சிற கர்த்திருத்துவ மிரண்டிற்கு மூபாதியுமாக்கின் ரூர்.

மாயையின்வயிறுணமன்னிவருஞ்செயன்ஞானமிச்சை
யேயுமக்கலாதிமூன்ருலேகதேசத்தினேய்ந்திங்
காயுமுக்குணங்களந்தக்காரணங்களாதியெல்லாங
காயபந்தங்களாகக்கலந்துடனிற்குமான்மா.

இ-ள்- மாயையின்வயிற்றுணமன்னி - (சருவவியாபியாயிருந்தாலு மலமறைத்த வறிவுதொழி லுடையவனுய்ச் சூக்குமதேகத்தினுற் சிற்றறிவுதொழில் விளங்கலாற் சூக்குமதேகோபாதியினுலே) மாயோதரத்தில் வசித்து—வருஞ்செயன்ஞானமிச்சையேயுமக்கலாதிமூன்ருலேகதேசத்தினேய்ந்து-தன்னுடொருங்கிய கலை வித்தை யிராகங் களினுல் முறைமையிற் றொழிலறிவு விருப்பங்களே யந்தகாரத்திற் றீபத்தினுற் கண்ணெளியைப்போல வொருபிரதேசத்திற் பொருந்தி. ஆயுமுக்குணங்களென்பது முதலியன வெளிப்பொருள். (உக)

இப்படி தூலசூக்கும சரீரங்களோடுகூடிப் போகம்புசிக்குமுறைமை புகல்கின்ரூர்.

சூக்குமதேகியாகித்தூலதேகத்தின்மன்னிச்
சாக்கிரமுதலாயுள்ளவவத்தையுட்டங்கியெங்கும்
போக்கொடுவரவுமெல்லாமபுரிந்துபுண்ணியங்கள்பாவ
மாக்கியும்பலங்களெல்லாமருந்தியுநிற்குமான்மா.

இ-ள். வெளிப்பொருள். (உஉ)

பஞ்சகோசங்களி லொவ்வொரு கோச மாத்மாவென்பவர்களேமறுத்துணர்த்துகின்ரூர்.

மருவானந்தம்விஞ்ஞானமனேபிராணனன்னமய [மாய்
மூருவாகதன்மையுணடாயபபின்னெனுகொனுசூக்கும

வருமாமன்னமயமபற்றிமாயையூதற்காரணமாகு
மருவாமான்மாவைவங்கோசத்தார்ப்புண்டவற்றினகம்புறமாம்

இ-ள். வேதாந்திகள் காரணசரீரமென்னு மவித்தையாகிய வானந் தமயகோசமய ஞத்மாவென்பர்கள். புத்தர் விஞ்ஞானமயகோசமய ஞத் மாவென்பர்கள். அகங்காரவாதிகள் மனோமயதோசமய ஞத்மாவென்பர் கள். அருகர்பிராணமயகோசமய ஞத்மாவென்பர்கள். உலோகாயதர் கள் அன்னமயகோசமய ஞத்மாவென்பர்கள். நமக்குப் பஞ்சகோசமு மாயோபாதானமா யிருக்குந் தூலசரீரத்துஞ் சூக்குமசரீரத்து மட்டுங்கும். மற்றது வெளிப்பொருள். (உரு)

பஞ்சகோசத்துக் காத்மா வன்னியனுய்ப் பஞ்சகோச
தைப் பிரோபிப்பனென்பது படிக்கின்றார்.

தோற்பாவைக்கூத்துந்தொல்லோமரப்பாவையியக்கமுஞ்சீர்த்
தோற்பாலிற்செலவும்வேறுய்ச்செலுத்துவோர்செய்திதானும்
பார்ப்பாயவேடங்கட்டியாடுவோர்பரிசுமபோலு
மார்ப்பாயகாயந்தன்னையான்மாகின்றூட்டுமாறே.

இ-ள். வெளிப்பொருள். (உச)

பின்னும் பஞ்சகோசங்க ளாத்மாவுக் குடைமைப்பொ
ருளாகப் படுத்தப்படுமாதலாற் பின்னப்பொருள்க
ளென்று பேசுகின்றார்.

என்னுடல்பொறிபிராணன்கரணமென்னுணர்வென்றக்கா
றன்னின்வேறுகுமீயென்றன்மனையென்றவெல்லா
நின்னின்வேறுகுமென்னினீங்கிடாதிவையிங்கென்னி
னுன்னினவாகினீயாமுகிர்மயிருகவுங்காண்டி.

இ-ள். இவை.சரீராதிகள். உன்னினவாகினீயாம் - உன்னுடையதா கி நீ.நானென் றபிமானித்ததாகும். உகவும் - நீங்கவும். மற்றதுவெளிப் பொருள். (உடு)

இதுவுமது.

பொன்னணியாடைமாலிபோதுமேலானபோதிங்
கென்னணியானென்றுன்னியிருந்தனைபிரிந்தபோது
நின்னணிநீயுமல்லவாயினைகாய்நின்னி
லன்னியமாகுமுன்னையறிந்துநீபிரிந்துபாரே.

இ-ள். சுவசங்வேதனப் பிரத்தியகூத்திலு லுன்னைச் சித்தரூபனய றிந்து சரீரத்தைச் சடரூபமாகப்பார். மற்றதுவெளிப்பொருள். (உசு)

மேலதையே வற்புறுத்தி யுணர்த்துகின்றார்.

உடலியானல்லெனிற்தவுணர்வியானல்லவான
கடனியாதென்னில்வேறுகண்டுணர்வென்னதென்கை
யிடரிலாவென்றனுன்மாவென்றபோதான்மாவேறே
திடனதாயுயிரைவேறுகண்டிடார்செப்பலேகாண்.

இ-ள். உடலியானல்லேன் - நீர்சொல்லிய முறைமையிற் சரீரேந்திரியங்கள் நானல்ல—உணர்வுயானல்லவானகடனியாதென்னில்- (அறிவிருவிதம் நிருவிகற்பமென்றுஞ் சவிகற்பமென்றும். அவற்றுள்நிருவிகற்பமாத்மசிற்சத்தியின தறிதற்றெழில் பின்னமன்றியிருப்ப தீதொன்று; நிருவிகற்பமுன்வைத்த புத்திவிருத்தி பின்னமாயிருப்ப தீதொன்று; புத்திவிருத்திஞானஞ் சிற்சத்திவிருத்தியிற் பிரித்து நானல்லாதிருந்தாலும்) சிற்சத்தி விருத்திஞானம் நானல்லவாகியமுறைமையேதென்றுசொல்வில்—வேறுகண்டு - உடைமை யுடைமையுடைய னெனும்பிரிவு கருதி—உணர்வென்னதென்கை-அறிவென்னதென்பது (ஆதலால் அறிவு நானென்பது கூடாது சத்தி சத்திமத்தொழிற் பேதம் பிரிப்பின்றி யுள்ளுணடென்று சான்றோர் சாற்றுதலால். இப்படிநீர்சொல்வில்)—இடரிலாவென்றனுன் மாவென்றபோதான்மாவேறே—(வேறன்று அதுபோலறிவும் வேறன்று. சத்திய நீசாற்றியது. வேறல்லவென்பது)—திடனதாயுயிரைவேறுகண்டிடார்செப்பலேகாண் - நிச்சிதமாய்த் தற்பொருளறிவாய்த் தன்மியாகிய வான்மாவைப் பிறபொருளறிவாய்த் தன்மமாகிய சிற்சத்தியினின்றும் பிரிவின்றிப் பிரித்தறியாதா ரபேதமாகப் பேசுவதேகாண். எ-று.

"என்றன்"என்பதற்குப் பொருள் பிறபொருளறிவாகியசிற்சத்திரூப தன்மமாகில் "ஆன்மா" என்பதற்குப் பொருள் தற்பொருளறிவாகிய சத்திமத்துரூபதன்மி."என்றன்" என்பதற்குப் பொருள் தன்மிலக்கியமாகில் "ஆன்மா" என்பதற்குப் பொருள் தன்மலக்கணம். தற்பொருளறிவாகிய தன்மியும் பிறபொருளறிவாகிய தன்மமு மொன்றுக்கொன் றதுதானே யிதுதானுயு மிதுதானே யதுதானுயு மிருத்தலாற் புறம்பிற் பிரிக்கும் பேதமில்லாம லிருந்தாலுமுள்ளே பிரியாமற்பிரிக்கும் பேதமுண்டென்று பெரியோர் பேசுவார்கள். (உ எ)

அதுவன்றியும் மன்வீடத்தான்மாவென்றது இலக்கணலிலுலே பின்னப் பொருளுமாமென்று பேசுகின்றார்.

புந்தியைமனமதென்றுமனமதுபுந்தியென்றுஞ்
சிந்தையைச்சீவனென்றுஞ்சீவனேச்சிந்தையென்று

மூகதனையான்மாவென்றுமான்மாவைமூக்தனென்றும்
வந்திடுமென்றனுன்மாவென்றதுமற்றொன்றைறக்காண்

இ-ள். புந்தியைமனமதென்றும் - (காரியவிலக்கணையினுலே) புத்தியை மனமென்றும்—மனமதுபுந்தியென்றும் - (காரணவிலக்கணையினுலே) மனதைப் புத்தியென்றும்—சிந்தையைச்சீவனைனறும் - (உபகாரவிலக்கணையினுலே) சித்தத்தை ஆன்மா வென்றும்—சீவனைச்சிந்தையென்றும் - (சமீபவில்லக்கணையினுலே) யான்மாவைச் சித்தமென்றும்—மூந்தனையான்மாவென்றும் - (உபகார விலக்கணையினுலே) சிவனைச் சீவனென்றும்—ஆன்மாவைமூந்தனென்றும் - (தன்மானுகிருதி லக்கணையினுலே) சீவனைச் சிவனென்றும்—வந்திடும் - இலக்கணைகளினுலே பொருளுரைக்கப்படுமாதலால்—என்றனுன்மாவென்றது—மற்றொன்றைக்காண்-ஆத்மோபகாரகரா யிருக்கின்ற சிவனைக்காண். எ-று. (உஅ)

திரும்ப உபகாரியோபகாரகாதேயாதார விலக்கணைகளினுலே அறிவுமுதலாயின ஆத்மாவென்று சொல்லப்படுமென்று சொல்லுகின்ருர்.

அறிவுடல்சிந்தையான்மாவணைதலாலான்மாவென்ப
றிசுடர்விளக்கிருக்குமிடத்தையும்விளக்கென்ருற்போற்
பொறிபுலன்கரணமெல்லாம்புலப்படும்பேதமாகிப்
பிறிதராதறிவதான்மாவறிபொருள்பின்னமாமே.

இ-ள். அறிவு - இந்திரியம். புத்திவிருத்திப் பிரகாசமுமாம்—உடல்-தூலசரீரம்—சிந்தை - சித்தம் - அதனுற் காண்பிக்கப்படும் அகங்காராதிகளுமாம்—(இவைகளை) ஆன்மா—அணைதலால்-பொருந்துதலால்—(அவைகளை யாதார விலக்கணையினுலே) ஆன்மாவென்பர்—(அஃதென்போலென்னில்) எறிசுடர்விளக்கிருக்குமிடத்தையும்—தகளியையும்-விளக்கென்ருற்போல—பொறிபுலன்கரணமெல்லாம் -புறக்கரணமாகியவிந்திரியங்கள்கன்மமாகிய சத்தாதி விடயங்கள் அந்தக்கரணமாகிய மனம் புத்தி யகங்காரங்கள் முதலமுற்றும்—புலப்படும்பேதமாகி-ஆன்மாவுக் கன்னியமாயு மொன்றுக்கொன்று வேருயு மறியப்படும்—பிறிதராதறிவதான்மா - வியாபித் தந்த வறியப்படும்பொருளைக் காண்பதுயிர்—அறிபொருள்பின்னமாமே-அறியப்படும் பொறிமுதலியன கன்மமாதலால் வித்தைகரணமாக வறியுங்கர்த்தாவுக்கு வேறுதானே. எ-று. (உக)

பெத்தாத்மா முத்தாத்மாவாகமூந்திக் கருவிகளைக்கொண்டு சிவன்காண்பிக்கக் காண்பனென்று காண்பிக்கின்ருர்.

கணடுணர்புருடன்வேறுகனவுகண்டொடுங்கிக்காய
முண்டியும்வினையுமின்றிக்கிடந்துயிர்த்திடவுணர்ந்து

கண்டிடுங்கனவுஞ்சொல்லிபொடுக்கமுங்கருதிவேரு
யுண்டியும்வினையுமுற்றுங்குணர்த்திடவுணராநிற்கும்.

இ-ள். கண்டுணர்புருடன் - சாக்கிராவத்தையிற் சத்தாதிபுலன்களே யுள்ளபடி யறிந்தவான்மா—வேறுகனவுகண்டு - சுவப்பனவத்தையில் நித்திராவசத்திஞலே அதுவென்றறியும்பொரு ளிதுவென்றுதோற்ற அப்படி மயங்கியறிந்து—ஒடுங்கி - சுழுத்தியவத்தையிற் புறப்பொருளறிவின்றிஆந் தரதேகமாத்திர வறிவாய்—காயமுண்டியும் வினையுமின்றிக் கிடந்துயிர்த்திட - துரியாவத்தையிற் பிராணவாயுமாத்திர மியங்கிடச் சரீரம் புஷிப்புத் தொழில்க ளின்றித் துயின்று சுக்குமவறிவாய்—உணர்ந்து- (திரும்பச்சாக்கிரத்திற் சுகமாய் நானித்திரை பண்ணினேனென்று துரியாதீதத்திற்சுகானுபவரூப வதிசூக்குமவறிவைச் சூஷிப்பித்து) அறிந்து—கண்டிடுங்கனவுஞ் சொல்லி-சுவப்பனத்திற் ரூற்றிய கடப்பைப்பிறர்க்குப் போதித்து—ஒடுக்கமுங்கருதி-பிற நினைவொன்று மின்றிச் சுகமாய் நித்திரை பண்ணினேனென்று சுழுத்தி துரியந் துரியாதீதங்களைத் தூல சூக்கும சூக்குமதமப் பிரகாரத்திஞலே சூஷிப்பித்து—வேரூயுண்டியும் வினையுமூற்று - சுவப்பனத்திற்ரூற்றிய புஷிப்புத்தொழிலுக் கன்னியமாய்ப் புஷிப்புத் தொழில்களைப்பெற்று—இங்குணர்த்திடவுணராநிற்கும் - சாக்கிரத்திற் சிவன் தத்துவாதிதேவதாத் துவாரத்திஞலே தத்துவங்களைச் சேட்டித்தறிவிகவறியாநிற்பன். எ-று. (கூ0)

புருடன்ரூனேயறிவ னறிவிக்கவேண்டுவதில்லையென்
றவிகாரவாதிபேச நிராகரிக்கின்ரூர்.

புருடனேயறிவனுகிற்பொறிபுலனுதிபோதந்
தருவதெனறிவுமாயாதனுகரணந்திபற்றி
வருவதிங்கனுதியாகமலத்தினின்மறைந்துநிற்ப
னருவனுயிவற்ரோடாளுமமைச்சருமரசும்போல்வன்.

இ-ள். புருடனேயறிவனுகில் - ஆன்மாவே சுவதந்திரஞகி யறியபபடும்பொருளே யறிவனென்று நீசொல்லில்—பொறிபுலனுதிபோதந்தருவதென்—இந்திரியங்கள் சத்தப்பரிசரூபரசகந்தமுதற் பொருள்களினது ஞானத்தை யுண்டாக்குவதேது (அதற்கொருகாரணம் வேண்டும், சொல்லுவோங் கேட்பாயாக அந்தப்புருடன்)—அனுதியாகமலத்தினின்மறைந்து நிற்பனருவனுய்-உருவிலியாய்த் தொன்றுதொட்டு ஆணவத்திஞ லறியாதிருப்பன் (அதனுலவனுக்கு)—அறிவு-ஞானம்—இங்கு - பெத்தனுயிருக்குமிடத்து—மாயாதனுகரணந்திபற்றிவருவது - மாயையினின்றுஞ் சிவனுண்டாக்கிக் கூட்டிய தூலசரீர சூக்குமசரீரங்களோடு பொருந்தி விளங்

கும். (முத்தனுயிருக்குமிடத்து முத்தனுமவதரமாத்திரத்திற் சிவசத்திமாத்திரத்தோடு பொருந்தி விளங்கி யெங்கும்விரிந்து வியஞ்சகத்தைத்திரும்ப விரும்பாம லிருக்கும் அப்போது)—(இப்போது) இவற்றோடாளு மமைச்சருமரசும்போல்வன்-இந்தப் பொறிமுதலியவற்றோடு, மந்திரியு மிராசாவு மொப்பப் பொருந்தி வாழ்வன். (கூக)

அப்படியிருந்தாலும் புருடனுக்கே முதன்மையென்பது போதிக்கின்றார்.

படைகொடுபெவனிபோதும்பார்மன்னன்புகும்போதில்லிற்
கடைதொறும்விட்டுவிட்டுக்காவலுமிட்டுப்பின்னே
யடைதருந்தனியேயந்தப்புரத்தினிலதுபோலான்மா
வுடலினிலவத்தையைத்துறுமுயிராகாவலாக.

இ-ள். உயிர்காவலாக - பிராணவாயுச் சரீரக்காப்பாக. மற்றது வெளிப்பொருள். (கூஉ)

இராசாத்தனது பரிசார சனங்களோப்போல, வான்மாத்துவதாத்துவிகங்களோ நிறுத்துந்தான முணர்த்துகின்றார்.

சாக்கிரமுப்பத்தைந்துதனினிற்கனவுதன்னி
லாக்கியவிருபத்தைந்துகளத்தினிற்சுழுனைமூன்று
நீக்கியவிதயத்தன்னிற்றுரியத்திலிரண்டோபி
நோக்கியதுரியாதீதநுவலின்மூலத்திலொன்றே.

இ-ள். இதற்குவகை சூத்திரமுடிவி லவத்தைவிசாரத்தி லறியப்பண்ணுகிறோம். (கூக)

கீழாலவத்தையைச் சொல்லி மத்தியாலவத்தையைச சொல்லாநின்று சுத்தாவத்தைத் தோற்றரவு மூலாக்கின்றார்.

அறிதருமுதலவத்தையடைதருமிடத்தேயைந்துஞ்
செறிதருங்கரணந்தன்னிற்செயலுறுங்கண்டுகொண்ணீ
பிறிவிலாஞானத்தோரும்பிறப்பறவருளாலாங்கே
குறியொடுமைந்தவத்தைகூடுவர்வீடுகூட.

இ-ள். அறிதருமுதலவத்தை - சகலாவத்தை யதனிடத்தில் மத்தியாலவத்தை தோற்றுமென்று பொருள். விசாரிக்குமிடத்தில் விசாரிக்கிறோம். (கூச)

சுத்தாவத்தைச் சொரூபஞ் சொல்லுகிறார்.

ஐந்துசாக்கிரத்தினன்குகனவினிற்சுழுனைமூன்று
வந்திடுந்துரியந்தன்னிலிரண்டொன்றுதுரியாதீதந்
தந்திடுஞ்சாக்கிராதியவத்தைகடானந்தோறு
முந்திடுங்கரணந்தன்னிற்செயறொறுமுணர்ந்துகொண்ணீ.

இ-ள். அத்தக்கரணத்திப் பிரேரக பிரணவ பஞ்சகலாரூபிகளா யிருத யத்திருக்கின்ற சுத்ததத்துவமைந்தையும் பற்றி யிருதயமூதற்பிரமரந்திர முடிவாகவருஞ் சாக்கிராதிகளைந்தும், அகாராதியைந்துதொடங்கி மேற் கீழ்முறைமையி லொவ்வொன்று குறைந்துவரும் அகாராதி ரூபசுத்தவித் தையாதி சிவதத்துவமைந்தையு முறைமையிலுடைத்தாம்; வித்தரிக்குமி டத்து வித்தரிக்கின்றோம். எ-று. (கூடு)

சொல்லிய கீழாலவத்தை மேலாலவத்தை யிரண்டி னையுஞ் செய்தி யிசைக்கின்றார்.

இருவகைச்சாக்கிராதியவத்தைகளியல்புதானு
மொருவுகைகீழேநோக்கியுற்பவங்காட்டுமொன்று
பெருகமேனோக்கித்தியபிறப்பறுத்திடுமியோகிற்
றருவதோர்சமாதிதானுந்தாழ்ந்துபின்சனனஞ்சாரும்.

இ-ள். யோகிற்றருவதோர்சமாதி - சாலம்ப சிவயோகசமாதி. சன னம் - அபிமதபுவனேசுர சாரூபம். மற்றதுவெளிப்பொருள். (கூசு)

முன்சொல்லிய கீழாலவத்தை மத்தியாலவத்தை மே லாலவத்தைகட்குக் காரணவத்தைகளைத் தொகு த்து வருத்துரைக்கின்றார்.

கேவலசகலசுத்தமென்றுமூன்றவத்தையான்மா
மேவுவன்கேவலந்தன்னுண்மைமெய்ப்பொறிகளெல்லாங்
காவலன்கொடுத்தபோதுசகலனுமலங்களெல்லா
மோவினபோதுசுத்தமுடையனுற்பவந்துடைத்தே.

இ-ள். உண்மை - பசுத்தன்மை. மற்றதுவெளிப்பொருள். (கூஎ)

கேவலாவத்தையி லாத்மாவினது சொரூபலக்கணந் தோய்ந்த தடத்தலக்கணஞ் சாற்றுகின்றார்.

அறிவிலனமூர்த்தனிர்த்தனராகாதிகுணங்களோடுஞ்
செறிவிலன்கலாதியோடுஞ்சேர்விலன்செயல்களில்லான்

குறியிலன்கர்த்தாவல்லன்போகத்துக்கொள்கையில்லான்
பிறிவிலன்மலத்தினேடெம்வியாபிகேவலத்திலான்மா.

இ-ள். வெளிப்பொருள். (கூஅ)

சகலாவத்தையி லான்மாவின திலக்கணஞ் சாற்று கின்றார்.

உருவினேக்கொண்டுபோகபோக்கியத்துன்னல்செப்பல்
வருசெயன்மருவிச்சத்தமாதியாம்விடயந்தன்னிற்
புரிவதுஞ்செய்தங்கெல்லாயோனியும்புக்குழன்று
திரிதருஞ்சகலமானவவத்தையிற்சீவன்சென்றே.

இ-ள். புரிவதுஞ்செய்து - விரும்புவதுஞ்செய்து. மற்றதுவெளிப் பொருள். (கூசு)

சுத்தாவத்தையி லான்மாவினதிலக்கணஞ் சொல்லு கின்றார்.

இருவினேச்செயல்களொப்பிலீசன்றன்சத்திதோயக்
குருவருள்பெற்றுஞானயோகத்தைக்குறுகிமுன்னேத்
திரிமலமறுத்துப்பண்டைச்சிற்றறிவொழிந்துஞானம்
பெருகிநாயகன்றன்பாதம்பெறுவதுசுத்தமாமே.

இ-ள். இருவினேச்செயல்களொப்பில்-மலபரிபாகாதிக்கத்தினுலேபுண்ணியபாபப் பலோபகாராபகாரங்களிலே சமபுத்தி வந்துள்ளளவில்—ஈசன்றன்சத்திதோய - சிவனது சத்திநிபாதம்வர—குருவருள்பெற்று-தேசிகனது தீக்ஷாணுக்கிரகத்தையடைந்து—ஞானயோகத்தைக்குறுகி - (சுப்பிரபேதத்திற் சொல்லியபடிக்கு) சமாதியானங்களே முன்பின்னுகப் பொருந்தி (சிவதன்மோத்தரத்திற் சொல்லியபடிக்குச் சாத்திரமுகமாய்ச் சிவனேப் பரோக்ஷஞானமாய்ப் பார்த்தல் தியானித்தல்களேப் பண்ணியென்றுமாம்)—முன்னேத்திரிமலமறுத்து- அநாதிமலமாயாகன்மங்களே விட்டு—பண்டைச்சிற்றறிவொழிந்து - மலமாயாகன்மங்களாற் பண்ணப்பட்டுத் தொன்றுதொட்டுவருங் கிஞ்சிஞ்ஞத்துவங் கிஞ்சிற்கர்த்திருத்துவத்தை நீங்கி—ஞானம்பெருகி-சருவஞ்ஞத்துவ சருவகர்த்திருத்துவரூப சிவத்துவம் விரிந்து—நாயகன்றன்பாதம்பெறுவது - சிவசத்திசமான தனது சிற்சத்தியைப் பொருந்துதல்—சுத்தமாமே - சுத்தாவத்தைதானேயாகும் எ-று.

அவத்தைகளினது முறைமை யறைகின்றும்.

சிரமத்திற் கேவலாவத்தை யென்றுஞ் சகலாவத்தை யென்றுஞ் சுத்தாவத்தை யென்றுங் காரணவத்தை மூன்று பிரகாரமாம்; அந்த மூன்றி

னுள்:—சகலாவத்தையிற் றத்துவ தாத்துவிகங்களை மேல்விதிதன் முறை மையிற் கேவலாவத்தையைக் கீழ்த்தீண்டி முறைமையிற் செல்வது கீழா லவத்தை;கேவலாவத்தையைக் கீழ்விடுதன் முறைமையிற் சகலாவத்தை யைமேற்றீண்டி முறைமையிற்செல்வது மேலாலவத்தை;கேவலாவத்தை சகலாவத்தை யிரண்டையுந்தீண்டி மத்தியா யிருப்பதுமத்தியாலவத்தை; கேவலாவத்தையைத் தீண்டாது சகலாவத்தை மாத்திரத்தைத் தீண்டி நிற்பது பிரேரகாவத்தை; கேவலாவத்தை சகலாவத்தைக ளிரண்டை யுங் கீழ்முறைமையில் விட்டுச் சுத்தாவத்தையை மேன்முறைமையிற் றீண்டி மூச்சிவத்துவாபி வியத்தி முறைமையி லுண்டாம் பொருட்டு, இருதயத்தினின்றும் புருவமத்திய துனிமட்டிற் கண்டத்தினின்றும் பிரம ரந்திர துனிமட்டிற் புருவமத்தியத்தி னின்றுந் துவாதசாந்த துனிமட்டி லோரொட்டாக விருதயத்தினின்றுந் துவாதசாந்த துனிமட்டிற்றூன் இவைகளிற் போய்த் தங்குவது நின்மலாவத்தையென்று பேர்பெற்றமே லாலவத்தை.

இப்படி காரணாவத்தை சூன்றுங்காரியாவத்தை யைந்துங் கூட்டி யெட்டுப் பிரகாரமாம். எட்டினுள் முறைமையிற் கேவலாவத்தா லக்க ணங் காண்பிப்பாம்:—விஞ்ஞான கைவல்லியத்தினறூன், பிரளய கைவல் லியத்திற்றூன், நித்திய நித்திரா கைவல்லியத்திற்றூன், சிவதத்துவத் தான மாயிருக்கும் பிரணவ பஞ்சகலாவிர்ப்பூத வதிரூக்குமை முதலிய வைந்து வாக்கொடு கலைமுதற் பிருதிவி முடிவாகிய மும்பது கலைகள் மாயை மகா மாயையி னெடுங்கத்தான், தொழிலற் றிருக்கத்தான், மலகலுஷிதனுய்த் தான்,மல கன்ம கலுஷிதனுய்த்தான்,நித்திரா முத்திரிதத்துவதாத்துவிக மலகன்ம மோக கலுஷிதனுய்த்தான், சும்மாவிருத்தல்.

சகலாவத்தா லக்கணங் காண்பிப்பாம்:—திரும்பச் சுத்தாசுத்தகலை கள் கூடச் சுத்தபெத்தமுத்தனுயு மசுத்தபெத்தனுயும் சுத்த மாயாபுவனங் களிலேயு மசுத்தமாயாபுவனங்களிலேயும் போகத்தைப் புசித்திருத்தல். நித்திய பெத்தமத்தியநித்திரா கேவல நீங்க வப்போதப்போது போகத் தைப் புசித்திருத்தலுமாம்.

சுத்தாவத்தா லக்கணங் காண்பிப்பாம்:—சுத்த சகலத்துவ மென்று மூன்சொல்லிய வபரமுத்தியும் பரமுத்தியும் அந்த விருமுத்தியின் பொரு ட்டுபோசனையுமாம்.

கேவலாவத்தா லக்கணங் காண்பிப்பாம்;—நித்திய நித்திரா கேவலப் படு முறைமையிற் பூதமைந்தும், தன்மாத்திரை யைந்தும், சீவியாதிருப் பத் தூலசரீர சம்பந்த தாத்துவிகமா யிருக்கும் வாயுக்கள் பத்தும், சூக்கு மசரீர சம்பந்ததத்துவமாயிருக்கும் வாக்காதிகன்மேந்திரியங்களைந்தும்கிரி,

உசத்தியோடு கூடிய கன்மேன்திரிய தாத்துவிகக் கிரியையென்கின்றவச ஞ்சி யைந்தும், சூக்குமசரீர சம்பந்த தத்துவமென்கின்ற ஞானேந்திரிய மைந்தும், ஞானசத்தியோடு கூடிய ஞானேந்திரிய தாத்துவிக ஞானத் துக்கு விஷயமாகிய தாத்துவிக சத்தாதி யைந்தும், தத்துவமென்கின்ற வந்தக்கரணங்களுன்றும், புருடதத்துவ மொன்றும்,ஆக மூப்பத்தைந்திற் கேளாமற் கேட்டுத் தொடாது தொட்டுப் பாராது பார்த்து ரசியாது ரசி த்து மணவாது மணந்து இலாடத்திற் சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் சாக்கிரம்.

இந்திரியம் பத்துஞ் சீவியாதிருப்ப வாயுப்பத்தும், வசனாதியைந்தும், சத்தாதியைந்தும், மனமுதலந்தக்கரண நான்கும்,புருடதத்துவமொன்றும் ஆகவிருபத்தைந்தும் நித்திரா மயக்கத்தினுலே யதுவென்பதை யிதுவென் ரூபாசமாயறிந்து கண்டத்திற் சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற்சொப் பனம்.

வாயுவொன்பதும், வசனாதியைந்தும, சத்தாதியைந்தும், மனமுதலந் தக்கரண மூன்றும்,சீவியாதிருப்பப் பிராணவாயுவும் மனோவத்தாவிசேஷ சித்தமும் புருஷதத்துவமு மாக மூன்று மினிமேல் வருஞ் சாக்கிரத்தில் வசனிக்கப்படாத வத்தினிந்தனத்தைப் பண்ணி யிருதயத்திற் சீவித்துநிற் றல் கீழாலவத்தையிற் சுழுத்தி.

சித்தஞ் சீவியாதிருப்பப் பிராணவாயுப் புருஷதத்துவ மாகவிரண் டுஞ் சரீரக் காப்புச் சூக்கும சிந்தனங் காண்பித்து நாபியிற் சீவித்து நிற் றல் கீழாலவத்தையிற் துரியம்.

பிராணவாயுச் சீவியாதிருப்பப் புருஷதத்துவ மொன்று மினிமேல் வருஞ் சாக்கிரத்திற் சுகமாய் நாணித்தினை பண்ணினே னென்பதனைற் சூசிக்கப்பட் டாந்தர சரீர தமோமாத்திரத்தை விஷயீகரித்து மவுட்டிய த்துண் மூழ்கி வேதனத்தை யொழிக் தொழியாம விருக்குஞ் சிவதத்துவ கர்ப்பநாத மணந்த கலாதி கலுஷிதமாய்ப் பண்ணி யிலிங்கத்திற்சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் துரியாதீதம்.

மேலாலவத்தா லக்கணங் காண்பிப்பாம்:-கலாதி பஞ்சகஞ்சுக புரு ஷன் பிரணவ கலேகனேந்தினுட் போதமூலாவதி சூக்குமைக்குக் காரண மாகிய சிவதத்து வமென்கிற நாதத்தோடு கூடி லிங்கத்தில் மலத்தோடு மணந்து சீவியாதிற்றல் மேலாலவத்தையிற் துரியாதீதம்; நிருவிகற்ப ஞா னமூல சூக்குமைக்குக் காரணமாகிய சத்திதத்துவ மென்கின்ற விந்து வோடு கூடி நாபியில் மாயையோடு மணந்து சீவியாதிற்றல் மேலாலவத் தையிற் துரியம்; சவிகற்ப ஞானமாதலுக் கியத்தண மாகாதிற்கும் நிரு விகற்ப ஞானமூல பைசந்திக்குக் காரணமாகிய சதாசிவ தத்துவமென்

ன்ற மகாரத்தோடுகூடி யிருதயத்திற் சித்தமூலப்பிரகிருதியோடு மணந் து சீவியாநிற்றல் மேலாலவத்தையிற் சுழுத்தி;சவிகற்ப ஞானமூல மத்தி மைக்குக் காரணமாகிய வீசுரதத்துவ மென்கின்ற உகாரத்தோடு கூடிக் கண்டத்தி லந்தக்கரணத்தோடு மணந்து சீவியாநிற்றல் மேலாலவத்தை யிற் சொப்பனம்; பிறனுடைய செவிக்குட்போய்ச் சொல்லிய முறை மையில் சவிகற்ப ஞானத்தை யுண்டாக்கும் வைகரிக்குக் காரணமாகிய சுத்த வித்தியா தத்துவ மென்கின்ற அகாரத்தோடு கூடி யிலாடத்திற் புறக்கரணத்தோடு மணந்து சீவியாநிற்றல் மேலாலவத்தையிற் சாக்கிரம்.

மத்தியாலவத்தா லக்கணங் காண்பிப்பாம்:-மூன்கண்ட புருஷனைத் தூரத்திற் கண்டு நாமசாதிகளினது மறதி மத்தியாலவத்தையிற் சாக்கிரா தீதம்;பெருமூச்சறைந்து விசாரித் தறிவோ மென்பது மத்தியாலவத்தை யிற்சாக்கிரதுரியம; மூன்கண்ட விடமாத்திரந் தோற்றுதல் மத்தியாலவத் தையிற் சாக்கிரசுழுத்தி; மூன்னவ்விடத்திற் கண்டபுருஷனிவனென்பது மத்தியாலவத்தையிற் சாக்கிரசொப்பனம்; சந்தோஷத்தோடு பார்த்துக் கட்டிக்கொள்ளுதல் மத்தியாலவத்தையிற் சாக்கிரசாக்கிரம்.

பிரேரகாவத்தா லக்கணங் காண்பிப்பாம்:-இரணவ பஞ்சகலாரூப மா யிருதயத்திருக்கின்ற சிவதத்துவ மைந்தும் கலைமுதல் வித்தியாதத்து வமேழும், மாத்மதத்துவத்துக்குள் ளந்தக்கரணநான்கும், புறக்கரண மைந் தினு ளரூபாதிக் குசிதமா யிருக்கின்ற வொன்றும், தன்மாத்திரைகளோ டொற்றுமையா யிருக்கும் பூதங்க ளைந்தினுள் நேத்திராதிக் குசிதமாயிரு க்கின்ற வொன்றும், ஆகப் பதினெட்டுத் தத்துவமுஞ் சீவியாநிற்பதுபிரே ரகாவத்தை; அத்தப் பிரேரகாவத்தையிற் றத்துவங்களினது தொழில்மு றைமை மானதப் பிரத்தியகூப் பிரசங்கத்திலே காண்பித்தோங் கண்டு கொள்க. அத்தப் பிரேரகாவத்தையி லொருபொருளைக் கண்டது சாக்கி ரம்; நிச்சயித்தது சொப்பனம்; கலந்தது சுழுத்தி; அதிலாவேசந் துரியம்; அதி லவசந் துரியாதீதம்.

நின்மலாவத்தை யென்கின்ற மேலாலவத்தாலக்கணங் காண்பிப்பா ம்:—அது வெகுபிரகாரமா யிருக்கும். அதி லொருபிரகாரங் காண்பிப்பா ம்:—புறக்கரண மூட்கரணங்களோடு கூடத் தன்னைக்காண்பது சாக்கிரம்; புறக்கரண நீங்கி யுட்கரண விருத்தி மாத்திரத்தோடு தன்னைக் காண்பது சொப்பனம்; உட்கரண நீங்கிச் சொல்லுதற் கரிதாயு மறிதற்கரிதாயுந் தன் னைக்காண்பது சுழுத்தி; தன்மாத்திரமாய்த் தன்னைக்காண்பது துரியம்; வெணுக்கொப்பச் சிவத்துவாபிவியத்திமாஞகத்துன்னைக் காண்பது துரியா தீதம்.

திரும்ப வதிலொரு பிரகாரங் காண்பிப்பாம்:— (பிண்டத்து மண்டத்து மூள்ளும் புறம்பும் அபரஞாதம் அபரவித்து பரஞாதம் பரவித்து ரூபமாய்ச் சத்தார்த்தமா யிருக்கின்ற சிவதத்துவமுதற் சுத்தவித்தை ஈறுருஞ் சிவதத்துவ பஞ்சகரூபியாரும் பிராசாத சோடச கலைகளைப் பற்றி வருவ தோரவத்தை ஞானசித்தியிற் சொல்லப்பட்டது.) மூலாதாரத்தைத் தொட்டு இருதயத்திற் பிராசாத மந்திரத்தினதற்பத்தி சாக்கிரம்.; கண்டமுதற் ரூனம்பற்றிச் சமஞ்தமாகச் சின்மாத்திராத்மா மணப்பமந்திரமட்பது சொப்பனம்; உன்மனரூபமாய் மந்திரமகாமாயையி லயித்தல் சுழுத்தி; உன்மனி சூனியந் துரியம்; உன்மனிமூலசுழுத்தித் தானத்துச் சின்மாத்திராத்மாவாகிய வாத்ம தத்துவமா யிருந்துன்மன்னியந்த துரியத்தானத்துப் பரமென்கின்ற பரமாத்மாவாகியவித்தியாதத்துவமா யிருந்து சிவத்துவாபிவியத்தி பொருந்திச் சிவமென்கின்ற சிவாத்மாவாகிய சிவதத்துவமாய் மாந்திரிகன திருத்தல் துரியாதீதம்.

திரும்பவதிலொரு பிரகாரங்காண்பிப்பாம்:—பிராசாத கலைகள்போலமூன்சொன்ன பிரகாரஞ் சிவதத்துவ பஞ்சகரூபியாய்ப் பிராசாத கலாகர்ப்பங்களா யிருக்கின்ற அகாராதி காதாந்த பிரணவ பஞ்சகலைகளைத் தொட்டிருதயமுதற் றுவாதசாந்த வியாபகப் பிரமரந்திர முடிவாகும் பஞ்சாதாரத்துச் செல்லுந் தன்னையுஞ் சிவனையுஞ் சாக்கிராதி துரியாதீதாந்த சாக்ஷிரூப பிரமாதி சதாசிவாந்த தேவதாகாரமாய்க் கண்டு அந்த அவத்தையைந்தும் விட்டுக் கடந்து போமிடத்துச் சமஞ்தத்தில் தற்காண்டல் சாக்கிரம்; தற்பரம்பார்த்தல் சொப்பனம்;தற்பரசமாவேசஞ் சுழுத்தி; தற்பரகோடியிற் ரூக்குதல் துரியம்; தானதுவானது துரியாதீதம்.

திரும்ப வொருபிரகாரங் காண்பிப்பாம்:—(ஞானசித்தியிற் சொல்லியமூலாவத்தைக்குட் காண்பிக்கப்படும். அவாந்தராவத்தா பேதம் இரவுரவாகிகளிற் காண்பிக்கப்பட்டது.) அது வருமாறு:—சாக்கிரசாக்கிரம் சாக்கிரசொப்பனம் சாக்கிரசுழுத்தி சாக்கிரதுரியம் காலபரம் அதீதம் பரதரிசனம் விச்சுவக்கிராசம் உபசாந்தம் சிவதரிசனம் சாயுச்சிய மென்னும் பேதத்தினு லிந்த மேலாலவத்தை பதினெரு பேதம். சாக்கிரசாக்கிரமுதற் காலபராந்த மாத்மசாக்கிரமுத லாத்மதுரியாதீதாந்த மாகிய வாத்மாவின தைந்தவத்தை; சாக்கிரதுரியமுதல் விசுவக்கிராசாந்தம் பரசாக்கிரமுதற் பரதுரியாதீதாந்த மாகிய பரனதைந்தவத்தை;பரதரிசனமுதற் சாயுச்சியாந்தஞ் சிவசாக்கிரமுதற் சிவதுரியாதீதாந்தமாகிய சிவனதைந்தவத்தை; சாயுச்சிய கோடிக்குட் டசதுரியமுதற் துரியகற்பனைகள் விழுந்திருக்கு மேற்போகாது. அதற்குள்:— ஆத்மசாக்கிரங் காரியவிசுவவியாத்தியென்கின்ற காரியவிசுவரூபம்; ஆத்மசொப்பனங் காரிய விசுவக்கிராசம்; ஆத்மசுழுத்தி காரிய விச்சுவோபசாந்தி; ஆத்மதுரிய மாத்மதரிசனம்; ஆத்

மதுரியாதீத மாத்மசாயுச்சியம்; பரசாக்கிரம் காரணவிச்சுவ வியாத்தியென்கின்ற காரண விச்சுவரூபம்; பரசொப்பனம் காரண விச்சுவக் கிராசம்; பரசுழுத்தி காரண விச்சுவோபசாந்தி; பரதுரியம் பரதரிசனம்; பரதுரியாதீதம் பரசாயுச்சியம்; சிவசாக்கிரம் வாசனு விச்சுவ வியாத்தியென்கின்ற வாசனு விசுவரூபம்; சிவசொப்பனம் வாசனு விச்சுவக்கிராசம்; சிவசுழுத்தி வாசனுவிச்சுவோபசாந்தி, சிவதுரியஞ் சிவதரிசனம்; சிவதுரியாதீதஞ் சிவசாயுச்சியம்; சிவசாயுச்சியஞ் சித்திக்குமபொருட்டு ஆத்மசுழுத்தி முதற் காலபராக்தர் தியானத்தானம்; அதீதமுதல் விச்சுவக்கிராசாந்தஞ் சமாதித்தானம்; உபசாந்திமுதற் சாயுச்சியாந்தஞ் சாக்ஷாற்காரத்தானம், திரும்பவதிற் பிரமாதி பாராதாந்தமாகிய வத்துக்களிலே பாராதல் நிரசித்தல் தழுவுத லாவேசித்தல் அவசமாத லென்று மொவ்வொன்றுக் கைகந்தவத்தையா யறியப்படும்.

திரும்ப முன்சொல்லிய விந்தப்பதினேரவத்தைகளோத தனக்குள் வைத்த ஞானசித்தியில் மூலாவத்தை யையிணுட் சில சிவத்துவாபிவியத்தி சூக்குமசிவத்துவாபிவியத்தி பரசிவத்துவாபிவியத்திகள் நிரமத்திலவரும்பொருட்டு மூவைந்து பதினேந்தவத்தைகாண்பிப்பாம்:—இருதயதகிற் சிவபாவனை பண்ணுமிடத்துக் குவிந்து இருதயமூலமுத லிருதயாகாசாந்தம் துவர்தசாந்தத்திற் சிவபாவனை பண்ணுமிடதது விரிந்து இருதயமுதற் றுவாதசாந்தாந்தத்தான் வியாபித்திருக்கும் பூதாத்ம அந்தராத்ம ததுவாத்ம சிவாத்ம மந்திராத்ம சாலம்ப சிவயோகங்களிலொன்றிணற்பூதாத்மாதி மந்திராத்மாந்தமாத்மாக்களோந்தில் மற்றகாலமுள்வைத்தவொனறைச் சயம்பண்ணிநிராலம்ப சிவயோகம் பண்ணுமிடத்து, இருதயமுதற் புருவமத்தியாந்த மட்டாகத் தூலசாக்கிராதி தூலதுரியாதீதாந்த மாகிய வைந்தவத்தை தூலாத்ம தூலபர தூலசிவத் தோற்றமுன்னுகத் தூல சிவத்துவாபிவியத்தி தோற்றும் பொருட்டுக் காணப்படும்; கண்டமுதற் பிரமரந்திராந்த மட்டாகச் சூக்கும சாக்கிராதி சூக்கும துரியாதீதாந்தமாகிய வைந்தவத்தை,சூக்குமாத்ம சூக்குமபர சூக்குமசிவத்தோற்ற முன்னுகச் சூக்கும சிவத்துவாபிவியத்தி தோற்றும் பொருட்டுக் காணபபடுமெ; புருவமத்தியமுதற் றுவாதசாந்தாந்த மட்டாகப் பரசாக்கிராதி பரதுரியாதீதாந்தமாகிய வைந்தவத்தை, பராத்ம பரபர பரசிவத் தோறறமுன்னுகப் பரசிவத்துவாபிவியத்தி தோற்றும்பொருட்டுக் காணபபடும்; திருமபவிதுதானே யோசொட்டாக முன்சொலவிய மூலாவதனையின தக்கிரமமாம்.

பின்னெரு பிரகாரங் காண்பிப்பாம்:— இருதயமுதற் றுவாதசாந்தாந்தமாகமுன்சொல்லிய விந்தப் பதினேந் தவத்தைகளோத் தனக்குள் வைத்த மூலாவத்தை யிருதயமுதற் றுவாதசாந்தாந்தந் தொட்ட பிரமரந்திரா

ந்தமாகப் பூதாத்மா வென்கின்ற பஞ்ச பூதங்களிலே காண்க; பஞ்ச பூதங் களோடுகோத்த பஞ்ச கலேகளிலேதான் காண்க; பஞ்ச கலேகளோடுகோத் து ஐந்துபகுப்பாய்த் தத்துவாத்மா வென்கின்றதத்துவங்களிலே தான்கா ண்க; பஞ்சகலேகளோடு கோத்தஅந்தராத்மாவென்கின்ற அதிருக்குமாதி லைகரியந்தமாகிய பஞ்சவாக்குகளிலேதான் காண்க; பஞ்சகலேகளோடு கோத்த தூலதர தூலசூக்கும சூக்குமதர சூக்குமதம சிவாத்மாவென்கின் றவகங்காரங்களிலேதான் காண்க; (பஞ்சகலேகளோடு கோத்த மந்திராத் மா வென்கின்ற மந்திர கலேகளிலே மூலவத்தை ஞானசித்தி வசனப்படி முன்புதானே காண்பித்தோம்.) இப்படிகாண்பித்த சுத்தாவஸ்தா பேதங்க ளெல்லாஞ் சாக்கிராதி துரியாதீதாந்தமாய் முன்சொல்லிய அசுத்தமாகிய கீழாலவத்தை யைந்தையு முறைமையிற் சயம்பண்ணும் பிரதிஷ்டாகா ரந் தாரணே ஷியானஞ் சமாதி சாக்ஷாற்காரமென்கின்ற வங்காங்கியோக ரூபமாகுஞ் சாக்கிரஞ் சுவப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமென்கின்ற அவத்தை யைந்தா யொன்றுயிருக்கின்ற சுத்தாவத்தை யொன்றிலேசுருக் கப்படும். (சு0)

நான்காஞ் சூத்திரம்.

முன்றாம்.

ஆ திருவிருத்தம் உகக.

ஐந்தாஞ் சூத்திரம்.

இவ் வான்மாக்களிடத்துத் தமதுமுதல் உபகாரமுணர்த்துகின்றார்.

பொறிபுலன்கரணமெல்லாம்புருடனுலறிந்தான்மாவை
யறிதராவகையேபோலவான்மாக்களேனுற்றுமெங்குஞ்
செறிதருஞ்சிவன்றனுலேயறிந்திடுஞ்சிவனேக்கரு
வறிதருஞ்சிவனேயெலலாமறிந்தறிவித்துநிற்பன்.

இ-ள். பொறிபுலன்கரணமெல்லாம்புருடனுலறிந்து - பொறி - பஞ் சேந்திரியங்க ளாகிய புறக்கரணங்கள்—கரணம் - மனுதிகான்காகிய வுட் கரணங்கள்—புலன் - விடயங்கள்—புருடனுல் - ஆன்மாவால்—அறிந்து (சித்சத்தியோடு புணர்ந்துணர்தலா லறிந்தென் றுபசரிக்கப்பட்டது)— ஆன்மாவை - பிரேரகனுகியபுருடனை — அறிதரா - காரு — அவையே போல - அந்த விருவகைக் கரணங்கள்போல—ஆன்மாக்கள்—அனேத்து

ம் - ஏல்லா விஷயங்களேயும்—எங்குஞ்செறிதருஞ்சிவன்றனுலே - எவ்வி டத்தும் பரிபூரணனு யிருக்கு மீசனுலே—அறிந்திடும் - (தூல சூக்கும பர சரீரங்களைப் புணர்த்திப் போதிப்ப) உணரும்—சிவனேக்காணு - பி ரேரகனுய்நிற்கு மீசனேப் பாரா—அறிதருஞ்சிவனே - சுவதந்திர வறிவு னுகிய வீசனே — எல்லாமறிந்தறிவித்துநிற்பன் - மூன்சொல்லிய மு றைமையிற் சகலமு முணர்ந்துணர்த்தி யிருப்பன். எ—று. (உ)

அருகன் ஈசுரனறிவிப்பனுகில் அறிவனேவர்க்கு மொ
ருபடித்தாக வேண்டுமென்ன மறுத்துரைக்கின்
றூர்.

இறைவனேயறிவிப்பானேலீண்டறிவெவர்க்குமொக்குங்
குறைவதிகங்கடத்தங்கன்மமேற்கோமான்வேண்டா
முறைதருசெயற்குப்பாருமூளரிகட்கிரவியும்போ
லறைதருநதத்தங்கன்மத்தளவினுக்களிப்பனுதி.

இ-ள். இறைவனேயறிவிப்பானேல் - சிவனே போதிப்பனுகில — ரீண்டறிவெவர்க்குமொக்கும்—இவ்விடத்து ணுர்வெல்லார்க்கு மேறுது குறையா தொத்திருக்க வேண்டும்—குறைவதிகங்கடத்தங்கன்மமேல் - அறிவின துயர்ச்சி தாழ்ச்சி புண்ணிய பாவ பாகத் தாரதம்மியத்தா லென்று நீர்சொல்லில் — கோமான்வேண்டா (ஒருகாரியத்துக் கிருகாரணங் கற்பிப்பது கற்பனு கவுரவமெனுந் தோஷம் வருமாதலால்) ஈசுவரன் அறி விப்பனென்பது சொல்லவேண்டுவதில்லே—(சத்தியம் நீசொல்லியது. அ னேகாந்திகனுயிற்று அதெப்படி ?)—முறைதருசெயற்குப்பாரும் - மந்தீ வீராதி தொழிற்கு மந்தீவீராதி பலம்பலிக்கும் பொருட்டு வேறு கார ணமாகிய பூமியும்—மூளரிகட்கு - (பக்குவமுறைமை தப்பாதலருந்) தா மரைப் பூவுக்கு—இரவியும்போல் - சூரியனுமொப்ப—ஆதி - ஈசுவரன்— அறைதருத்தத்தங்கன்மத்தளவினுக்களிப்பன் - சொல்லப்பட்ட பலவித பக்குவ சககாரி கன்மங்களேப் பின்சென் றுயிர்களேப் போதிப்பன்.எ-று.

கர்த்தா வறிவிக்க வேண்டுவதில்லேக் கன்மத்துக் கீடா
க வான்மாத்தானே யறிவனென்ன மறுத்துணர்த்
துதினூர்.

அறிந்திடுமான்மாவொன்றைமற்றுன்றுலறிதலானு
மறிந்தவைமறத்தலானுமறிவிக்கவறிதலானு
மறிந்திடுந்தன்னேயுந்தானறியாலமயானுந்தானே
யறிந்திடுமறிவனன்றுமறிவிக்கவறிவனன்றே.

இ-ள். அறிந்திமோன்மா - அறியுந்தன்மையை யுடைய வுயிர்—ஒன்றை - (சத்தமுதலிய விடயங்களி) லொருவிடயத்தை—மற்றொன்றால்- (சோத்திர முதலிய விந்திரியங்களில்) ஒரிந்திரியத்தால் — அறிதலானும் - உணர்தலானும்—அறிந்தவைமறத்தலானும் - உணர்ந்த சத்தமுதலிய விடயங்களே மலத்தோடு தமோகுணம் மருவ நினைவறுதலானும்—அறிவிக்கவறிதலானும் - அறிந்தவன் போதிக்க வுணர்தலானும்—அறிந்திடுந்தன்னையுந்தானறியாமையானும் - தன்னை நானென்று சுவசங்வேதனப்பிரத்தியட்சத்தினுற் கிஞ்சிஞ்ஞ கர்த்தாவாகி யறிந்தாலுஞ் சருவஞ்ஞையுஞ் சருவ கர்த்தாவாயுஞ் சிவனைப்போலிருக்குந் தன்னை யுள்ளபடியுணரா திருத்தலானும்—தானேயறிந்திடுமறிவனன்றும்- மலஞ் சிற்சத்தியை மறைத்தலால் மறைப்பில்லாத முத்தியிற் சுவதந்திர வறிவனலும் பெத்தத்திற் சுவதந்திர வறிவ னல்லவாம்—அறிவிக்கவறிவனன்றே - சிவன் பரதேக சூக்குமதேக தூலதேகமாகுந் திரிதேகங்களைக் கூட்டிப் போதிப்பக் கிஞ்சிஞ்ஞ னிருப்பன்றானே. எ—று. (ச)

சிவன் போதிக்கு முறைமையைப் போதிக்கின்றார்.

கருவியாற்பொருளாற்காட்டாற்காலத்தாற்கருமத்தன்ஞ
ஞருவினுலளவானூலாலொருவனுணர்த்தலானு
மருவனுயுண்மைதன்னிலறியாமைகிற்றலானு
மொருவனேயெல்லாத்தானுமுணர்த்துவனருளினுலே.

இ-ள். கருவியால் - பிரகிருதி குணதத்துவ நீங்கலாகக் கலாதத்துவமுத லிந்திரிய மீறுகுங் கரணங்களால்—பொருளால் - பூததன்மாத்திரை முதலிய தத்துவத்திலித்த தாத்துவிக மாலே சந்தன மகளிர் முதலிய போக்கிய வத்துவினுல்—காட்டால் - சூரியப் பிரகாசமுதலிய வொளியால்—காலத்தால் - நியதியனேயாகுஞ் சூக்கும காலதத்துவப் பிரேரண சகாய தூலகாலதத்துவ காரியமாகிய செல்காலம் நிகழ்காலம் வருங்கால மென்கின்ற காலத்தால்—கருமத்தன்னுல் - புண்ணிய பாவமென்கின்ற வகிருட்டத்தால்—உருவினுல் - (கருவியாலென்பது சூக்குமதேகத்தாலென்று பொருளாகையால், உருவினுலென்றது) தூலசரீரத்தால் —அளவால்- (கருவியாலென்றது கொண்டு பொருள் மறைப்புப் பொருந்தாத கருவிகலக்குஞ் சிற்சத்திப் பிரத்தியகஞ் சித்தித்தலால் இவ்விடத்தளவினுலென்பது) பொருண்மறைப்புப் பொருந்திய சருவிகலக்கு மிலிங்கஞ் சேர்ந்த) சிற்சத்தி யனுமானத்தால்—தூலால் - பொருள் மறைப்புப் பொருந்துங் கருவிகலக்குஞ் சத்தஞ் சார்ந்த சிற்சத்தியாகு மாகமத்தால்—ஒருவனுல் - ஆகமத்தடங்கு மூலோக வாதத்தால்—உணர்த்தலானும் - போதித்தலானும்—உண்மைதன்னிலருவனையறியாமைகிற்றலானும் - கேவல

த்துத் தூல சூக்கும பர தேகங்க ளில்லாதிருக்கவுஞ் சுவதந்திர வறிவஞ ய்த் தோற்று திருத்தலானும் (சிவன் முத்தி வியத்தி பண்ணுமிடத்துக்க ருவியின் மறையாது பண்ணி யுணர்த்தி நிற்றலானு மென்று பொருள்)— ஒருவனே - ஒப்பற்ற சிவனே —எல்லாத்தானும் - சொல்லிய கருவி மு தலியவற்றால் —அருளினாலே - அவற்றின் மறைந் தவற்றைச் செலுத்து ஞ் சிவசித்தியால்—உணர்த்துவன் - போதிப்பன். எ—று. (டு)

சிவன் கலாதத்துவாதி கருவிமுதலிய விளக்குக் கல ப்பின்றி நின்மல சிற்சத்தி மாத்திரத்தாற் சுவதந் திர வறிவஞ யிருப்பனென்பது தோற்றுவிக்கின் ருர்.

கருவியும்பொருளுங்காட்டுங்காலமுங்கன்மந்தானு
முருவமுமளவுநாலுமோருவனுமுணர்த்தலின்றி
யருவருபகிலமெல்லாமறிந்தவாபாக்கிவேறு
யொருவனையுயிர்கட்கெலாமுயிருமாயுணர்த்திநிற்பன்.

இ-ள். *வெளிப்பொருள். (சு)

சிவன் தெத்தசித்துக்களைச் சேட்டித்தாலும் மாயைமு தலிய சடபதார்த்தத்தோடு விகாரதோஷமு ம சேதனதோஷமும் வருமாதலாற் சங்யோக சம்பந் தியா யிரான்; மாயைமுதலிய வத்துவு மவனி டத்தசேதனதோஷம் வருமாதலாற் சமவாய சம் பந்தியா யிராது; விகாரதோஷமு மேகாற்மப் பிர சங்கமு முறைமையில் வருமாதலா லாற்மாக்களி டத்து மவ்விருவகைச் சம்பந்தியா யிரான்; காந்த ஞ் சன்னிதி மாத்திரத்தா லிரும்பிற்போற் சித்த சித்துக்களைத் தொடாது சங்கற்ப சத்திரூப விஷ யீகரித்தலாகிய தனது சன்னிதி மாத்திரத்தாற் சித்தசித்துக்களிற் காரியங் காணுமென்று செப்பு கின்ருர்.

இறைவன்றன்சன்னிதிக்கணுலகின்றன்சேட்டையென்னு
மறைகளுமறந்தாய்மாயைமருவிடான்சிவனவன்கண்
ணுறைதரா தசேதனத்தா லுருவுடையுயிர்கட்கெல்லா
நிறைபரன்சன்னிதிக்கணீடுணர்வுதிக்குமன்றே.

இ-ள், வெளிப்பொருள். (எ)

சரீரிகட்கே கர்த்திருத்துவங் காண்பதெலாம் சரீரமில்லாத பரசிவனுற் பிரபஞ்சங் காரியப்படு முறைமை யெப்படியென்ன, ஆற்மாவினது சங்கற்ப மாத்திர சன்னிதானத்தாற் றனுசரீரத்தில்நடத்தலிருத்தல் முதலிய காரியங் காணப்படும். அது போலச் சிவனது சங்கற்ப மாத்திர சன்னிதான த்தாற் றனது சரீரமாக வுபசரிக்கப்பட்ட பிரபஞ்சத்திற் சிருட்டிமுதலிய காரியங்கள் காணப்படு மென்றும், பின் னந்தச் சிருட்டி முதலிய சிருத்தியஞ் சிவனிடத் தசைதலில்லாமற் பிரபஞ்சத்திலசைதலாய்த் தோற்றுதேதனமென்றுஞ்சொல்லுகின்றார்.

உலகமேயுருவமாகயோனிகளுறுப்பதாக
விலகுபேரிச்சாஞானக்கிரியையுட்கரணமாக
வலகிலாவுயிர்கட்கெல்லாமிருபயனுகவைத்து
நலமிகுதொழில்களோடுநாடகநடிப்பனதன்.

இ-ள். உலகமேயுருவமாக - தாத்துவிக சூக்குமதேக தத்துவ புவன பௌனதேகச் சிறப்புப் பொதுச்சிறப்புப் பிரபஞ்சமே யுபசார கற்பனை காட்டிய தூலசரீரமாக, அல்ல தந்தப் பிரபஞ்சத்துப் பரந் தப்பிரதேசத்திருக்கு மிச்சிகை தீபிகை ரோசிகை மோசிகை ஊர்த்துவகை யாகித் திவ்வியலிங்கத் திருக்கு நாதாந்த சூக்குமாதி சத்திகலாகர்ப்ப வபரநாத பஞ்சகலா புஞ்சமேதான் உபசார கற்பனைகாட்டிய தூலசரீரமாக, அல்ல தந்த விருசரீரோபாதியுற்ற வீசானி பூரணி யார்த்தி வாமை மூர்த்தி யென்கின்ற வட்டத்திறிங்சற் கலாபேத பஞ்சசத்தி கலேயேதான் உபசார கற்பனைகாட்டிய தூலசரீரமாக—யோனிகளுறுப்பதாக - தேவ நர மிருக பசு பட்சி முதலியவற்றிற்றூலசரீரங்க ளுபசார கற்பனை காட்டிய புறவுறுப் பவயவங்களாக, அல்ல தவ்வுறுப்புபாதியுற்ற அனந்த சத்திகளேதான் உபசார கற்பனைகாட்டிய புறவுறுப் பவயவங்களாக, வியாபினி வியோமரூபை யனந்தை யனுதை யனுசிருதை யாதியதிவ்வியலிங்கத்துச்சத்திருக்கு மபரநாத பஞ்சகலா புஞ்ச முபசார கற்பனை காட்டிய புறக்கரணங்களாக, அல்ல தந்த வித்திரியோபாதியுற்ற ஆரணி சேனனி ரோதயித்திரி யென்கின்ற திரிசத்தி கலைகளேதான உபசார கற்பனை காட்டிய புறக் கரணங்களாக—இலகுபேரிச்சாஞானக்கிரியையுட்கரணமாக - திவ்விய லிங்கத்துச்சத் தாச்சி யிருக்குஞ் சமனுகலே யுபசார கற்பனைகாட்டி

ய அந்தக்கரணமாக, அல்ல தந்தச் சமனுகலே யுபாதியுற்ற வாதிசத்தி முன்பின்னுகப் பிரகாசித்துப் பெரிதாகு மிச்சாசத்தி ஞானசத்தி கிரி யாசத்தி கிரிகலா புஞ்சந்தான் உபசார கற்பனை காட்டிய அந்தக்க ரணமாகப் புறக்கரண முட்கரண மிரண்டுஞ் சூக்குமதேகமாதலால் உ ன்மனை யுபசார கற்பனைகாட்டிய பரதேகமாக, அல்ல தந்த வன்மனை யு பாதியுற்ற பராசத்திதான் உபசார கற்பனை காட்டிய பரதேகமாக, இப் படி விசுவசரீர வயிந்தவசரீர சாத்தசரீரத்திஞல்—அலகிலாவுயிர்கட்கெ ல்லாமிருபயனுக - எண்ணிறந்த வான்மாக்களுக் கெல்லாம் பக்குவாபக் குவம் பார்த்துப் புத்திமுத்திக ளுண்டாகும் பொருட்டு — ஐந்தலமிகு தொழில்களோடுகூடகடிப்பனுதன் - சிவன் பஞ்ச கிருத்திய நிருத்தம பண்ணுவன். எ-று. (ல)

சிவன் அவ்வாற்மவர்க்கத்துக்கு மலத்தின தபக்குவம் பக்குவம் பார்த்து முறைமையிற் சிற்றறிவு பேர றிவு சிற்சத்தியில் விளங்கப்பண்ணி முறைமையிற் போகமோக்ஷங்களைப் புணர்த்துவனென் றுணர்த துணர்.

தெரிந்துகொண்டொரோவொன்றுகச்சென்றைந்துபுலனும
புரிந்திடுமுணர்வினேடுபோகமுங்கொடுத்தியோனி [பற்றிப
திரிந்திடுமதுவுஞ்செய்துசெய்திகண்டுயிர்கட்கெல்லாம
விரிந்திடுமறிவுங்காட்டிவீட்டையுமளிப்பன்மேலோன்.

இ-ள். ஒரோவொன்றுக - ஒவ்வொன்றுக— தெரிந்துகொண்டு - வி சாரித் தையந்திரிவற்ற வறிவுக்குக் கிரகிக்கும்படி பண்ணி—சென்றைந் துபுலனும்பற்றி - பஞ்சேந்திரியவழி யறிவுவிளங்கச் சத்தப் பரிச ரூப ரச கந்தங்க ளோடு சம்பந்தித்து—புரிந்திடுமுணர்வினேடு - மாலையிது சந்த னமிது வனிதையிவள் பாம்பிது தேளிது முள்ளிது விடமிது உதிரமிது என் றெண்ணெண்ணிற் பண்ணிடும் புறத் தத்தியவசாயத்தி னதிதங்சிச புத் திவிருத்தி சிதங்சிச சிற்சத்தி விருத்தி மிச்சிர சிற்றறிவோடு—போகமு ங்கொடுத்து - (திரும்ப வதனைப் புத்தியில், மாலைமுதலானவற்றி லொவ் வொரு வத்துப் பிரதிவிம்பத்தாற் பரிணமித்த சுக துக்க மோகங்களிற் சுகமிது துக்கமிது மோகமிது வென் றுட்சுகதுக்கமோகமயமாய் வரு மூள் னத்தியவசாயத்தினது சிதங்சிச சிற்சத்தி விருத்தி யசிதங்சிச புத்தி விருத்தியி லழுந்தி வித்தியாதத்துவ மாத்திரத்தோடு இளம்பி யதின்மேல் விழுந்து பிரிக்கரிதாய் விளங்குஞ் சிற்சத்தி விருத்தி விளங்குதலாயிய) போகத்தையுங் கொடுத்து—விரிந்திடுமெறிவுங்காட்டி - (சருவஞ்ஞத்துவ சருவகர்த்திருத்து வலக்கண சிவத்துவரூப சிற்சத்திவிருத்தி யென்கின்ற)

பேரறிவு பெருந்தொழில்களே விளக்கி—வீட்டையுமளிப்பன் - தனக்கொப்பாகிய மோகூத்தையுங் கொடுப்பன். மற்றதுவெளிப்பொருள். (அ)

கூடகாரியம் பண்ணுமிடத்துக் குலாலனுக்குத் தண்ட சக்கிராதிபோலச் சிவனுக்குப் போகமோகூகாரியம் பண்ணுமிட்த்துப் பின்னகரண மில்லைச் சகச சத்தியே கரணமென்று சாற்றுகின்றார்.

அருளதுசத்தியாகுமரன்றனக்கருளியின்றித்
தெருள்சிவமிலையந்தச்சிவமின்றிச்சத்தியில்லை
மருளினையருளால்வாட்டிமன்னுயிர்க்களிப்பன்கண்கட்
கிருளினையொளியாலோட்டுமிரவியைப்போலவீசன்.

இ-ள். அரன்றனக்கு - சிவனுக்கு—அருளது - மலமுத்தி சிவத்துவவியத்திரூப வனுக்கிரக கிருத்தியமாவது—சத்தியாகும் - சிவனதுசாமர்த்தியமாம் (சத்தியின தருளாகிய தொழில் சத்தியாகாதாதலால், ஆகுபெயராக்கி) அருளை - அனுக்கிரக கிருத்தியத்தை (பண்ணுமது சத்தியெனறு தொகைப்பொருள் விரித்துப் பொருள்கொள்க)—அருளியின்றித் தெருள்சிவமில்லை - பிறபொருட் பிரகாசமாகிய தீபசத்தியே தற்பொருட் பிரகாசமாகிய தீபமாயுமிருத்தல்போற் றுதாற்மிய சமவாய சம்பந்தினியாய்ப் பிறபொருளறிவாகிய சத்தியே தற்பொருளறிவாகிய சிவமுமாயிருத்தலா லவ் வனுக்கிரகத்தைப் பண்ணுஞ் சத்தியினின்றும் பிரித்துப் பக்குவாற்ம சிற்சத்தியின தறிவுதொழில்களைத் தனது சத்தியாகிய கரணதா லலர்த்துஞ் சிவமெனு மொருபொருள் தரிசிப்பதின்று—அந்தச்சிவமின்றிச்சத்தியில்லை - (தற்பொருட் பிரகாசமாகிய தீபமே பிறபொருட் பிரகாசமாகிய தீபசத்தியுமாயிருத்தல்போற் றுதாற்மிய சமவாய சம்பந்தியாய்த் தற்பொருளறிவாகிய சிவமே பிறபொருளறிவாகிய சத்தியாயுமிருத்தலால்) அந்தச் சிவத்தினின்றும் பிரித்துச் சத்தியெனு மொருபொருள் சாதிப்பதின்று (இப்படியிருக்குஞ் சத்தியே கரணமென்று சாதித்திருத்தலால்)— கண்கட்கிருளினையொளியாலோட்டு மிரவியைப்போல—ஈசன் - சிவன்—மன்னுயிர்க்கு - நிலைபெற்ற பக்குவாற்மாவினது சிற்சத்தியாகிய திருட்டிக்கு—அருளால் - அனுக்கிரகசத்தியால்—மருளினைவாட்டி - மறைக்கு முறைமையுடைய மலசத்தியைத் திரும்பு முறைமையுடையதாகச் செய்து (இருளீக்கத்தாற் கண்ணொளி காண்பதுபோலென்ப தேகதேசவுவமை, விம்பத்திருத்தியமின்றி யொளிகாணப்படுதலால், ஏன்றதில் விருப்பமின்றிப் படலமுத்தி திருத்திய மாத்திரத்தாற் காணுதிருந்து பின்பு வாசனமுத்தி தேசோபவியத்திகளே முறைமையி லுண்டாக்கும் அஞ்சன சேவோத்தேசன திருத்தியத்தாற் கண்ணொளி விளங்கிக்

காணப்படு மதுபோல வென்பதே முற்றுவமை யென்றெண்ணி மலமுத்தி மாத்திரத்தாற்காணுதிருந்து மலவாசனைமுத்தி சிவத்துவாபிவியத்திகளைச் சர்ப்பகஞ்சுக முத்தி சர்ப்பசரீரவியத்திபோற்சடதிமுறைமையிலுண்டாக்கும்யோசனைகுதியோடு தத்தவியத்தி யாகுதி திருத்தியத்தாற் சிவத்துவம் விளங்கிக் காணுமென்று கழறுகின்றார்)—அளிப்பன (என்று) - விரிந்திடு முணர்வுங்காட்டிவீட்டையுமளிப்பன் என்றுமுன்சொல்லியபடி மலமுத்தி திருத்தியத்திற்பின் வாசனைமுத்தி சிவத்துவவியத்திகளைத் தூல சூக்கும பர தாரதம்மியக் கிரம திருத்தியத்தாற் பெருந்தொழில் பிரியாதபேரறிவு பெருக்கிச் சிவத்துவ விளக்கஞ் செய்வன். எ-று. (கூ)

ஐந்தாஞ் சூத்திரம்

ழ ற் றி ற் று.

ஆ திருவிருத்தம் உசக.

ஆருஞ் சூத்திரம்.

இபபடி யுபகரிக்குஞ்சிவம் அறியப்படும் பொருளோ வன்றுவென விரண்டுபக்கமு மிசையாதெனவி சைக்கின்றார்.

அறிவுறும்பொருளோவீசனறிவுறுதவனேவென்னி
லறிபொருளசித்தசத்தாமறியாததின்றுமெங்குஞ்
செறிசிவமிரண்டுமின்றிச்சித்தொடுசத்தாய்நிற்கு
நெறிதருஞ்சத்தின்மூன்னரசத்தெலாநின்றிடாவே.

இ-ள். ஈசன் - சிவன்—அறிவுறும்பொருளோ - (சாத்திய சிவயோகியாகுஞ் சிவாகமிக்கப்பிரத்தியக்ஷக்குறிப்போக்ஷலக்கண ஞானத்தால், சித்தசிவயோகிக்குப் பிரத்தியக்ஷக்குறி யபரோக்ஷ லக்கண சாக்ஷாற்கார ஞானத்தால்) அறியப்படும் பதார்த்தமோ—அறிவுறுதவனே - அறியப் படும் பொருளல்லவோ—என்னில் - என்று வினவில் (இவ்விரண்டு பக்ஷத்துள்)—அறிபொருள் - அறியப்படும் பொருள்—அசித்தசத்தாம் - அசித்தாம் - சடமாம்—அசத்தாம் - (சுத்தமாயை சுத்தமாயையினது காரியமென்கின்ற காரண காரியப் பொருள் சுத்தமென்று சொல்லப்படு மாகிலுஞ் சித்தைக்குறித்து அதுவுமசுத்தமாதலால்) அசுத்தமாம். (அசத்தென்பதற்கு இவ்விடத்து அசுத்தமென்று பொருளுரையாது, அசத்தியமென்று பொருளுரைகில் வேதாந்தமாய்விடும். அசித்தியமென்று பொருளுரைக்

இல் அறியப்படும் பொருளாகிய மாயை மலம் மகாமாயையெனும் பரமகா
ரணப்பொரு ளறியப்படுதலாலஃதியமாய்விடும்.)—அறியாதனின்றும்-
அறியப்படாதபொருள் முக்காலத்தில்லா முயற்கோடுபோல வசத்திய
மாம்—எங்குஞ்செறிசிவம் - எல்லாப்பொரு ளுள்ளும்புறம்பும் வியாபித்
திருக்கு நிருபாதிகாற்ம வர்க்கமாகுஞ் சிவம் சிவமாஞ்சிவம் வியத்தியத்
துவைதத்தா லிருசிவம் ஒப்பாகுஞ் சாத்தியத்துவைதத்தா லொருசிவம்—
இரண்டுமின்றி - அறியப்படும்பொரு ளறியப்படாத பொருளன்றி—சித்
தொடுசத்தாய்நிற்கும் (நிற்குமென்ப தறியப்படுமென்று பொருள். சிவ
யோகியல்லா வுலகத்தாரிடத்தில் மலகன்மமாயாகாரிய கலாபுத்தியாதி
கலோபாதி மகாமாயா காரிய வாக்குக்கலோபாதிபற்றி யதுகங்கையிது
காவேரி யறிபவ னது வீது வல்லாதான் தேவதத்த னென்பது முதலா
யுதிக்குஞ் சவிகற்ப ஞானமெனுஞ் செயற்கைச் சிற்றுச்சுட்டறிவிற் சற்று
ந்தோன்றுதிருந்தாலுஞ் சித்தசிவயோகிபோற் சித்தசிவயோகியாய்ச்சருவ
பதார்த்தமுஞ் சாக்ஷாற்கரித்துப் பார்க்க விச்சிக்குஞ் சாத்திய சிவயோகி
யிடத்திற் கண்ணெளிமுதலிய காரணமுதற் புறக்கருவிப் பிரத்தியக்ஷ மி
சையாது. சிவாகமவெழுத்துக் கண்ணிசைவுபற்றி மலவிருள்மறைப்பக் சி
றிது சிந்துங் கலிலிளக்குமுதலிய வுட்கருவிபொருந்தி சிவசத்தி பீத்
தழற் சிவாகமவாக்கியப் பொருள்வழி செல்லுஞ் சிவசத்திவிளகிய பிரப்
பிரமாண சிற்சத்தியினது செயலாயுங் கனதசெயற்கைச் சிற்றுச்சுட் மி
வினு ளற்றற்றுச் சுட்டுவிட்டுச் சுருங்கி விரிந்துதிப்பதாயும், பிரத்தியக்ஷ
மல்லாப் பரோக்ஷமென்று வடமொழிபடிக்கும் படர்க்கைச் செயற்கைப்
பேறறிவாயும், நாதப்பிரகுதிச் சுத்தவித்தை சுத்தகலைகளே யுள்ளுறைசோ
தியாய் வைத்த புத்தியகங்காரங்களினது போதகருவுப பிரவாகந்தோய்ந்
தசவிகற்பமாயிருக்கு மறிவிற் பசிதாகமணமுதலிய பொருள்போல அது
வீது நானென்றுதிக்குஞ் சிற்றுச்சுட்டறிவினுற் சுட்டி யறியப்படாதாகி
லும், அத்தப் பசிதாகமணமுதலிய பொருளிதுபசி யிதுதாக மிதுமணமெ
ன்றெருபிரகாரம் புரித்தறியாம லறியப்படுமதுபோல, அதுசிவம் நான்
சிவமென்றெரு பிரகாரம் புரித்தறியப்படும் பொருளே யறிபொருளாய்ப்
பரோக்ஷமாய்க் குருப்போதிக்கக் கேட்டுச் சிந்தித் தறியாமலறியப்படும்.
சித்தசிவயோகிக்குச் சிவசத்திமனத்துணைச் சிற்சத்தி சாத்தியத் தியான
முற்றிய சமாதிமுகிழ்க்குஞ் சாக்ஷாற்காரத்தில், அபபடி நிருசியமின்றிச்
சித்திருக்கிருத்து ரூபமா றியப்படும். நீசொல்லிய தெல்லாஞ்சொ
ருள்தானே, சூக்குமவிசாரத்தா லூகிக்கப்பட்டது; அதில் முத்தாத்மாக்
களுக்குஞ் சிவசமசாமர்த்தியஞ் சித்தித்திருத்தலாற் பஞ்சகிருத்திய கர்த்
திருத்துவங் காணப்பட்டது; இப்படி சகத்துக்கீசுர ரனேகரா யிருகே
சுரவாதியானீர் நீர். சத்தியமே நீசாற்றியது, சிவனியமபோ சாதிகாரசத்
தி சாமர்த்தியங்களைக் கிரமத்திற் பிரத்தியக்ஷமும் பரோக்ஷ மறை யறி

டத்து முத்தாத்மாக்களாலு மடையாதிருக்கப்படாது. சிவனடைந்துபஞ் சகிருத்தியம் பண்ணுமிடத்து முத்தான்மாக்களுக்குச் சங்கோசமில்லாச் சிவசமசாமர்த்திய சங்கற்பங்க ளிருத்தலாற் றங்கள் சத்திசாமர்த்திய சங் கற்பங்களைச் சுருக்கி யொதுக்கி வர்ச்சிக்கப்படா தாகையால் பண்ணுவார் கள்; அதில் விசேஷமேதென்னில், முத்தாத்மாக்களுக்குச் சித்திக்குங்கிரு த்திய கர்த்திருத்துவம் அவர்ச்சனீய சங்கித்த பஞ்சகிருத்திய கர்த்திருத் துவம்; சிவனுக்குக் கிருபாசங்கித்த பஞ்சகிருத்திய கர்த்திருத்துவம்; அவ்விருகர்த்திருத்துவங்களு மொதுதப் பொருந்தாதிபொருந்திப் பிரதக் குப்பிரதத்ளை பின்னவிஷம சங்கற்பாதி காரியத்துவங்களின்றியிது இப் படியாகக்கடவதென்று அபிரதக்குத் துல்லிய சங்கற்பாதி காரியத்துவங் களா யேகீபாவமாகா தேகீபாவங்களா யிருக்கும்; அதனால் நவ நிதுவாகக் கடவது புராணமிதுவாகக்கடவதென்று பின்னசங்கற்ப மில்லாமையால், அனேசேசுர வாதத்துக் காஸ்பதமேயில்லை; சகற்கர்த்தாச் சிவனொரு வனே முத்தாத்மாக்கள் சகற்கர்த்தாக்களா யிருந்தாலும் பின்னசங்கற் பப் பிரவிருத்தி யில்லாமையாற் சகற்கர்த்தாக்க ளன்றென்றுணர்ந்திக்கப் படும். அப்படியே,

"ஆரணவுருவாந்நில்லையம்பலங்காணப்பெற்றே
ரோருணாவாவவொன்றுமொன்றலரொன்றாரல்லா
காரணராகாரொத்தகருத்தினர்நிருத்தவின்பப்
பூரணரவர்கள்வாழும்புவனமும்பொதுவாமன்றே."

என்று கோயிற்புராணத்துஞ் சொல்லப்பட்டது. "எம்மையொத்திடுஞ் சிவானுபூதிமுத்தியம்பலத்தேயுண்டாம்" என்றுவாதவூரர் புராணத்துஞ் சொல்லப்பட்டது. "தம்மைபபோலத தம்மடியார்க்கு மின்பளிப்பன்" என்று பிள்ளையார் தேவாரத்தும் பாவனபலஞ் சொல்லப்பட்டது. இத் தொடுசெத்தாய்நிற்குமெனபதற்கே செப்பிய உளாவிரி வமையும் மேலுளா ப்பாம்—நெறிதருஞ்சுத்தின்முன்னர்-முத்திவழிகாட்டுஞ்சிவசன்னிதானத் திலே—அசத்தெலலாம் - அசித்தசுத்தப் பிரபஞ்சமனைத்தும்—நின்றிடா வே - சிவனைக்குறித்துச் சொரூபமாத்திமாயு முபாதியுற்ற வுயிர்களைக் குறித்துப் போக்கியமாயும் போசகமாயும், சிவனுலே பிரபஞ்சத்திற்கிருட் டிமுதலிய பஞ்சகிருத்தியம் பண்ணும்பொருட்டு, அறியப்படாதது பண் ணப்படாதாகையா லறியபபட்டிருந்தாலுஞ் சிவனைக்குறித்துப் போக்கிய மாயும் போசகமாயுஞ் சிருட்டிமுதலிய பஞ்சகிருத்திய பாத்திரமாயும், அறியப்படாதுதானே. எ-று.

இபபடி பொருளுரைப்பதின்றிச் சிவசன்னிதானத்திலே நில்லாது, ஒருபிரகாரத்திலேயுஞ் சிவனுலறியபபடாதென்று பொருளுரைத்

தாற் சிவனுக்குப் பஞ்சகிருத்திய கர்த்திருத்துவமாகிய சகற்கர்த்திருத்துவ மதனல்கிருபாதிகச் சுவரூபமாய்ச் சித்திக்குஞ் சருவஞ்ஞ கர்த்திருத்துவ மிரண்டுமின்றிச் சடபதார்த்தத்திக் கோத்துச் சிவமெனும் பதார்த்தஞ் ஞானியமாய்ச் சருவசாத்திர விவகாரங்களஞ் ஊமித்துப்போம். (க)

அறிபொருள் சித்தாதலால் அறியப்படும் பொருள் அசித்தென் றிசைக்கின்றார்.

ஆவதாயழிவதாகிவருதலாலறிவுதானுந்
தாவலாலுலகுபோகந்தனுகாணந்திபாயி
மேவலான்மலங்களாகிவிரவலாலிவ்வுயிர்கி
யோவலாலசித்தாஞ்சுட்டியுணர்பொருளாவெல்லாம்.

இ-ள். அறிவுதானுந்தாவலால் - உணர்வுவிட்டுபோதலால் (விஷயீகரித்தலாலென்றுமாம்) உலகு—புவனம். போகம் - போக்கிய பதார்த்தம். தனு - தூலதேகம். காரணம் - சூக்குமதேகம். மலங்களாகி - மாயாமலங்களாகி. மற்றதுவெளிட்பொருள். (உ)

இதுவுமது.

மண்டனில்வாழ்வும்வானத்தரசயன்மாலார்வாழ்வு
மெண்டருபூதபேதயோனிகள்யாவுமெல்லாம்
கண்டவிந்திரசாலங்கள்கனாக்கழுதிரதங்காட்டி
யுண்டுபோலின்றும்பண்பினுலகினேயசத்துமென்பர்.

இ-ள். கழுதிரதம் - கானல், இந்திரசாலமுதலியவிவைகள் (தங்கள்தங்கள் சுவரூபங்களே) உண்டுபோற்காட்டி—இன்றும்பண்பின் - பொய்யாந்தன்மைபோல— மண்டனில்வாழ்வுமுதலியவெல்லாம்— உண்டுபோலின்றும்பண்பின் - உற்பவித் தெப்போது நீலிபெற்றிருப்பதுபோலிருந்து சடதிராசமாதலாற் (பொய்போற் புரிப்பதுமாத்திரம், மெய்யென்று விவேகித்தறியா வேதாந்திகள்) — உலகினேயசத்துமென்பர் - (சைவசித்தாந்திக ளியற்கையாற் சத்துச்சத்தியமென்னும்) பிரபஞ்சத்தை யசத்து சத்திய மென்பார்கள். எ-று. (ஊ)

சிவ மொருபிரகாரத்தினுலு மறியப்படாத பொருளென் றுரைப்ப மறுத்துணர்த்துகின்றார்.

உலகாதபொருள்சத்தென்னிலொருபயனில்லைத்தானும்
புலராதுகாமுஞ்சென்றுபொருந்துவதின்றுமென்றுஞ்

தணவாதகருமமொன்றுந்தருவதுமில்லைவானத்
திணராபூந்தொடையமைக்கெழுமையிர்க்கயிறும்போலும்

இ-ள். உணராதபொருள்சத்தென்னில் - சிவமறியப்படும் பொருளன்றென்று சொல்லில்—ஒருபயனில்லை - போகமோக்ஷங்கள் வந்து பொருந்துவதின்று — ஞானம் புணராதாமுஞ்சென்று பொருந்துவதின்றும்- சிவந் தானுந் ஞாத்ருகோத்த சிவசாதியாகக்கடவர்களென்று சங்கற்பிப்பதுமின்று மாபுமொர்தொரு சிவசாதியாவ தின்று—தணவாத கருமமொன்றுந்தரு மதுமில்லை - நித்திய கன்மானுட்டானங்களைக் கற்பிப்பதுமின்றியிடை விடாது பஞ்சசிருத்தியம் பண்ணுவதுமின்று—ஆகாசப்பூமாலை ஆமைமயிர்க்கயிறுபோலும் குணியர்பொருளாம். எ-று. (ஏ)

வேதாந்தவிசேஷங்கள் பிரமம் அநிர்வசனீயமென்று
சொல்லமுடிதணாததின்றோ.

தத்துவஞ்சதசதத்துச்சதசதத்துமன்றென்றுலென் [றில்
னுய்த்துணர்ந்துண்டோவின்றேவென்றவர்க்குண்டெனேறு
வைத்திடுஞ்சத்தேயாகமனத்தொடுவாக்கிறந்த
சித்துருவதுவசித்தாமனத்தினுற்றோர்வதெல்லாம்.

இ-ள். தத்துவம் - பிரமம்—சத்தசத்துச்சதசத்துமன்றென்றுலென்- நீர் சத்தென்று சொல்லுஞ் சிவமுமன்று அசத்தென்று சொலலும்பிரபஞ்சமுமன்று சதசத்தென்று சொல்லு மாற்மாவுமன்றென்று அநிர்வசனீயமாய்ச் சொல்லிற் குற்றமேது—(அப்படி அநிர்வசனீயமாயப்பிரயோசனமா யொருபொருளிராது) உய்த்துணர்ந்து - விசாரித்துப்பாத்து—உண்டோவின்றேவென்றவர்க்கு - அந்த அனிர்வசனீயமாகும் பிரமம் உள்ளபொருளோ வில்லாதபொருளோ வென்று கேட்டவர்க்கு—உண்டென்றேதில் - (இல்லையென்றுல் முயற்கொம்பொக்குமென்று) உள்ள பொருளென் றுரைக்கில்—வைத்திடுஞ்சத்தேயாக-சத்தாகிய சிவ மதுவேயென்று சாற்றப்படும்—(அச்சிவ மிந்திரியப்பிரத்தியக்ஷ மில்லாதிருந்தாலுமானதப் பிரத்தியக்ஷ மாகாதோவென்ன ஆகாதென் றறைகின்றுர்) சித்துருவது - (முன்சொல்லிய பிரகாரத்தாற் சிவசத்திவிளக்குவிளக்குஞ் சிற்சத்திச் சிற்பிரத்தியட்சமாம்) அந்தச் சிவமுதலிய சிற்பொருள் சிற் சொரூபம்—மனத்தினுற்றோர்வதெல்லாம் - சமூலப் பிரபஞ்ச காரணங்களுடனே கூட்டமெல்லாம்—அசித்தாம் - சடரூபமாம். எ-று. (ஐ)

முன்பு செப்பியதுதன்னைத்தானே சிறிதுசிறப்பித்துச்
செப்புகின்றுர்.

அறிபொருளசத்தாய்வேறுமறிவுறுப்பொருள்சத்தென்னி
லறிபவனறியாஞிலதுவின்றுபயனுமில்லை
யறிபவனருளினலேயனனியமாகக்காண்பர்
னறிபொருளறிவாய்வேறுயறிவருளுருவாய்நிற்கும்

இ-ள். அறிபொருளசத்தாய்வேறும் - அறியப்படும்பொருள் அசுத்த மாயசித்தாம்—அறிவுறுப்பொருள் - அறியப்படாத பொருள்—சதத்தென்னில் - சுத்தசித்துச் சிவமென்னில்—அறிபவனறியாஞில் - சாத்தியசிவயோகி சித்தசிவயோகியா யறியுந்தன்மையுடைய வான்மா, சிவத்தையறியாதிருந்ததாஞல்—அதுவின்று-அச்சிவமாகாயப் பூப்போற்போம்—பயனுமில்லை - அச் சிவங்கொண்டு பெறும் போகமோக்ஷங்களு முயற்கோடுகொண்டுழுத பூமியிற் பயிர்ப்பலம்போற் போம்—அறிபவன் - காரணகலாப மிதுவென்றறிந்து கைக்கொண்டு போகமோக்ஷங்களைச் சாதிக்கும் புருஷன்—அருளிஞலே - (இலக்கணையினுலிசைத்தலால் ஞகமாதியி லலியத்தமாயு மந்திரகலாமார்க்க மனேபுத்தியகங்கார விருத்தியில்வியத்தமாயும் புல்லிற்பற்றிய தீப்போல மேல் நிராலம்பமாயுஞ்) சிவசத்திவிளக்கு விளக்கும் தனது சிற்சத்தியினுல்—அனனியமாகக்காண்பன்- சாதிரியமென்கின்ற சைவசாதிசம்பந்தியாக முன் முதல்விருத்தத்துச் சொல்லியஞானத்தியான சமாதிசாக்ஷாற்காரக் கிரமத்திலறிந்து தியானித்துச் சமாதித்துச் சாக்ஷாற்கரிப்பன்—அறிவு - அப்படி காணுமான்மா—அறிபொருளறிவாய்வேறுய - அறியப்படும் பொருளோயறி சிவப்பொருளோயறியும் வேற்றுச் சித்தாய்—அருளுருவாய் - தத்துவாதீதமாகிய சிவனைச் சாக்ஷாற்கரிக்கு மிட்டத்துப் பாசவாசனை தரக்காதபடிக்குச் சொல்லிய முறைமையிற் சிவசத்தி வியஞ்சக வியங்கியத்தன்மைச் சம்பந்தியாய்—நிற்கும் - நின்று சாக்ஷாற்கரிக்கும். எ-று. (கூ)

விதேகபரமுத்தி சாக்ஷாற்காரகாரண சதேகவேன்மு
த்தி சாக்ஷாற்கார சித்தியுபாயத்தியான சமாதிச்
சுவரூபஞ் சாற்றுகின்றூர்.

பாவிப்பதென்னிற்பாவம்பாவகங்கடக்கிற்பாவம்
பாவிக்குமதுகானென்னிற்பாவகமபாவங்கெட்டுப்
பாவிப்பதென்னிற்பாவம்பாவனையிறந்துநின்று
பாவிக்கப்படுவதாகும்பரம்பரனருளினுலே

இ-ள். பரம் - சிவச்சுவரூபம்—பாவிப்பதென்னில் - பாசஞானவிளக்கு விளக்கிக் கலக்கும் பசுஞானத்தாற் றியானிப்பதென்று செப்புகில்—பாவம் - தடத்தலக்கணச் சிவப்பொருளாய்ச் சுட்டுப்புத்திபோத விஷய

ம்ாய்ப்போம்—பாவகங்கடக்கில்-பாவனுதேமென்று பார்க்கில்—பாவம்-தியானமாத்திர மதுவென்னும்ஞானத்துக்கு இலக்காகிலு மதுவிதுவது நானென்னுந் தியானத்துக் கிலக்காகாது—பாவிக்குமதுநானென்னில்-பாவிக்கப்படாத்தூரத்தது பாவிக்கப்படுஞ் சமீபத்திது நானென்று தியானிக்கில் (சூக்கும புத்திமான்கட்கு வாச்சியார்த்தத் தியாச்சியத்தா லிலக்கியார்த்தமாய் வாய்க்குமாகிலும், மத்த மதிமான்கட்கு)—பாவகம் - பாவிக்கும் பாசாங்கு மாத்திரம் (அப்பிரத்தியக்ஷபோதம் பிரத்தியக்ஷபோத மிரண்டு மண்டாதாகையால்)—பாவகங்கெட்டுப்பாவிப்பதென்னில்-மனச்சங்கற்ப முன்னுக உதிக்கும் புத்திபோதம் போக்கித் தியானம்பண்ணப் படு மென்னில்—பாவம் - பாவிப்பதென்று சொல்லுதலாற் கெட்டது போகப் பின்னு மிதொரு புத்திபோதந்தானே (பின்னெயெப்படி தியானிப்பது)—பரனருளினுலே - இலக்கணேயா விசைத்தலாற் சிவசத்திவிளக்கு விளக்குஞ் சிற்சத்திச் சித்தமனச் சங்கற்பத்தால்—பாவனேயிறந்து நின்று - மனேபுத்தியகங்கார சங்கற்ப போதகருவப் பிரவாகங்களேக்கீழ்ப் படுத்திக்கிடத்திக் கடந்து சிவசத்தி தாரகமாய்த் தரித்த சிற்சத்திச் சித்து மனச் சங்கற்பமுன்னுகச் சிவசத்திக்குறிப் பதிஞானவிளக்கு விளக்குஞ் சிற்சத்திக்குறிப் பதிஞானச் சித்துப்புத்திச் சித்தகங்கார வியாபார போதகருவக்குறிப் பதிஞான நிரந்தரப் பிரவாகங்களினுல்—பாவிக்கப்படுவதாகும்—சிவமிதுநானென்றுந் தியானம் பண்ணப் படுவதாம். எ-று. (எ)

பாசஞானம் விளக்கிக்கலக்கும் பசுஞானத்தா லறிந்து
பாவித்துப் பார்க்கப் படான் பரனென்று பாஷிக்
கின்ருர்.

அன்னியமிலாமையானுமறிவினுணிற்றலானு
முன்னியவெல்லாமுண்ணின்றுணர்த்துவனுதலானு
மென்னதியானென்றேதுமிருஞ்செருக்கறுத்தலானுந்
தன்னறிவதனற்காணுந்தகைமையுனல்லனீசன்

இ-ள். அன்னியமிலாமையானும் - பிரியாதபிரித் தூடித்துப் பார்க்குமிடத்து ஆன்மாவுக்குச் சிற்றறிவு சிற்றுத்தொழில் முதலிய வேற்றுப் பசுக்குறி மித்தையாய்ப் பேறறிவு பெருந்தொழின்முதலிய வொப்புச்சிவக்குறி யுள்ளதா யொருசிவசாதி யாதலானும்—அறிவினுணிற்றலானும்-காண்பவனுக்கு முன்கண்டிதிராதகண்டமா யவனது சுட்டுச்சிற்றறிவுக்குமட்டுப்படா தகிலுள்ளும் புறம்பு முருவியிருத்தலானும்—உன்னியவெல்லாம் - குறித்ததெல்லாம்—உண்ணின்றுணர்த்துவனுதலானும் - சாக்ஷாத்தனது சத்தியால் விளக்கினுற் பெற்றாவத்தை பேதித்துக்காண்பவனது சிற்சத்தி பேரறிவாய்ப்பெருகி மோக்ஷ சிவசாக்ஷாற்கார முத்தியவத்தையாய்ப்போம்;அதற் கருகமல்லாமையாற் கலி வித்தை புத்தி முதற்காண

ங்களில், மறையாது மறைந் துள்ளுறை கலேமுதற் காரணகுஞ்சக கலுஷித மா யிருக்குங் காண்பவன்கட் சிற்சத்தி யதிதற்குறி விருத்தியைச் சிறிது சிற்றறிவாய் விளக்கிப் போதித்தலானும்—என்னையானென்றே துமிரு ஞ்செருக்கறுத்தலானும்-புத்தியகங்காரவிருத்திச் சிற்றுச்சுட்டறிவுச்சுட்டி விட்டுச் சிட்டமாய்ச் சிவசத்திமாத்திர சகாயமாய்த் தனித்த சிற்சத்தியிற் சிவந்தாக்கு நோக்கந் தூக்கி யிருத்தலானும்—தன்னறிவதனும் காணும் தகைமையனல்லனீசன் - கலேபுத்திமுதற் காரணக்குறிப் பாசஞானவிள க்கு விளக்க விருத்திக்குறிப் பாசஞானம் விளக்கும் பரிமித சிற்சத்தி கர ணக்குறிப் பசுஞானக்கட் பார்வை விருத்திக்குறிப் பசுஞானததா லீசன் பார்க்கப்படுங் குறியுடையனன்று. எ-று.

கலேபுத் திமுதற்பாசஞானங்களேமேற்கிளம்பாமற் கிளம்பிக்கீழ்பதித்து ஞ்சிவனதுசத்திகரணக்குறிப்பதிஞானவிளக்குவினக்கவிருத்திக் குறிப்பதி ஞானம்விளக்கும்பார்ப்பவனது சிற்சத்திகரணக்குறிப்பதிஞானக்கட்பார் வைவிருத்திக்குறிப் பதிஞானத்தாலீசன்பார்க்கப்படுங்குறியுடைய னென் றுபரமசித்தாந்தம்.

போகத்தின்பொருட்டா மாலே சக்தன மகளிர்முதற் போக்கியக்கு றிப் பொருளேயும், மோகூத்தின் பொருட்டுப் போக்கியக்குறி பொருந் தாச் சிவப்பொருளேயும் பார்ப்பவனுக் கவனது கரணக்குறிச்சிற்சத்தியை விளக்குங் கலேமுதற்றத்துவங்களுந் தாத்துவிக விளக்கவிருத்திகளுஞ் சிவ னேக்குறித் தியற்கைக் காரணபலங்களாயிருக்குஞ் சிவசத்திவிளக்கு விருத் தியும் பார்ப்பவனது சிற்சத்தி காரணத்தை விளக்குதலாற் செயற்கைக் காரணங்களென்றுசெப்பப்பட்டிருந்தாலு மியற்கைக்காரணங்கள்இயற்கை செயற்கைப் பலங்களாகா.

அப்படிதான் சிவனேப் பார்ப்பவனேக் குறித்துச்சிவசத்தி யியற்கைக் காரணமென்றிசைக்கிற் றற்பொருளறிவு சிவம் பிறபொருளறிவு சிவசத்தி யாதலாற் றற்பொருளறிவாகிய சிவக்குறிச் சிற்சத்தியா லீரறிவு நீடுப்பொ துவறிவுப் பிரமாதிரு ரூபியாயிருந்து, சிவன் பிறபொருளறிவாகிய சிவசத் திரூபச்சுவரூப தற்பொருளேப்பார்ப்பன்; சிவசத்தியாற் சிவன் பார்க்கப் படான்;பார்க்கப்படுவனுகிற் பிறபொருளறிவாதலாற் சிவசத்திக்குச்சிவன் பிறபொருளாய்ப்போவன்; பிரமிதிபலமும் பார்ப்பவனுக்கின்றிச் சிவன தாம்; அதனு லாதித்தனது கிரணத்தால்விளக்கப்பட்ட கண்போலச் சிவ சத்தியால் விளக்கப்பட்ட பார்ப்பவன் சிற்சத்தியாற் சிவன்றன்சத்திமுத லியபொருள்களோடு கூடப்பார்ப்பவனும் பார்க்கப்படுவனென்பது பரம சித்தாந்தம். பிரமாணப் பிரத்தாபத்திலேயும் பிரதரிசிப்பித்தோ மொத்த க்கர்ண்க. (அ)

வேதாந்தி விவேகித்தறியாது சித்தேகமென்று செப்பினென்று செப்புகின்றார்.

ஒன்றெனுமதனுலொன்றென்றுரைப்பதண்டாதலாலே
நின்றனன்வேறுய்த்தன்னினீங்கிடாநிலைமையாலே
பின்றியவுணர்வுக்கெட்டாப்பெருமையனதிவினுள்ளே
யென்றுநின்றிடுதலாலேயிவனவனென்னலாமே.

இ-ள்.' (நீ யொன்றென்றேதும் பிரம மறிந்துசொல்லப்படும் பொருளொ? அப்படியாகிற் சொல்லியபின் வேறேருவனுற் கேட்டு மறியவும் படுமோ? அப்படியுமல்லா மல்லவோ? அல்லவென்னில், முயற்கொம்பொத்து நிட்பிரமாணமாம். சுயம்பிரகாசமாய்த் தன்மாத்திரத்துக்குச் சத்தாமாத்திரமா யிருக்குமென்னிற் பிரமஞானஞ் சாதகனுக்கு முத்தி சாதனமென்பதுங் கெட்டு நிட்பிரயோசனமாம். அந்தப்பிரம மடக்கமாய்ப்பண்ணி யுனக்குத்தானே யுபயோகமாயிருக்கப் பண்ணிக்கொள்; இங்கு வேண்டுவதிலலை. அப்படியேன்சொன்னீர் ? அந்தப்பிரமம் அறியாம லறியப்படுஞ் சொல்லாமற் சொல்லப்படுங் கோளாமற்கேட்கப்படும். அப்படிநீ) ஒன்றெனுமதனுல் - அந்தப்பிரமத்தை யொரு பொருளென்றறிந்து பிறர்க்கறியச் சொல்லுதலால்—ஒன்றென்றுரைப்பதண்டு - பிரம மொன்றென்றேது நீமுதலிய பொரு ளோதப்படும்பிரமத்துக்கு வேறுயுள்ளதாம்—ஆதலாலே—நின்றனன்வேறுய் - (அறிபவனுகிய பிரமாதா, வறிந்து சொல்பவனுகிய வத்தா, சொல்லக்கேட்பவனுகிய சுரோதா, அறிதல் சொல்லுதல் கேட்டற்கிரியைக் கருவியாகும் பிரமாணம், வாக்கு, சுரோத்திரம், அறிதல் சொல்லுதல் கேட்டற்கிரியையாகும் பிரமிதி, வசனம், சிரவணம், அறியப்படுமது சொல்லப்படுமதுகேட்கப்படுமதாகிய பிரமேயம், அபிதேயம், சுரோதவ்வியம், என்று நான் முன்று பன்னிரண்டு பேதமாய்ப் பொருள்கள் பார்க்கப்படுதலாற்சொல்லப்படும் பிரமமெனுஞ் சிவன் சொல்பவனுக்கு) அன்னியமாய் நின்றுன்; ஆதலால் நீயொன்றென்று சொல்லியது, மன்மாதா மலடியென்பதற் கொக்கும். சத்தியம் நீர்சொல்லியது; ஒன்றுதானே யிரண்டாம். அதில்லாதது பிரமமென்ற சுருதிசொல் சொல்லுக்கு முந்தியமுத்திமானுதலால், முத்தான்மாக்கள் சிவனுக் கொப்பாவர்களென் றேதப்படுவார்கள், சிவன் முத்தான்மாக்களுக் கொப்பாவனென் றேதப்படான்; ஆதலா லொப்பற்ற தென்று பொருள். நன்று நீசொல்லியது; முந்திமுத்தி பிந்திமுத்தியென்பதும் விசாரிக்குமிடத்துச் சிவனுக்குப் பந்தமில்லாமையால், முத்தியேயில்லையென்பதும், மலத்தைருறித்துவந்த செயற்கைவாத்தை,மலத்தைக்குறியாம லவனுக்கொப்பிவர்க ளிவர்க்கட்கொப்பவனென்ப தியற்கைவாத்தை, இயற்கையா நிருசிவமா யொத் தொருசிவசாதியா யொருசிவமா

யிருக்குஞ் சிவப்பிரமம் வேற்றுச்சாதிப் பொருளோ டொப்பதன்றென்று பொருள்)—பின்றியவுணர்வுக்கெட்டாப்பெருமையன்—பாசஞானம்விளக்கிக்கலக்குந் தூலசவிகற்பச் சிற்றுச்சுட்டறிவுச் சிற்சத்திவிருத்திப் பசுஞானத்துக்கு மட்டுப்படாத மகிமையை யுடையன் சிவன்—தன்னின்-சிவசத்திரூபக் கருவிப்பதிஞான விருத்திப்பதிஞானம் விளக்கித்தெளிக்குஞ் சூக்குமசவிகற்பச் சுட்டாதசுட்டுப் பேரறிவுத்தன்சிற்சத்திரூபக்கருவிப்பதி ஞானப்பதி விஷயவிருத்திப்பதி ஞானத்தில்—நீங்கிடாநிலைமையாலே-வியாபித்து மேல்விஞ்சிப் போகாதபடியிஞலேயும்—அறிவினுள்ளேயென்று கின்றிதலாலே-அத்தத் தன்பதிஞானக்கோடிக்குட்குறையாதொத்து வியாபித்துக் கலவாதகலந் தொருசெசாதியாய்நிற்றலானும்—இவனவனென்னலாமே-அவனிவனென்று மாறிக்குருசங்கமாதியிலவனிவனென்றும் அஃதன்றி யிவனென்ப திலக்கணையென்றெண்ணி யவனுனென்றும் அத்தியச்சிமி யத்தத்திசைத்துச் சோயஞ்சோக மிவைகாட்டுஞ் சிவோயஞ் சிவோகமென் றருன்றையொன்றுகரிஷிக்கு மிரணபோவனே யியற்றலாமே. எ-று.

இவ்விருசிவத்தியானத்திற் சிவசாதிகுறியாது சிவப்பொருள்மாத்திரங் குறித்த சிவத்தியானம் பொய்யாகிலுங் கருடமாந்திரிக தாதாற்மிய பாவனைபோற் சத்தியபலங் கொடாதுவிடாது. அரத்தத்தாசாரியர் சதுர் வேதார்த்த தாற்பரியத்தில்

"அளிகம்சிவதாதாத்மியபாவகம்ததாபிவிஷம்ப்ரமார்ஷ்டி:"

என்று

இப்பாவனையைத்தானே படித்தார். சுவரூப சிவதாதாற்மிய சிவத்தியானமதனுண் முஷிக்குஞ் சிவசாதி விசிட்ட சிவத்தியானமிரண்டுஞ் சத்தியம், பலமு மப்படி பலிக்கும். சிறீமத் சுந்தரமூர்த்தி சிறீமன் மாணிக்கவாசகர் சிறீமதருணகிரிநாதர் இவர்கள் தேவாரத்தும், திருவாசகத்தும்அலங்காரத்தும், "வழித்தலைப்படுவான் முயல்கின்றேனுன்னைப்போலென்னை பபாவிக்கமாட்டேன்" என்றும், "ஆனந்தவார்கழலேயொப்பாகவொப்பித்தவுள்ளத்தாருள்ளிருக்கும்" என்றும், "என்னையுன்னிலொன்றுய்விஜித்து" என்றும் இப்பாவனையைத்தானே படித்தார்கள். (க)

ஆருஞ் சூத்திரம்

ழ ற் றி ற் று.

ஆ திருவிருத்தம் உரை.

ஏழாஞ் சூத்திரம்.

மூற்சூத்திரத்தின்முடிவிற் கூறிய பொருளைத்தானே வற்புறுத்துகின்றார்.

அனைத்துஞ்சத்தென்னிலொன்றையறிந்திடாவசத்தாலென்னி
முனைத்திடாவசத்துச்சத்தின்முன்னிருளிரவிமுன்போ [ன்
னினைப்பதிங்கசத்தேயென்னிற்சத்தின்முன்னிலாமையானுந்
தனைக்கொடொன்றுணர்தலானுந்தானசத்துணராதன்றே.

இ-ள். அனைத்துஞ்சத்தென்னிலெனறையறிந்திடா - சித்தசித்துக் களெல்லாஞ் சிவமென்று நீசொல்லில், அச்சிவம் சித்தசித்துப்பிரபஞ் சத் தொருபொருளேயானலுஞ் சிருட்டிக்கத் திதிக்கச் சங்காரிக்கத் திரோ பவிக்க வனுக்கிரகிக்க வேணுமென்றறியாது (தன்னைத்தவிர வேரொரு தில்லாமையாற் றன்னைத்தானே சிருட்டிக்குந் திதிக்குமென்பது முதல் மாறுபடும்வார்த்தை வருமாதலால், விபரீதமாய்ச் சுகதுக்கவேதனை போக முஞ் சொர்த்துவைதியும் வேதாந்தியுஞ் சிவனுக்கும்பிரமத்துக்குஞ் செப்ப வேண்டும்.

"பிரமவியதிரித்தஞ்சருவமித்தை"

என்று

சொல்லுதலா லவ்வேதனையு மித்தையாமே; அப்போது மித்தையென்று நீசொல்லியது மித்தையாமே; அப்போது சித்துப்பிரபஞ்சமுஞ் சிவனும் ஒன்றுதலா லவ்வேதனை சிவனுக்கு)—அசத்தாலென்னில் - அசத்துப் பிரபஞ்ச சங்கத்தாலென்னில்—இரவிமுன்னிருள்போல்—சத்தின்முன் னசித்துமுனைத்திடா - சிவத்தின்முன் அசித்துப்பிரபஞ்சம் பிறர்பிர யோசனம் பிறர்போக்கியம் பிறர்போசகம் சுவதிருச்சியமிவைமுதலியவா ய்த் தோற்றினலுஞ், சுவப்பிரயோசனமா யப்படிதோற்றுது. [சிவனுக் குச் சொரூபமாத்திரமாய்த் தோற்றுமென்று கருத்து]—இங்கசத்தே- அசித்பிரபஞ்சத்திற் சிறி தந்தக்கரண முதலியவே (சற்சன்னிதானத்தி லே)—நினைப்பதென்னில் - புறப்பொருளையறிந்து அதற்கருகமாகு முட் சுகதுக்கமோகங்களே யனுபவிப்பதென்று நீசொல்லில்—அசத்து-அந்தக் கரணமுதலியன — சத்தின்முன்னிலாமையானும் - சிவசத்தின்முன் னின்றதானலும் அது கோடுமுதலானவற்றிற்கும்போ லோரறிவிலாமை யானும்—தனைக்கொடொன்றுணர்தலானும்-விளக்கை விளக்குக்கொண்டு கண்காண்பதுபோலத் தன்னைக்காட்டாகக்கூடிச் சிற்சிவசித்துக்கன்னிய மாய்: ஒருசதசத்தாத்மசித்துப் போக்கியப்பொருளைப் புசித்தலானும் (தா னஞை)—உணராதன்றே - புசியாதுதானே. எ-று. (க)

சித்தசத்துக்கஹேத் தற்பிரயோசனமாய் விரும்பியறி
வது சதசத்தென்று சாற்றுகின்றார்.

சத்தசத்தறிவதான்மாத்தான்சத்துமசத்துமன்று
நித்தமாய்ச்சதசதாகிநின்றிடுமிரண்டின்பாலு
மொத்துடனுநித்துநில்லாதுதியாதுநின்றிடாது
வைத்திடுந்தோற்றநாற்றமலரினில்வருதல்போலும்

இ-ள். சத்தசத்தறிவதான்மா - (மோக்ஷபோகக்குறிச் சுவப்பிரயோ சன காரணமாக முறைமையில்) சிவப்பிரபஞ்சங்கஹே வாஞ்சித்தறிவ தா யிர்—தான் - அந்தவான்மா—சத்துமசத்துமன்று - சிவமும் மலித்துப்பிர பஞ்சமு மல்ல—நித்தமாய் - நீத்தியப்பொருளாய்—சதசத்தாகிநின்றிடு மிரண்டின்பாலும் - சருவஞ்ஞத்துவ சருவகர்த்திருத்துவரூப சிவத்துவத் தையும், அசருவஞ்ஞத்துவ வசருவகர்த்திருத்துவரூப பசுத்துவத்தையு மு டையஞாகி யந்தச்சிவத்துவ பசுத்துவ வியற்கை செயற்கையிரு தன்மங்க ளிலே யியற்கைசெயற்கைத் தன்மியாயிருக்கும்—ஒத்துடனுநித்து நில் லாது - இருளோடொளிபோற் பசுத்துவத்தோடு சிவத்துவ மொத்தொரு காலத் துதயமாகாது (அப்போதப்பொருளாகாயப்பூவாம். அப்படி சொ ல்லவேண்டா)—உதியாதுநின்றிடாது-பசுத்துவஞ் சிவசத்திநின்ன நீக்ஷா ங்கி யங்கங்களால் மறையச் சிவத்துவம் பரந்துவிரியும். (அப்போ தாத் மாவின் மூன்காணுத சிவத்துவங் காணப்படுமாகிற்சற்காரியவாதத்தைத் தாக்கித்தள்ளியசற்காரியவாத மாவிர்ப்பவிக்கும். அப்படி சொல்லவேண் டா)--வைத்திடுந்தோற்றநாற்றமலரினில்வருதல்போலும்-அரும்பிற்சூக்கு மித்திருந்துபூவின்மண மாவிர்ப்பவித்தற்கொக்கும். எ று.

மலநீங்குமுன் மலமடக்கியிருக்குஞ் சிவததுவத்தினதுதயம் "சிவ னுக்குள்ளேசிவமணம்பூத்தது" எனறு திருமந்திரத்திருப்பது முணர்க. அப்படியாகிற் சிவத்துவங் காரணகார சத்திரூப பிராகபாவமாயிருந்துகா ரியாகார வியதிரூப சத்தியோசாதமாய்த்திரிந்து பரிணமித்தலால்அதில் விகாரித்துவ மலித்தியத்துவஞ் சடத்துவம் முறைமையில் வந்துவிழும். அப்படி நீசொல்லியதுஷண மிங்கிசையாது, ஆத்மாவிற் சிவத்துவ மப் போ தப்பிரவிருத்திரூப வனபிவியத்தியெனுஞ் சத்திரூபமாயிருந் திப் போது பிரவிருத்திரூப வியத்திரூபமானதன்று. பின்னெப்படியாவது? அப்படி யப்போ திப்போ தெப்போதும் வியத்திரூபமாயே யிருக்கும். அப்போதில்லையெனும்பொருட்பிராக பாவப்பெயர்ச் சூக்குமபாவரூப சத்திபூதமாயு மிப்போதுள்ளதெனும் பொரு ளதுதாபாவப்பெயர்த் தூல பாவரூப வியத்திபூதமாயுமிருந்து வந்தென்பது மலோபாதிவருவித்தது. அப்படி திருமந்திரத்துஞ் சொல்லப்பட்டது.

"அஞ்ஜிவரூபமாகியவான்மாத்
தஞ்ஜிமலத்தாற்றடைபபட்டுநின்றது
தஞ்ஜிமலமூந்தடையற்றபோதே
யஞ்ஜிவரூபமாகியவாறே."

என்றும்.

ஆதலால், மலமாவிருதி நிவிர்த்திச்சொற் சொல்லும் மறைத்தல் திரும்புதலெனு மீரோக சுபாவ சத்திமத்தாதலால், மலசத்தியின தாவிருதி ரூபத்தைத் தீக்ஷாகன்மத்துச் செய் முத்தியாகுதியிர்பாகுப்பற்றுப் பிரித்தற்காரிதாகிய வந்தரங்க நிவிர்த்திரூபச் சுவரூபச் சத்துவபரிணமத்தால் மலமூத்திபண்ணிப், பின் செவ்வரத்தப் பூச் சிவப்புபாதியைப் போக்கிப் படிகவெண்மைத் தூலக்கவிளக்கத்தை யிருந்தபடி யிருத்துவதுபோலத் தீக்ஷாகன்மத்துச் செய் வியத்தியாகுதியால் மலத்திரூன் மாமாயையில் வைத்த மாமாயாகாரிய மலவாசனமுத்தியை மாமாயாலீனமாய் வாசனை யிருப்பதாய் முறைமையிற் பண்ணிச், சத்திசாமர்த்தியப் பெயர்பெறுஞ் சிவத்துவத்தினது சருவார்த்தக் கிரியாவிளூபூத சருவார்த்த ஞானவிருத்தியின தியற்கையபிவியத்தியை யிருந்தபடி யிருத்துவதே யிப்போது புதிதாய்ச் சிவத்துவாபிவியத்தியைப் பண்ணுவதென்பது.

' ஆகையாற் கரணீயமெல்லா மலவாசனை யவதிமாத்திரத்தின் மாறுதலாற் நிரிவின்றி யியற்கையால் விகிர்திவிட் டிருந்தபடியிருத்துஞ் சிவத்துவாபிவியத்தியி லெங்கே நீசொல்லு மஞ்சியத்துவம் வந்தெய்தும், இல்லைத்தானே. ஆகையாற் சருவார்த்தக் கிரியாவிளூபூத சருவார்த்தஞானமிருந்தபடியிருத்தலா லந்தச் சருவார்த்தக் கிரியாவிளூபூத சருவார்த்த ஞாளுபாவமெனு மஞ்ஞானமலத்திடத் தியற்கைஞானத்தியந்தாபாவரூப மோகவத்துவாயிருந் தாத்மாவில் ஞானப்பிராகபாவம்போ லாபாசித்த லா லாத்மாவில் ஞானப்பிராகபாவஞ் செயற்கையாதலா லுபசரிதமென் றூகித்தலால் ஞானம் வியத்திமத்தா யிருந்தபடி யிருத்தலா லந்தஞானு பாவ மியற்கையா லில்லையென் றஞ்ஞான மாத்மாவில்வத்துவன்று; மலத்தில் மெய்வத்து ஆத்மாவிற் பொய்யே அப்பொய்யைப் போக்க வேறு சாதனம் வேண்டுவதில்லை; அப்பொய்யை மெய்யென்று பண்ணு மலசத்திமுத்தி மலசத்திவாசனமுத்தி பண்ணி யிருந்தபடி. யிருக்கும் ஞான வியத்தி காண்பிக்கு முத்தியியத்திசாதனமே சாதனம்; அவ்வியத்தியே யஞ்ஞானநிவிர்த்தி வேரொன்றில்லை; மணிமந்திரமருந்து பொருந்தும் விரும்புமொரு சத்தியா லுரோகசத்தி முத்தியானது தனது மாரணவிருத்தியினது நிவிர்த்திரூபச் சுவரூப சத்துவ பரிணமத்தாற்பண்ணப்படி மதுபோலத், தீக்ஷாலக்கண சிவமந்திர சத்தியால் மலசத்திமுத்தியுந் தனதாவிருதி விருத்தியினது நிவிர்த்திரூபச் சுவரூப சத்துவ பரிணமத்தாற் பண்ண

ப்படி மாதலா லாவிருதி கிவிர்த்திச் சுவவிருத்தியோடு நித்திய மலதன்மி தன்ம சத்திக்கநித்தியத்துவமே யில்லே.

ஆன்மாக்களுக்கு மல மேகமாலுலு மலசத்திக ளவரவர்க்கு வேறு வேறுதலா லசேதன மனேகமாதலால் மலசத்திக ளநித்தியங்களாமென் னிலநித்தியங்களன்று; நித்தியமல தன்மிதன்மங்களாதலால். அப்படியா கிற் றன்மதன்மிகளுக் கவிபாகபேத மாதலாற் றன்மிக்கு மநித்தியத்து வப் பிரசங்கம்வரும்; ஆதலா லசேதன மனேகம் அநித்தியமென்றது தன் மியைக்குறித்துச் சொல்லியது, தன்மத்தைக் குறித்துச் சொல்லியதன் று. அப்படியாகில், நமது பார்வையாற் பின்னசாதியாதலா லேகமேகமா யிருந்தாலும் பரனது பார்வையாற் சத்திசமூகமாத்திரமா யசேதனமா யனேகமா யிருக்கு மாயை மகாமாயைக ளநித்தியங்களாய்விடும். மாயா சத்திகள்மலசத்திபோற் சுவரூபசத்துவமின்றித் திரிந்துபரிணமித்தலான் மாயை மகாமாயைக ளநித்தியங்களாமே. அநித்தியங்களன்று; பால் தயி ரானதுபோற் சத்திகள்முற்றும் பரிணமியாமற் சிருதகேடம்போ லேகதே சத்திற் பரிணமித்தலால். அப்போ தேகதேசத்தில் நாசமாகட்டும். அது வுமில்லே; ஏகதேசத்திற் பரிணமித்த சத்திகள் வியத்திரூபங்களா யிருத்த லால் வியத்திரூப காரியங்களு முன் சத்திரூபமாயிருத்தலாற் காரணகா ரியமிரண்டும் நித்தியமே.

அப்போது மலசத்திக ளநித்தியங்கள்; மாயாசத்திக ளேகதேசத்தி ல்நித்தியங்களென்பதென்னே? சுவரூப சத்துவ சுவரூபத் திரிவு பரிணம பேதத்தாற் படித்துச் சொன்னது மாத்திரம். பரமார்த்தத் தெல்லாம் நித்தியங்களே. "வைத்திடுந்தோற்றகாற்றமலரினில்வருதல்போலும்" என்பதனும் சிவனேடுகூடிச் சிவனுயும் பாசத்தோடுகூடிப் பசுவாயு மிரு ப்பனென்ப திசையாதென்ப தறிக. (உ)

மலசத்திபண்ணு மஞ்ஞானதோஷ மாத்மாவுக்கே சிவ ஞுக்கில்லேயென்று செப்புகின்றூர்.

சுத்தமெய்ஞ்ஞானமேனிச்சோதிபாலசத்தஞ்ஞான
மொத்துரூருற்றமெல்லாமூற்றிடுமயிரின்கண்ணே
சத்துளபோதேவேறுஞ்சதசத்துமசத்துமெல்லாம்
வைத்திடுமனுதியாகவாரிரீலவணம்போல்

இ-ள். சுத்தமெய்ஞ்ஞானமேனிச்சோதிபால் - சத்துச்சித்துரூபசிவ ன்கண்—அசத்தஞ்ஞானமொத்துரூ - அசுத்த மலமாரோபிக்கும் ஞாஞ பாவ மூர்ச்சாமோகம் பொருந்தா—உயிரின்கண் ணே - பசுக்களிடத்தில்—

குற்றமெல்லாமுற்றிடும் - மூர்ச்சாமோகம் பிரஞ்ஞாமோகமுதலியதோஷ மெல்லாம் பொருந்திடும்—சத்துளபோதேவேறும் - சிவசங்கற்ப சாங்நித்தியமுண்டாக நீங்கும்—சதசத்துமசத்துமெல்லாம்-பசுவர்க்கம் பாசவர்க்கம் பதிவர்க்க மிம்மூன்றும்—வாரிநீரிலவணம்போல் - வாரி - நீருக் கிடங்கொடுக்குமாகாயம்—நீர் - இவ்விடத்தில்நிறையுஞ் சலம்—இலவணம்-ஆகாயத்திற்றேயாதசலத்திற்றேயு மூப்பு—இவைகள்போல (வாரிக்கொப்புப் பதி நீருக்கொப்புப் பசு இலவணத்துக்கொப்புப் பாசம்)—அனுதியாகவைத்திடும் - நித்தியமாய் நிச்சயிக்கப்படும். எ-று. (கூ)

ஆத்மாச் சிவன்போற் சச்சிதானந்தரூபியென்பது சாற்றுகின்றார்.

அறிவிக்கவறிதலானுமழிவின்றிநிற்றலானுங்
குறிபெற்றசித்துஞ்சத்துங்கூறுவருயிருக்கீச
னெறிநித்தமுத்தசுத்தசித்தெனநிற்பனன்றே
பிறிவிப்பன்மலங்களெல்லாம்பின்னுயிர்க்கருளிலாலே.

இ-ள். அறிவிக்கவறிதலானும் - (சிவன் சகலாவத்தையிலே கலாதி தத்துவங்களிற் றத்துவதேவதாபாரம்பரியமாய் வந்து மறைந்துநின்றவை களைச் செலுத்தி யவரவர் பருவமருகமாக) போதிப்ப வுணர்தலானும் (உம்மையினுற் சுத்தாவத்தையிலே சாகூஷாத் தீக்ஷாலக்கணத்தினது சத்தியாற் சிவன் முன்சொல்முறைமையின் மூற்றும் மலமுத்தி மலவாசனாமுத்தி சிவத்துவவியத்திபண்ணி யறிவிக்கத் திரும்பத்திரும்பச் சிவனிளக்குவிரும்பாதவிட்டுச் சுவயம்பிரகாசமாய்ப் பதிமுதலிய சருவபதார்த்தங்களைப் போக்கிய போதிருத்துவத்தன்மைவிட் டிடைவிடா தெப்போதுமுன்னமைமாத்திரமாய்ப் பார்த்திருத்தலானும்)—அழிவின்றி நிற்றலானும்-நித்தியசத்திய மாதலானும்—குறிபெற்ற சித்துஞ்சத்துங்கூறுவருயிருக்கு-"ஒருமொழிமொழிதறன் னினங்கொளற்குரித்து" என்பதனுல் தனிலக்கணமாக வடைந்த சச்சிதானந்தரூப முயிருக்குப் பெரியோர் பேசுவர்—"அறிவின்றிநிற்றலானும்" எனும் பாடங்கொண்டாற் "குறிபெற்றவ சத்துஞ்சத்தும்" என்று பாடங்கொண்டு சதசத்தாற்மாவென்பதற்குக் காரணமாய்க் கேவலாவத்தையிலே பிரஞ்ஞாமோகமுமின்றி மூர்ச்சாமோகியாயிருத்தலானும்) குறிபெற்ற வசத்துஞ்சத்துங் கூறுவர் - தனது செயற்கையிலக்கணமு மியற்கையிலக்கணமுமாக வடைந்த பசுத்துவமுஞ் சிவத்துவமு மாத்மாவுக்குப் பெரியோர் படிப்பார்கள்.

சசனெறிநித்தமுத்தசுத்தசித்தெனநிற்பனன்றே(சித்தென்பதனை நாலிடத்துங் கூட்டுக)—பிறிவிப்பன்மலங்களெல்லாம் பின்னுயிர்க்கருளிலாலே—(முன்சொல்லிய பிரகாரம் மலமுத்தி சிவத்துவவியத்தி பண்ணுவனென்று பொருள்) எ-று. (சு)

ஏழாஞ்சூத்திரம்.

முற்றிற்று.

எட்டாஞ் சூத்திரம்.

அவ்வளவிவ்வளவா யாகமங்களில் ஞானபாதப்பொ
ருள்போதித்துச் சிறிது கலப்புப் பகுப்பாய்ப்பொ
துச்சிறப்பாகயோகபாதமுதல் மூப்பாதப்பொருள்
போதிப்பதற்கு முயலுகின்றார்.

மன்னவன்றன்மகன்வேடரிடத்தேதங்கி
வளர்ந்தவனேயறியாதுமயங்கிநிற்பப்
பின்னவனுமென்மகனீயென்றவரிற்பிரித்துப்
பெருமையொடுந்தானுகப்பேணுமாபோற்
றுன்னியபைம்புலவேடர்சுழலிற்பட்டுத்
துணைவனேயுமறியாதுயருறுந்தொல்லுயிரை
மன்னுமருட்குருவாகிவந்தவரினீக்கி
மலமகற்றித்தானுக்கிமலரடிக்கீழ்வைப்பன்.

இ-ள். இராசா நீ என்று இராசா இராசபுத்திரனுக்கு இராசகுலம் போதித்ததுபோற், சிவன் குருக்குறிகொண்டு தீக்ஷைபண்ணித் தீக்ஷாங் கமாகுஞ் சித்தாந்தமகாவாக்கியஞ் செப்பிச் சிவகுலம்போதித்துத் தியா னிப்பித்துப் பசுத்துவம்பறித்துச் சிவத்துவங்கொடுத்து—தானுக்கி - (இ வ்விடத்துச் சொல்லிருந்தபடி பொருளுரைத்தாற் சிவாத்துவைதி யொ ருபிரகாரத்தாற் சிவாவேசவாதி யிருவருஞ் சயிப்பார்கள். ஆதலால் "கருதரன்போனிற்பன்" என்று மேற்காண்பிக்கும் படிக்குத்) தன்னைப் போலாக்கி—மலரடிக்கீழ்வைப்பன் - (இங்கும் இருந்தபடி பொருளுரைக் கிற் றடத்தலக்கணந்தாக்கும். இலக்கணையினு லடி சிவசத்தி யென்றுரை க்கி லான்மாவிற் சடத்தன்மைவிடாத வியாப்பியத்துவம், சங்கி ாந்தவா தந்தான் சாரும்; ஆதலால், மலரடியென்பது மலருமடி, மலராகின்ற வடி, மலர்ந்தவடி என்று விரியும் வினைத் தொகையாதலால்) தனது சத்தி போற பிறபொருள் மாத்திரத்தி லறிதற்றொழில்பண்ணி, மலர்ந்த தற் பொருளெதிர்முகஞ்சத்தி மாத்திரத்தி லறிதற்றொழில்பண்ணி மலர்ந்த திரும்பியமுக ஞ்சத்திரூபியாகச் செய்வன். எ-று. [மலரடி வியத்தஞ்ச சத்தியென்று தாற்பரியம்] சத்தப்பரிசமுத லைம்புலத்தை விஷயீகரிக்கு மைம்பொறியை யைம்புலமென் றருபெயராற் சொல்லியது. சுழலென் றது தன்வழிக்கிழுக்குமொப்பால். துணைவன் - சிவன். சிவனது வியா பகத்துள்ள'டங்க வியாப்பியமாய வைப்பனென்று சிலபேர் பொருளுரை த்தார்கள். அவர்கள், வியாப்பியனுலான்மாச் சடமாவனென்று மேன்

செப்பாதிருந்தார்கள். திரும்ப வியாப்பியத்திஞற் சிவஞேடனன்னியத் துவஞ் சொல்லுமவர்கள், வியாப்பிய வியாபக லக்கணத்தால், வேற்றுமை வரு மயிக்கியமேயில்லே யென்பதேனறியாதிருந்தார்கள். ஆதலால், ஒப் பொருசாதி யயிக்கியமே யனன்னியத்துவம். (க)

சகலனுக்குமாத்திர மனுக்கிரகமென் றெண்ணவேண் டா மூவர்க்கு முண்டென்று முறைமை யுரைக்கி ன்றார்.

உளைதருமிப்பசுவர்க்கமுணரின்மூன்று
முயருமம்விஞ்ஞானகலர்பிரளயாகலர்சகலர்
நிளையின்மலமலங்கன்மமலங்கன்மமாயை
நிற்குமுதலிருவர்க்குநிராதாரமாகிக்
களையிலருட்பரன்றுவிதாசத்திநிபாதத்தாற்
கழிப்பன்மலஞ்சகலர்க்குக்கன்மவொப்பிற்
றளையிலாசான்மூர்த்தியாதாரமாகித்
தரித்தொழிப்பன்மலஞ்சதுர்த்தாசத்திநிபாதத்தால்.

இ-ள். நிராதாரமாகி - நிரதிகரணனுய் நின்று—துவிதாசத்திநிபாத த்தால் - தீவிரதீவிரதரசத்தி விழுதலால் (தீவிரதரத்தாற் பரமுத்தி தீவி ரத்தாலபரமுத்தி, தீவிரத்துன்ஞ மந்த மந்ததர சத்திநி பாதமுண்டி அபர முத்தி யனந்தவிதமாதலால். நிரதிகரணனுக்கிரகஞ் சகலர்க்கு மேகதேச த்திற் சாற்றியதுண்டி.) ஆசான்மூர்த்தி யாதாரமாகித்தரித்து - சாதிகர ணனுயிருந்து—சதுர்த்தா சத்திநிபாதத்தால் - மந்ததராதியால்—மலங் கழிப்பன் - ஒழிப்பனென்பதற்குப்பின் சிவத்துவாபிவியத்தியுஞ் செய்வ னென்பது செப்புக. விஞ்ஞானகலனென்பது தலைக்குறைத்தலாதலால், விஞ்ஞானகலனென்று நின்றது.

விஞ்ஞானத்தான் மாயாபுருஷவிவேக ஞானத்தால், கலைமுதல் மூப் பது தத்துவத்தால் மூடப்பட்ட ஞக்கும தேகமில்லே, யார்சிலபேர்க்கு, அவர்கள் விஞ்ஞானகலர்கள், பிரளயத்தக்கலே நீங்கினபேர் பிரளயாக லர்; ஆதலா லிருவர்க்கத்துக்கும் நிரதிகரணனுக்கிரகம். சிலபேர் அனந் தாதி யணுசதாசிவாதிய ரிவாகளே விஞ்ஞானகலர்களென்றும், அபரமந்தி ரேசுரர்களாகிய சிறீகண்டாதிகளேப் பிரளயாகலனென்றும் பேசுவார்கள். அவர்கள், மலமலகன்மமுத்தராய்ப் பதிபதார்த்தத்து ளத்தர்ப்பவித்து மல மாத்திரகலுஷித விஞ்ஞானகலக்குறி, மலகன்மமாத்திரகலுஷிதப் பிரள யாகலக்குறி பிரியாது தரியாமையா லப்படி பேசுத லறியாமையாலென வுரிக.

பெரியோர் சிலவிடத்து அப்படிபடித்துப் பேசியதேது ? முன் னிருப்பைக்குறித்துக் கூறியதெனக் குறித்தறிக. பிரளயாகலர்க்குத் தே வகுருவாய் அனுக்கிரகம் பண்ணுவனென்று சிலபேர் பேசியதேது? தேகி களில்லாப் பிரளயகாலத்துத் தேகிகளல்லாப் பிரளயாகலர்க்குத் 'தேவ குருவாய்வந்து' அனுக்கிரகம் பண்ணுவனென்பது செய்தி தெரியாது செப்பியது. ''இருவர்க்குநிராதாரமாகி'' எனுமாசாரியர் வசனத்துக்குஞ் சிவாகமத்துக்கும் விரோதச்சொல்லுமாம். ஆன்மதத்துவ மிருபத்துநாலு க்குமேற் பிரகிருதிமுத்தரா யிராகாதிகலாந்தமாகிய தத்துவங்களில் நிரஞ் சனர்தவிரச் சாஞ்சனராயிருப்போர்கள் பிரளயாகலர்களென்று சிலபேர் பேசியதேது ? ஸ்ரீமத்காமிகாகமத்தி லேகதேசத்தி லப்படியிருத்தலா லிசைத்தார்கள். அச்சகலவிசேஷப் பிரளயாகலரைக் குறித்து உருத்திர தேவர்களிற் றேவகுருவென்பது கூடும். தேகமில்லாப் பிரளயாகலர்க் குத் தேவகுருவென்பது கூடாது. மற்றது பிரசித்தப்பொருள்.

விஞ்ஞானகலர்கள் பரிபக்குவமலர்கள் அபரிபக்குவமலர்களென விருவகை. அந்தவிருவகைக்குட் பரிபக்குவமலர்கள் சிவானுக்கிரகம்பெற் றுப் பதிபதார்த்தங்களா யாதிமுத்தசிவன்களாயு மணுசதாசிவானந்தாதி கள் மந்திரங்கள் புவனவாசிகளெனு மபரமுத்த சிவன்களாயும் போயிருப் பார்கள். அபக்குவமலங்கள் மாயைக்குமேற் சுத்தவித்தைக்குக்கீழ் மல மாத்திரகலுஷிதர்களாய்ப் பசுபதார்த்தங்களா யிருப்பார்கள். பிரளயாக லர் பரிபக்குவமலர் அபரிபக்குவமலரென விருவகை. அந்த விருவகைக் குட் பரிபக்குவமலர்கள் சிவானுக்கிரகம் பெற்றுப் பதிபதார்த்தங்களா யா திமுத்த சிவன்களாயுஞ் ஸ்ரீகண்டர் வீரபத்திரர்முதலிய வபரமந்திரேசு ரர்கள் புவனவாசிகள் எனுமபரமுத்தசிவன்களாயும் போயிருப்பார்கள். அபரிபக்குவமலர்கள் சிருட்டிகாலத்திலே சகலராவார்கள்.

சகலர்கள் திரிபந்திகளென்றும் விஞ்ஞானகிகளிலுலே கன்மகாசம் வந்து விஞ்ஞான கைவல்லியம் வருமளவுந் துவிபந்திகளென்று மிருவித மா யிருப்பாகள். அந்த விருவிதமாயிருக்குஞ் சகலர்கள் தூலதேகி களென்றும், அப்பிராத்தவாகிய சரீரியென்றும் பிரகட்டவாகிய சரீரியெ ன்றுஞ் சொல்லப்படுந் தூலதேக விதேகிகளாயு மிருப்பார்கள். திரும்ப வந்த நால்வகைச் சகலருந் தனித்தனிபரிபக்குவ மலர்களென்றும் அபரி பக்குவ மலர்களென்று மெட்டுவகை. அந்த வெண்வகைக்குட் பரிபக்குவ மலர்களெனும் நால்வகைப்பேருஞ் சிவானுக்கிரகம்பெற்றுப் பதிபதார்த் தங்களா யாதிமுத்த சிவன்களாயும் நாறுபதமுத்தராயிருக்கும் அபரமுத்த சிவன்களாயும் போயிருப்பார்கள். அபரிபக்குவ மலர்களெனும் நால்வ கைப்பேருஞ் சங்சாரிகளா யிருப்பார்கள். ஆகமூவகையும் பன்னிருவகை யென்பது பார்த்தறிக.

சகலர்க்கனுக்கிரகங் குருத்திருமேனி குறித்திருக்குஞ்
சிவன் பண்ணுவது பல பிரகாரமென்பது படிக்
கின்றார்.

பலவிதமாசான்பாசமோசனந்தான்பண்ணும்
படிநயனத்தருள்பரிசவாசகமானதமு
மலகில்சாத்திரம்யோகமவுத்திரியாதி
யனேகமுளவவற்றினவுத்திரியிரணடுதிறமா
மிலகுஞானங்கிரியையெனஞானமனத்தா
லியற்றுவதுகிரியையெழிற்குண்டமண்டலாதி
நிலவுவித்துச்செய்தலகிரியாவதிதானின்னு
நிர்ப்பீசஞ்சபீசமெனநின்றிரண்டாய் நிகழும்

இ-ள். ஆசான் - குருக்குறி குறித்துக்கொள்ளுஞ் சிவன்—பாசமோசனம் பண்ணும்படிதான்-அனுக்கிரகஞ் செய்யும்பிரகாரம்—பலவிதம்-வெகுபிரகாரம் — நயனத்தருள் - (அத்துவாமார்க்கங்குறியாது குறித்துச் சுருக்கிப் பாசங்கழலப் பார்த்தல்) சகஷ—வென்னுந் தீக்ஷை—பரிசம் - (அப்படிகுறித்துச் சிவ அத்தபரிசனம்பண்ணுதல்)பரிசதீக்ஷை—வாசகம்-(அப்படிகுறித்துப் பதினெருமந்திரத்தோடு பஞ்சாக்ஷரமுபதேசித்தல்) வாசகதீக்ஷை—மானதம்-(அப்படிகுறித்து யோகமார்க்கத்தாற் சிவஞானது தேகம் பிரவேசித்துச் சித்தித்தல்) மானத தீக்ஷை—அலகில் சாத்திரம்-(அப்படிகுறித் தாகமப்பொருளைச் சுருக்கியுபதேசித்தல்)சாத்திரதீக்ஷை—யோகம் - (அப்படிகுறித்து யோகமார்க்கத்தாற் சிவஞனதிருதயகமலத்திற் பிரவேசித்து நக்ஷத்திரம்போலிருக்கின்ற சீவனைப் பாசம்பறியத் துவாத சாந்தத்துச் சிவனிடத்தில் யோசித்தல்) யோகதீக்ஷை—(இவ்வறுவகைத் தீக்ஷையு மவத்திரி தீக்ஷைக் கருகமல்லாத பேர்க்குப் பண்ணுவ தெனவு மவத்திரிக் கங்கமெனவுமறிக)—அவத்திரியாதி - அவத்திரிப் பிரதான மா யிப்படி தீக்ஷைகள்—அனேகமுள - வெகுபேதமுண்டு—அவற்றினவுத்திரி—இலகுஞானம் - விளங்கும் ஞானவதியென்றும்—கிரியை - கிரியாவதியென்றும்—இரண்டுதிறமாம்-இருவகையாம். (அவற்றுள்)—ஞானம் - ஞானதீக்ஷை (அது சத்தி சாம்பவியென்றிருவகை. அவற்றிற் சத்தியோகதீக்ஷை.சாம்பவிஞானதீக்ஷை.அதிற்சத்தி)—மனத்தாலியற்றுவது-புறம்பேபோற் குண்டமண்டலாதி மனச்சிறப்புச்சங்கற்பத்தாற் குறித்துப் பண்ணுவது. (சாம்பவிமனோதிதசித்சத்தி மனச்சங்கற்பபூருவசித்சத்திக்கட்சிறப்புப்பார்வையாற் பாசமுறைமையிற் பறியப்பார்த்துப் பண்ணுவது)—கிரியை - கிரியாதீக்ஷை—எழிற்குண்டமண்டலாதி நிலவுவித்துச் செய்தல்—கிரியாவதியானின்னு நிர்ப்பீசஞ்சபீசமென நின்றிரண்டாய்—நிகழும் - விளங்கும். எ-று. (கூ)

இருவகைத்தீக்ஷைக்கு மருகனா முறைமையி லிசைக்
கின்றாராய் நிர்ப்பீசத்தருகனா நிகழ்த்துகின்றார்.

பாலரொடுவாலீசர்விருத்தர்பணிமொழியார்
பலபோகத்தவர்வியாதிப்பட்டவர்க்குப்பண்ணுஞ்
சீலமதுநிர்ப்பீசஞ்சமயாசாரந்
திகழ்சுத்திசமயிபுத்திரர்க்குநித்தத்
தேலுமதிகாரத்தையியற்றித்தானு
மெழினிரதிகாரையெனகின்றிரண்டாய் விளங்குஞ்
சாலநிகழ்தேகபாதத்திடுமே
சத்தியநிருவாணமெனச்சாற்றுங்காலே.

இ-ள். பாலர் - சத்திபாதலக்கணங் காண்பிக்குஞ் சாமர்த்தியமுடையராய்ச் சமயாசார மனுட்டிக்குஞ் சாமர்த்தியமிலராய் நிரம்ப வோதியுணராக்களாய்ப் பதினறுவயதுக்குள் வயதுடையர்—அவர்களோடு—வாலீசர் - (வாலிசனென்பது வாலீசனென நீட்டியவாறு) சத்திபாதரின்னர்களாயு மோதியுணராதார்—விருத்தர் - சத்திபாதரின்னர்களா யோதியுணர்ந்தாலு மனுட்டானத்தில் அசத்தரா யெழுபதவயதுக்கு மேற்பட்டார்—பணிமொழியார் - உள்ளபடி யோதியுணர்ந்து சமயச்செய்தி சாங்கமாயனுட்டிக்குஞ் சாமர்த்திய மில்லாதாராய்ச் சத்திபாதரின்னிகளாய்ச் சஞ்சரிக்குமகளிர்—பலபோகத்தவர் - சாத்திரபாத்திரராய்ச் சத்திபாதரின்னங் தாக்கித்தூக்கவும் போகவாஞ்சைபோக்கு மூக்கமில்லாதார்—வியாதிப்பட்டவர் - உளைத்தவையெல்லா முடையராயினு முரோகத்தரிவர்கட்கு—பண்ணுஞ்சீலமது - செய்யுஞ் செயற்கையையுடைய தீக்ஷை—சமயாசாரந்திகழ்சுத்தி - பீசச்சொற்சொல்லுஞ் சைவசங்கேதாணுட்டானப்பொருளில் விளங்கும், நிர்ச்சொற்சொல்லுஞ் சோதனைப்பொருள்—நிர்ப்பீசம்-நிர்ப்பீசதீக்ஷை(சாதகராசாரியர் இருவர்க்குந் தகாதாதலால்)—சமயிபுத்திரர்க்கு - புத்திரரொன்று நிருவாணதீக்ஷிதர்க்கும் பேர்பேசுதலாற் சமயிவிசேஷிசாதகாபிஷேக நைமித்திகாதிகாரமில்லா நிருவாணிகளில் நித்தியநிருத்தியமாத்திரத்திற் சாமர்த்தியவான்க ளொருபிரகாரஞ் சாதிகாரிகளானுலும், அவருள், நித்தியமுற்றும்பண்ணுஞ் சாமர்த்தியமில்லாப்பாலர்முதற் சமயிவிசேஷி சாதகாபிஷேக நைமித்தியாதிகாரமில்லா நிருவாணிகட்கு—நித்தத்தேலுமதிகாரத்தையியற்றி - முழுதுதல் தர்ப்பித்தல் செபித்தல் குருக்குறிப்பேவல் பூசித்தல் ஓமித்தல் கேட்டுச்சிந்தித்துத் தெளிந்துதியானித்தல் சமாதித்தல் சாக்ஷாத்கரித்தல் முதலிய நித்தியகன்மத்திற் குருக்குறிப்பவேலால் நைமித்தியகன்மத்துஞ் சிலவற்றிற்காமியத்

துஞ் சிலவற்றிற் சமர்த்த சமயிமுதலோர் பண்ணுங்கிருத்தியத்தி லியன் றகிருத்தியத்தைப் பண்ண, அதுவுங்கூடாதிருந்தாற் குருக்குறிப்பேவல் மாத்திரத்தைப்பண்ண, அதுவுங் கூடாதிருந்தாற் புத்திராதிகளாற் பொ ருள்கொடுத்து வேண்டிக்கொண்டாதல் பிறராற்றுன்பேணக் குருவைக் கொண்டு கற்பிக்கப்பண்ணி—தானும் - அந்த நிர்ப்பீசதீக்ஷையும்—எழி னிரதிகாரையெனநின்று- வடிவுறு நிர்ப்பீசதீக்ஷையென்றிருந்து—இரண் டாய்விளங்கும் - (எலுங்கிருத்திய மேலாக்கிருத்தியங்குறித்துச் சாதிகா ரையாயு நிரதிகாரையாயுமிருத்தலால்) சபீசையாயு நிர்ப்பீசையாயு மிரு விதமா யொருவகை சாற்றத் தோற்றும்—சால நிகழ் தேகபாதத்தினேடு (பண்ணுமென்பது தொக்குதலாற் பண்ணுங்காலேயெனப் பண்ணுக, சபீசதீக்ஷாயோக்கியர்க்குள் ளியற்கையாற் சரீரவைராக்கிய முடையோ ர்க்கும், நிர்ப்பீசதீக்ஷா யோக்கியர்க்குள்ளும், வியாதிமுதிர்ச்சி விருத்தத் தன்மைமிகுதி முதலியவற்றுற் சரீரவைராக்கிய முடையோர்க்குஞ் சஞ் சரிக்குங் காயமுடன் முற்றுங்கழியப்பண்ணு நிர்ப்பீசதீக்ஷைதானே)—சத் தியோநிருவாணமெனச்சாற்றும்-(முத்திவிரும்பினர்க்கு நயிட்டிகதீக்ஷை யென்று காட்டப்படுந்தீக்ஷை சத்தியோமுத்திப்பிரதமாஞல்) சத்தியோ நிருவாணதீக்ஷையென்றும் பேர்பெறப்படும். எ—று.

சிலவிடத்திற் சித்திவிரும்பினர்க்குப் பவுத்திகதீக்ஷையென்று பார்க் கப்படுந்தீக்ஷை சத்தியோபூர்ப்பிரதமாஞற் சத்தியோபோக தீக்ஷையெ ன்று பேர்சாற்றப்படும். விதேகவிஞ்ஞானகலர்க்கும் விதேகப்பிரளயாக லர்க்குங் குருதேகதேகியல்லாச்சிவஞல் நிர்ப்பீசதீக்ஷையாய்ப் பண்ணு முன்சொல்லிய நிராதாரதீக்ஷையென்னு நிரதிகாரணதீக்ஷையு மிவ்விருவ கைப்பேர் பெறுமென்பதறிக. தேகபாதமில்லாமற்செய்யு நிர்ப்பீசதீக்ஷை யுஞ் சபீசதீக்ஷையும் அசத்தியோநிருவாண தீக்ஷையென்பதறிக. (கூ)

சபீசத்தருகதைச்சாற்றுகின்றூர்.

ஓதியுணர்ந்தொழுக்கவெறியிழுக்காறில்ல
வுத்தமர்க்குச்செய்வதுயர்பீசமிவர்தம்மை
நீதியினுனித்தியகைமித்தியகாமியத்தி
னிறுத்திநிரம்பதிகாரங்கழித்துவதுஞ்செய்து
சாதகராசாரியருமாக்கிவீடு
தருவிக்குமுலோகசிவதன்மிணியென்றிரண்டா
மாதலினுலதிகாரையாஞ்சமயவிசேட
நிருவாணமபிடேகமிவற்றடங்குமன்றே.

இ-ள். ஒதி யுணர்ந்தொழுக்க நெறியிழுக்கா நல்லவுத்தமர்க்கு - சபீ சதீக்ஷை படிப்பிக்கப்பண்ணும் விசேஷவித்தையாகிய சிவாகமங்களைப் படித்துப்பார்த்துப் பதார்த்தங்களைப் பகுத்தறிந் தச்சமயாசாரமார்க்க நடக்கை தப்பாதனுட்டிக்குஞ் சாமர்த்தியங்காண்பிக்குஞ் சாமானிய வித்தையாகிய தர்க்க சத்த வேத வேதாந்த மீமாங்சை புராண முதலிய மூற்றுமந் தருகமாமிவைகளி லொவ்வொண்றைத்தான் படித்துப்பார்த் துப் பதார்த்தங்களைப் பகுத்தறிந் தச்சமயாசார மார்க்கநடக்கை தப்பாத ஞஷ்டியாகின்று காண்பித்த சாமர்த்தியமுடையராய்ச் சற்புத்தமாதிகாரி களாகுஞ் சமயி விசேஷி நிருவாணி சாதகாசாரியர்களா மருகாக்கு—செ ய்வது - பண்ணுவது—உயர்பீசம் - (தலைக்கடைக்குறைத்தலால்) முக்கிய சபீசதீக்ஷை—இவா தம்மை-இவ்வைவரையும்—நீதியினுல் - அவரவர்க் கருகமாக—நித்தியநைமித்திய காமியத்தினிறத்தி - சமயிவிசேஷி நிருவா ணி மூவரையும், நீர்முழுகுதல் தர்ப்பித்தல் செபித்தல் பூசிததல் ஓமித் தல் கேட்செய்ந்தித்துத தெளிந்து தியானித்தல சமாதித்தல் சாகூர்த் கரிததல் முதலிய வவரவர்க் கருகமான கனமங்களை விதிப்படி விழாது செய் நித்தியாதிகாரத்திற் பிரதானமாய் நிற்பித்துக் குருக்குறிப்பேவலாற் நிறியன்ற நைமித்திகாதிகாரத்திலுஞ் சிகாச்சேதவாஞ்சிய நிருவாணிக் கு விசேஷித்து நைமித்திகத்தி லதிகாரமுண்டென்று காமிகமுதலிய சிவாகமஞ் செப்புதலாற் குருகற்பனையாற் சகல நைமித்திகாதிகாரத்தி லுஞ் சிறிதுவிரும்பிற் குருகற்பனையாற் சிறிதுகாமியாதிகாரத்திலும், நிற் பித்துச் சாதகாபிஷேகம்பண்ணிச் சாதகளுகக்குறித்தவனைச் சாதகாபிஷே கம்பண்ணிச் சாத்தியமந்திரசெபபூசையோமமுதலிய காமியாதிகாரத்திற் பிரதானமாய் நிற்பித்து நித்தியாதிகாரத்திலுங் குருவாஞ்ஞையினுற் சகல நைமித்திகாதிகாரத்திலும் நிற்பித்து ஆசாரியாபிஷேகம்பண்ணி யாசாரிய னுகக்குறித் தவனை யாசாரியாபிஷேகம்பண்ணித் தீக்ஷை பிரதிட்டை சிவாகமபோதன முதலிய நைமித்திகாதிகாரத்திற் பிரதானமாய் நிற்பித் து நித்தியாதிகாரத்திலும் பரார்த்தஞ்சிறிது சுவார்த்தமாகவுஞ்சிறிது காமி யாதிகாரத்திலு நிற்பித்து—நிரம்பவதிகார நிகழ்த்துவதுஞ்செய்து-நிர்ப்பீ சதீக்ஷைபோ லேலுமதிகாரமாத்திரமா யேலாவதிகாரக்குறையா யியற்று விபபதின்றி யிப்போதுசொல்லிய நித்தியாதிகாரி காமியாதிகாரி நைமித் திகாதிகாரி மூவர்க்கும், அவரவர்க்குஅருகமாய் நிறையவதிகாரம்பண்ணுவ து பண்ணுவித்து (அவாக்குள்ளிருவரை)—சாதகராசாரியருமாக்கி-(சாதக ராசாரியர்களாலுஞ் சிகாச்சேதமாத்திரஞ்செய்த நிருவாணியாலு மோரிரு வர்முறையிற் சுதந்திரமாயுங் குருவாஞ்ஞையினுலும்பண்ணப்பட்டதன்னு ல்)—வீடுதருவிக்கும்-மோக்ஷங்கொடுப்பிக்கும். (மூவருளாசாரியன் சுவதந் திரமாய்ச்சருவாதிகாரியாதலாற் சருவசம்பூரண சபீசசாதிகாரதீக்ஷாவாளு தலா லவனுக்கே சாதிகாரதீக்ஷையென்ப தியல்பினுற்செல்லும். திரும்ப

வந்தச்சபீசதீக்ஷை) உலோகசிவதன்மிணியென்றிரண்டாம்-உலோகதன்மிணிதீக்ஷை சிவதன்மிணிதீக்ஷையென்றிருவிதமாம்—ஆதலினல்-சொல்லியதீயினற்(சபீசதீக்ஷாபேதமெல்லாம் நிர்ப்பீசதீக்ஷையில் நிரதிகாரையாய் முன்சொல்லிய சமய விசேஷ நிருவாண தீக்ஷைகளேதீக்கி)—அதிகாரையென்பது தலேக்கடைக்குறைத்தலாற் சாதிகாரதீக்ஷையாம்—சமயவிசேட நிருவாணமபிடேக மிவற்றடங்குமன்றே (அன்றே யென்ப தசை) எ-று.

உலோகசிவதன்மிணியென்றவிடத்துச் சிறிதிசையாதது விசேஷித்திசைப்பாம். முறைமையிற் சபீசதீக்ஷாபேதமாருஞ் சிவதன்மிணிதீக்ஷையுலோகதன்மிணிதீக்ஷை யிரண்டிற்குள் சிவதன்மிணிதீக்ஷை பரையென்றுரைக்கு நயிட்டிகீ தீக்ஷையென்றும் அபரை யென்றுரைக்கும் பவுஷ்டிகீதீக்ஷையென்று மிருவிதமாம். அதற்குட் பரம்பரையாயுஞ் சாக்ஷாத்தாயுநிரதிசயசருவஞ்ஞதாதி சிவகுணமணப்புற்று முத்திமாத்திர காமிகராயுஞ் சாதககாரிய காமிய சிவதன்மவுலோகதன்ம கன்மானுட்டான பலப்பற்றற்றவர்களாயு மவரவர்க்கருகமாஞ் சாமானியவிசேஷசரியை கிரியை செபசாலம்பசிவயோக நிராலம்பசிவயோக ஞானத் திரிபதார்த்தஞான சிவத்துவ பசுத்துவ விவேகஞானவான்களாயும், அந்தந்தச் சிவதன்மானுட்டான சிலர்களாயுஞ் ஸ்ரீகண்டாதி சதாசிவாந்த சாலோக சாமீப சாரூப சமபலத்தியானசாத்திய சமபலமூர்த்தி சாயுச்சியங்களீயுஞ் சதாசிவதத்துவத்துக்குமேற் சத்திசிவதத்துவ கலாபுவன சாதார நிராதாரங்களிற் பரசிவசாலோக சாமீப சாரூபச் சற்றுச்சிற்றுச் சமபல தடத்தமூர்த்தி சாயுச்சிய முற்றுப்பெற்று மூர்த்திமுத்தச்சுவரூப சாயுச்சியங்களீயு மவரவர்க் கருகமாய்ச் சாருதற்கருகர்களாயு மிருக்குஞ் சமயிகள் புத்திரர்கள் புத்திரவிசேஷ நிரபிஷேக நிரதிகார நிருவாணிகள் சாபிஷேக சாதிகாராசாரியர்க ளிவர்கட்கு யோக்கியமறிந்து சருவசிவபுண்ணிய பசுபுண்ணியபாவ சஞ்சிதகன்ம சுத்திமதியாகவு மதில்லாததாகவு மட்டாங்குல மட்டுவிட்டறுக்குஞ் சிகாச்சேதவதியாகவு மதில்லாததாகவும் பண்ணுமது நயிட்டிகீசிவதன்மிணிதீக்ஷை.

கூடவுதிக்கு மாயேய மகாமாயேய புத்திகுண வணிமாதிகுணஞ் சிற்றுப்பலமாகத் தானதிகபலமாக வுதிக்குஞ்சார்ரநிரவதிகசாதிசய சருவஞ்ஞதாதி சிவகுணமணப்புற்ற போகபோகாந்தமோக்ஷ காமிகளாயு மகாப்பிரளயபரியந்த மிந்தச் சரீரத்தைத்தானே மரணமடாதபடி யதிமார்க்க மாந்திர சாத்திரப்பிரசித்த விசேஷ சிவதீர்த்த மருந்து மந்திர யோகமுதலிய சிவதன்ம விசேஷானுட்டானத்தாற் சித்திபண்ணிக்கொண்டு தாமிருக்கும் புவனமதுவிட்டு மூட்டின்றிவிரும்பிப்போம் புவனங்கட்கிணங்க வேடந்திரித்து வடிவுவிரித்து மாயாவதிசரிக்குஞ் சாமர்த்திய வாஞ்சாவான்களாயுஞ் சரீரம்விட்டு விரும்பும்வேறுசரீரம்பரித்து மகாமாயாவதிசரி

ப்ப விருப்பந்தரிப்பவராயுங் காமிய சிவஞானத்தியானசெபபூசாசேவாதி சகாமாராதனை; அல்ல தணுபக்ஷபிரமாதி காற்சிவமூர்த்தி யாத்மாரூட சம்புபக்ஷ பிரமாதிகாற்சிவமூர்த்தி சம்புபக்ஷமாத்திரசதாசிவமூர்த்தியாகப் பஞ்சபஞ்சகலேசுவர மூர்த்திகளுள் அவரவர்க்கிட்டபலாருக கலாருக கலேசுரமூர்த்தி ஞானத்தியானசெப பூசாசேவாதி சகாமாராதனை;அல்ல தப்படி சிந்திக்கப்படுங் காலாக்கினியாதியுஞ்சிருதாந்த புவனேசுரர்களுள் ளவரவர்க்கிட்டபலாருக புவனருக புவனேசுர ஞானத்தியான செபபூசா சேவாதி சகாமாராதனையென்கின்ற வதிமார்க்கமாந்திரசாத்திரப்பிரசித்த சிவதன்மானுட்டான வாஞ்சாவான்களாயு மிருக்குஞ் சாதகர்க்குத் தீக்ஷா னந்தர மனுட்டிக்குஞ் சிவபுண்ணியத்துக்கொத்து மாறின்றிச்சேருமுன் செய்த சிவபுண்ணியமாத்திரமந்தச் சாதகரடையும்பலாருக கலாருகங் களா யந்தந்தக் கலாமரியாதியிற் சேஷித்துநிற்கச் சருவபசுபுண்ணியபாப சஞ்சிதகன்ம சுத்திமதியாகவுந் துவதாசாங்குலமட்டு விட்டறுக்குஞ் சிகா ச்சேதவதியாகவும் பண்ணுமது பவதிக்ஷிசிவதன்மிணிதீக்ஷை.

மாயாவதி மட்டுமுட்டும் பிரஞ்ஞாப்பெருக்குத் தனதுதனது வசதிய வதிசுருக்கும் பின்கூட வதிக்குந் தான்சிற்றுப்பலமாக வதிகபலமாகவுதிக் குஞ் சாதிசய சருவஞ்ஞதாதி சிவகுணமணப்புற்று மாயாமண்டலத்திருந் தாலுஞ் சிலபேரிடத் தப்பிரஞ்ஞாப்பெருக்கு மாயோபரியபரிமிதமாக விரிக்கு மாயேயபுத்தி யணிமாதிகுண மணப்புற்று மதுவன்றி வைதிகாத் தியாத்ம சாத்திரப் பிரசித்த யாகாதிபசுதன்மந் தன்கோடிக்குள்ளடக்கும் லௌகீகசாத்திரப் பிரசித்த தண்ணீர்ப்பந்தல் தடாகமுதலிய வுலோக தன்மந்தழுவி யொழுகியு மூலோகதன்மசிவதன்மத் துலாகோடிகளுக்குட் சிறிதொருதூலபற்றி முன்சொல்லிய வதிமார்க்க மாந்திர சாத்திரப் பிர சித்த சிவதன்மத் துலாகோடிகொழுவி யச்சிவதன்மாணுட்டானத்தால், மகாமாயாபூதி விரும்பிற் றன்னேடுகூடவுதிக்கு மகாமாயேயபுத்திகுண வணிமாமுதலிய குணபலஞ் சிறறுப்பலமாகத தானதிகபலமா யுதிக்குஞ் சாதிசய சருவஞ்ஞதாதி சிவகுணமணப்புற்றுமுதிக்கும் போகபோகாந்த மோக்ஷகாமிகளாயு மகாப்பிரளய பரியந்தஞ் சிவதன்மிணி பவதிக்ஷை யிற் சொல்லிய விருவகைமுறைமையிற் சரீரந்தரித்துச் சரிப்ப விருபபந் தரிப்பவராயுஞ் சிவதன்மமணப்புற்ற வுலோகதன்மம் உலோகதன்மமணப் புற்ற சிவதன்ம மிருதனமானுட்டான சீலர்களாயு மிருக்குஞ்சாதகர்க்கு, அந்தந்தச் சாதகர் பொருந்த விரும்பு மந்தந்தப் பலாருக கலாருகங்களா யந்தந்தக் கலாமரியாதியிற் பசுபுண்ணியங்கள் சிவபுண்ணியங்கள்பரிசே ஷித்துநிற்கப பாவகன்மங்க ளந்தந்தக் கலாமரியாதியிற் பரிசேஷியாது பரிசுத்தியாகவப்பரிசுத்தி மதியாகவு மநதந்தச்சாதகருக்குட்சதாசிவதத் துவோ பரிசத்தி சிவதத்துவ போககாமிகட்குத் துவாதசாங்குலமட்டு

விட்டறுக்குஞ் சொச்சேதவதியாகவும் பிருதிவித்தத்துவாதி சதாசிவதத் துவாந்த போகசாமிகட்குச் சொச்சேதவதியன்றியும் பராயாகவு மபரா யாகவும் பண்ணுமது லோகதன்மிணிபவுதிதீக்ஷை.

ஸ்ரீமத் அகோரசிவாசாரியர் பத்ததிமுதற் லெபத்ததிகளிற் பவுதிதீசி வதன்மிணிதீக்ஷை பவுதிதீலோகதன்மிணிதீக்ஷையிரண்டிற்கு மிருதீக்ஷா பலாருக கலாருகங்களாய்ப் பசுபுண்ணிய சிவபுண்ணிய தன்மகன்மங்கள் பரிசேஷித்துநிற்கப் பாவகன்மங்கள் மாத்திரம் பரிசேஷியாது பரிசுத்தியா கப் பஞ்சகலாசுத்தி யொருமிக்கப்பண்ணி விரும்பியவிரும்பிய புவனபோ கம் போகாந்தத்துப் புநர்த்தீக்ஷாபேக்ஷை யுபேக்ஷித்துச் சாக்ஷான் மோ க்ஷஞ் சாரும்படிக்குச் சிவனிடத்து யோசனை செப்பி யிருப்பது சிந்தி த்தறிக.

நீர்தீக்ஷாபரீக்ஷை பண்ணியது நுண்ணியதுதானே; சிரகத்தாசாரியர் விரத்தாசாரியனென்று விசேஷியாமல்ஆசாரியர்கட்கு நயிட்டிதீதீக்ஷையெ ன்றுமுன்சூமுதாயத்திற் சாற்றினீர்; அது காலோத்தராதியில் நயிட்டிகா சாரியர் நயிட்டிகர்க்குங் சிரகத்தர்க்குந் தீக்ஷைபண்ண; பவுதிகாசாரியர் பவுதிகர்க்குமாத்திரந் தீக்ஷைபண்ண என்னும்பாடத்தாற் சிரகத்தாசாரிய ர்கட்கு நயிட்டிதீதீக்ஷை காட்டப்படாதென்று காட்டப்பட்டது. நீசொ ல்லியதுள்ளது; ஆசாரியர்கட்கு நயிட்டிதீதீக்ஷையென்றும், சருவஞ்ஞா ஞேத்தர சாமான்னிய வசனத்தினுலும் நயிட்டிகாசாரியர் நயிட்டிகர்க்கு மாத்திரங் சிரகத்தாசாரியர் நயிட்டிகர்க்கும் பவுதிகர்க்கும் பண்ணவென்னு மாகமாந்தர விசேஷவசனத்தினுலும், நயிட்டிதீதீக்ஷையினுலே தீக்ஷிதனு யிருக்குங் சிரகத்தனும் விரத்தனும் வர்ச்சிக்கப்படாது வாஞ்சிக்கும் பிரார த்தகன்மபல போகவாஞ்சைமாத்திரத்தினுலேதான் மணிமந்திர மருந்து முதலிய சாதனமாத்திர சாத்தியகாயிகபோக போகவாஞ்சை மாத்திரத் தினுலேயுந்தான், மலபரிபாக தாரதம்மியத்தான் நயிட்டிகதீக்ஷாவைவித் திரியமாத்திரத்தா லிங்கிருந்து வாஞ்சியாதிருக்கவுஞ் சரீராந்தத்திற்றூனே வரும் பராபரபுத்தி யபரமுத்திபோகவாஞ்சை மாத்திரத்தினுலேயுந்தான் சாதக சாத்திய பவுதிகதீக்ஷாபல புவனபதிபூதி வாஞ்சையில்லாமை யாற் பவுதிகனன்று, நயிட்டிகன்றூனேயென்றுஞ் சோமசம்புவிருத்தி வச னத்தாலுங் சிரகத்தாசாரியர்கட்கு நயிட்டிதீதீக்ஷை நன்றுகநாட்டப்ப ட்டது.

நீரப்படிசொல்லிற்பவுதிகாசாரியர் பவுதிகர்க்குத்தீக்ஷைபண்ணக்கட வாகள் என்னும் வசன நிட்பலமாய் அப்பிராமாணியத்தானமாய்ப் போ காதோ? யேயப்படி போமென்று சொல்லியதேது? அப்படிபோகாது; க லாமாந்த தீக்ஷாசாமான்னியபுத்தி வியாக்கியானத்திற் சுருக்கியுரைத்தி

ருப்பது விரித்துரைப்பாம்:—முறைமையில் நிட்டையென்று மோக்ஷத்துக்குஞ் சமாதிக்கும் விரதமுதலியவற்றிற்கும் பெயராதலால், வாலியவயதுதொடுத்துமரணாந்தம் விரதநியமித்தது துறவிகளாயிருக்கும் நயிட்டிகப்பிரமசாரிகளென்றும் கன்னியாகலியாண காலாவதி விரதநியமித்துத் துறவிகளாயிருக்கும் பவுதிகப்பிரமசாரிகளென்று மிருவகையாயிருக்கும்; விரத்தாசாரியர்களுங் கிரகத்தாசாரியர்களுந் தனித்தனி சரீராந்தத்தில் வரு மோக்ஷவிருப்பத்தினலு மவரவர்க் கிட்டபுவனபதிபூதி விருப்பத்தினலு மவ்விருப்பத்துக்கருகமாய் நயிட்டிகநைஷ்டிக பவுதிகநைஷ்டிக பண்ணுவித்துக்கொண்டு மூன்றுபகுப்பார்களுக்குந் தனித்தனி யட்டாங்குல சிகாச்சேதமுடைய நயிட்டிகாசாரியர்களென்றுந் துவாதசாங்குல சிகாச்சேதமுடைய பவுதிகாசாரியர்களென்று மிருவிதமாயிருப்பார்கள்; ஆதலாற் கிரகத்தாசாரியர்கள் நயிட்டிகாசாரியர்களாயும் பவுதிகாசாரியர்களாயும் குருத்துவம் பரிப்பார்களென்பது பசுமரத்தாணிபோற் பதித்து நாட்டுதலானும் வசனங்கள் சபலங்கள்தானே. அஃதப்படியாகட்டும்; ஸ்ரீகாமிகாகமத்தில் நாலாம் வருணத்தில் நயிட்டிகர்கட்கே கைமித்திய கன்ம கர்த்திருத்துவ குருத்துவம், கிரகத்தர்க்கு நித்தியகாமியகன்ம கர்த்திருத்துவ சமயி புத்திர சாதகத்துவ மாத்திரம் குருத்துவமில்லையென்று கூறியதேது? அதுவுள்ளது; ஆமர்த்தகமடமுதலமட குருமனக்குறிப்புப் பிரிப்பினன் மடப்பகுப்பாகமங்களிற் கிலவாகமங்களிற் கூறியது. காலோத்தராதியில்,

"கிரகத்தச்சர்வவருணேஷ— பிம்பபூச்சியோகுருருதாகிருத:
நயிட்டிகத்துவதமோஜ்ஞேயோ பவுதிகந்துவிசேஷத:
சதுர்ணமபிவர்ணனு மிலிங்கினுங்கிரகிணமபி
ஆசாரியத்துவஞ்சிவேனுச்சி மின்சித்தாந்தேபிறதிபாதிதம்"

என்றுகூறு

தலானுங் கிரணகமத்திற் பிராமணசாரியர்முத லாசாரியர் நால்வர்க்கு முறைமையில் நாலுமூனறிரண்டொரு வருணங்களிலே கலியாணம் விதித்திருத்தலானுஞ் சருவாகமங்களு மப்படிசாற்றுவாம்;ஓராகமத்திற் றள்ளிய தகொண்டு தள்ளினுற் பிராமணனேகுரு மற்றவருணத்தார் சாதகர் புத்திரர் சமயிகள் மாத்திரமா யிருப்பார்களென்றும்,பிராமணன் பிராமணன் முதல் நால்வர்க்குங்குருவென்றும், அரசன் அரசன்முதல் மூவர்க்குங் குருவென்றும், வணிகன் வணிகன்முத லிருவர்க்குங் குருவென்றும், சூத்திரன் சூத்திரர்க்குக் குருவென்றும், மேருதந்திரத்திலுங் காமிகம் பராக்கியை முதலாகமங்களிலு முறைமையில் நிஷேதித்தும் விதித்துமிருத்தலால் ஒரு வசனத்தைப்பிடித்துப் பிராமணன்குருனே குரு மற்றவரல்லவென்று பேச வேண்டும்; அப்படியாகட்டுமென்று நீசொல்லில் மற்றவர்களுங் குருவென்னு மனேகாகமவசனங்களுக்கு மப்பிராமாணியப் பிரசங்கம் வரும்

பிராமணரில் பிரஞ்ஞாவான்க ளில்லாதிருந்தால் அரசர் முதலோர்க் கரசன் குரு. அரசர்களில் பிரஞ்ஞாவான்களில்லாதிருந்தால் வணிகர்முத லோர்க்கு வணிகன்குரு வணிகரிற் பிரஞ்ஞாவான்க ளில்லாதிருந்தாற் சூத்திரர்க்குச் சூத்திரன் குருவென்னும் வசனங்களுக்குப் பிரமாணியஞ் சொல்லலாமென்று நீசொல்லில், நாலாம்வருணத்தில் நயிட்டிகரிற் பிர ஞ்ஞாவான்க ளில்லாதிருந்தால் கிரகத்தன் குருவென்னும் வசனத்துக் குப் பிராமாணிய நாம்பேசுவோம்; அப்படிதான் சொல்லுமென்று நீசொ ல்லில் அதுவுங்கூடாது; கிரகத்தன் சருவவருணங்களிலும் பூச்சியனுகிய குருவென்று கூறுதலால் நாலாம்வருணத்தில் நயிட்டிகர் பிரஞ்ஞாவான் களா யிருந்தாலுங் கிரகத்தரும் பிரஞ்ஞாவான்களாயிருந்தா லிருவகையா ருங் குருவென்று கூறுவோம்; அப்படிதானுகட்டுமென்று நீசொல்லில் அதுவுங்கூடாது; மந்தப்பிரஞ்ஞாவானுயிருந்தாலும் பிரவாகசந்தஞ்சி பிர சித்தப் பிரசூதிமானுயிருக்கின்ற குருபுத்திரனைத் தியாச்சியம் பண்ண லாகாதென்று சிவாகமஞ் செப்புதலாலொன்றுங் குறியாமற் பிரஞ்ஞாவா ன்களா யிருக்கிற சிஷர்களுதவியாக அவனேகுருவென்று கூறுவோம்; இப்போது சொல்லிவந்த வசனங்களினுல் விரதிகளிற் பிரமசாரியருங் கிரகத்தருங் குரு, வானப்பிரத்தருஞ் சன்னியாசிகளுங் குருவல்லவென்று கூறப்பட்டது.

ஸ்ரீகாமிகாகமத்திற் சன்னியாசிக்குங் குருத்துவமுண்டென்று கூறி யதேது? உள்ளது; சாத்திரதீக்ஷை மாத்திரத்திலென்று சமாதானம்; சாகூஷாத்திருத சிவாதிபதார்த்த சித்த சிவயோகியாகிற் சாம்பவிதீக்ஷை மாத்திரத்திலென்றுஞ் சமாதானமாம். நாலாம்வருணத்தாருக்குப் பிரணவ மாகாதென்று பிராமணர்முதலோர் பேசுவதேது? உள்ளது, குருத்துவம் விதித்திருத்தலாற் பிரணவபூருவப் பிராசாத மறியாதவன் குருவல்லவெ ன்று கூறுதலானும் மகுடாகமத்தில்,

"நிருவாணதீக்ஷிதேருத்திரோ பிரணவந்துர்யோசயேது"

என்று

இருத்தலானுங் காமிகத்து மப்படியே யிருத்தலானும் பிரணவமாமென்று பேசுவோம்; சோமசம்பு பத்ததிமுதற் பத்ததிகர்த்தாக்கள் நிஷேதியாதப டியினுலே விதிட்ட சமயிமுதலானோர்க்கும் பிராமாணிக்கங் கொடுத்திரு த்தலானு மாமென்பது சூசிக்கப்பட்டது; பிரஞ்ஞையில்லாப் பிராமணர் சிலபேர் நாலாம்வருணத்திற் சன்னியாசி யில்லையென்று சாற்றுவார்கள்; அது நயிட்டிகப் பிரமசாரிக்குள்ளடக்கிப் பிராயச்சித்தாதி விதித்தலாலே யும் அகிந்தியவிசுவசாதாக்கியத்திற் பிராமணர்முதற் பத்துச்சாதிக்கும் பிர மசரியம் கிரகத்தம் வானப்பிரத்தம் சன்னியாசம் காலாச்சிரம முண்டென் று விதித்தலாற் சைவத்திற் பிரசித்தம்.

வைதிகத்து மிராமாயணத்திற் கிருதாதி யுகக்கிரமத்திற் பிராமணர் முதல் நால்வர்க்குந் தபோமுக்கியஞ் சாற்றுவதுபோல் பிரமாண்டபுராணத்திற கிருதயுகத்துக்குப் பிராமணசன்னியாசி முக்கியன், திரேதாயுகத்துக்கு க்ஷத்திரிய சன்னியாசி முக்கியன், துவாபரயுகத்துக்கு வைசியசன்னியாசி முக்கியன், கலியுகத்துக்குச் சூத்திரசன்னியாசி முக்கியன் என்னும் வசனமுதல் வசனங்களாற் பிரசித்தந்தானே;கொச்சேத மில்லார்க் காசாரியாபிஷேக மாகாதாதலாற் கிரகத்தரிலும் விரத்தரிலும் கயிட்டிகீதீக்ஷாவான்களாய் கயிட்டிகாசாரியர்க ளுண்டென்று நாம்முன்னுட்டுதலால் அவ்விருவகை நால்வருணத்து கயிட்டிகாசாரியர்களே சாற்றியமரியாதியிற் சைவத்துச் சனனியாசங் கொடுக்கவேண்டும் வைதிகத்துகருபோலக் குருத்துவமில்லாச் சன்னியாசி கொடுப்பதின்று, பஞ்சரிஷி கோத்திரத்திற சிவப்பிராமணா சருவாதிகாரிகளென்று காமிகத்திற் சாற்றுதலாலவாகளிடத்திற் சிவனிடத்திற்போல் கயிட்டிகாசாரியர் பரதிகாசாரிய ரென்னும் பரியாலோசனை சன்னியாசாதிபரிக்கிரகம் பண்ணும்பொருட்டுப் பண்ணுவதின்று; சமபுததி பண்ணுவதே சால்பு; அமையு மினிமேலப்பால் நடப்போம். எ-று. (கூ)

மேற்கிரியாவதி தீக்ஷையினாலேதான், சாம்பவிதீக்ஷையோடு சாத்தியென்று சாற்று ஞானவதி தீக்ஷையினாலேதான், சடத்துவா சுத்திபண்ணி முத்திவியத்திபண்ணும்பொருட்டு அறியுஞ் சடத்துவாக்கள் கீழ்மேற்சொல்லுங்கிரமத்திலே யொன்றினென்று வியாத்தியை யுடையதாதி வியாப்பியவியாபகங்களாய்ப் போய்த் தங்களை வியாபிக்குஞ சிவசத்தியோடுகூடச் சருவவியாபக சிவனுக்கு வியாப்பியங்களா யிருக்குமென்று விளம்புகின்றார்:—

அழிவிலாக்கிரியையினாலாதல்சத்திமத்தா
லாதலத்துவசுத்திபண்ணிமலமகற்றி
யொழிவிலாச்சிவம்பிரகாசிக்குஞான
முதிப்பித்துற்பவந்துடைப்பனரனைருமூவர்க்கும்
வழுவிலாவழியாறுமந்திரங்கள்பதங்கள்
வன்னங்கள்புவனங்கடத்துவங்கள்கலைகள்
கழிவிலாதுணர்த்தமுறையொன்றினென்றுவியாத்தி
கருதுகலைசத்தியின்கண்சத்திசிவன்கண்ணும்.

இ-ள். ''மலமகற்றி'' யென்பதனால் முத்திசெய் தீக்ஷாலக்கணசிவசத்தியாற் பாசமுத்தி சொல்லப்பட்டது. ''சிவம்பிரகாசிக்கு ஞானமுதிப்

பித்து'' என்பதனுல் வியத்திசெய் தீக்ஷாலக்கண சிவசத்தியாற் சிவசா க்ஷாற்காரோத்திரோக காரணதீக்ஷித சிவத்துவலக்கண சிற்சத்தியினது விருத்திரூப சருவபதார்த்தகர்ப்ப சிவசாக்ஷாற்கார சமுத்திரோகரூப விய த்தி சொல்லப்பட்டது. ''உற்பவந்துடைப்பன்'' என்பதனுல் மீளத்திரு ம்புத லில்லையென்பது விளம்பப்பட்டது. சிவனுக்குச் சிவசத்தி வியாப் பியமென்றது சிவசமவேதையாய்ச் செலுத்தப்பட்டிருத்தலா லுபசாரம். மற்றதுவெளிப்பொருள், (சு)

> ஆறத்துவாக்களுக்குள் மந்திரமுதலிலந்துங் கலையைந் தின்வியாத்தியை யுடையதாதலினுல் வியாபகமா யிருக்குங் கலைகளுக்கு வியாப்பியமென்றுஞ் சூசி ப்பித்துச் சடத்துவாவில் மந்திரத்துட் பஞ்சப்பி ரமங்களுக்குச் சங்காரக்கிரமஞ் சத்தியோசாதாதி யீசானமந்தம், நேத்திரம்விட்டுச்சடங்கங்களுக்குச் சங்காரக்கிரம மிருதயாதி யத்திரமந்தம், பதங் களுக் கோமாதி யோமாந்தம், வன்னங்களுக்கு கூ காராதி அகாராந்தம், புவனங்களுக்குக் காலாக்கி னியாதி யஞசிருதையந்தம், தத்துவங்களுக்குப் பிருதிவியாதி சிவதத்துவமந்தம், கலைகளுக்கு நிவிர்த்தியாதி சாந்தியதீதையந்தம் என்று சிந்தித் துக்கொண்டு சங்காரக் கிரமத்தில் மந்திரமுதலிலந் தும் கலையைந்தி னிற்சூமுறைமை மூன்றுதிருவி ருத்தங்களினுல் வகுத்துரைக்கின்றூர்.

மந்திரங்கண்முதலிலந்துங்கலையைந்தின்வியாத்தி
மருவுமந்திரமிரண்டுபதங்களுலே
முந்தகிலையெழுத்தொன்றுபுவனநூற்றெட்
டவனிதத்துவமொன்றுநிவிர்த்தியயன்றெய்வம்
வந்திடுமந்திரமிரண்டுபதங்கண்மூவேழ்
வன்னங்களுலாறுபுரமைம்பத்தாறு
தந்திடுந்தத்துவங்களிருபத்துமூன்று
தரும்பிரதிட்டாகலைமாலதிதெய்வந்தானும். (எ)
வித்தையின்மந்திரமிரண்டுபதநாலிலந்து
விரவுமெழுத்தேழுபுரமிருபத்தேழு
தத்துவமுமோரேழுதங்குமதிதெய்வந்
தாவிலுருத்திரனுகுஞ்சாந்திதன்னில்

வைத்தனமந்திரமிரண்டுபதங்கள்பதினொன்று
வன்னமொருமூன்றுபுரம்பதினெட்டாகு
முத்தமமாந்தத்துவமுமொருமூன்றாகு
முணரிலதிதேவதையுமுயரீசனுமே. (அ)

சாந்தியாதீதகலைதன்னின்மந்திரங்க
டான்மூன்றுபதமொன்றக்கரங்கள்பதினாறு
வாய்ந்தபுரமூவைந்துதத்துவங்களிரண்டு
மருவுமதிதேவதையுமன்னுசதாசிவமா
மேய்ந்தமுறைமந்திரங்கள்பதினொன்றுபதங்க
ளெண்பத்தொன்றக்கரங்களோம்பத்தொன்றாகு
மாய்ந்தபுரமிருநூற்றேழிருபத்துநாலா
மறிதருதத்துவமுப்பத்தாறுகலையைந்தே.
(பொருள்) பத்ததிகளிற் பிரசித்தம். எ-று. (கூ)

குருவதிகரணஞ யிருக்குஞ்சிவ னத்துவசோதனை பண்ணு
முறைமை யறைகின்றார்:-

மூன்றுதிறத்தணுக்கள்செய்யுங்கன்மங்கட்கு
முன்னிலையாமூவிரண்டாமத்துவாவி
னன்றமுறையவையருத்தியறுத்துமலமுதிர்வித்
தரும்பருவமடைதலுமேயாசானுகித்
தோன்றிநுகராதவகைமுற்செய்கன்மத்
தாகளறுத்தங்கத்துவாத்துடக்கறவேசோதித்
தேன்றவுடற்கன்மமனுபவத்தினலறுத்திங்
கினிச்செய்கன்மமூலமலஞானத்தாலிடிப்பன்.

இ-ள். மூன்றுதிறத்தணுக்கள் செய்யுங் கன்மங்கட்கு - ஆன்மாக்கள்ம னோவாக்குக்காயங்களினது வியாபாரப் பிரகாரத்தாற் புத்தியில் வாசனை யாய்ப் புகுத்திப் பண்ணுங் கன்மங்களுக்கு—முன்னிலையா மூவிரண்டா மத்துவாவின்-சஞ்சிதமாய்க் குறித்துப் பகுத்தமைக்குந்தானமா மூவிரண் டாமத்துவாவின்—ஆன்றமுறையவையருத்தியறுத்து-அந்தச் சஞ்சிதகன் மங்களை யபக்குவங்களைவிட்டுப் பக்குவங்களைப் பிராரத்தகன்மமாக்கிப் புசி ப்பித்துத் தொலைத்து—மலமுதிர்வித்து-(அந்தக் கன்மபோகதேகசம்பந்த த்தினுலே)மலசத்தியைவளர்த்து(அந்தமுதிர்ச்சியினுலேயத்தமலசத்தி)— அரும்பருவமடைதலுமே - பழுத்துப் பக்குவமாயுள்ளளவில் — ஆசாரு கி - சிவன் குருவதிகரணஞகி—தோன்றி - பிரசன்னஞய்—(தோன்றி

யென்பதுநெறிலேத்தீபகமாதலால்) தோன்றிநிலைராதவகை - திரும்பச்சன் மித்துப்புரியாதபடி—மூற்செய்கன்மத்துகளறுத்து - மலபரிபாகத்தினது தீவிரதரத்தன்மையாற் பக்குவங்களாயு மாந்தியத்தினு லபக்குவங்களாயி ருந்தாலுந் தீக்ஷாமந்திர சம்ஸ்காரத்தாற் பக்குவங்களாயு மிருக்கின்ற சஞ் சிதகன்மமலக்தைக் கலேகளிற்பருத்துத் தீக்ஷாபலாருக கலாருகங்களாய்ச் சேஷித்துநிற்கவுநில்லாமலுஞ்சுத்திபண்ணி—அத்துவாத்துடக்கறவேசோ தித்து - சடத்துவக்கட்டவிடச் சுத்திபண்ணிச்[சடத்துவாவிற் பருத்துப் பதித்துச் சஞ்சிதகன்ம போசனமாகுஞ் சுத்தியே அத்துவசுத்தியென்று தாற்பரியம்]—என்றவுடற்கன்மம் - பிராரத்தகன்மமலத்தை—அனுபவ த்தினுலறுத்து - புஷ்பிஞற்போக்கி—இங்ஙினிச்செய்கன்மம் - தீக்ஷை க்குப்பின் பிராரத்தம் புஷிக்குமிடத்து அபிமானத்தினுலேறும் வைதிகாதி சாத்திரமாத்திரப் பிரஸித்தகாமியகன்மமலஞ் (சிவதன்மிணிதீக்ஷாசுத்தனி டத்தில், உவர்த்தரையில் விரைத்த விரைபோலுக்கிப்போம்; ஆதலாற் சிவசாத்திரமாத்திரத்தில் விதித்தகன்மம் பண்ணுதல் விடுதல் நிஷித்தக ன்மம் விடுதல்பண்ணுதலென்னுஞ் சுத்தாசுத்த மலேவாக்குக்காயவியா பாரத்தாற் சுத்தாசுத்தபுத்தியிற்புருத்தும் புண்ணியாபுண்ணியகாமியக ன்மமலத்தையும்)— மூலமலம்-(தீக்ஷையிற்சேஷித்த) ஆணவமலத்தையும் (தீக்ஷாபலாருக கலாருகங்களாய்ப் பரிசேஷித்தும் பரிசேஷியாதுமிருப ப)—ஞானத்தாலிடிப்பன் - தான்கற்பித்த சாலம்ப நிராலம்ப புவனபதி விஷய நிரிபதார்த்தகர்ப்ப சிவவிஷய ஞானத்தியானகாரிய சாக்ஷாற்கார காரணமாகுஞ் சாலம்ப நிராலம்ப புவனபதிவிஷயசமாதி சிவவிஷயசமா தியிருவிதசமாதியினுலியற்பிப்பன். எ-று. (கo)

சிவசமாதி சிவஞித்தாந்தத்தன்றிச் சேரப்படாதென்று செப்புகின்றார்.

புறச்சமயநெறிநின்றுமகச்சமயம்புக்கும்
புகன்மிருதிவழியுழன்றும்புகலுமாச்சிர
மறத்துறைகளவையடைந்துமருந்தவங்கள்புரிந்து
மருங்கலேகள்பலதெரிந்துமாரணங்கள்படித்துஞ்
சிறப்புடையபுராணங்களுணர்ந்தும்வேதச்
சிரப்பொருளேமிகத்தெளிந்துஞ்சென்றுற்சைவத்
திறத்தடைவரிதிற்சரியைகிரியாயோகஞ்
செலுத்தியபின்ஞானத்தாற்சிவனடியைச்சேர்வர்.

இ-ள். புறச்சமயநெறி நின்றும் - உலோகாயதம் பவுத்தம் அருகம் மீமாங்சம் மாயாவாதம் பாஞ்சராத்திரமென்னும் புறச்சமயங்களினி ன்றும்—புகன்மிருதிவழியுழன்றுமெனப் பொருள்வழிபொருத்திப்போய் வேதச்சிரப்பொருளேமிகத் தெளிந்துஞ்சென்றால்—அகச்சமயம் - பாசு

பதம் வாமம் வயிரவம் மகாவிரதம் காளாமுகமென்னும் மூள்ளுரசம யம்—புக்கும் (பின்)—சைவத்திறத்தடைவர் - சைவசித்தாந்தத்திற் பிர வேசிப்பர்(இதிலெனப் பொருள்பொருத்திப்பொருளுரைக்க,பதக்கிரமத் திற் பொருளுரைத்தாற் சமயக்கிரமமாறுபடும்)—ஞானத்தால்-சிவதீக்ஷா ங்க நிராலம்ப சிவசமாதியிலுல்—சிவனடியைச்சேர்வர் - சிவசத்திசமா னமாய்த தமதுசித்சத்திவிரிவுதிருத்தி யிருப்பார்கள். எ-று.

போகமாத்திரததை நிமித்தீகரித்துவரு மலபரிபாகத்துக்கும் மலபரி பாகமாத்திரத்தை நோக்கிவருஞ் சிவசத்திநிபாதத்துக்குஞ் சிவதீக்ஷானுக் கிரகத்துக்கும் ஞானத்தியான சமாதிசிவன்முத்தி சாரூபாற்காரக்குறித்தீ க்ஷாங்கத்துக்கும் மோட்சத்துக்குஞ் சாதிக்கிரம மாச்சிரமக்கிரமஞ் சமய கிரமங் காலதேசக்கிரமங்களுதிவருதலில்லாமையாற் சமயக்கிரமத்தினின் று சைவத்திறதடைவரென்பது தந்திரமன்று; சகலசமயிகளுக்கு மிலிங் கோத்தாரஞ்சைவத்திற்சொல்லுதலாற் சைவத்து வந்தல்லது பரமுத்தி சித்தியில்லை, பதமுத்தியென்று தாற்பரியம். மற்றதுவெள்ளிப்பொருள்.()

> ஆதலால் உலோகாயதன் முதலோர்முத்தி முத்திப்
> போலியென்பதுந் தெரிவிததுச் சித்தாந்தமுத்தித்
> திறனுஞ்செப்புகின்றூர்.

இம்மையேயீரெட்டாண்டெய்தியெழிலாரு
மேந்திழையாமுத்தியென்றுமிருஞ்சுவாக்கமுத்தி
யமமையேயென்றுமுத்தியைந்துகந்த
மறக்கெடுகையென்றுமட்டகுணமுத்தியென்றும
மெய்மமையேபாடாணம்போல்கைமுத்தியென்றும்
விவேகமுத்தியென்றுந்தன்மெய்வடிவாஞ்சிவத்தைச்
செம்மையேபெறுகைமுத்திபென்றுஞ்செபபுவாகள்
சிவனடியைச்சேருமுத்திசெப்புவதிங்கியாமே.

இ-ள. இம்மையேயீரெட்டாண்டெய்தி யெழிலாருமேந்திழையார் முதலியென்றும் - (முழுகுதல் புசிததல் பூசுதல் முடித்தல் முதற்சுகமே சுவர்க்கம், அந்தச்சுகமில்லாமை நரகம்) மகளிரைமணத்தலிம்மையேமுத் தியெனறு (லோகாயதன் சொல்லுவன்)—இருஞ்சுவர்க்கமம்மையேமுத் தியென்றும் (பூருவமீமாங்கிசன்சொல்லுவன்)—(உருவம்வேதனை குறிப்பு ப்பாவனை விஞ்ஞானமென்கின்ற) கந்தமைந்துமறக்கெடுகைமுத்தியென் றும் (புததரிற் பிரதீபசிருவாணவாதிபேசுவன்)—(அனந்தஞானம் அனந் ததரிசனம் அனந்தவீரியம் அனந்தசுகம் நின்னுமம நிர்க்கோத்திரம் நிரா யுஷ்யம் சகலசம்மியக்குப்பாவமெனும்) அட்டகுணமுத்தியென்றும்(அரு

கனிசைப்பன்)—(ஞானமுதலிய செயற்கைக்குணங்கள்கெட்டு இயற்கை யஞ்ஞானமே குணமாய்ப்) பாடாணம்போல்கை முத்தியென்றும்(தார்க்கி கன்சாற்றுவன்)—(பிரகிருதிபுருடவியோகமாகிய) விவேகமுத்தியென்றும் (சாங்கியனுரைப்பன்)—தன்மெய்வடிவாஞ்சிவத்தை-தனதித்தவடிவுபோற் சாகாரசிவமூர்த்தி சாரூபசிவாகாரத்தை—செம்மையேபெறுகை - பர முத்தியாகப்பரிப்பது முத்தியென்றும் (சிவசமவாதிசெப்புவன்)—(இப்ப டிவாதிகள்)செப்புவார்கள்—சிவனடியைச்சேருமுத்தி - சிவசத்திக்கொத் துவிரிக்குஞ் சாட்சுண்ணியசிற்சத்திகாம சிவத்துவாபிவியத்தியாமுத்தி— யாமிங்குசெப்புவதே. எ-று.

சிலவாதுகித சைவாசாரியர், யாஞ்சொல்லு மிந்தமுத்தியைச் சாரூ பமுத்திசாற்றுஞ் சிவசமவாதிமுத்தியாய்த் திருப்பி சமதிசிவசித்தாந்த சித் தசிவசாதுர்சிய சிவசாத்தி யயிக்கியசிவசுத்தாத்துவைதமுத்தித்துவேஷிக ளாய் வேதாந்தவிசேஷசித்த விசிட்டாத்துவைதக கோடிகொளுவிச் சிவ வியத்தி யத்துவைத விசிட்டாத்துவைதப் போலிமுதலிவிளம்பி விப்பிர லம்பராய்விட்டார்கள்.

வாதிகளடையும் பதமுத்திக்கிரமப்பகுப்பு வகுப்பாம்:—பூதாத்மஞா னேபாய முபதேசிக்குமூலோகாயதனுக்கும், பூதவிசேஷபிராணாத்மஞா னேபாய முபதேசிக்குங் கவுளகனுக்கும், விஞ்ஞானகந்த விச்சித்திஞ்ஞா னேபாய முபதேசிக்கும் பிரதீபநிருவாணவாதிக்கும், கன்மேசுர ஞானே பாய மு.தேசிக்கு மீமாங்கிசனுக்கும், சோதிராத்ம ஞானேபாய முபதே சிக்குஞ் சோதிசாத்திரவித்துக்களுக்குஞ் சூரியாக்கினிசமாத்ம ஞானே பாய முபதேசிக்குஞ் சூரியாக்கினிசாமிய வாதிகட்கும், அவரவர்க்குக மான பஞ்சபூதபுவனப் பிராத்திதானே மோகூஷம்; பூதாண்டகாரண பிர மஞானேபாய முபதேசிக்குஞ் சுமாத்தர்க்குத்தன்மாத்திரா புவனப் பிரா த்திதானே மோகூஷம்; இந்திரியாத்ம ஞானேபாய முபதேசிக்கு மூலோ காயதருக்குளொருவனுக்கு இந்திரியபுவனப்பிராத்திதானே மோகூஷம்; மனத்மஞானேபாய முபதேசிக்குமூலோகாயதர்க்குளொருவனுக்கு மனே புவனப்பிராத்திதானே மோகூஷம்; அகங்காராத்மஞானேபாய முபதேசி க்கும் வைசேடியனுக்கு அகங்காரபுவனப்பிராத்திதானே மோகூஷம்; புத்தியாத்மஞானேபாய முபதேசிக்கு கையாயிகனுக்கும், புத்திவிருத்தி யாத்மஞானேபாய முபதேசிக்கும் புத்தனுக்கும் புத்திபுவனப் பிராத்தி தானே மோகூஷம்; சலஞ்சலசதசற்குணத்மஞானேபாய முபதேசிக்கும் அருகனுக்குக் குணபுவனப் பிராத்திதானேமோகூஷம்; பிரமகாரியாத்ம ஞானேபாய முபதேசிக்கும் பரிணதவேதாந்திக்கும்,நாராயணப்பிரகிருதி காரியாத்ம ஞானேபாய முபதேசிக்கும் பாஞ்சராத்திரிக்கும், பிரகிருதி புவனப்பிராத்திதானே மோகூஷம்; சத்தப்பிரம கிரீடாப்பிரம சித்திரப்

பிரம வாதிப்பிரமூகர்க்கும் பிரகிருதி புவனப் பிராத்திதானே மோக்ஷம்; யோகோபாய முபதேசிக்கும் பாதஞ்சலனுக்கும், பிரகிருதிபுருஷவிவேக ஞானோபாய முபதேசிக்குஞ்சாங்கியனுக்கும் சன்னியாசோபாய முபதே சிக்கும் விவர்த்தவேதாந்திக்கும், ஆத்மவாதிகளாதலால் புருஷபுவனப் பிராத்திதானே மோக்ஷம்; சிவதீக்ஷாங்கியங்க சிவஞானோபகிருத சாகார சிவாத்ம பாவனோபாய முபதேசிக்குஞ் சிவவாதிகளாகுஞ் சைவரிற் சை வபவுராணிகர்க்கு இராகபுவனப் பிராத்திதானே மோக்ஷம்; சாகார நிராகார சிவபாவனா பரசோமசித்தாந்திகட்குக் கலாராககர்ப்ப வித்தியா புவனப் பிராத்திதானே மோக்ஷம்; சிவாவேசவாதியாகுங்காபாலர்க்குக் கலாபுவனப் பிராத்திதானே மோக்ஷம்; காலேசுரவாதிகட்குக் காலதத் துவப் பிராத்திதானே மோக்ஷம்; சங்கிராந்த வாதியாதியசைவபாசுபதர் வைதிகபாசுபதர்க்குஞ் சமூற்பத்திவாதி மாவிரதலிசேஷாக்கும் மாயாபுவ னப் பிராத்திதானே மோக்ஷம்; கலாதத்துவாந்த சோதனியாதிய தீக்ஷா வான்கட்கு விஞ்ஞானகைவல்லியந்தனே மோக்ஷம். சருவஞ்ஞத்துவ மாத்திரவாதி மகாவிரதர்க்குச்சுத்தவித்தியா புவனப்பிராத்திதானே மோ க்ஷம்; பிரயோச்சிய கர்த்திருத்துவ வாதிகட்கும் பிரவாகேசுர வாதிகட் கும் அனேகேசுரவாதிகட்கு ஈசுரபுவனப்பிராத்திதானே மோக்ஷம்; சதா சிவசாமிய வாதியாதிய சிவசமவாதிகட்குச் சதாசிவபுவனப் பிராத்திதா னே மோக்ஷம்; சுத்தசாத்தர்க்குச்சத்திபுவனப் பிராத்திதானே மோக்ஷம்; வாமதக்ஷணகாரூடபூத தாந்திரிகர்க்குச் சத்திகலாபுவனப் பிராத்திதா னே மோக்ஷம்; சிவதீக்ஷாசாகல்லிய சுத்தராயிருந்துஞ் சிவவியத்திலையக் கியஞ்செப்பு மிப்போதுள்ள சைவர்க்கு

" சதுட்கலந்துசானியாற்புருஷம்லோகபாவனம் "

என்னும் சை

னத்திஞ்ற் சத்திபுவனப் பிராத்திதானே தீக்ஷாகைவல்லியவான்களாகில், மூற்சொல்லிய புருஷபுவனப் பிராத்திதானேசிவலோகப்பிராத்திதானே மோக்ஷமென்று சிந்திக்கபபடும்; சிவனுக்குவயிந்தவசரீரம் வாத்தவமெ ன்னுஞ் சாமானிய சைவர்க்குச் சிவதத்துவபுவனப்பிராத்திதானே மோ க்ஷம். உலோகாயதாதி வேதாந்தியந்தாத்ம வாதிகளுக்கு மாத்மவிவேகப் பிரவிருத்திமான்களாகையாற் சிவவாதிகள் பண்ணுஞ் சிவவிவேகத்துக்கு மாத்மவிவேக மடிப்படையாதலா லவ்வாத்மவிவேகிகட்கு மலபரிபாக நோக்குஞ் சிவசமான பரமுத்திபார்க்கும் பாத்திரமாங்கால மெண்ணிக் கைக்கிசையுமாதலால் அவரவர் முத்திசாதனங்கள் சபலங்கள்தானே, நிட்பலங்களன்று. (கஉ)

மேற்சாமானிய வேதவிசிட்ட விசேஷவேத சிவசித்தா
ந்தமே சிறப்புடைத்தென்று செப்புகின்றார்.

ஒதுசமயங்கள்பொருளுணருநூல்க
ளொன்றேறொடொன்றெவ்வாமலுளபலவுமிவற்றுள்
யாதுசமயம்பொருணூலியாதிங்கென்னி
லிதுவாகுமதுவல்லவெனும்பிணக்கதின்றி
நீதியினுலிவையெல்லாமோரிடத்தேகாண
நிற்பதுயாதொருசமயமதுசமயம்பொருணூ
லாதலினுலிவையெலலாமருமறையாகமத்தே
யடங்கியிடுமவையிரண்டுமரனடிக்கீழடங்கும்.

இ-ள். பொருள்-அந்தந்தச் சமயத்துக்குச் சொல்லும் பதார்த்தங்கள். நூல்-அப்பொருளைச் சொல்லுஞ் சாத்திரம். பிணக்கதின்றி-சந்தேகமற்று. ஓரிடத்தே-ஒருசமயத்திலே. காண-அடங்க. வேதத்திற் சாவதியடங்கும். சிவாகமத்திலே நிரவதியடங்கும். அரனடிக்கீழடங்கும்-அபரஞானமாதலால் வேதஞ் சிவாகமத்தடங்கும். சிவாகமம் வேதத்தைக்குறித்துப் பரஞானமாகலுஞ் சிவசத்தி சின்ன சிவாகமத்தைக் குறித்தபரஞான மாதலாற் சிவசத்தியாகுஞ் சேதனபரஞான சிவாகமத்தடங்கும். மற்றது வெளிப்பொருள். எ-று. (கரு)

மூதனூல், வழிநூல், சார்புநூல், இவையென்று சாற்
றுகின்றார்.

அருமறையாகமமுதனூலனேத்துமுனைக்கையினு
லளப்பரிதாமப்பொருளேயரனருளாலணுக்க
டருவர்கள்பின்றனித்தனியேதாமறிந்தவளவிற்
றர்க்கமொடுத்தரங்களினுற்சமயஞ்சாதித்து
மிருதிபுராணங்கலேகண்மற்றுமெல்லா
மெய்ந்நூலின்வழிபுடையாறங்கம்வேதாங்கஞ்
சுருதிசிவாகமமொழியச்சொல்லுவதொன்றில்லைச்
சொல்லுவார்தமக்கறையோசொல்லொணுதே.

இ-ள். அணுக்கள்-ஆத்மவர்க்கங்களாகிய மனுமுதலிய மிருதிகர்த்தாக்கள், வியாதர்முதலிய புராணகலேக் கர்த்தாக்கள். (அவர்கள்பண்ணின) மிருதிமுதலியன, வேதமாகிய மூதனூலுக்கு வழிநூல். ஆறங்கம்—புடை-சார்புநூல். மூதனூலாகிய சிவாகமத்துக்கு உபாகமங்கள் வழிநூல்,

பிரகரணமுதலியன சார்புநூல். சுருதிசிவாகம மொழியச்சொல்லுவதொன்றில்லை-வேதத்துஞ் சிவாகமத்தும் புறச்சமய முட்சமய மடங்குதலால், அதற்குவியாபகமாய்க் கொண்டு புறம்பாயொரு சாத்திரமில்லை. அறை-உத்தரம். மற்றது வெளிப்பொருள். "ஒன்றில்லை" என்பதற்குப் புறச்சமய வுட்சமய சாத்திரங்களும் பிரமாணங்களாய்க்கொண் டில்லையென்று பேசவேண்டாம்; தமதவதிப் பிரமாணங்களென்று பவுட்கராதிகளும், சிறீராமகண்டகுரு பண்ணிய சருவாகமப் பிராமாணியத்துஞ் சாதித்திருத்தலால். (கச)

அப்படி சமயசாஸ்திரங்களெல்லாம்வேதாகமங்களிற் சுருக்கிச் சூசிப்பித்திருக்கும்; அவைகளே யுருத்திரர் தேவரிஷிகள் தனித்தனிவிரித்து உட்சமய புறச்சமய சாத்திரங்களாகப் பண்ணினார்களென்றும், அப்படியாகில் வேதமென்று மாகமமென்றுஞ் சாத்திர மிரண்டுவருவானேனென்ன பிரகார விரோதங்களிருத்தலும், வியாகரணாதியிற் சாமானிய விசேஷசூத்திரங்கள்போற் பொதுச் சிறப்புச் சாத்திரங்களாயிருக்குமென்றும் அப்படி வைதிகசம்மதமாய் விருத்தாசல புராணாதியிலு மாகமத்திலு மிருப்பதறிந்து குறித்துரைக்கின்றார்.

வேதநூல்சைவநூலென்றிரண்டேநூல்கள்
வேறுரைத்தநூலிவற்றின்விரிந்தநூல்க
ளாதிநூலனுதியமலன்றருநூலிரண்டு
மாரணநூல்பொதுச்சைவமருஞ்சிறப்புநூலா
நீதியினுலகர்க்குஞ்சத்திநிபாதர்க்கு
நிகழ்த்தியதுநீண்மறையினெழிபொருள்வேதாந்தத்
தீதில்பொருள்கொண்டுரைக்குநூல்சைவம்பிறநூ
றிகழ்பூர்வஞ்சிவாகமங்கள்சித்தாந்தமாகும்.

இ-ள். "வேதமுலகர்க்கு" என்றதில், லௌகிகம் வைதிகம் அத்தியாத்மிக மென்கின்ற மூச்சாத்திரப் பிரசித்த வுலோகதன்ம வருணச்சிரம வழிவழுவாமைமுத லியாகாதி வைதிககன்மப் பிரமவிசாராதிகளிற் பரபுத்திபண்ணி யொழுகு மலபரிபாகமில்லா மாந்தர்க்கென்று பொருள். "சிவாகமஞ் சத்திநிபாதர்க்கு" என்றது அதிகமார்க்கமாந்திர மென்கின்ற விருசாத்திரப் பிரசித்தமா யுலோகதன்மாதிவிடாதும் விட்டுமிருக்குஞ் சிவதீக்ஷாவான்களாய்ச் சிவதன்ம நிரிபதார்த்த ஞானத்தியான சமாதியு

பாயஞ் சம்பாதிக்கு மிச்சாவான்கட்கென்று பொருள். நீண்மறையினெழிபொருள்-வேதத்துக் கெட்டாப்பொருள். வேதாந்தத்திதில்பொருள்-சித்தாந்தத்துக்கொத்து விரோதியாத வேதாந்தப்பொருள். கொண்டு-அங்கீகரித்து. பிறநூறிகழ்பூர்வம்-வேத வேதாந்த முதலிய சாத்திரங்கள் பூருவபட்சம். மற்றது வெளிப்பொருள். எ-று. (கடு)

சித்தாந்தத்தின் சிறப்புணர்த்துகின்றார்.

சித்தாந்தத்தேசிவன்றன்றிருக்கடைக்கண்சேர்த்திச்
சனனமொன்றிலேசீவன்முத்தராக
வைத்தாண்மலங்கழுவிஞானவாரி
மடித்தானந்தம்பொழிந்துவரும்பிறப்பையறுத்து
முத்தாந்தப்பாதமலர்க்கீழ்வைப்பனென்று
மொழிந்திடவுமுலகொலலாமூர்க்கராகிப்
பித்தாந்தப்பெரும்பிதற்றுப்பிதற்றிப்பாவப்
பெருங்குழியில்வீழ்ந்திடுவரிதுவென்னபிராற்தே.

இ-ள். சித்தாந்தத்தே-சிவாகமாசாரவான் களிடத்திலே. திருக்கடைக்கண்சேர்த்தி-தனது தீக்ஷாரூபக் கிரியாசத்திசங்கற்பம் பண்ணி. ஞானவாரிமடித்தானந்தம் பொழிந்து - சிவத்துவக்குறிச் சிற்சத்திச் சமுத்திரத் தழுத்திச் சிவத்துவாபிவியத்தி லக்கண சிவானந்த மனுபவிப்பித்து. முத்தாந்தப்பாதமலர்க்கீழ்வைப்பன்-நின்மல நிரதிசயத் தன்சத்திசமான சத்தி மான்களாக்குவன். இதுவென்னபிராற்தே-இதுவேதுமயக்கம். மற்றது வெளிப்பொருள். (கசு)

சிவன் சருவஞ்ஞன் சருவகர்த்தா சருவானுக்கிராகக
னென்று சாற்றுகின்றார்.

இறைவனுவான்ஞானமெல்லாமெல்லா
முதன்மையனுக்கிரகமெல்லாமியல்புடையானியம்பு
மறையாகமங்களினுலகிலெல்லாற்தோற்றும்
வகையின்வழிவருவோர்க்கும்வாராதோர்க்கு
முறைமையினுனின்பதுன்பங்கொடுத்தலாலே
முதன்மையெலாமறிந்துமுயங்கிரண்டுபோகத்
திறமதனுல்வினையறுக்குஞ்செய்தியாலே
சேருமனுக்கிரகமெல்லாங்காணுதுநாஞ்சிவற்கே.

இ-ள். ஞானமெல்லாம், எல்லாஞானம்-சருவஞ்ஞத்துவம்—எல்லா முதன்மை-சருவகர்த்திருத்துவம்—அனுக்கிரகமெல்லாம்,எல்லாமனுக்கிர

கம்-சருவாணுக்கிராக்கத்துவம் (இம்மூன்றும்)—இயல்புடையான்-(வேதாந்திகள் சைவரிற் சிலபேர் சாற்றுந் தடத்தலக்கணமன்றிச் சுத்தசைவ சித்தாந்திகள்சொல்லும்)சொரூபலக்கணமாகவுடையன்—இறைவனுவான்—சருவ சகற்கர்த்தாவானவன்(அவன்)—இயம்புமறையாகமங்களிஞல்—அறிவெல்லாந்தோற்றும் சருவஞ்ஞத்துவ மனுமிதிக்கப்படும்—வானவின்வழி வருவோர்க்கும்வாராதோர்க்கும்-விதிவிஷேதப்படிபிடித்துநடப்போர்க்கும், நடவாதோர்க்கும் — முறைமையினுலின்பதுன்பங்கொடுத்தலாலே—முதன்மையெலாமறிந்து-சருவகர்த்திருத்துவ மனுமிதித்து—முயங்கிரண்டுபோகத்திறமதனுல்-அனுபவிக்கப்படு மிருசுகதுக்க வேதனையினுலே—வினையறுக்குஞ்செய்தியாலே-புண்ணியபாவம்போக்கும் பரிசினுல்—சிவற்கே - சிவனுக்குத்தானே—சேருமனுக்கிரகமெல்லாம்-பொருந்துஞ் சருவாணுக்கிரகம்—காணுதுநாம்-அனுமானித்தறிவோம். எ-று. (கஎ)

> "புறச்சமயம்" எனும்விருத்தத்தில் "இதிற்சரியையிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தால்" என்று செப்பிய நாலுபாயத்தின் செய்தி சிங்கநோக்காற் செப்புகின்றூர்.

சன்மார்க்கஞ்சகமார்க்கஞ்சற்புத்திரமார்க்கந்
தாதமார்க்கமென்றுசங்கரனையடையு
நன்மார்க்கநாலிலைவ்தான்ஞானயோக
நற்கிரியாசரியையென்றுரைவிற்றுவதுஞ்செய்வர்
சன்மார்க்கமுத்திகள்சாலோக்கியசாமீப்பிய
சாரூப்பியசாயுச்சியமென்றுசதுர்வீதமா
முன்மார்க்கஞானத்தாலெய்துமுத்தி
முடிவென்பர்மூன்றினுக்குமுத்திபதமென்பர்.

இ-ள், ஞானயோகாதிகளுக்குத்தானே சன்மார்க்க சகமார்க்காதிப் பேருஞ் சாற்றப்படுமென்று பொருள். சன்மார்க்கச் சுவரூபஞ் சொல்லுவாம்:-சிவசாத்திர சமூற்பன்ன நிராலம்ப சிவபரோக்ஷ ஞாஞ்பகாரோபநிருதமாயு மதன்றி நிராலம்ப சிவசாக்ஷாற்காரமென்றும், நிராலம்ப சிவாபரோக்ஷ ஞானமென்றுஞ் சாற்றப்படும், நிராலம்பாங்கி சிவயோகத்துக் கங்கசிவயோகமாயு மிருக்குஞ் சாத்தமனச்சங்கற்பக் கிரியை யுண்மணக்கும் அபரோக்ஷம்போ லபிநயக்குறிச் சாத்த பவுத்த சிவஞானச் சிறப்புப் பிரவாகலக்கண நிராலம்ப சிவத்தியான மூலத்தின்மூன்றித்த தியானத்தி னைசவறுதற்குறி நிராலம்ப சிவசமாதியே சன்மார்க்கம்.

சகமார்க்கச் சுவரூபஞ் சொல்லுவாம்:-சிவசாத்திர சமூற்பன்ன சாலம்ப சிவபரோக்ஷ ஞானோபகாரோபதிருதமாயு மதன்றிச் சாலம்ப சிவசாக்ஷாற் காரமென்றுஞ் சாலம்ப சிவாபரோக்ஷ ஞானமென்றுஞ் சொல்லப்படுஞ் சாலம்பாங்கி சிவயோகத்துக் கங்கசிவயோகமாயு மிருக்கும் பிராகிருத மனச்சங்கற்பக் கிரியை யுண்மணக்கு மபரோக்ஷம்போ லபிநயக்குறிப் பிராகிருத பவுத்த சிவஞானச் சிறப்புப் பிரவாகலக்கண சாலம்ப சிவ சமாதிமூல சாலம்ப சிவத்தியானமே யோகமென்னுஞ்சகமார்க்கம்.

சற்புத்திரமார்க்கம்-சிவபூசாதி. தாதமார்க்கம்-சிவசேவாதி. சன்மார்க்கமுத்திகள்-நல்லநான்மார்க்கமுத்திகள். சதுர்விதம்—நாலுவகை. முன்மார்க்கஞானத்தால்-சன்மார்க்க சமாதியால். முடிவென்பர்-பரமுத்தியென்பர். மற்றதுவெளிப்பொருள்.

சன்மார்க்கமுதலியநான்கிலும் பொதுச்சிறப்பாகச் சன்மார்க்கத்திற் சன்மார்க்கம் சன்மார்க்கத்திற் சகமார்க்கம் சன்மார்க்கத்திற் புத்திரமார்க்கம் சன்மார்க்கத்திற் தாதமார்க்கம்; சகமார்க்கத்திற் சன்மார்க்கம் சகமார்க்கத்திற் சகமார்க்கம் சகமார்க்கத்திற் புத்திரமார்க்கம் சகமார்க்கத்திற் தாதமார்க்கம்; புத்திரமார்க்கத்திற் சன்மார்க்கம் புத்திரமார்க்கத்திற் சகமார்க்கம் புத்திரமார்க்கத்திற் புத்திரமார்க்கம் புத்திரமார்க்கத்திற் தாதமார்க்கம்; தாதமார்க்கத்திற் சன்மார்க்கம் தாதமார்க்கத்திற் சகமார்க்கம் தாதமார்க்கத்திற் புத்திரமார்க்கம் தாதமார்க்கத்திற் தாதமார்க்கம்; என்றிப்படி சன்மார்க்கமுதலியநான்குந் தனித்தனி நான்காதலால் நான்கின் பலமாகிய சாலோக்கியாதி நான்குந் தனித்தனி ஸ்ரீகண்டாதி வனந்தேசுர சதாசிவ சாலோக்கியாதி அவரவர் சமபல சாயுச்சியாந்த மூத்திகளாயுஞ் சதாசிவ தத்துவத்துக்கு மேற் சத்திதத்துவத்தான சிவதத்துவத்தான தத்துவாதீதமாகிய பரசிவத்தான முத்தானங்களிலே பரசிவ் சாலோக்கியாதி சருவத்திர பரசிவ சமபல பரசிவசாயுச்சியாந்த மூத்திகளாயிருக்கும்; நயிட்டிகீ தீக்ஷா மூத்திகளாயுங் காலாக்கினியாதி யஞ்சிருதாந்த புவனபதி சாலோக்கியாதி புவனபதி சமபல புவனபதி சாயுச்சியாந்த மூத்திகளாயிருக்கும் பவுதிக தீக்ஷாமூத்திகளாயு மனந்த விதமாயிருக்குமென வறிக. (கஅ)

தாதமார்க்க முதலுன்னினது சுவரூப நாலுதிருவிருத்தங்களாற் சொல்லுகின்றார்.

தாதமார்க்கஞ்சாற்றிற்சங்கரன்றன்கோயிற்
றலமலகிட்டிலகுதிருமெழுக்குஞ்சாத்திப்
போதகலுங்கொய்துபூந்தார்மாலிகண்ணி
புனிதற்குப்பலசமைத்துப்புகழ்ந்துபாடித்

தீதிறிருவிளக்கிட்டுத்திருந்தவனமுஞ்
செய்துதிருவேடங்கண்டாலடியேன்செய்வ
தேதுபணியீதென்றுபணிந்தவர்தம்பணியு
மியற்றுவதிச்சரிதைசெய்வோரீசனுலகிருப்பர்

இ-ள். வெளிப்பொருள். (கக)

புத்திரமார்க்கம்புகலிற்புதியவிளைப்போது
புகையொளிமஞ்சனமுதுமுதலகொண்டைந்து
சுத்திசெய்தாசனமூர்த்திமூர்த்திமானஞ்
சோதியையும்பாவித்தாவாகித்துச்சுத்த
பத்தியினலர்ச்சித்துப்பரவிப்போற்றிப்
பரிவினெடுமெரியில்வருகாரியமும்பண்ணி
நித்தலுமிக்கிரியையினேயியற்றுவோர்க
ணின்மலன்றனருகிருப்பர்நிகழ்த்துங்காலே

இ-ள். விளைப்போது - மண்ணம்பொருந்திய புட்பம். புகையொளி-தூபதீபம். ஐந்துசுத்தி - ஆத்மதத்தான திரவிய மந்திர லிங்க சுத்தி. ஆசனம் - சத்தியாதிசத்திபரியந்த பத்மரூபவிந்து. மூர்த்தி-விந்துமத்தியத் தெழுந்த தண்டாகிருதியாய்த் திரும்ப வித்தியாதேகரூப வியாபகமாயிருக்கும் நாதம். மூர்த்திமானஞ்சோதி - வித்தியாதேகத்துக்குச் சீவனும் பரசிவதேசசு. மற்றதுவெளிப்பொருள். (உ0)

சகமார்க்கம்புலனெடுக்கித்தடுத்துவளிபிரண்டுஞ்
சலிப்பற்றுமுச்சதுரமூலாதார
மகமார்க்கமறிந்தவற்றினருமபொருள்களுணர்ந்தங்
கணைந்துபோய்மேலேறியலர்மதிமண்டலத்தின்
முகமார்க்கவமுதுடலமுட்டத்தேக்கி
முழுச்சோதிநினைந்திருத்தன்முதலாகவினைக
ளுகமார்க்கவட்டாங்கயோகமுற்று
முழுத்தலுழுந்தவர்சிவனறனுருவத்தைப்பெறுவர்.

இ-ள். புலனெடுக்கி - பிராணயாம பிரத்தியாகாரங்களினு லிந்திரியங்களோ நிறுத்தி. தடுத்துவளியிரண்டும் - பிராணன திடைபிங்கலைகளினியக்கமடக்கி. முச்சதுரமூலாதாரமகமார்க்கம்-சுழுமுனைநாடிவழி பொருந்திய பத்மாதிதேவதை முதலியன. அலர்மதிமண்டலம் - புருவமத்தியம். முழுச்சோதிநினைந்திருத்தல் - அந்தப் புருவமத்திய பதமத்தில் விந்துநாதரூபமாயிருக்கும் தேசோலிங்க சகளலிட்கள சிவத்தை யிருதயத்

நிற் சதாசிவமுதலிய சகளசிவத்தைத்தான் றியானித்துச் சமாதித்தல். முதலாக-சங்காரக்கிரமத் தாதியாகச் சிருட்டிக்கிரமத் தந்தமாக. அட்டாங்கயோகம்-இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்னு மட்டாங்க முடைய சகள சகளாகள சிவசாகூநாற்காரரூப வங்கிசிவயோகத்தை — முந்நும்-அங்கவீன மின்றி—உழத்தலுழந்தவர்- (அந்த வட்டாங்கங்களினால்) சாதித்தலைப் பண்ணினவர். மற்றதுவெளிப்பொருள். (உக)

சன்மார்க்கஞ்சகலகலைபுராணமிவத
சாத்திரங்கள்சமயங்கடாம்பலவுமுணாகது
பன்மார்க்கப்பொருள்பலவுங்கிழாகமேலாம
பதிபசுபாசந்தெரித்துப்பசிவனைக்காட்டு
நன்மார்க்கஞானத்தாணுடிஞான
ஞேபமொடுஞாதிருவுகாடாவணணமை
ரின்மார்க்கச்சிவனுடனும்பெற்றிஞானப
பெருமையுடையோர்சிவனைப்பெறுவாகாணே

இ-ள். நன்மார்க்கஞானத்தால்-சிவாகமத்திலிவழி சரிக்குஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிய சிற்சத்திமூலத்தில் முளைத்தது வாயிற்காட்சி கடந்து யோகக்காட்சி தொடாது நடுநிற்கு மறிவினாற் (சிவஞான) — நாடி - (அது வித்துவல்லா வதுவென்றறிந்து ரூபதரிசனமுற்றுப் பின் மகாமந்திர திரி வழிபற்றி முற்றும்போய் மேனிராலம்பினியாஞ் சிவசத்திவிளக்கில் விளங்கிப்போய்ச் சமனைகடந் தன்மனைபற்றி விசேஷித் தரூபதரிசனமுற்று பகாவாக்கியப் பொருளுண்ணித் தியானமுமிழ்த் தபரிபூரஞ் சிற்சத்தி புத்திவித்தின் முளைத்துக் காட்சிபோற் காட்டிநடிக்கு ஞானச்சிறப்புக்குறித் தியானக்குறியாய்ச் சிற்சதநிமனச் சங்கற்பக் கிரியைமணந்து பின் கோத்த சிற்போதத்தால்) தியானித்து—ஞானஞேயமொடுஞாதிருவுகாடாவண்ணம்-தியானிக்குமாத்மாத் தியானம்பண்ணப்படும்பரந் தியானமூபலக்ஷிக்குஞ்சிவம் இம்மூன்றெனுஞ்சித்தாந்த வாக்கியார்த்தங்களொரு நெறியானுந் தோற்றுதென்னில், நித்திரைமுத்திரை நிலைபெறு மாதலாற் சிற்சத்தி புத்திவித்துமிழ்க்குஞ் சூக்கும யோசன விகற்பச் சாந்தர சகல சதாசுக போதப்பிரவாகக்குறித் தியானத்தின தூறைப்புக்குறி நிருவியோசன நிருவிகற்ப நிரந்தர நிச்சல நித்தரங்க போதப்பிரவாக சமாதியிலும்

"சொரூபசூனியமிவசமாதி"

என்னும் பதஞ்சலி வசனதா லொருநெறி யேகமாய் முச்சூனியம்போல மூப்பொருள் விள்ளாதிவிண்டு தோற்றுதுதோற்ற நோக்காதுநோக்கி—பின்மார்க்கச்சிவனுட

ஞ்பெற்றி ஞானப் பெருமையுடையோர்-முன்பின்சொன்ன சன்மார்க்க நிராலம்ப சிவயோக சிவசமாதி யுறைப்புற்ற சத்துக்கள்—சிவனைப் பெறுவர்காணை-சிவஞெடு சமமாய் மலத்தால் மறைந்திருந்து மலமுத்தியால் வியத்தியாய் விரிந்து விளங்குஞ் சிவத்துவத்தைச் சுவரூப லக்கணமாகச் சாக்ஷாற்கரித் திருப்பர்தானே. மற்றதுவெளிப்பொருள். (உஉ)

சிவசித்தாந்த சாத்திரஞானமு மறிந்தேதியான சமாதி பண்ணப்படி மாதலாற் சாக்ஷாற்காரசாதன சாக்ஷாற் சன்மார்க்க ஞானபூசையாகு நிராலம்ப சிவத்தியான சமாதிமுதலியவற்றைச் சாதிப்பிக்கு மாதலால், சன்மார்க்க ஞானபூசையாமென்று சாற்றுகின்றார்.

ஞான நூறனேயோதலோ துவித்த
னற்பொருளேக்கேட்பித்தருள்கேட்டனன்று
வீனமிலாபொருளதனேச்சிந்தித்தலேது
மிறைவனடியடைவிக்குமிதுவின் ஞானபூசை
யூனமிலாக்கன்மங்கடாஞ்செபங்கடியான
மொன்றுக்கொன்றுயருமிவையூட்டுவதுபோக
மானமையான்மேலானஞானத்தாலரனே
யாச்சிப்பார்வீடெய்தவறிந்தோல்லாம

இ-ள். ''சிந்தித்தல்'' என்பதற்குப்பின் தெளிதலென்றும், ''ஐந்தும்'' என்பதனே யாறுமென்றும் பண்ணுக. சாலம்ப சிவசகமார்க்க ஞானசாத்திய சாலம்ப சகமார்க்கத் தியான சமாதி முதலியவற்றைக் குறித்தது நிராலம்ப சிவசன்மார்க்க சாத்திரஞான முயர்ந்தது. நிராலம்ப சிவசன்மார்க்கத் தியான சமாதி முதலியவற்றைக் குறித்துத் தாழ்ந்த தென்பதறிக.

அப்படி சிவாகமஞ் செப்பியது காண்பிப்பாம்:—கிரியாவான்கள் பத்துப்பேர்க் கதிகன் சாந்திராயணமுதற் றபவிரதி; தபவிரதிகள்நூறுபேர்க் கதிகன் செபசிலன்; செபசிலர்க ளாயிரம்பேர்க் கதிகன் சிவஞானி; சிவஞானிக ளிலக்ஷம்பேர்க் கதிகன் சிவத்தியானி; சிவத்தியானிகள் கோடி பேர்க் கதிகன் சிவசமாதிமான்; சிவசமாதிமான்க ளனந்தம்பேர்க் கதிகன் சிவசாக்ஷாற்காரவான்; சிவத்தியானஞ் சிவசமாதி சிவசாக்ஷாற்காரங்களுங் கிரியோத்திரே விசிட்டச்சிறப்பு ஞானங்கள்தானே. பதப்பொருள் வெளிப்பொருள். (உக)

சருவாதிக்க நிராலம்ப சிவசாக்ஷாற்கார சாதனநிராலம்ப சிவசமாதி முன்சொல்லிய ஞானத்திலு முக்கியமென்ப தாசாரியரு மறிவிக்கின்றார்.

கேட்டலுடன்சிந்தித்தறெளிதனிட்டை
கிளத்தலெனவீரிரண்டாங்கிளக்கின்ஞான
வீட்டையடைந்திவர்கிட்டைமேவினோர்கண்
மேவாதுதப்பினவாமேலானபதங்கட்
கீட்டியபுண்ணியநாதராகியின்ப
மினிதுநுகர்ந்தருளினுணிந்தபபார்மே
னுட்டியநற்குலத்தினில்வந்தவதரித்துக்குருவான்
ஞானநிட்டையடைந்தடைவர்நாதன்றாளே.

இ-ள். கிளத்தல்-பண்ணுதல். " இத்தப்பார்மேல் " என்பது நியம மன்று. புவனந்தோறும் புவனந்தோறுங் குருக்களென்று சிவாகமவித்துக் கள் செப்புவார்களாதலாற் போய்ப்பொருந்திய புவனத்திருந்தாற்போலே பூமியிற் பிரும்பாது ஸ்ரீமத் ஸ்ரீகண்டருத்திரகுரு சதாசிவகுரு முதலோ ரால், நிரீக்ஷிதர்களாய்க்கொணடும் பரமுத்திமான்க ளாவார்கள். மற் றது வெளிப்பொருள். (உச)

அப்படியே ஸ்ரீமத் ஸ்ரீகண்ட தேசிகாதிகளால், நிரீக்ஷி க்கப்படாதிருந்து சிலபோ் மகாப்பிரளய முடி விற் சிவநிரீக்ஷணத்தாற் பரமுத்திமான்க ளாவா கள். ஸ்ரீமத் ஸ்ரீகண்டாதி நிரீக்ஷணம்போற் சிவ நிரீக்ஷணமு மில்லாதார் மறுமகாசிருட்டியிற் பூமி யிற் புவனங்களிற்றான் சன்மித்துப் புவனகுருகு லங்களாற் றீக்ஷிக்கப்பட்டுச் சிவசமாதிபண்ணிப் பரமுத்திமான்க ளாவார்களென் றுபாஷிக்கின்றார்.

தானமியாகந்தீர்த்தமாச்சிரமந்தவங்கள்
சாந்திவிரதங்கன்மயோகங்கள்சரித்தோ
ரீனமிலாச்சுவர்க்கம்பெற்றிமைப்பளவின்மீள்வ
ரீசனியோகக்கிரியாசரியைதனினின்றே
ரூனமிலாமுத்திபதம்பெற்றுலகமெல்லா
மொடுங்கும்போதரன்முன்னில்லாதொழியிலுற்பவித்து
ஞானநெறியடைந்தடைவர்சிவனேயங்கு
நாதனேமுன்னிற்கினணுகுவர்நற்றாளே.

இ-ள். இமைப்பளவின்-நித்தியநிலையின்றி. (" ஈசனியோகம்" என் றது சாலம்ப சிவயோகமாதலால்,) ஈசனியோகக்கிரியாசரியைதனினின் றோர் (நிராலம்ப சிவசமாதிநிலை கெட்டு நிலைபெற்றோரு மென்று வரு வித்துக் கூட்டுக.) முத்தி-பதமுத்தி—மற்றது வெளிப்பொருள். (உரி)

நிஷ்பிரபஞ்ச சமாதிநிலே பெற்றோர் பெருமை நிகழ்த்துகின்றார்.

சிவஞானச்செயலுடையோர்கையிற்றனக்
கிலமளவேசெய்திடினுநிலமலேபோற்றிகழ்ந்து
பவமாயக்கடலிலழுந்தாதவகையெடுத்துப்
பரபோகந்துய்ப்பித்துப்பாசத்தையறுத்துத்
தவமாரும்பிறப்பொன்றிற்சாரப்பண்ணிச்
சரியைகிரியாயோகந்தன்னிலுஞ்சாராமே
நவமாருந்தத்துவஞானத்தைநல்கி
நாதனடிக்கமலங்கணணுகுவிக்குந்தானே.

இ-ள். சிவஞானச்செயலுடையோர் - நிராலம்பசிவயோகசமாதிமான்கள். தத்துவஞானத்தை-நிராலம்பசிவயோகசமாதியை. நல்கி-கொடுத்து. நாதனடிக்கமலங்கள் - நாதனது ஞானக்கிரியாசத்தி சமான சத்திலக்கண சிவத்துவத்தை. மற்றதுவெளிப்பொருள். (உசு)

சடகன்மத்தால் முத்தியென்று மீமாங்சகன் விளம்ப
மறுத்துச் சிற்கன்மத்தாலேதானே முத்தியென்று
செப்புகின்றார்.

ஞானத்தால்வீடென்றேநான்மறைகள்புராண
நல்லவாகமஞ்சொல்லவல்லவாமென்னு
மூனத்தாலென்கடவாரஞ்ஞானத்தா
லுறுவதுதான்பந்தமுயர்மெஞ்ஞானந்தா
னனத்தாலதுபோவதலர்கதிர்முன்னிருள்போ
லஞ்ஞானமறப்பந்தமறுமுத்தியாகு
மீனத்தார்ஞானங்களல்லாஞான
மிறைவனடிஞானமேஞானமென்பர்.

இ-ள். ஞானத்தால்வீடென்றே - (நிராதாரதிகையில் திரிபதார்த்தகர்ப்ப தீக்ஷாகலாகலாபமறிந்து பண்ணவேண்டுமாதலால், வினதுஞான சத்திநிருத்தியக்குறித் தீக்ஷாங்க ஞானமுஞானம்; பின் னவனது தீக்ஷாக்குறிக் கிரியாசத்திச் சிறப்பிருப் பிச்சாசத்திநிருத்தியக்குறிச் சங்கற்பசிற்கன்மமு ஞானம்; அதுவன்றிச் சாதாரதிகையிற் திரிபதார்த்தகர்ப்ப தீக்ஷாகலாகலாபமறிந்து பண்ணவேண்டுமாதலாற் குருவினது ஞானசத்திக்கிருத்தியக்குறிச் சிவாகமசிரவண மனனத்தெழுந் தெளிதற்பிசயற்கைத் தீக்ஷாங்க யோகாங்க ஞானமுஞானம்; பின் னவனது காயிக வாசிக மா

னைக சிக்ஷாகன்ம மியற்றுங் காயவாக்குமனத் தசைவுபண்ணுக் கீக்ஷாக் குறிக் கிரியாசத்திச் சிறப்பிருப் பிச்சாசத்தி கிருத்திய சங்கற்பக்குறிச் சிற்கன்மமு ஞானம்; அதுவன்றிச் சாதாரவசத்தியோ நிருவாஷ தீக்ஷை யிற் சீஷன்கிரிபதார்த்த கர்ப்ப யோக கலாகலாப மறித்து பண்ணவேண் டுதலாற் சீஷனது ஞானசத்திகிருத்தியக்குறிச் சிவாகம சிரவண மனனத் தெழும் தெளிதற்செயற்கைத் தீக்ஷாங்க யோகாங்கஞானமு ஞானப்;பின் னவனது யோகக்குறிக் கிரியாசத்திச் சிறப்பிருப் பிச்சாசத்தி கிருத்தியக் குறிச் சங்கற்ப சிற்கன்ம மணந்த ஞானசத்தி கிருத்தியக்குறிச் சிறப்புஞா னப் பிரவாக தீக்ஷாங்க யோகாங்கத தியானமு ஞானம; தியானத் தசை வறுதற்குறித் தியானசாத்திய தீக்ஷாங்க யோகாங்க சமாதியு ஞானம்; சு மாதி சாத்திய திருக்கிரியாக்குறி யோகப்பேர் விதேக பரமுத்தி சாக்ஷா த்கார சாதன தீக்ஷாங்க சதேக ஜீவன்முத்தி சாக்ஷாதகாரமு ஞானம்; இஞ்ஞானங்களிற் சிலவற்றிற் ரூதான்மியமாயுஞ் சிலவற்றி லரூடமாயு மனுசரிக்குஞ் சாக்ஷான் மோக்ஷமுஷிழ்ப்பிக்குஞ் சங்கற்ப தீக்ஷண நிரீ க்ஷணம்பண்ணுஞ் சிவக்கிரியாசத்தி சிறப்பிருப் பிச்சாசத்தி லக்கணதீ க்ஷையு ஞானம்.

அப்படி சுப்பிரபேத சுவாயம்புவ பவுட்கரமுதற் சிவாகமத்திற் சிற ப்பித்திருக்கலாற் தீக்ஷையும் ஞானமென்பது சிவாகமப்பிரசித்தம். விஞ் ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னு மவரவர்க்கருகமாய் விட்டுக்கூட்டி விதிக்கு மனேகவித) ஞானத்தால் மோக்ஷமென்றே (பொதுச்சிறப்பாய்) — நான்மறைகள்புராணநல்லவாகமஞ்சொல்ல — அல்லவாமென்னு மூ னத்தாரென்கடவார்-பிராகிருத காயிக வாசிக மானசிக சடபந்த கன்மத் தால், முத்தியென்று செப்பு ஞானவீனராகுங் கன்மமீமாங்சிகன் முத லோ ரேதுபிரயோசனத்துக் கருகர் (நிஷ்பிரயோசனர்களே)—அஞ்ஞா னத்தால் அஞ்ஞான முலவஞ்ஞானப்பேராணவமல மாரோபித்த விபரீத ஞானரூப போகக் கிரியா காத்திருத்துவக்குறி போத்திருத்துவத்தால்— உறுவதுதான்பந்தம் - மாயாகன்மதேகபோகக்கட்டுப்பொருந்தும்—உயர் மெஞ்ஞானந்தானனத்தால்-சொல்லிய வந்தச் சிவதீக்ஷா சிவஞான சிவ யோக சிவசரியாங்கியங்க ஞானத்தால்—அதுபோவது-அந்தப் பந்தநீங்கு வது— (காரணமிருக்கக் காரியமெப்படிபோம்?) அலர்கதிரூன்னிருள போல்-சூரியகிரண சங்நிதானத்தி லந்தகாரமொப்ப — அஞ்ஞானமற ப்பந்தமறும்-மலநீங்க மாயாகன்மக்கட்டு விடும்—முத்தியாகும்-பின் சிவத் துவாபிவியத்தி சித்திக்கும் (சொல்லிய வங்காங்கி ஞானங்களுள் எகதி ஞானமே முக்கியமென்ப தறைகின்றார்)— ஞானத்தார்ஞானங்களல்லா ஞா னம்-சிவதீக்ஷா சிவஞான சிவயோக ஞானபாத்திரர்க ளல்லாச்சாங்கியன் வேதாந்திமுதலோர் சொல்லும் பிரகிருதிபுருஷ விவேகப் பிரமவிவேக

பௌருஷஞானங்கள் சைவசைதிகள் சொல்லுஞ் சிவசிலைக்கிய விஷய சிவசத்திப் பிராமாணிகபௌருஷ பிரமிதிக்குறித் திகூஷாங்காங்கி ஞானம்(இவைகள்)—அல்லாஞானம்-சங்கற்ப சிற்கன்ம திருத்திய ஞானகரண ஞானம்—இறைவனடிஞானமே - சிவக்கிரியாசத்திச் சிறப்பிருப்பிச்சாசத்திலக்கண சிவதீக்ஷையே—ஞானமென்பர் - ஞானச்சிறப்பென்று சிவசித்தாந்திகள் செப்புவார்கள். எ—று. சைவசித்தாந்திப்போில், மறைந்து சாங்கிய வேதாந்திமதத்தாபாசர்களாய்ச் சஞ்சரிக்குஞ் சிலபோ் தியான சமாதி சிற்கன்மச் சிறப்புஞானமுஞ் செப்பாது ஞானத்தியான சமாதி சிவன் முத்தி சாக்ஷாத்கார சருவாங்காங்கியாயிருக்குந் தீக்ஷையை ஞானத்துக்கங்கமென்று மாறிக்கொண்டு,சிவ சிலைக்கிய விஷய சிவசத்திகரண மைதிக்கிக பவுருஷபொதுஞானமாத்திரமே இறைவனடிஞானம் அதுவே சமாதி யதுவேஞானமென்பர்.

அவர்கள் முன்ஆசாரியர் தீக்ஷையே மோக்ஷசாதனமென்றறைகை திருவிருத்தங்களில் வித்தரித்த வாக்கியங்களுக்கு முன்பின் னவிரோதமாகப்பொருள்கொள்ளாது தங்கள் மனம்கொள்கைக்கிணங்கப் பொருள் கொண்டு முன்பின் விரோதிக்கப்பண்ணி யாக்குவாக்கியங்களைப் பிராக்ருத வாக்கியங்களாகவும், விப்பிரலம்ப வாக்கியங்களாகவும் பண்ணிப் பேசும்பேர்களோடு பேச்சேதிருக்கின்றது. ஏதிப்போது நீர் நீதிதப்பிச்செப்பிற்றென்று நிகழ்த்தியது; மலங் குணம்; அதுஅஞ்ஞானமே; அஞ்ஞானங்குணகுணித் திரவியமன்று, மலமாகு மந்தவஞ்ஞானமுஞ் சிப்பிவெள்ளி ஞானம்போல ஞானமாத்திரத்தால் நீங்கும்.

நன்று நீ சொல்லியது; மலங் குணம் அஞ்ஞானமாகில், அதற்குக் குணியொன்று கூறவேண்டும்; ஆத்மாவென்னில் பாஷாணம்போலஞ்ஞாத்மாவென்னு நையாயிக வைசேடிக மதமாம்; ஆத்மாவுக் கன்னியம் அக்குணியென்னி லதுவேமலம். அஞ்ஞானமென்றது மலகுணமென்றுமக்கு அபிமத ஞாதுத்தியந்தாபாவ லக்கண மவுட்டியமாகு மஞ்ஞானமன்று, சுற்றிகொல்லோ மகன்கொல்லோ வென்னும் ஐயஞானம்போ லேய ஞானமாகு மஞ்ஞானமே; அல்லது இது வெள்ளியெனுஞ் சிப்பிவெள்ளி விபரிய ஞானம்போற் சவிகற்பவிபரிய ஞானமாகு மஞ்ஞானமேதான்.

நன்றிதுவன்று; குணியொன்று குறிக்குமிடத்துச் சாகங்கார புத்திதத்துவ மாதலாற், புத்திதத்துவமுதற் றத்துவப் பிரளயத்து முத்திப் பிரசங்கம் வரும். அப்போ திருசந்திரனெனும் விபரிய ஞானம்போற புத்திபொருந்தாது சரீரநானென்று சற்றே தோற்று நிருவிகற்ப விபரிய ஞானமாகு மஞ்ஞானமே; அதுவு நன்றன்று; ஞானுங்கிசத்துக்குச் சித்தும் விபரியாங்கிசத்துக்கு மலகலைமணந்து கலந்த வித்தையுங் குணியாதலா லிய

ற்கைக் குணிமாறி மயங்கிச் செயற்கைக் கலைகலக்க வித்தியாதத்துவமு தற் றத்துவப்பிரளயத்து முத்திப்பிரசங்கம் வரும்.

அதுவன்றி, யிருசந்திரஞானமாகு மஞ்ஞான மொருசந்திரனெனு முண்மைஞானத்தா லுண்ணீக்கமுற்றலு மொப்புமாத்திரத்துதிக்குஞ் சிப்பிவெள்ளிஞானமாகு மஞ்ஞானஞ் சிப்பியெனு முண்மைஞானத்தா லுண்ணீக்கம் புறநீக்கமுற்று முற்றும்போலுற்போல நேத்திரப்படல திரவியநீக்கமன்றிப் புறநீக்கமுறுதுபோற் சரீர நானெனுஞ் சரீராத்ம ஞானமாகு மஞ்ஞானமுஞ் சரீரத்துக் கன்னியமாத்மா நானெனு முண் மைஞானத்தா லுண்ணீக்கமுற்றலு மொருமலத்திரவிய நீக்கமன்றிப் புற நீக்கமுறுது மலத்திரவியமும் படலமென் றிரண்டொரு திரவியப்பொரு ளெனு முண்மைஞானமாத்திரத்தாற் படலம்போல மலமென் றிரண்டொரு திரவியப் பொருளெனு முண்மைஞானமாத்திரத்தால் நீங்காது, நேத்திர படலத் திரவியம் படலநீக்கு முபாய ஞானத்துணையுடைய வயித்திய சத் திசத்திரகன்மத்தால் நேத்திர விபரீத விருத்தி நிமித்தாந்திய விருத்தி யோடு நீங்குவதுபோல, மலத்திரவியமு மலநீக்குமுபாய ஞானத்துணை யுடைய சிவதீக்ஷாக்குறிக் கிரியாசத்தி சிறப்பிருப்பிச்சாசத்தி சிருத்தியக்கு றிச்சங்கற்ப சிற்கன்மத்தாற் கலைகலக்க வித்தியாதத்துவ விபரீத விருத்தி நிமித்த மவுட்டியவிருத்தியோடு நீங்கும்.

ஆதலால், சாங்கியர்போற் சொல்லுஞ் சுவதந்திர ஞானத்தாற், பஞ்சலர்போற் சொல்லுஞ் சுவதந்திர யோகத்தால், வேதாந்திகள்போ, சொல்லுஞ் சுவதந்திர சன்னியாசத்தால், மீமாங்கிசர்போற் சொல்லுஞ் சுவதந்திர கன்மத்தால் மோக்ஷமில்லை; சிவபௌருஷ சிவஞானஞ் சிவ பௌருஷ சிவயோகாதிகள் சாதார வசத்தியோநிருவாண தீக்ஷாங்கி மாத்திராங்கங்கள்; குருசிவஞானஞ் குருசிவயோகாதிகளுஞ் சிவசிவஞானஞ் சிவசிவயோகாதிகளு முறைமையிற் சாதார நிராதார சத்தியோநிருவாண தீக்ஷாங்கிமாத்திராங்கங்கள்.

சிவபௌருஷ சிவஞானஞ் சிவயோகாதிகள் மோக்ஷகாரிய மூற்று மொத்துச் செல்லா தோரிடத்தில் வியபிசாரிக ளாதலான் மோக்ஷகாரிய மூற்றுமொத்துச் செல்லுஞ் சொல்லிய சிவசத்திலக்கண தீக்ஷையாற்றா னே மோக்ஷமென்று சுவதந்திர தீக்ஷா சிற்கன்மத்தால் மோக்ஷஞ் சுவதந் திரமல்லா ஞானகோடிகள் தீக்ஷாங்கங்களன்றிச் சுவதந்திரங்களாய்ச் சூழ் ந்தாலு மோக்ஷமில்லையாம்; ஆதலால், சொல்லிய சிவதீக்ஷா சத்திசங்கற்ப சிற்கன்மத்தாற்றானே மோக்ஷமென்று சித்தாந்தம். (உஎ)

அப்படி குருஞானஞ் சாங்க சாதார சத்தியோநிருவா
ண தீக்ஷையினல் விதேக பரமுத்தி சாக்ஷாற்கா
ரஞ் சடதிவிளங்குமென்றலு, சிவஞானஞ்சாங்க

சாதார வசத்தியோ நிருவாண தீகூயிறற் சதே
கசிவன்முத்தி சாகூர்காற மெல்ல விளங்குமென
றுஞ், சமாதி நடுவொரு திருவிருத்தத்தா னுட்டி
யிரு திருவிருத்தங்களா லிசைக்கின்றார்.

சூரியகாந்தக்கல்லினிடத்தேசெய்ய
சுடர்தோன்றியிடச்சோதிதோன்றுமாபோ
லாரியனுமாசான்வந்தருளாற்றோன்ற
வடிஞானமான்மாவிற்றோன்றுந்தோன்றத்
தூரியனுஞ்சிவந்தோன்றுந்தானேதோன்றும்
தொலலுலகமெல்லாந்தன்னுள்ளேதோன்று
மேரியனுய்ப்பரியனுமாயுயிர்க்குயிராயெங்கு
நின்றநிலையெலலாமுங்கழுந்துதோன்றுமம.

சிக்கமொருபக்குவத்தின்மிருசத்திநிபாத
மேவுதலுஞானம்விளங்தோர்குருவினருளாற்
புக்கனுட்டத்தேநிட்டைபுரிந்துளோர்கள்
பூதலத்தேபுகழ்சிவன்முத்தராகித்
தங்கபிரபாபரியரின்றியோட்டிற்
றபோனுபூதிச்சபாபதிதாணனிச்சங்கரனே
டொக்கவுரைத்தினவனவினயவலிவினவிடாதே
படுகதையாய்ச்சிவன்றோற்றமொன்றுமேகணபர்.

அறியாமையறிவகற்றியறிவினுள்ளே
பறிவுதனையருளினுலறிபாதேயநீங்கு
குறியாதேகுறித்தக்கரணமகளோடுங்
கூடாதேவாடாதேகுழைந்திருபமாகிற
பிறியாதசிவன்குணமிரண்டுந்தானுமிரு
பிறபஞ்சபேதமெல்லாந்தானுய்த்தீதலாறி
நெறியாலேயிலயமல்லாமல்லவாகி
நின்றென்றுந்தோன்றிவினைரோதாரூபே.

இ-ள். சூரியகாந்தக்கல்லினிடத்தே—செய்யசுடர் தோன்றியிட—சூரியசன்னிதானமாக—சோதிதோன்றுமாபோல் - நெருபபிருந் தெழுந்தது போல—ஆரியனுமாசான்வந்துதோன்ற-புசியனுகிய குருப் பருவங்கருதி விரும்பி வெளியாக—அருளால்-அக்குருபண்ணிய செயற்கைத் தீக்ஷாக்குறிக் கன்மத தாவிப்பவித் தியற்கைத் தீக்ஷாக்குறியுற்ற ஞெக்கிரியாசத்தி

சிறப்பிருப்பிச்சாசத்தி கிருத்தியக்குறிச் சங்கற்ப சிற்கன்மத்தால் — ஆண் மாவிலடிஞானந்தோன்றும்-உயிரின்கண்ணே யென்று படித் துபசரிக்கப் படுங் கரணக்குறி ஞானக் கிரியாலக்கணத்ம தன்மசின்ன முன்னுள்ள சிற்சத்தியின தறிதல் பண்ணுதல் கிருத்தியாகிருதி சாகூஷாற்காரஞ் சடதி மலமூத்தமாய் வியத்தமாம்—தோன்ற-அப்படி யாவிர்ப்பவிக்க—தூரியஞ ஞ்சிவந்தோன்றும்-மலசத்தியான் முத்தமாகுமுன் சிற்சத்திக்கண் மறை யப் பிரத்தியகூ மின்றி யிருந்த சிவன் பிறபொருளறிவி லுதித்த சாகூஷா ற்காரத்திற் பிரத்தியகூஷமாவன்—தானுந்தோன்றும்-அப்படி முன்னிருந்த வாத்மாவுந் தற்பொருளறிவிலுதித்த சாகூஷாற்காரத்திற் சிவனுக் கொத் தறு முருவனுய்ப் பிரத்தியகூஷ மாவன்—தொல்லுலகமெல்லாந் தன்னுள் ளேதோன்றும் - அனுதிசித்த சடசித்துப் பிரபஞ்சமெல்லா மொத்த வியா பகமாயு மொவ்வாவியாப்பியமாயும் பிரத்தியகூஷமாம்—நேரியனுய்ப்பரிய னுமாயுயிர்க்குயிராயெங்குநின்றநிலையெல்லாமுங்கிழ்ந்துதோன்றும்- பிரத் தியகூஷமாகிய சிவனுஞ்சிறப்பா யணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய்ப் பசுவர்க்கப் பிரேரகனுய் முத்தாத்ம மித்திரனு யிருக்குமுறைமை முற்று ஞ் சாகூஷாற்காரமாம். எ-று. (உஅ)

இ-ள். மிக்கதொருபக்குவத்தில் - தீவிரதரபக்குவமலகாலத்தில்—மி குசத்திநிபாதமேவுதலும்-பாஷாணபதனம் பயம்பண்ணுதல்போ லனுக் கிரகசத்தியினது சங்சார பயம்பண்ணுஞ் சங்கற்பம் பொருந்துதலும்(சஞ் சாரபயஞ் சிறிதொரு பிரகாரம் பரோகூஷ சிவபுத்தியும் பிறக்கத் தீகூஷி த சிவச்சுவரூபத்தைச் சிவசாத்திரத்தாற் பரோகூஷரூப தரிசனப்படுத்தித் தியானிப்பித்துச் சமாதிப்பித்துப் பின் சிவனேப் பிரத்தியகூஷமாய்க் காட் டுங் குருவைத்தேடி யோடித் திகைக்கச் சிவனவனைக் காட்டிக் கூட்டக் கூடிய)—ஓர்குருவினருளால் (கடாகூஷித் தவன்பண்ணுந் தீகூஷாகன்மரூ ட சாகூஷாத் தீகூஷாலக்கண சிவசத்தி சங்கற்ப சிற்கன்மத்தால் சிவாகமக் கேள்விக் கருகர்களாய்)—புக்கனுட்டித்தே-கேட்டுச் சிந்தித்துப் பரோகூஷ சிவநிச்சயம் பண்ணிப் பின் னபரோகூஷம்போ லபிநயித்து நடிக்குந் தியா னஞ் செய்தே—நிட்டைபுரிந்துளோர்கள் - தியானத் துறைப்புரூப சமா தி சாதித்தோர்கள்—பூதலத்தேதபுகழ்சிவன்முத்தராகி -சதேக சிவன்முத்தி சாகூஷாற்காரவான்களாகுகைக்குக் கீர்த்திக்கும் யோக்கியர்களாய்—தக்க பிரியாப்பிரியமின்றி-விருப்பு வெறுப்பு மின்றி—ஒட்டிற்றபனியத்திற் சம புத்திபண்ணி-ஒடுஞ்செம்பொன்னு மொப்ப நோக்கி—சங்கரனேடொக்க வுறைந்து-சிவசத்தியாத்திக்கொப்பத் தங்கள் சிற்சத்திவிரிவு சிந்தித் து—அவனிவனே யிவனவனே விடாதேயுடந்தையாய் - நிரந்தரநினைப்புற் று நிரந்தரநினைப்பு நீங்காது—சிவன்றேற்றமொன்றுமே காண்பர்- (சமா திமுங்கிழ்க்குஞ் சாகூஷாற்காரத்திற் சிவன்முதற் சித்தசித்துவத்துமுற்றுங் கைத்தலத்து நெல்லிக்கனி கண்ணோக்கதிற்போலுற்று விளங்கு மாறு

லுஞ் சமாதியி லேகாக்கிர மாத்திரமாதலால்) சிவனிற்கு நிலைமாத்திரஞ் சிந்திப்பார்கள் எ-று.

பிரத்தியகூஷமாய்ப் பார்ப்பார்களென்றுபேசவேண்டாம், சிவசித்தாந்திகட்குப் பாதஞ்சலர்முதலோர்க்குப்போற் சமாதியோகமன்று;சாகூஷாற்காரமாகு மங்கியோகத்துக் கங்கயோகமாதலால்.

"சருவார்த்தபாசகங்ஞானஞ்சிவயோகந்துசாசுவதம்"

என்றிருத்தலா

னுஞ் சாகூஷாற்காரமாகும் யோகத்துக்கங்கஞ் சாகூஷாற்காரமே யோகம; தியானஞ் சமாதி. யோக மென்ப தங்கமாகையா லுபசாரம். (உகூ)

இ-ள். தியானம் ஞானத்துதிக்கு முறைமையும், சமாதி தியானத்துதிக்கு முறைமையும், சதேதசிவனமுததி சாகூஷாற்காரம் சமாதியின் மூஷிழ்க்கு முறைமையுஞ் சாறறுகினறது.

"அறியாமையறிவகற்றி" என்பதமுதலியன ஸ்ரீகுருத் திருவாய்மலர்ந் துபதேசிக்கு மொருவார்த்தையென் றுலகுளாக்கும் வசிமாற் றீருறுப்பீற்றிருசுழி யொருமொழியிற், "கோவா மம கிம" என்னும் வடமொழி வினுவி லுத்தர மொப்புச் செப்புதலாகு மயமத்தியாதி படர்க்கை முன்னிலதன்மை முக்குறி மூவாக்கியம் மும்முப்பதம் மும்முப்பதமொட்டுமூவெழுத்து மும்முப்பதத்தில் மூவெழுத்திற் குறிக்கும் வாச்சியலக்கிய விருமுப்பொருள்;அவ்விருமுப்பொருளி லிலக்கியப்பொருளாகு மாத்மபரசிவமுக்குறி முப்பொருள்களின் முதற்பொருள் முறைமையிற்றுக்குஞ் சுழுத்திதுரியந் துரியாதீத முக்குறி மூவவத்தை சாக்கிரஞ் சொப்பனந்தாக்குஞ் சயனமட்டு முட்டுஞ் சகிதகும்பகோபசாந்திமே லுன்மனிமூலாந்தோபரியுபாந்தங்களி லப்படி யப்பொருள் தாக்கிப் பண்ணப்படுங் கேவல கும்பக சுனியகும்பக சுனியாந்தகும்பக முக்குறி முக்கும்பகஞ் சாம்பவிகேசரி சாக்கிரஞ் சொப்பனந் தாக்கியதாதலா லப்படி யப்பொருள் தாக்குஞ் சின்முத்திரை மவுனமுத்திரை மவுனாந்தமுத்திரை முக்குறி மும்முத்திரை யப்படியப்பொருள் தாக்குந் தியானஞ் சமாதிசாகூஷாற்கார முக்குறி மூவறிவு முன்சொல்லிய மும்முப்பதங்களினு மும்முப்பதமொட்டு மூவெழுத்துக்களினு நடுப்பத நடுவெழுத்துக்களுக்கு வாச்சியப்பொருளணுபகூஷசுவரூப சிவயோகங்குறித்தாற்பூதாத்ம ததுதிவாத்மாந்தராத்மஜீவாத்ம மந்திராத்ம பஞ்சாத்மா ; சம்புபகூஷ சிவரூப சிவயோகங் குறித்தால் குருலிங்கசங்கமாதி ; இலக்கியப் பொருண்முறைமையி னுன்மனியுற்ற சின்மாத்திராதமா;அனதிக்கிராந்த வித்துக சின்மாத்திரபரசிவம் ; முதற்பதமுதலெழுத்துக்களுக்கு வாச்சியப்பொருள் பிரமாதி பரசிவமூர்த்திசானமூர்த்தி பரியந்தவணுபகூஷ சம்புபகூஷ வபரசிவம். நாதத்துள் வெளிழ்தொளிருஞ் சுத்தபூதாதி யுபாதியுற்ற பஞ்சாத்மாவுஞ் சூக்குமபரசிவ

ரூபியாயிருந்தாலு மொருபிரகார மீசானமூர்த்திமுத லணுபக்ஷவபரசி வரூபியாதலா லப்பொருளாம். இலக் கியப்பொருள் அதிக்கிராந்தவிந்து க பரசிவமாகும் அணுபக்ஷசம்புபக்ஷவிருபரம்; முடிவிற்பதமுடிவெழு த்துக் களுக்கு வாச்சியப்பொருள், தியானசமாதியுபாதித் தியாச்சியத்தி னும் சுவரூபலக்கண சிவகோடிக்குட் ருதிக்குந்தியான சமாதியுபாதியுற் ற வணுபக்ஷசம்புபக்ஷின்மாத்திராதம பரங்கள். இலக்கியப்பொருள் சுத் தசிவமாகுமணுபக்ஷ சம்புபக்ஷவிருசிவம். ஆத்மாத் தியானத்தானம்; பரஞ் சமாதித்தானம்; சிவஞ் சாக்ஷாற்காரத்தானம்.

பின்னெருபகுப்பு மிதுபோலிருசிவத்தியானங் குறித்துச் செப்பப்படு மதுசெப்புவாம். சிவசத்தியனந்தேசுரசத்தியாதித் துவாரத்தினூலே பசுசர த்திராலோகாதியாரூடமா யசுத்தராக வசுத்தகலே யசுத்தவித்தையிவற்றின் மறைத்து விளக்கினதினுற் செயற்கைப் பசுகரணமென்றும் பசுப்பிரமா ணமென்றும் படிக்கப்படுந் தற்பொருளறிவு பிறபொருளறிவுச் சித்சத்தி களைப் பொதுச்சிறப்பாய் மணந்ததினூலு மியற்கையினூலு மசுத்தப்பிரா கிருத மலைகங்காரபுத்திகள் பசுகரணங்களென்றும் பசுப்பிரமாணங்க ளென்றும் படிக்கப்படும் ; சிவசத்திசாக்ஷாற்சிவாகமாரூடமாயுஞ் சிவமந் திராரூடமாயும் நாதத்துளெழுந்தொளிருஞ் சுத்தமலைகங்காரபுத்தி கர்ப் பமாயிருக்குஞ் சுத்தராகஞ். சுத்தகலே சுத்தவித்தை யிவற்றின்மறைத்து விளக்கினதினூலு மியற்கையினூலுஞ் சிவகரணமென்றும் பதிப்பிரமாண மென்றும் படிக்கப்படும்; தற்பொருளறிவு பிறபொருளறிவுச் சித்சத்தி களைப் பொதுச்சிறப்பாய் மணந்ததினுற் செயற்கையினுற் சிவகரணங்க ளென்றும் பதிப்பிரமாணங்களென்றும் அந்தமுந்தச்சொன்ன மலைகங் காரபுத்திகள்படிக்கப்படும்.

மூறைமையி லதிற்சிவாகமவழிச்செல்லு மலைகங்காரபுத்திகள் படிப்பவனது பசுத்துவ சிவத்துவவிவேகத் திரிபதார்த்த விவேக பரோக்ஷ தீக்ஷாயோகாங்க விகற்பசங்கற்ப கருவபோதஞான விசேஷங்களைப் பண் ணும்; சிவமந்திரவழிச்செல்லு மலைகங்காரபுத்திகள் காலாக்கினியாதிய ருசிருதார்த்த புவனத்துதிக்கும்; அபரசித்தி பராபரசித்தி பரசித்தி யெனு முச்சித்திகள் விருப்பமுறைமையிற் சித்திக்கும்பொருட்டும் முடிவின் மு த்திசித்திக்கும்பொருட்டும் பிருதிவிமுதற் குணமீரைஞ்சு மசுத்தகோடி பிரதி ருதிமுதற்காலமீரைஞ்சுஞ் சுத்தாசுத்தகோடி சுத்தவித்தைமுதற் சிவமீரைஞ்சுஞ் சுத்தகோடியெனுமுக்கோடிகளிற் சாக்ஷாத்தாங்களாயு மணிப்பிரபைபோ ல உபரிவிரியும் வியாபாரத்துவாரத்தினூலும் பூதாத்மாதி மந்திராத்மாந்த பஞ்சாத்ம சாலம்ப சிவயோக பஞ்சமார்க்கங்களி லொருவழியிற்பிரவேசி த்துவிகற்ப சங்கற்ப கருவபோத வியாபாரங்களைப் பலவிதமாய்ப்பண் ணும்.

அந்தவிகற்ப சங்கற்ப கருவபோதங்களால், "அறியாமையறிவகற்றி" (அறிவகற்றி யறியாமையகற்றியென மாறுக) "அறிவகற்றி" என்பது தத்துவசுத்தித் துவாரத்திலுலே யாத்மசுத்திதானே பண்ணப்பட்டதாகி லுந் தத்துவசுத்தி பிரதானமாகையாற் றத்துவசுத்திபண்ணியென்று சாற் றப்படும்; "அறியாமையகற்றி" என்பது மல மலவாசனை சுத்தித் துவாரத் திலுலே யாத்மசுத்திதானே பண்ணப்பட்டதிலுலும் ஆத்மாப் பசுத்துவ மென்னு மலோபாதியாற் பசுதத்துவமென்று படிக்கப்படுமாதலான் மலம் பசுதத்துவத்தோடு பசுதத்துவமென்றுபடிக்கப்படும் மலதத்துவமென்று வேறுதத்துவமாய் மதிக்கப்பட்டதில்லையாதலானும் ஆத்மசுத்தி பிரதான மாகையா லாத்மசுத்தி பண்ணியென்றே யறையப்படும். இதுதொகைப் பொருள். அறியாமை யசுத்ததத்துவமென்றும் அறிவு சுத்ததத்துவமென் றுஞ்சொல்லுவாருமுளர்.

வகைப்பொருள் விரிவுப்பொருள் ஒருமிக்க வகுத்துரைப்பாம். அறி வகற்றி - நிருவிகற்பம்புணர்ந்ததிலுதிக்குஞ் சவிகற்பமாய்த் தேவர் நரர் முதற்பசுவர்க்க மாயாசகலவர்க்கத்திற் காணப்படுஞ் சிற்றறிதல் சிற்றுச் செயற்முழில்களையும் விபரீத வேதன விக்கிரக போகங்களையும் பண்ணு ம்படி சிறிதுமலஞ்சிந்தும் அசுத்தகலாதிகஞ்சுக கலாவச்சியத்துவ தெள ரந்தரியக்குறி யசுத்த சகலத்துவமுற்றுக் கிஞ்சிஞ்ஞத்துவ ஞ்சிற்கர்த்திரு த்துவலக்கண சித்துவசின்ன வசுத்தபோகக் கிரியாகர்த்திருத்துவமாகிய வசுத்தபோத்திருத்துவ மாத்திரபொதுக்குறித் தூலபுருஷத்துவத்தினது புத்திரப்போலிப் போக்கிய போத்திருத்துவ போகோபபோத்திருத்துவச் சிறப்புக்குறித் தூலசிவத்துவமேகம்.

நிருவிகற்பம்புணர்ததிலுதிக்குஞ் சவிகற்பமாய் மந்திரேசுவர மாயாசுத்த சகலபதிவர்க்கத்திலும் மந்திர மந்திரமகேசுவர மகாமாயாசுத் தசகலபதிவர்க்கத்திலுங் காணப்படுஞ் சாதிசயப்பேரறிதல் பெருஞ்செயற் முழில்களையு மற்பவிபரீத வேதன விக்கிரக போகங்களையும் பண்ணும் படி மரியாதியின் மலவாசனைதுடைக்குங் கலாதிகஞ்சுகமுற்றுக் கலாவசி யத்துவ வைதுரியக்குறிச் சுத்தசகலத்துவமுற்றுச் சாதிசய சருவஞ்ஞத்து வசருவகர்த்திருத்துவ லக்கண தூலசிவத்துவசின்ன சுத்தபோகக் கிரியா கர்த்திருத்துவமாகிய சுத்தபோத்திருத்துவ மாத்திரப் பொதுக்குறிச் சூக் குமபுருடத்துவத்தினது புத்திரப்போலி போக்கிய போத்திருத்துவ போ கோபபோத்திருத்துவச் சிறப்புக்குறிச்சூக்கும சிவத்துவமேகம்.

இம் மந்திரமகேசுராதி யபரபதிவர்க்கத்துக் கூறிய குறியுட்கூடிய சுத்தசகலத்துவமுதற் பொதுக்குறிச் சிறுசின்னமுஞ் சூக்கும சிவத்துவ விளக்கு விக்கிரக விசிட்ட சகலத்துவமுதற் சிறப்புக்குறிச்சிறுசின்னமு முடைய வணுசதாசிவ வணுவங்க பதிவர்க்கத்தின் முன் சொல்லிய பொ

துக்குறிப்பரபுருடத்துவத்தினது புத்திரப்போலி போக்கிய போத்திருத்துவபோகோபபோத்திருத்துவச் சிறப்புக்குறிப் பரசிவத்துவமேகம்.

இம்முப்புருடத்துவப் புத்திரப்போலி முச்சீவத்துவமு முபாதிச் சித்துவமுங் தூலசிவத்துவமுஞ் சூக்குமசிவத்துவமும் நிரதிசயபரசிவத்து வசொரூபலக்கண சிவசம சுத்தசிவனு யிருக்கின்ற நமக்குச் சொரூபலக் கணமன்று; தடத்தலக்கணமேயென்று மகாவாக்கிய நடுமுதலிருபதங்களு க்கு வாச்சியார்த்த தடத்தலக்கணத்மத்துவ தடத்தலக்கண சிவத்துவ சுத் திக்குறி முப்புருடத்துவப் புத்திரப்போலி முச்சீவத்துவசுத்தி தத்துவசுத் தி பண்ணத்தானே வேறியத்தனமின்றிப் பண்ணப்படுமாதலால், முச்சீவ த்துவ தடத்தவறிவு விளக்காதலால் அறிவென்றுபசரிக்கப்படுந் தத்துவங் களாதலால் "அறிவகற்றி" என்பதற்கர்த்த மிதுவாகத் தத்துவசுத்தி பண்ணி.—

இஃதிம்முறை பண்ணவென்ப தினைக்கின்றும். சாதக சாமர்த்தியத் துக்குத் தக்கது சிவஞானத்துணைச் சித்தசிவகன்மயோகிபண்ணுந் தத்துவ தடத்தாத்ம தடத்தசிவ முப்பதார்த்தங்களின திலக்ஷண வபரோக்ஷ நிரீக்ஷ ணக்குறித் திரிரூபம்; ஒன்றுக்கொன்று தத்துவமுதற் றிரிபதார்த்தலக்ஷ ண விலக்ஷண வபரோக்ஷ பரீக்ஷாரூப நிரீக்ஷணக்குறித் திரிதரிசனம்; மஞ்ஞவிகற்பசங்கற்பப் பிரவிருத்தமாய்ச் சிவோகஞ் சிவோயஞ் சிவசிவ வென்பதுமுதற் பலவித வகங்கார புத்திவிருத்திப்பிரவாகசின்னத் தியா னக்குறி; தியானசித்திசின்னசமாதிக்குறித் திரியோகம்; சமாதிசித்தி சின் ன சாக்ஷாற்காரக்குறித் திரிபோகம்.

மூலமந்திரமுச்சரித் துள்ளிருக்குஞ் சுரிகாத்திர மதித்துத் தொடித் திருதயந்தொட்டுத் துவாதசாந்தங்குறித்துச் சமனுந்தமட்டு முட்ட முறை மையிற்போய்ப் போய்த்தான், தேசகால சத்திக்குத்தக்க திருதயத்திருந் துதான் சூனியப்பிராசாதமுச்சரித்துள்ளிருக்குஞ் சுரிகாத்திர மதித்துத் தொடுத்துத் தத்துவங்களையு மாத்மாவிலுஞ் சிவனிடத்திலுந் தத்துவதடத் தத்திலுல் வைத்த தடத்தத் தன்மைகளையு மறுத்துக் காரணத்தடைவி லோடுக்கி யகண்டிதங்களாகப் பண்ணப்பட்டனபோ லடக்கித் தனதிதத் துவ வச்சியத்துவத் தியாச்சியம்பண்ணித் தத்துவங்கள் தனக்குவச்சியங் களாகத் தான் வசியாதிருத்தலாகுந் திரிசுத்தி யிவைகளைத்தான் பண்ணி; சிவஞான துணைச் சாத்தியசிவகன்மயோகி பண்ணுஞ் சொல்லிய குறி ப் பரோக்ஷரூபந் தரிசனம் யோகங் கூடிய மரியாதி மஞ்ஞவாயுசெய வச மாத்திரத்தினுலே யொருபிரகாரந் தன்வசமாக்குதலாகுந் திரிசுத்தி இ வைகளைத்தான் பண்ணி; யோகசாமர்த்திய மில்லாதிருந்தால் தேதிகேதி கியதிலக்கண சிவகன்ம மாத்திரத்துணைச் சாத்திய சிவஞானயோகி பண் ணுஞ் சொல்லியகுறிப் பரோக்ஷரூபந் தரிசன மனுன்மனி யாத்மாபிமா

னத் தியாகமாகுந் திரிசுத்தி யிலைவகளேத்தான் பண்ணி ; அதிமலபரிபக் குவத்தா லாவிர்ப்பவிக்கும் அதிகமோகூடி வாஞ்சையின தாவேசத்தாற் ரூன் அதுவன்றித தேசகால சத்திசங்கடத்திற்ரூன் வித்தார சுத்திவிரு ப்பமில்லையேல், மகார வகங்கார மாத்திரத் தியாச்சிய மாத்திரமாகுஞ் சுத்திதான்பண்ணி; அல்லதி லகுவாய்த் தத்துவதாத்துவிகப் பிரபஞ்சம னைத்து நிராகார நிராலம்ப மாயா மகாமாயாத் தோற்றமாதலா லப்படி யகண்டிதமாய்க் காரணகார நிராதார நிராலம்ப நிஷ்பிர பஞ்ச சிந்தனை மாத்திரமாகுஞ் சுத்திதான்பண்ணி.

இப்படி சுத்திபண்ணுமிடத்துச் சுத்திமார்க்கபேதமுண்டு அதுசொல்லு வாம். முத்திமாத்திரம்விரும்பின் நிராலம்ப சிவயோகம் பண்ணும்பொரு ட்டுக் குருப்போதிப்பச் சிவாகமஞ் சிவாகமார்த்தமாத்திரஞ் செப்புங் குரு வாக்கிய மாத்திரந் தான் கேட்டுச் சிந்தித்துத் தெளிந் திருதயமுதற் றுவா தசாந்த வியாபியாயிருக்கும் பிரமமந்திர முடிவாகும்பஞ்சாதாரங்களிற் ற ங்கித்தங்கிக் கமலமுடிச்சுக்கதவு திறந்துதிறந்து தத்துவமுதலிய மூப்பதா ர்த்தரூப தரிசனமுதலியன பண்ணிப்பண்ணிப்பழகிப்பழகிப் பின்ரூனங்க ளிற் றங்காது சடிதி சற்றே தாக்கித்தாக்கி முன்சாற்றிய முறைமையின் மூச்சிவயோகிகள் பண்ணு மூப்பகுப்புத் தத்துவமுதலிய மூப்பதார்த்தமூ ச்சுத்திபண்ணிப் பண்ணுமிடத்தும் பிரமாதி பரசிவமூர்த்திசானமூர்த்தி ரியந்த சிவமூர்த்தி பதங்களில் விரும்பிய சிவமூர்த்தி பதமுத்தியெனு மபர முத்திக்குறிச் சித்திக்குறித்து முச்சிவயோகிகள் பண்ணு முறைமையிற் சு வாவதிசுத்தியோடு விரும்பிய தத்துவ தத்துவாருகாத்மசிவமூர்த்தி சிவசி வமூர்த்தித் திரிரூபதரிசன யோகபோகங்களேப் பண்ணுமிடத்துஞ் சித்தி க்குப்பின் முத்திவிரும்பின் முத்திவழிபழகச் சுத்தியோடு பண்ணுமிடத்து ம்பவுதிகதேகாதிக்குறிப் பூதாதி மந்திராந்த வைம்பொருள்கட்குந்தத்துவ ங்களென்று பேர்சாற்றப்படு மாதலாற் பூதாத்ம தத்துவாத்ம வந்தராத்ம சீவாத்ம மந்திராத்ம சாலம்பசிவயோக மார்க்கங்களிற் பழகிய வொருவழி வைத்து இனவழியடக்கிச் சுத்தபூதாதிதொட்டுச் சமஞ்தமட்டுமுட்டும்பூ தாத்ம சித்தபாதித் தூலதேகக்குறிப் பூதங்களிற்ரூன் தத்துவாத்ம சித்து பாதிச் சூக்குமதேகக்குறித் தத்துவங்களிற்ரூன் அந்தராத்ம சித்துபாதி பரதேகக்குறி யந்தரத்திற்ரூன் சீவாத்ம சித்துபாதி யகங்காரமாத்திரக்கு றிச் சீவனிற்ரூன் மந்திராத்ம சித்துபாதிப் பிராசாதமுதலிய மந்திரத்திற் ரூன் ரூபதரிசன யோகபோக சுத்திகள் பண்ணப்படும். "அறிவகற்றி" என்பதற்குப் பொருளிவ்வள வமைந்தது.

அறியாமையகற்றி - மாயாசகல பசுவர்க்கத்திற் காணப்படுஞ் சரீரம் நான் இதுசுகம் இதிதுக்கம் இதுமோகம் நான்சுகி நான்றுக்கி நான்மோகி எதுன்பமுதற் பிரஞ்ஞாமோக வஞ்ஞானமூலபசுத்துவ மலத்தின தேதோ

ணியாமிகாசத்தி வைத்த போத்திருத்துவக்குறிப் புருடத்துவ ரூபமாய்ப் போதலாற் றத்துவசுத்தி யாத்மசுத்தியா மாதலால் மலத்தினதாவாரக சத்தி வைத்த நித்தியகேவல நித்திராமுத்திநித சிஞ்சிற் ஞானக்கிரியாசூ னிய வறியாமைக்குறி மூர்ச்சாமோக மூலசித்துவ சூனியக்குறி யறியா மைப்பே ரசித்துவ தூலதர பசுத்துவத்தைச் சொல்லிய பிருதிவிமுதற் கலாந்த தத்துவசுத்தி நடநடவே தத்துவசுத்திப்படி முச்சிவயோகிகள் பண் ணுமுறைமையிற் சிறிது மலசுத்தித் துவாரத்தினூலே சுத்திபண்ணி ; பிரளயாகல விஞ்ஞானகல மூடபசுவர்க்கத்திற் காணப்படுங் தூலசா திசய சருவஞ்ஞானக் கிரியா சூனியக்குறி மூர்ச்சாமோகமூல தூல சிவத் துவ சூனியக்குறி யறியாமைப்பே ரசிவத்துவ தூலபசுத்துவத்தை மாயா தத்துவசுத்தியினு மாயாதத்துவசுத்தி சுத்தவித்தியாதத்துவ சுத்திக்குருடி வினுந் தத்துவசுத்திப்படி முச்சிவயோகிகள் பண்ணுமுறைமையின் முற் று மலசுத்தித்துவாரத்தினூலே சுத்திபண்ணி ; பின் மந்திரேசுர மந்திரா மந்திரமகேசுர மாயாசகல மகாமாயாசகல பதிவர்க்கத்திற் காணப்படு ஞ் சுக்குமசாதிசய சருவஞ்ஞானக் கிரியாசூனியக் குறியாகிச் சுத்த போகோபபோகப் பிரஞ்ஞாமோகத்தி லழுந்தியமூர்ச்சாமோக மூலசூக் கும சிவத்துவ சூனியக்குறி யறியாமைப்பேரசிவத்துவ சூக்கும பசுத் துவத்தைச் சுத்தவித்தியாதத்துவ வீசுரதத்துவ சுத்திக்குட் டத்துவசுத் திப்படி முச்சிவயோகிகள் பண்ணுமுறைமையிற் றூலா திகார மல மூல தூலமலவாசனைசுத்தித் துவாரத்தினூலே சுத்திபண்ணி ; பின் அ ணுசதாசிவ வணுப்பிரமாங்க மகாமாயா சகலபதிவர்க்கத்திற் காணப் படும் பரநிரதிசய சருவஞானக் கிரியா சூனியக்குறி சுத்த போகோப போகப் பிரஞ்ஞாமோகத் தமிழ்ந்திய மூர்ச்சாமோகமூல பரசிவத்துவ சூனியக்குறி யறியாமைப்பேரசிவத்துவபர பசுத்துவத்தைச் சதாசிவதத் துவமுதல் முத்தத்துவசுத்திக்குட் டத்துவசுத்திப்படி சிகாரூப திரோதா னசத்திசுத்தியோடு முச்சிவயோகிகள் பண்ணுமுறைமையிற் சூக்குமாதி காரமல மூலசூக்குமமல வாசனைசுத்தித் துவாரத்தினூலே சுத்திபண்ணி; "அறியாமையகற்றி" என்பதற்கு இவ்வளவு பொருளமைத்தது.

அறிவினுள்ளே-தூலசூக்குமபரமுச்சின்மாத்திராத்மதத்துவ மும்மு லமூலீதத்தூலசூக்குமபர மூப்பர வித்தியாதத்துவ மும் மாம்பமூத்த தூ லசூக்குமபர முச்சிவசிவதத்துவ மூப்பழங்கள் விரும்பப்படுமாதலாற் சம ஊனக்குக்கீ ழிருபகுப்பரத்ம பரசிவ தத்துவத் தியாச்சியத்தினூலே சமனு சுத்திக்குமே லுன்மனுந்தாவதி பரசிவத்துவாபிவியத்தி சித்திச்குமளவுந் தாக்கிப்பரமலவாசனை யாபரசிக்கு மாதலா லுன்மனுமூலாந்தஞ் சொச்சந் த சருவஞ்ஞானேத்தர சுருதிப்படி சிவசத்தினுணையாய்ச் சென்று திரோ தானசத்தி நிக்கிரக நிருத்திய பராசத்தி யனுக்கிரக நிருத்திய மத்தியத்த சிவ சின்மாத்திராத்மாவினும் கூடச்செல்லுதலாற் சொல்லும் சிவசினமா

த்திராத்மாவினும்—அறிவுதனை-முறைமையி லணுபரசிவங்கள் சிவபரசிவ
ங்களெனுமாலுணர்த்துக்கினையும்—அருளினால்-சமனைமட்டுமுட்டும் பிராகிரு
த மனுகங்கார புத்திகளில் மறைந்து சாலம்பித் துன்மனையும் புபரிஷிரா
லம்பிக்குஞ் சிவசத்திவிளக்கு விளக்கிய சிற்சாத்த மனுகங்கார புத்திவி
கற்பசங்கற்ப சிற்றுவிகற்ப சவிகற்ப கருவபோத நிருவிகற்ப ஞானங்க
ளால்—அறியாதேயறிந்து-திருச்சியமாய் நோக்காதே தடத்தலக்கண நிரு
முத்த சுவரூபலக்கண சருவதிருக்கிருத்தரூப லகூஷணபரோகூஷ நிரீகூஷண
சிவக்குறிச்சிவரூபத்தடத் தலக்கண விலக்கண சுபரூபலக்கண பரோகூஷ
நிரீகூஷணரூபசாத்திரியபரீகூஷாவிலகூஷண சூக்குமபரீகூஷாக்குறிச்சிவதரிசன
மெனுந் தசகாரியத் திருகாரியம் படுத்திப்பார்த்து—குறியாதேகுறித்து
முன்சொல்லிய சாத்தமனச்சங்கற்ப முன்னுகச் சாத்தாகங்கார புத்திப்
பிரவாகச் சிறப்புக் கருவபோத ஞானங்களா லியற்கையினு லணுபகூஷ தற்
பொருட் சிவக்குறிப்பினுற்றான்; சம்புபகூஷப் பிறபொருட் சிவசாதி விசி
ட்ட தற்பொருட் சிவக்குறிப்பினுற்றான்; செயற்கையினு லாரோபித
சம்புபகூஷப் பிறபொருட் சிவக்குறிப்பினுற்றான்; திருசியமன்றிச் சருவதி
ருக் கிருத்திருபமாய் அபரோகூஷம்போலபிரியத்துச் சிவோகமென்று
தான்;இயற்கையினுற் சம்புபட்ச வேற்றுமைச் சிவக்குறிப்பினால் அப்படி
சிவோயமென்றுதான்; சிவசிவவென்றுதான்; ஒன்றின் மற்றதுமொக்கப்பு
ரிக்க வத்தியச்சிமி யருகமருவப் பொருத்திப்பண்ணுஞ் சித்தியானக்கு
றித் தசகாரியத் தொருகாரிய சிவயோகம்பண்ணி—அந்தக்கரண மூன்
றுங்கூடாதே-இடுக்குக்கொடுத்து விடுத்துத்தொடுத்துச் சிவத்தில் சார்ப்ப
டுத்துஞ் சிவத்தியானத்திற் சிறிதிடங்கண்டுதாக்கிச் சமனை பிற்சுருங்கிச்
சூனியப்போலியாய்ப் போன மனசைத் திரும்பவெழுப்பித் திருப்பி
விஷயத்தில்வீழ்த்துஞ் சகலத்தன்மை தொட்டுவிட்டுத் தட்டாதே—
வாடாதே - திரும்பத்திரும்பி யோகநித்திராமுத்திரித மனத்தைப் பிரா
கிருத நித்திரையில் மூழ்குவிக்குங் கேவலத்தன்மை தாக்காதே—சூழைந்
திருப்பையாகில்-தியானத்தின துற்கருஷாவத்தாரூபமாய்ஞாதிரு ஞான
ஞேயச் சிறப்புத் தியாதிரு தியானதேய சூனியப்போலியாய் ஞேயந்
தழுந்தி அத் தேயமாத்திரத்திலங்கு ஞானச் சிறப்புத்தியானவிசேஷசமா
திபண்ணி யிருப்பையாகில்—பிறியாதசிவன்முனே-கூடுதல்பிரிதல் குறி
க்கிற் குற்றமுண்டாதலால் அணுதிதொட்டுப் பிரேரகப் பிரேரியத்தன்
மைச் சம்பந்தியாயிருந்த வீசுரன்முனே—பிரிந்துதோன்றி-அந்தச் சம்ப
ந்தம் விட்டுச் சாதிரிய மாத்திர மித்திரசம்பந்தியாய்ச் சாகூஷாற்கரிக்கப்
பட்டு- (அதுவன்றி) பிரபஞ்சபேதமெல்லாந்தானுற்றோன்றி-சித்தசித்
துச் சித்திரப்பொருள்கட் கெல்லாம் வியாபகமாய்த் தாரகமாய்ச்சாகூஷாற்
கரிக்கப்பட்டு—நெறியாலே - திருக்குத் திரிசியக்குறிக் குறிப்பினுலே—
இலையெல்லாமல்லவாகி-இந்தத் திருக்குத் திருச்சியப்பொருள்களி னெ

ன்றன்றி—நின்றும் - இருந்தும் — தோன்றிவேனிராதாரனுயே - தனக் கொரு தாரகமன்றி நிராதாரனுயிருந்தும் சமாதிசாமர்த்தியத்தினுலுதிக் குஞ் சாக்ஷாற்காரத்தினுற் சாக்ஷாற்கரிக்கப்படுவன். எ-று.

பரார்த்தச் சுவார்த்தார்த்த பிரத்தியர்த்த சருவார்த்தசிவன் முத்தி சிவசாக்ஷாற்காரஞ் சமாதிசாமர்த்தியத்தினுற் சித்திக்குமென்று தாற்பரி யம். (கூ0)

இப்படி யசத்தியோநிருவாண தீக்ஷாவானுய்ப் பின் சிவாகமக்கேள்வி முதலியவற்றுல் முறைமையின் மூப்பதார்த்தவிவேக பசுத்துவ சிவத்துவவிவேக சிவஞானவானுய்ப் பின் சிவத்தியானவானுய்ப் பின் சிவசமாதிமானுய்ப் பின் சீவன்முத்திசிவசா க்ஷாற்காரவானுய்ச் சாமர்த்தியவானல்லாதிருந் தால் மரியாதி மதித்துக் கடாக்ஷிக்குஞ் சிவதீக்ஷா ரூப சிவசத்தி பதிந்த ஞானதிமுன்றி னென்றிரண்டுமூன்று முறைமையி னுடையனுய்த்தானிருந்தவன் சரீராந்தத்திற் சத்தியோநிருவாண தீக்ஷாவான்போலப் பரமுத்தி சிவசாக்ஷாற்கார சிவசாதிசிய சிவசாயுச்சியவானுவனென்று சாற்றுகின்றூர்.

புண்ணியமேலேக்குவிக்கும்பாவங்கீழ்நூக்கும்
புண்ணியனேப்பூசித்தபுண்ணியத்தினுலே
நண்ணியஞானத்தினுலிரண்டினையுமறுத்து
ஞாலமொடுகீழ்மேலுநண்ணுனுகி
யெண்ணுமிகலோகத்தேமுத்திபெறுமிவன்றூ
னெங்கெழுகோஞாயிறெமக்கென்றுகுறைவின்றிக்
கண்ணுதறனிறைவதனிற்கலந்துகாயங்
கழிந்தக்காலெங்குமாய்க்கருதரன்போனிற்பன்

இ-ள். புண்ணியமேலேக்குவிக்கும்பாவங்கீழ்நூக்கும் புண்ணியனே —பூசித்த புண்ணியத்தினுலே-கிரியா பூசையினுலேதான் தீக்ஷாமாத்திரத் தினுலேதான்— நண்ணியஞானத்தினுல்-முன்சொல்லிய முறைமையில டைந்த ஞானத்தியான சமாதி சீவன்முத்தி சாக்ஷாற்காரக் கூட்டப் பிரி வு ஞானபூசையினுல்—இரண்டினையுமறுத்து—புண்ணிய பாவங்களே மல த்தோடு பிரதிதினம் மரியாதியிற்போக்கி—எங்கெழுகோ ஞாயிறெமக் கென்று — எண்ணுமிகலோகத்தேமுத்திபெறுமிவன்றூன் - மதிக்கப்ப

டஞ் சிவன்மூத்தினனவன்—காயங்கழிந்தக்கால்—குறைவின்றிக்கண்ணுத றனிறைவதனிற்கலந்து - சிவசத்தி பரிபூரணத்தி லொத்து வியாபித்து—ஞாலமொடேழ்மேலுகண்ணுஞகி — எங்குமாய்க்கருதரன்போனிற்பன்- எங்கும் வியாபியாய்த் தான்றியானித்த சிவனுக்கொத் தெங்கும் வியாபித்துச் சருவஞ்ஞ சருவகர்த்திருரூப சிவனுயிருப்பன். எ-று. அப்படி திரு மந்திரத்துஞ் சொல்லப்பட்டது.

மூப்பதுமாறும்படிமுத்தியேணியா
யொப்பிலாப்பேரண்டத்துள்ளினெளிபுகுந்து
செப்பவரியசிவங்கண்டுநின்றவ
ரப்பரிசாகியமர்ந்துநின்றூரே-என்றும்

இப்படி பிறபொருட் சிவசாதி விசிட்டாத்துவைத விசிட்டதற்சிவ வியத்திச் சுத்தாத்துவைதஞ் சொல்லியிருக்கவும்,பிரமித்துச் சிலவிடத்து மதாந்தரப் போலிவசனந்தூக்கி யெடுத்துக்கொண்டு பிறபொருட் சிவவியத்திச் சுத்தாத்துவைதம் பிறபொருட் சிவவியத்தி விசிட்டாத்துவைதந் தான் விளம்புவோர் வேதாந்தி ராமானுச வேஷங் கொண்டு வேற்றுச் சமயிகளாவார்கள்.

சிவசாயுச்சியச் சொற்செப்புவது நிருபசரிதவைக்கியமன்று; ஏகாற்மப்பிரசங்கம்வரு மாதலால். சிவசங்யோகமும மன்று; விகாரப்பிரசங்கம் வருமாதலால். சிவசமவாயமு மன்று; ஏகாற்மப் பிரசங்கத்துக் கிடங்கொடுக்கு மாதலால். சிவதாதாற்மியமு மன்று; சமவாயத்துக்குச் சொல்லிய தூஷணம் வருமாதலால். (சிவத்துவரூபம்போ லிருப்பது சிவதாதாற்மிய மென்னிற் சித்தசாதனமாம்) சிவ்லயமுமன்று; தில்லியப்பொருள் கொள்ளாதிருந்தால் விநாசப்பிரசங்கம் வருமாதலால். சிவாகங்நியமும்மன்று; தில்லியப்பொருள் கொள்ளாதிருந்தால் வேதாந்த மதாந்தரமா மாதலால். சிவசாங்கரியமுமன்று;பரிணத வேதாந்த பாஞ்சராத்திரி மதாந்தரமா மாதலால். சிவச்சுவச் சுவாமித்துவமு மன்று; பரமுத்திபங்கம் வருமாதலால்.சிவப்பிரேரகப் பிரேரியத்துவமு மன்று;சுவச்சுவாமித்துவத்துக்குச் சொன்ன தோஷம் வருமாதலால். சிவகாரண காரியத்துவமுமன்று; காரணகாரியத்துவம் பிரேரகப் பிரேரியத்துவமென்று பொருளாதலால், சுவச் சுவாமித்துவத்துக்குச் சொல்லியதோஷந்தானே வருமாதலால். சிவமே லிடக் கீழ்ப்படுதலுமன்று;விநாசதுல்லியமா மாதலால். அருக்கன் கண்ணஞ்குப்போற் சிவவியஞ்சக வியங்கியத்துவமன்று; பிரதிபந்தப் பிரசங்கம் வருமாதலால். சிவவியாபக வியாப்பியத்துவமு மன்று; கடத்துவாகியத்துவப் பிரசங்கம் வருமாதலால். சிவப் பிரதிவிம்பமு மன்று; சொல்லியதூஷணம் வருமாதலால். சிவகுண சங்கிராந்தியு மன்று; திருட்டாந்த

மில்லையாதலால். சிவாவேசமு மன்று; சுவாதந்திரிய சூனியம் வருமாத லால். சிவகுண சமுற்பத்தியு மன்று;அநித்தியத்துவப் பிரசங்கம் வருமாத லால். சிவாதுக்கிராகியாதுக்கிராககத்துவமு மன்று;அது வியங்கிய விடஞ் சகத்துவ மாதலாற் பிரதிபங்கப் பிரசங்கம் வருமென்று முன்றள்ளப்பட் டபடியால். சிவபோக்கிய போத்திருத்துவமு மன்று; சடப்பிரசங்கம் வரு மாதலால். சிவஞாப்பிய ஞாபகத்துவமு மன்று; அப்படி திரிசியமாகிற் சடத்துவப் பிரசங்கம் வருமாதலால். சுவசங்விற் புராணுதுபாவியாத பவி திருத்துவமு மன்று; ஏகாத்மப் பிரசங்கம் வருமாதலால். பரசங்விற் புரணேகியோகி திருத்துவமு மன்று; சருவபதார்த்த சாயுச்சியப் பிரசங் கம் வருமாதலால். சிவசாந்நித்தியமு மன்று; ஒன்றுக்கொன்று சாகூஷாற் காரமே சாந்நித்தியமாதலால். அப்போதுசிவசாகூஷாற்காரந்தானே யாக ட்டும்;

"சர்வார்த்தபாசகங்ஞானஞ்சிவயோகந்துசரீச்சுவதம்"

எனும் வசனத்திஞல் அதுவுமொரு திக்கிஞலாம்.

ஆஞல் முடிந்தபக்ஷமெது ? சிவசாதியென்று செப்பப்படுஞ் சிவ சாதிரிசியமே சிவசாயுச்சியம். ஆதிமுத்த அநாதிமுத்தனெனுஞ் சிறிது வைசாதிரிசியமிருத்தலால், முற்றுஞ் சிவசாதிரிசியஞ் சிவசாயுச்சியமெ ன்றுசெப்பப்படாது. அப்படிசொல்லப்படாது, ஆதிமுத்தன் அநாதிமுத் தனெனுஞ் சிறிது வைசாதிரிசிய வார்த்தை மலோபாதி தொட்டுவந்த வெகிரங்க வார்த்தை யென்றும், முத்தனுக்கு அவர்ச்சகீய சங்சித்த கிருத்தியம் சிவனுக்குக் கிருபாசங்சித்த கிருத்திய மென்னும் சிறிது வே ற்றுமை வார்த்தையும் வேறுகரணீய மில்லாமையா லென்றும் முற்றுஞ் சிவசாதிரிசிய மென்பதே யந்தரங்க வார்த்தை யென்றும் முடிதலான் முற்றுஞ் சிவசாதிரிசியமே சிவசாயுச்சிய மென்று சித்தாந்தஞ் சித்தித் தது.

ஆகையால் எல்லா நல்லதுதானே, சிவமுற்றுவமை, சிவைக்கிய மென்று சிலபேர்கள் செப்புவதேதுசித்தியம்,அது கிருபசரிதைக்கிய மன் று, உபசரிதைத்தியம் அப்படி சுருதி சொல்லியதென்று காந்தபுராணங் கழறுதலால். சிவாநந்நியத்துவமே சிவசாயுச்சியமென்று சில சிவசித்தாந் திகள் செப்பியதேது ? அது பரீக்ஷபண்ணுது படித்தது, சிவஞடு அனன்னியத்துவமென்னுமிடத்து அன் னென்பது அன்னியப்பொருள் விருத்தப்பொருள் அபாவப்பொருள் ஆக முப்பொருட்சொல்லாதலால்; மூப்பொருளுள் சிவனுக்கன்னியமாய் முத்தாத்மா வில்லையாதலாற் சிவா நந்நியனென்று அபாவப் பொருட்டொகை விரித்தர்த்தஞ் சொல்லில் விவர்த்தவேதாந்தமாம். சிவனுக் கன்னிய மலமாயாகன்மங்கட்கு விரு தணுதலாற் சிவாநந்நியனென்று விருத்தப்பொருட்டொகை விரித்

தர்த்தஞ் சொல்லிற் சிவனு மப்படியென்று சிவசிருசனுய்ச் செப்பப்படு வன். சிவனுக்கு அன்னிய மலமாயாகன்மங்கட் கன்னியன் விசதிருசனு தலாற் சிவாகந்தியனென்று அன்னியப்பொருட் டொகைவிரித்தர் த்தஞ்சொல்லில் சிவனு மப்படி யென்று சிவசிருசனுய்ச் செப்பப்படு வன். இப்படி அவர்கட் கிட்ட விகாதம் பண்ணுஞ் சிவாகந்தியச்சொற் சொல்லி.யேதுபிரயோசனம் விசேடித்துக் கட்டிக்கொண்டது. ஒன்று மில்லை; காகளசதாசிவ சாதிருச்சிய மாத்திரஞ் சிவசமவாதிமதம் அதுசித் தாந்த மன்றென்றறிந்து முற்றுஞ் சிவசாதிரிசியமே சிவசாயுச்சியமென் று சிவசித்தாந்தம் பண்ணிச் சுகியாயிரு. (கூக)

தியானமூலத்து முனைத்து மந்தமாயுந் தீவிரமாயுஞ் சி வன்முத்தி சாரூபாற்கார பரமுத்தி சாரூபாற்கா ர பழம்பழுக்குஞ் சமாதி விருரூபம் வளர்த்தவன் மகிமை யிருதிருவிருத்தத்தால் வகுத்துரைக்கின் ருர்.

ஞாலமதின்ஞானநிட்டையுடையோருக்கு
நன்மையொடுதீமையில்லைநாடுவதொன்றில்லை
சீலமில்லைதவமில்லைவிரதமொடாச்சிரமச்
செயலில்லைதியானமில்லைசித்தமலமில்லை
கோலமில்லைபுலனில்லைகரணமில்லை
குணமில்லைகுறியில்லைகுலமுமில்லை
பாலருடனுன்மத்தர்பிசாசர்குணமருவிப்
பாடலினேடாடலிவைபயின்றிடினும்பயில்வர். (கூஉ)

தேசமிடங்காலந்திக்காசனங்களின்றிச்
செய்வதொன்றுபோற்செய்யாச்செயலதனைச்செய்தங்
கூசல்படுமனமின்றியுலாவனிற்ற
லுறக்கமுணர்வுண்டிபட்டினியிருத்தல்கிடத்தன்
மாசதனிற்றூய்மையினில்வறுமைவாழ்வில்
வருத்தத்திற்றிருத்தத்தின்மைதனத்திற்சினத்தி
லாசையினில்வெறுப்பிலிவையல்லாதுமெல்லா
மடைந்தாலுஞானிகடாமரனடியையகலார்.

இ-ள். தேச மிடங் காலந் திக் காசனங்கண் முதலியவை தியானத் திச்சிக்கப் படுவன, சமாதியில் வேண்டுவனவன்றென்றுபொருள். மற்றது வெளிப்பொருள். (கூகூ)

நிராகாரத் தியான சமாதி சாமர்த்திய மில்லாதான் குருக்கற்பித்த சதாசிவாதி சாகாரத் தியான சமாதி பண்ணச் சாலம்ப சிவசமாதி சாக்ஷாற்காரபூர்த்திச் சுகாதபூதி முன்னுக ரீகழு நிராலம்ப சிவசமாதிமானது பரசங்வித் சிற்சத்தியின்முறைமையின் மூகிழ்க்கு நிராலம்ப சிவசமாதி சிற்றுப்பூர்த்திச் சுகமு நிராலம்ப சிவக்ஷாற்கார முற்றுப்பூர்த்திச் சுகமுஞ் சுவசங்வித் சிற்சத்தியின் முகிழ்க்குஞ் சுவாதபூதியினு லனுபவிக்கப்படுமென்றறைகின்றார்.

இங்கிலைதானில்லையேலெல்லாமீச
னிடத்தினினுமீசனெல்லாவிடத்தினினுநின்ற
வங்கிலையையறிந்தக்கரணங்களடக்கி
யறிவதொருகுறிகுருவினருளினுலறிந்து
மன்னுசிவன்றனையடைந்துநின்றவன்றனுலே
மருவுபசுகரணங்கள்சிவகரணமாகித்
துன்னியசாக்கிரமதனிற்றுரியாதீதந்
தோன்றமுயல்சிவானுபவஞ்சுவானுபூதிகமாம்

இ-ள். இங்கிலைதானில்லையேல்-நிராலம்ப சிவயோக நிலைநிற்கச் சத்திபோதாதிருந்தால்—எல்லாமீசனிடத்தினினுமீசனெல்லாவிடத்தினினுநின்றவங்கிலையையறிந்து-ஒரு பிரகார மகண்டித சகல வியாபக சிவரூபங் குருச்சொல்ல வறிந்து (தத்துவாதீத சிற்சத்திவிஷயம் புத்திகோசரமல்லவென்பதறிந்து)—அறிவதொருகுறிகுருவினருளினுலறிந்து- புத்தியினுற் றியானிக்கப்படு மொருசிவவிக்கிரகங் குரு கிருபையினுற் கற்பிக்க வறிந்து—அந்தக்கரணங்கள்—அடக்கி-விஷயத்தில் விழாதுமேலெழுப்பியச்சகள சிவமுகமாக்கி—மன்னுசிவன்றனையடைந்துநின்று—மருவுபசுகரணங்கள் - அந்தவந்தக்கரணங்கள்— அவன்றனுலே — (முற்சொல்லிய முறைமையிற் சுத்தவித்தை முதலியவற்றோடு கூடி) சிவகரணமாகி—(தியானித்துச் சாமாதித்துச் சாக்ஷாற்கரித்திருப்பச் சாக்கிர சாக்கிராதிக்கிரமத்தில்) துன்னியசாக்கிரமதனிற்றுரியாதீதந்தோன்ற முயல்சிவானுபவம்-நிஷ்களசிவசாக்ஷாற்கார முற்றுப்பூர்த்தி புரிக்கப்பண்ணுந் துரியசமாதிச் சிற்றுப்பூர்த்தி—சுவானுபூதிகமாம்-சுவானுபவானுபாவியமாம். எ-று.

சீவன்முத்தி சாக்ஷாற்கார சித்திமான்முத்திக்குதடை தடுப்பனென்று சாற்றுகின்றார்:—

சாக்கிரத்தேயதீதத்தைப்புரிந்தவர்களுலகிற்
சருவசங்கிவித்திவக்கதபோதனர்களவர்கள்
பாக்கியத்தைப்பகர்வதுவென்னிம்மையிலேயுயிரின்
பற்றறுத்துப்பரத்தையடைபராவுசிவரன்ரே
வாக்குமுடிகவித்தரசாண்டவர்களரிவையரோ
டனுபவித்திங்கிருந்திடினுமகப்பற்றற்றிருப்பர்
நோக்கியிதுபுரியாதோர்புறப்பற்றற்ரூலு
நுழைவர்பிறப்பினில்விணைசுணுங்கிடாவே.

இ-ள். வெளிப்பொருள். (கூடு)

பசுகரணங் கழன்றவிடத்துஞ் சிவசதசிவனக்கு விள
க்கிய சிற்சத்திக்குறிச் சிவகரணத்தினுற் சிவனே
யுந் தன்னையுஞ் சிவகரணத்திலுதிக்குஞ்சிவசாக்ஷா
ற்கார பூர்த்திரசத்தையு மறிந்தனுபவிப்பன், புத்
திபோதத்தா லல்லவென்று போதிக்கின்ரூர்.

கருவிகழிந்தாற்காணுரொன்றுமெனிற்காணுர்
காணுதார்கன்னிகைதான்காமரதங்காணுண்
மருவியிருவருமபுணரவந்தவின்பம்
வாயினுற்பேசரிதுமணந்தவர்தாமுண்ர்வ
ருருவினுயிரவடிவதுவுமுணர்ந்திலேகாணசிவனே
யுணராதாருணர்வினுலுணர்வதுகற்பனேகா
ணருள்பெறிலவ்விருவரையுமறிவிறந்தங்கறிவ
ரறியாரேற்பிறப்புமரூதாணவமுமரூதே.

இ-ள். காணுதார் - (சிவகரணத்தால்)* நோக்காதார்—காணுர் - (பசு கரணத்தாற் சிவரூபசிவசமாதி சிவசாக்ஷாற்கார சிற்றப்பூர்த்தி முற்றுப் பூர்த்திச் சுகமுதலியவற்றையுணர்ந்து) அனுபவியார்— உணர்வினுலுணர் வது-(சுத்தவித்தை பொருந்திய சுத்ததத்துவ) புத்திபோதத்தாலறிவது— கற்பனேகாண் - கிலுத்தசரீர சதாசிவாதி மூர்த்திதானன்ரே—அறிவிறந் தங்கறிவர் - (சாலம்பசிவயோக மார்க்கத்தப்போய்) புத்திபோதங்கடந்து (சிவனே ச்சாக்ஷாற் சிவசத்தி வியத்தி சிற்சத்தி யுணர்வினல்) உணர்வர்:— (சிவாகமானுமானரூட சிவசத்திவியத்தி பூமிபூத சிவகரணபுத்திபோதா னுவித்த சிற்சத்தி யுணர்வினும் பரோக்ஷமாப் பரம்பரையாப் பார்ப்பர்) மற்றதுவெளிப்பொருள். (கூசு)

சிவஞானத்தினைச் சிவகன்ம யோகிகளல்லாச் சில சி
வநியதி கன்மத்தினைச் சிவஞான சிவயோகிகள்
பண்ணும் பசுத்துவ சிவத்துவ விவேகத்தை யிருந்
து மனமடக்கிப் பலப்படப் பண்ணுமவனும் பாச
முத்தி சிவத்துவாபிவியத்திமாஞைச் சிவஞெடொ
த்துத் திரும்பத் திரும்பானென்று செப்புகின்றார்.

பன்னிறங்களவைகாட்டும்படிகம்போலுள்ளம்
பலபுலன்கணிறங்காட்டும்பரிசும்பார்த்திட்
டிங்நிறங்களென்னிறமன்றென்றுதன்ற
னெழினிறங்கண்டருளினுலிங்நிறத்தின்வேறுய்ப்
பொய்ந்நிறவைம்புலனிறங்கள்பொய்யெனமெய்கண்டான்
பொருந்திவன்சிவத்தினெடும்போதான்பின்னை
முன்னிறைநீர்சிறைமுறியமுடிவியோடி
முன்னீர்சேர்ந்தந்நீராய்ப்பின்னீங்காமுறைபோல்

இ-ள். பன்னிறங்களவை காட்டும்படிகம்போல் - செவ்வரத்தப்பூ முதலிய தடத்தலக்கண சிவப்புமுதலிய தன்மங்களைத் தனது சுவரூப லக்கண சுக்கிலமுதலிய தன்மங்கள்போற் றன்னிடத்திற் காண்பிக்கும் படிகக்கற்போல்—உள்ளம் -ஆத்மாத்தான்—பலபுலன்கணிறங்காட்டும்ப ரிசும்பார்த்திட்டு - (“பலபுலன்கள்” என்பது மலமுதலியவற்றைக் காண் பிக்குங் குறிப்புமொழி யாதலால்) மலமுதலிய தடத்தலக்கண பசுத்துவ சிவத்துவ முதலிய தன்மங்களைத் தனது சுவரூபலக்கண சிவத்துவமுத லிய தன்மங்கள்போலத்தன்னிடத்திற் காண்பிக்கு முறைமையுங் கண் டு—இங்நிறங்களென்னிறமன்றென்று - இப்பசுத்துவ சிவத்துவமுதலிய தடத்தலக்கணங்க ளெனது சுவரூப லக்கணங்க ளல்லவென்று—அரு ளினுல் - சிவசத்தி வியத்த சித்சத்தியால் (விவேகித்து)—தன்றனெழி னிறங்கண்டு-தனது சுவரூபலக்கண சிவத்துவ தரிசனம் பண்ணி—இங்நி றத்தின்வேறுய் - இச்சிவத்துவ லக்கண விலக்கணமாய்— “பொய்ந்நிற வைம்புலனிறங்கள்” என்பதற்கு அசத்திய வைம்புல குணங்களென்று பொருளுரைக்கின் மாயாவாதமதமா மாதலால் ஆத்மாவுக்குத் தடத்தலக் கண மாதலாற் சிவத்துவம்போற் சுவரூப லக்கணமாயுள்ளனவன்றி மல முதலிய பாசங்கட்குச் சுவரூப லக்கணமாயுள்ள பசுத்துவ சிவத்துவ மு தலிய தன்மங்கள்—பொய்யெனமெய்கண்டான்-தனக்குச் செயற்கைக் குணங்களா யுள்ளன வாகிலு மியற்கைக் குணங்களாயுள்ளன வன்றென் று மலமுதலியவற்றிற் கியற்கைக் குணங்களா யுள்ளமை யுணர்ந்தான்

(சிவத்துவ விவேகி யென்றுமாம்)—மூன்னிறைநீர்—நிறைமுறிய - கட்டு விட—முடுகியோடி-விரைந்துசென்று--முன்னீர் சேர்ந்தந்நீராய்-சமுத்திர மடைந் துப்புநீராய் — பின்னீங்காமுறைபோல் - திரும்புந் திரும்பாத செய்திபோல—பொருந்திவெண்சிவத்திலெனும். (அமூர்த்த விபுப்பதார்த் தங்கட்குப் பொருந்துதல் பிரிதல் கலத்தல் போதிப்பது நீதியன்றுத லால்) சிவத்திலெனு - (தாதாற்மிய சம்பந்தத்தாற் றனது) சிவத்துவத் தோடு சாதிரிச்சிய சம்பந்தத்தாற் சிவனெனு சம்பந்திப்பன்—போதான் பின்னை - பசுத்துவசிவுத்துவமுத லுபாதிப்படான். எ-று.

நீருப்புச்சோபாது. ஜவதத்துவ நிருபாதி. நீர்போயுப்புப்பொருந்துஞ் சித் திருந்தபடி யிருந்து சிவத்துவ மிசையுமாதலான் மூற்றுவமையன்று; திரும்பத் திரும்பானென்று திருட்டாந்தம், (கூ௭)

> ஆசாரியரு முன்வாக்கில் வாசனையாற் புறப்படும் ''பொருந்திவெண்சிவத்திலெனு'' என்பது பொ ருது சுவாயம்புவத்திற் சொல்லியபடி பசுத்தன் மை மறையத் தன்பதித்தன்மைவிளக்கத்தோடு பதிவெளியா யறிவில் விளங்குவதெ பொருந்துவ தென்று போதிக்கின்றார்.

எங்குந்தானென்னினுமெய்தவேண்டா
வெங்குமிலனென்னில்வேதிறையுமல்ல
னங்கஞ்சேருயிர்போல்வனெங்குமங்குத்
தவயவங்கள்கண்போலக்காணுவான்மா
விங்குநாமியம்புந்தத்துவங்களின்வைத்தறித
லிறைஞானந்தந்துதாளீதல்சுடரிழந்த
துங்கவிழிச்சோதியுமுட்சோதியும்பெற்றுற்போற்
சோதிக்குட்சோதியாய்த்தோன்றிவன்காணே.

இ-ள். எங்குந்தானென்னில்-சிவன் சித்தசித்துப் பிரபஞ்சமெல்லாம் வியாபியாயிருப்ப னென்னில்—நாமெய்தவேண்டா - (ஆற்றினீர் சமுத் திரத்திற் சென்று கூடுவதுபோ லவனை) நாஞ்சென்றுகூடவேண்டுவதில் லை—வேறெங்குமிலனென்னில் - (சருவத்தையு மறிதல் பண்ணுதல் கூ டாதாகையால்)—இறையுமல்லன்-சருவ சகற்கர்த்தாவு மல்லனுய் விடு வன்—(உம்மையாற்-சருவகர்த்திருத்துவ மில்லாமையாற் சருவஞ்ஞனு மல்லாதே போவன். பின்னவனை யடைவதில்லை யென்னில் அறிவது தியானிப்பது சமாதிப்பது சாக்ஷாற்கரிப்ப தெப்படியென்னில் அத்தச் சிவன்) எங்கும்-தனக்குச்சரீரம்போலுபசரிக்கப்படுஞ் சித் தசித்துப்பிரப

